மதுரையில் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீமத்தடாதகாதேவி கலியாணமென்னும்

# ஸ்ரீமீனாக்ஷிகலியாணம்.

இதில் விவாக மகோற்சவகாலங்களில் பாடுவோர்களுக்கு
பலவித கீர்த்தனைகள் விருத்தங்கள் கொம்மிகள்
ஊஞ்சல்கள் ஆடங்கள் மங்களங்கள் நலங்கு
கள் பத்தியங்கள் கதவு திறக்கிற
பாடல்கள் தாலாட்டுகள்
கொலுப்பாடல்கள் முதலியது
அடங்கியிருக்கின்றன.

இஃது
கும்பகோணம்தாலூகா உமையாள்புரம்
வேதசிகாமணி
ஸ்ரீமாந்-நாணுசாஸ்திரியார் அவர்கள்
செல்வபுத்திரியாகிய

**இலக்ஷ்மி அம்மாள் இயற்றியதை**

முன் அச்சிட்ட பிரதிக்கிணங்க,

OFFICE OF THE R
3- JUL 1929
MADRAS

சென்னை:

பூமகள்விலாசப் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1929. [ரூபா-1.

O-,8MLA1,S
N29
120737



உ

சிவமயம்.

திருவாலவாய் என்னும் மதுரையில் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீமீனாக்ஷி சுந்தரீஸ்வரி என்னும்

ஸ்ரீமத் தடாதகாதேவி

# திருவவதாரக்கீர்த்தனை.

## விநாயகர் துதி.

இராகம்-முகாரி-சாப்புதாளம்.

பல்லவி.

கிரிராஜ்தநயாசரணம்-கௌரி
மகிழ்ந்துவளர்த்த மைந்தரேசரணம்

அநுபல்லவி.

முருகருக்குமுன் பிறந்தநாதா-கமல
முனிவர்மகிழ்ந்து பூஜிக்கும்பாதா
சுந்தரேசர்சிந்தைக்கு இசைந்தசுதா-சிவ
சங்கரியைபக்திசெய்ய புத்திநீதா

அரிதாகிய அம்மன்-சரித்திரம்பாட
ஆனைமுகனே நீவா-அன்புடன்கூட கிரி

சரணங்கள்.

ஆலாஸ்யலீலைகளை நான்உரைக்க-ஆதி
கணபதி நீரென்நாவில் வந்துதிக்க
எந்நேரமும்உன்னை நான் துதிக்க-கண்ணன்
மருமகனே நீவா என் மனம்பூரிக்க

சத்தியமாகவேஉன் சரணத்தில்பணிந்தேன்
சகலமும்உன்றனன்செய லென்றுவறிந்தேன் கிரி

மூஷிகவாகன மேரும்லோலா-என்னை
போஷிக்கவாரும் அதிகசீலா
வல்லபைநயனத்துக்கு திவ்யகோலா-வாணி
லட்சுமிசேவிக்கும் நீலவேணியாள்பாலா

துஷ்டகெஜமுகனை வதைசெய்தசூரா
கஷ்டம்தீரசூரரைக் கார்த்துரட்சித்ததீரா கிரி

கோடிபாஸ்கர ப்ரகாசா-உன்னை
கொண்டாடும்தொண்ட ரிடத்தில்நேசா
வெள்ளியங்கிரி நகரினில்வாசா-வள்ளி
பதியைபிருதாவா யடைந்தகணேசா

அடியார்மகிழஆனை தந்தந்தரித்தையா
பிடியிடைமீனாட்சிபிரியாட்கு புத்திபோதிநீமெய்யா கிரி

---

## சரஸ்வதி துதி.

இராகம்-சுருட்டி-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

நான்முகன்தேவி எந்தாயே-என்
நாவினில்வந்து கீர்த்தனம்செய்நீயே

அநுபல்லவி.

மால்மகனுக்கு மனதுக்கிசைந்தபாரி
மதுரமானவாக்கு தந்துளனைகாரீர் நான்

சரணங்கள்.

சமஸ்தகிரந்தங்களிலும் ஸாகித்தியமானதேவி
சரணம் சரணம் சஞ்ச லிறக்கிறதெந்தன் ஆவி நால்

பக்தியுடன்பரா சத்திகிருதியைபாட
யுக்திபுத்திநீதந்து சித்தத்திலிருகூட நால்

மதுரைமீனாட்சிபிரி யாள்வாக்கிலேவசித்து
மஹாமேருநிலையாள்பாத வடியிலெனை நிறுத்து நால்

---

## மீனாட்சி துதி.

இராகம்-அடாணா-ரூபகதாளம்.

பல்லவி.

மீனாட்சிஉந்தன் திருக்கல்யாணமஹா உத்ஸவங்களைநான்பாட-உன்
முந்தினமைந்தன் ஸகிதமாகநேக்கு வந்துதுணைசெய்நீகூட

அநுபல்லவி.

வானகர்வேந்தன்வைத் தவிமானத்தின்மேல்
வாய்ந்துவிளங்கும் என் தாயே-வேதம்
ஏதுமறியா ஏழையடியாளிசைக்
குந்தமிழ்க் கருள்செய்நீயே

நாரியர்நல்ல சுபத்திலிதைப்பாட
நியாயந்தெரிந்த வித்வாமிசாள்கொண்டாட
எந்தன்மதிநாளுக்கு நாள்மேலேயோட
ஈஸ்வரிநீஹ்ருத யத்திலிருகூட-மீனாட்சி

முத்தொழிலும்கற்ற சக்தனுடனேசந்
தோஷித்துவந் தென்னைக்காரு-நல்ல
முத்துமீனாட்சிபிரியாளை சற்றேகடைக்
கண்ணாலே நீயுற்றுப்பாரு

நாலுந்தெரிய யுக்திபுத்தியைக்கொடு
ஞானநாத்தைஎன் நெஞ்சநஞ்சையில்நடு
நான்முகன்தேவி யொடுவாக்கில்வந்துகூடு
என்நாவிலிருந்து நல்லகிருதிநீபாடு-மீனாட்சி

விருத்தம்.

மதிவம்சமன்னகுல சேகரர்க்கு
மகனுகிமலயத்துவஜ ரவதரித்தார்
கதியடையகதம்பவன சுந்தரர்தன்னை
காலந்தவராமற் கண்டுசேவித்தார்
சதியானகாஞ்சன மாலையைநல்
சுகர்குலத்தில் கலியாணஞ்செய்துசுகித்தார்
எதிரொருவரில்லாம லெங்கும்போற்ற
எழில்சக்ராதிபதி மகுடம்தரித்தார்

---

கீர்த்தனம்-இ-ம்-பிலஹரிரூபகதாளம்.

பல்லவி.

மன்னன்மலயத்துவஜன்வாழ்ந்திருந்தான்-அன்னியவேந்தர்
அண்ணன்தம்பிபோல சினேகித்துவாழ்ந்தார்

அநுபல்லவி.

பன்னகசயனன்போல பாரெல்லாம்பரிபாலித்து
அன்னகர்மூலலிங்கத்தை அல்லும்பகலும்சேவித்து
அரசைநியாயப்படி அறிவோர்பகுதிகிரகித்து
அஸ்வமேதயாகம்தொண்ணூற் றென்பதுசெய்துமுடித்து மன்

சரணம்.

சூரசேனமகாராஜன் மகளைமருவிக்கூடி
சுதனென்றுண்டாகாமலே சோகித்துமோகித்துவாடி
முன்னேகட்டியன்புகழ் படிக்ககொலுசபைநாடி
மீனுட்சிபிரியாள்ஜென்ம சாபல்யசந்ததியைத்தேடி மன்

---

கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

சந்ததியில்லாமல்போச்சே சங்கரா
சந்திரவம்சம் வேரற்றுஅழியலாச்சே

அநுபல்லவி.

மைந்தரில்லா பாவியானேனே
மதலைமொழி கேழ்க்கவொரு
மகள்கூடஇல் லாமற்போனேனே சந்த

சரணங்கள்

ஆர்கையில் அரசைக்கொடுப்பேன்
அபிஷேகமுடி தரித்தாரை
சிம்மாசனத்திலே வைப்பேன் சந்த

வயதுமிருந்து சென்றதே
வம்சமற்று எந்தனிட
பேரும்ஊரும் போயழிந்ததே சந்த

மீனாட்சிபிரியாள் என்னசெய்வாள்
முன்னேதவம் செய்துபெண்ணை
பெற்றிருந்தாலல்லவே ஒய்வாள் சந்த

---

விருத்தம்.

புத்திரரில்லாமையால்மனமதுபுலம்பி
பூபதிதானுமேதப்பித்தார்
எத்திசையிலுள்ளமன்னர்மறையோர்களுக்கோலை
எழுதியேவரவழைத்தார்
அத்தினமேயாகமதனைநடத்திட
வெகுஅவசரமாய்த்தனித்தார்
பத்தினியுடன்எக்கியசாலையினைநாடியே
பண்புடன்பிரவேசித்தார்.

---

கீர்த்தனம்-இ-ம்-தோடி-அடதாளசாப்பு.

பல்லவி.

யாகங்கள்செய்தாரே
போகதேவேந்திரன்போல்பூலோகமலையத்துவஜர் யா

அநுபல்லவி.

வாகானகாஞ்சனு மாலையுடனேகூடி
வந்தசதாநந்த குருமுனியைக்கொண்டாடி
வளர்ந்துஜொலிக்கும்ஜோதி வன்னிசமீபம்நாடி
வம்சம்விளங்கிவர சந்ததிதன்னைத்தேடி யா

சரணம்.

அன்னநெய்பொரிபூர்ண ஆகுதிகளைக்கொட்டி
அத்ரியெல்லோர்க்கும்தட்சிணை மொஹராராமூட்டைகட்டி
பிராமணர்கட்குபல பட்சயபோசனம்ஊட்டி
பாலைமீனாட்சிபிரியாள் தாய்தான்வருக்கிட்டி யா

---

விருத்தம்.

மனமெனமதுரேசர் மலரடியில்வைத்துபுத்திர
காமேஷ்டியை முடித்தார்
தனமொன்றுந்தவராத் தாசர்தருமவிர்ப்பாகம்
ஈசர்நேசமாய் கிரகித்தார்
கனமானதேவியைக் கன்னிகையாயவதாரம்
செய்நீபோவென் றுரைத்தார்
வனமகில்வர்னமாய் வேள்விவக்னியில்வந்து
விசாலாக்ஷி அவதரித்தாள்.

---

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி.

தேவிதீயிலே ஜெனித்தாளே
திருமலர்வானோர் இரைத்தாரே-தேவி

அநுபல்லவி.

சீவிமுடித்தஜடையுடன் சீதளமதிமுகத்துடன்
த்ரிவயசுதிரிகுஜத்துடன் தேஜசாய்செறம்பரத்துடன் தேவி

சரணம்.

பூர்வவித்தியாவரத்தினல் புண்ணியர்சதகிருதுவினல்
மதுரையோர்பூஜாபலத்தினல் மீனுட்சிபிரியாள்ஏழைத்தனத்தினல்

---

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அவதாரம்செய்தாளே-யாககுண்டத்தில்ஜெக
ஜோதிமீனும்பிகா அவ

அநுபல்லவி.

தவத்திலிருந்தயாக எஜமான்தனேயாளாக
சப்தரிஷிகள் துதிக்க சகலபேரும்பூரிக்க
பாண்டியவம்சம்செழிக்க பாருலகில்வசிக்க அவ

சரணம்.

நீலமேகஸ்யாமளமாய் நிகரில்லாகோமளமாய்
அன்னம்போல்மிருதுநடையாய் அழகுசிறுஇடையாய்
மீனுக்ஷிபிரியாள்கடையாய் கடக்காமல்கெதியடைய அவ

விருத்தம்.

குழந்தையுருவாய் கோடிசூரியன்போலம்மன் குவலயத்தவதரித்தாள், குஜங்கள்மூன்றிருக்க குலசேகரர் தனேயனும் கோதில்மனமுடன் றவித்தார், அந்தணர்களுடன் முனிவர் அச்சபையிலுள்ள பெரியோர் அவை யறிந்தாலோசித்தார், அசரீரிவாக்காக ஆகாயமீதீசன் அருள்மிகுந்து புகழ்ந்துரைத்தார்.

---

கீர்த்தனம்-இ-ம்-துஜாவந்தி-அடதாளசாப்பு.

பல்லவி.

அஞ்சவேண்டாம்என்சொல்லைக்கேளாய்-அம்பாளேயாளாய்
அஞ்சவேண்டாம்என்சொல்லைக்கேளாய்

அநுபல்லவி.

காஞ்சனமாலைகிரமத்தால் கன்னிகையவதரித்தாள்
தாசாஉன்தர்மவசத்தால் தந்தையாய்வந்துன்னே மதித்தாள் அவ

சரணங்கள்.

ஸ்ரீபிரஜையென்பதைவிடு சீக்கிரம்படிப்பில்போடு
ராஜவத்தாய்மகுடம்சூடு ராஜியமெல்லாத்தையுங்கொடு அவ

மலையத்துவஜாஉந்தன்குமாரி மாணிக்கரதத்திலேறி
திக்குகளெங்கும்போய்சீறி திரும்புவள்ஸ்தனத்தைமாறி அவ

தேடக்கிடைக்காதேனடா சிருஷ்டிரக்ஷிசம்ஹாரியடா
மீனாக்ஷிபிரியாள்தாயடா முன்னேநீயெடுத்துக்கோடா அவ

---

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அந்திரவாக்கையாணி வைரமுறியணிரச
ரகமுக மகிழ்ந்துகேட்டார்
மந்திரதந்திரம் மறைநீதிபிசகாம
லெடுத்தலுவல் முடித்துவிட்டார்
இந்திராதிதேவர் எல்லவருமாய்கூடி
எங்குமலர் மாரிகொட்ட
சுந்திரர்சூசனார விந்தத்தில்சுகுணபூ
பாலர்ஸ்தோத் திரம்செய்திட்டார்.

---

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சாமிசர்வேசபிரபோ நமஸ்காரம்
சந்திரவம்சத்தைசதாசம்ரக்ஷிப்பது தங்கள்பாரம் சாமி

அநுபல்லவி.

காமிகரணங்களி லுள்ளதைகேட்டேன்
என்கருத்தை கமலமாய்கால
சம்ஹாரபாதத்தில் போட்டேன் சாமி

சரணம்.

மீனாட்சிபிரியாள்வாழ்வது வென்றுஅறிந்தேன்
என்மேனிபுளகாங்கிதமாகி
ஆனந்தபாஷ்பம் சொரிந்தேன் சாமி

விருத்தம்.

சந்ததியைக்கண்டு சந்தோஷித்து
மகாராசன் மனதுஒத்தார்
சுந்திரேசர் ஆலயத்திற்சென்று
சிறப்பாகசிவார்ச் சனைகள்செய்தார்
மந்தரமேருபோலுயர்மாளி கையில்வந்து
மடிசால்வைகொய்தார்
அந்தப்புரஐசுவரியம் அடங்கலுடன்
அந்தணர்க்கு வாரியீந்தார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளசாப்பு.

பல்லவி.

விரைதானம் கொடுத்தார்-வேந்தர்வேதியர்க்கெல்லாம்
விரைதானம் கொடுத்தார்

அநுபல்லவி.

பேரிகையதிர பெரியோர்கள்வர-பாத
தூளிகள்சிதர பூமாரிஉதிர
பொன்னகராளும் இந்திரருக்கு-நிகர
லோபகுணத்தைவிட்டு-உதாரதனம்மேலிட்டு
மறையோர்மந்திரம்கேட்டு-மனைவிகரநீர்விட்டு விரை

சரணம்.

சிறுசம்பாநெல்லு ஸ்ரீகட்குசேலை
புருஷர்க்குமல்லு நவரத்னகல்லு
நாடுமாடுபொன்பொருள் ஆயுதவில்லு
இத்தனையும்கொடுத்து பத்திமொழிபடித்து
மெத்தபேரியடித்து மீனாக்ஷிபிரியரைப்பிடித்து விரை

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஓடிவாடியம்மா உன்னிதமுத்தே ஒருமுத்தந்
தந்தென்மடிமேலே இரடிசற்றே ஓடி

அநுபல்லவி.

தேடிதிரிந்தேன்இந்த தேகமெடுத்தநாள்முழுக்க
தேனே-மானே-வாவுன் மதலைமொழிநான்கேழ்க்க ஓடி

சரணம்.

மின்னலொளியைப்போலே ஜொலிக்கிறகோமளாங்கம்
மீனாக்ஷிபிரியாளுக்காக வந்துபிறந்தஎன் தங்கம் ஓடி

கீர்த்தனம்-இராகம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

துரைமீனலோசனிக்கு இரத்னதொட்டிலிட்டான்
தூங்கடிராஜாத்தியென்று துகில்விரித்துவிட்டான் துரை

அநுபல்லவி.

பறையறைந்துபட்டணம் பணிக்காகஜோடித்தார்
பாரிலுள்ளபந்துயாவ ரையும்வரவழைத்தார் து

தாளமேளங்களடித்து தடாதகாநாமங்கொடுத்து
பட்டுசுருட்டேடமடித்து கட்டிதலையணையடைத்து து

பொன்மாலைபூரித்துபெண்ணைபார்த்துசந்தோஷப்பட்டாள்
பொட்டுமைகெந்தபூஷணம் புதுசாய்செய்துவிட்டாள் து

ஸ்ரீசெனங்களையழைத்து சேலைமாலைஓலைகொத்து
முன்னேகல்யாணமுரைத்து மீனாக்ஷிபிரியாளைநினைத்து து

## தாலாட்டல்.

இ-ம்-நீலாம்புரி.

எங்கள்சொக்கருளாலே சுதனியாய்வந்தமுத்தே
இந்தஸ்வர்ணமயதொட்டிலிலே நாளுட்டுகிறேநித்திரைசெய் சற்றே
விளையாடிவேர்க்கிறது விஷம்இனிவேண்டாண்டி
நீகளையாறிகட்டிலிலே கால்நிமிஷம்கண்மூடிருடி

தானம்வழங்குதற்குஉந்தந்தை தண்ணீர்க்குக்காத்திருக்கார்
போஜனங்கள்செய்வதற்கு பூசுராள்பொருந்திருக்கார்
எனக்குவேலையிருக்கிறது விசும்பியழுகாதேசும்மா
நீவேடிக்கையாய்உஞ்சலிலே ஆடிக்கொண்டிருடியம்மா

வெள்ளிசிலைகளுடன் வேணபக்ஷியங்கள்தாரேன்
நீவீதியிலேஓடாதே நம்வீட்டிலிருநானும்வாறேன்
மெத்தைப்படியேறி உப்பரிமேலோடாதே
மீனாக்ஷிபிரியாள்மகிழ என்மடியில்பால்குடிமாதே

கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

பாலைவிளையாடிவளர்ந்தாளே-பாட்டியர் மனையிலே
பாலைவிளையாடிவளர்ந்தாளே பாலை

அநுபல்லவி.

அல்லும்பகலு மனைகளிலீலைகள்செய்து
அவிழ்தம்கொணர்ந்ததாதிமாரெல்லாரை எதிர்த்துஉதைத்துவைது
கண்ணீறுசிந்திஇமை மைகரையகைது
காஞ்சனமாலைதரும் ஸ்தன்னியத்தைதின்றுதிருப்தியதாகஒப்து
சங்காலேக்ஷீரம் சந்தோஷித்துக்குடித்து
சாரரஸகெண்டத் தைமென்றுகடித்து
அன்னம்குயில்அஞ் சுகங்களைப்பிடித்து
அந்தப்புரத்தங்க கூட்டுக்குளடைத்து-பாலை

சரணங்கள்.

கொஞ்சிக்குலாவிகுழந்தைமொழியுரைத்து
கேட்டதைக்கொடுக்காட்டால் கிட்டிருந்ததெல்லாம்கொட்டிவாரி
கனிவாய்திறந்து கலீரெனவேசிரித்து [றைத்து
கமலமுகத்தைநான்காட்டுவ தில்லையென்றுகரத்தால்மறைத்து
பொன்னூன பூந்தேர் இழுத்தெங்கும்ஓடி
பூரித்துபெண்குஞ் சுகளுடன்கூடி
சற்றுநேரம்சிறு நர்த்தனம்ஆடி
செல்வமீனாக்ஷிபுரி யாள்சிந்தையில்நாடிபாலை

---

## பாலைலீலைகொம்மி.

இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்

தென்மதுராபுரிதனிலே தேவிபெண்ணைப்பிறந்தாள்
தினமுமொருலீலைசெய்து திருகுஜத்தோடிருந்தாள்
மாதாபிதாபிரமித்து மகளழகைப்பார்த்தார்
போதைக்கொருமேனியாய் பூரித்துமேபோஷித்தார்
மலையத்துவராசன்மகள் மதலைமொழியைக்கேட்டார்
நாளுக்கொருநகைகள்செய்து பாலைக்குமேல்போட்டார்
சனகாதிகள் துதிக்குமிரு சரணங்களைப்பிடித்தார்
தண்டைசதங்கைகொலுசு ரத்னம்தால்தரித்தார்

அறச்சதங்கைஅறனுளுக்கு அரசிலேகள்கோர்த்தார்
அஸ்தகடகங்கள்வங்கி செங்கையிலேசேர்த்தார்
பத்துஅங்குலிக்கும்ரத்ந கணேயாழிகளிட்டார்
பளபளென்னபதக்கம்காரை கண்டிகளைப்போட்டார்

உச்சியிலேசுட்டிகட்டி உடைமைமிகப்பூட்டி
காணவந்தபேர்களுக்கு கன்னிகையைக்காட்டி
அன்றலர்ந்தமலரைச்சூட்டி அருமையாய்சிராட்டி
பாரிகையில்பாலகியை பிடிநீயென்றூர்நீட்டி

இஷ்டமுடன்வாங்கிஜக தீஸ்வரியைத்தாங்கி
இருஸ்தன்னியத்துபாலேயுங்கொடுத் திருந்தாள் துன்பம்நீங்கி
பசித்துசோர்ந்தபோதைக்கெல்லாம் பாலமிர்தம்ஊட்டி
தூங்கத்தங்கதொட்டிலிலே போட்டுமேதாலாட்டி

சரிகைபாவாடைஉடுத்தி சால்வைஜோருய்போத்தி
சந்திரபிரபைகள்வைத்து சாயக்கொண்டைசாத்தி
வெள்ளித்தங்கத்தாலே சிலபிம்பங்களடித்தார்
விளேயாடவகைவகையாய் வார்ப்பித்துக்கொடுத்தார்

தங்கைஒட்டியாணமிடையில் தகத்தகென்றுமின்ன
தானேவிளேயாடினுள் தடாதகையாள்நன்று
பட்டணத்துவீதியில் குட்டிகளுடன்போனுள்
புட்டடித்துபெண்களுடன் புழுதிமேனியானுள்

உத்தமரும்புத்திரியை முத்துமிட்டெடுத்தார்
உத்தரியத்தாலேசித்ர மேனியைத்துடைத்தார்
கண்மணியைக்காஞ்சன மாலேகையில்ஒப்பித்தார்
கதம்பவனராஜரும் கச்சேரிபோய்பூரித்தார்

பெற்றவரைக்காணுமல் பத்மமுகம்வாடி
குயில்போல்கூவிசோக கண்ணீர்விட்டாள்தேடி
ஆயிரம்தாதிமார்கொஞ்ச அன்னேவந்துகொஞ்ச
அத்தனேயும்கேளாமலே கத்தியேயலேஞ்சா

ஐயாவேயென்றுஅம்மன் அலத்தியெங்குமோடி
அந்தப்புரமண்டப வரைகளெங்குந்தேடி
சர்வாபரணஞ்சொலிக்க சதங்கைகள்சப்திக்க
சகிகளுடன்வந்தாள்ராசன் கொலுக்கூடத்தைப்பார்க்க

அரசருமகமகிழ்ந்தா னந்தனியைக்கண்டார்
என்தனேயேஉந்தன்சபை யோரைஸ்துதியென்ருர்
அந்தணர்பெரியோருக்கு வந்துமகிழ்செய்தாள்
தந்தைமடிமேலேதடா தகையிருந்தெய்தாள்
மஹாத்துக்களெல்லாருமக ராசன்பெண்ணைப்பார்த்தார்
மறையோதும்வாயாலேவாழ்ந்தி ரென்ருசீர்வதித்தார்
தேசதேசராசரெல்லாம் தேவியையெடுத்தார்
தங்கத்தில்வஸ்துக்களை திருப்தியாய்க்கொடுத்தார்
பொன்னுலேபொம்மையானை ரதங்களும்கற்பித்தார்
வெள்ளிதங்கத்தாலேசெய்து வேணதுகொடுத்தார்
பேதகமில்லாமலெல்லா ரண்டையும்வார்த்தையாடி
வேடிக்கையாய்விசித்ரலீலை செய்தாளங்கேயோடி
அந்திநேரமானவுடன் சந்திசெய்யராஜன்
எந்தன்மனைக்கெல்லோரும் எழுந்திரென்ருர்போஜன்
ஆனைமேலம்பாரி யழகாயலங்கரித்து
அதின்பேரிலேயேறி அம்பாளை மடியில்வைத்து
பதினெட்டுவாத்தியமடிக்க பட்டத்தானைநடக்க
பட்டணப்பிரவேசமாய்வந் தார்பாரோர்பூரிக்க
வேந்தர்களெல்லோரும் விமானங்களிலேகூட
விருதுடனேவீதியிலே வந்தாள்வெடிபோட
கொட்டுமேளஓசையைக் குடிகளெல்லாம்கேட்டு
குடித்தனத்துவேலை யாவற்றையும்விட்டுப்போட்டு
நாலுதெருவீதியும் நன்ருயலங்கரித்தார்
நாரணிவாராளென்று பன்னீரெங்குந்தெளித்தார்
புருஷர்களெல்லோருமெங்கும் புஷ்பபந்தல்போட்டார்
பெண்களெல்லோருந்தங்கபொ டிக்கோலங்களிட்டார்
இரத்னதீபம்ஏற்றிமுத் தாலாத்திகளெடுத்தார்
கனியொடுகற்கண்டைகன்னிகை கையில்கொடுத்தார்
சதுர்விதவர்ணுஸ்ரமியும் சங்கரியைப்பார்த்தார்
ஜாதிகுசுமங்களை இரைத்தாசீர்வதித்தார்
நகநகென்னநாகசுர வாத்தியங்களடிக்க
நாரதரும்பாடநாட கப்பெண்கள்நடிக்க

கோல்பிடித்துக்கட்டியர்கள் கூட்டத்தைவிலக்க
கொண்டாடியேயெல்லோரும் குழந்தையைதுதிக்க
சேவகர்கள்கூடிசேர்ந்த சேனையைவிலக்க
சிமிட்டியகண்மூடாமல் ஜனங்களைப்போஷிக்க
இராஜவீதிமார்க்கமாய் ரத்னரதத்தில்வந்தார்
அம்பிகையோடியாவரு மரண்மனைபோய்ச்சேர்ந்தார்
காஞ்சனமாலைமகளைக் கண்டுமேகளித்தார்
திவ்வியாலாத்தியெடுத்து திருஷ்டிகள்கழித்தார்
வேந்தர்களெல்லாருமாய் விருந்துஅன்னமுண்டார்
வெற்றிலைதரித்துவிஸ்வாச மாய்பேசிக்கொண்டார்
சகஸ்திரகால்மண்டபத்தில் சதிர்ஜோராய்வைத்தார்
சரிகைசேலைரவிக்கைசர்வா பரணமுங்கொடுத்தார்
பாண்டியரெல்லாரையும் ப்ராதாவாகப்பாவித்தார்
பாலைமீனாட்சிபிரியாள் மகிழ்ந்திடசுகித்தார்

கீர்த்தனம்-இ-ம்-எ துகுலகாம்போதி-அடதாளசாப்பு

பல்லவி.

பிராதகாலத்தில்பாண்டியர் பகவத்பணியிலிருந்தார்
பாலைபஞ்சணைவிட்டெழுந்தாள்

அநுபல்லவி.

விருஷபதுவஜரை வாசலில்போய்வணங்கினின்றாள்
வலமாய்வனம்சென்றாள்
ஊருகுஞ்சுகளெல்லாம் ஓடிப்போய்க்கூடிக்கொண்டாள்
உதிர்ந்தபலத்தைஎடுத் துரித்துஅலத்துவுண்டாள் பிரா

சரணம்.

பாஸ்கரன்பாதையால் பங்களாவில்நுழைஞ்சாள்
பெண்களோடிறைஞ்சாள்
வனப்பாவைகளுடன் வார்த்தையாடிஇழைஞ்சாள்
வருந்தும்மீனாட்சிபிரியாள் மனக்கோயிலில்பதிஞ்சாள்

---

கீர்த்தனம்-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

மாடமயிலேயடிமங்கே-நம்ப
கூடகுயில்குழந்தை யெங்கே என் மாட

அநுபல்லவி.

தேடதாதிமா ருடன்போடி
தேஜசுதெரியும் பாரடி
வாசலெல்லாம் துரவடி
விளையாட்டிலேயே யழைத்துவாடி-மாட

சரணம்.

தனையில்லாத் தாபத்தைகொல்லோம்
தர்மராஜபுரி நரகத்தைவெல்லோம்
மித்திரகுலத்தில் வந்தசெல்வம்
மீனாட்சிபிரியாள்வாழ்வைகொண்டவார்த்தைநாம்சொல்வோம்

---

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

மன்னுநம்பமகள் மகிமையைச்சொல்ல
மால்சயனுராலுமாகிறதல்ல-ஒ மன்

அநுபல்லவி.

சின்னஞ்சிறுபா லாளுடன்கூடுருள்
சித்ரவிசித்திரமாய் நர்த்தனமாடுருள் மன்

சரணம்.

முன்சென்றநாளெல் லாம்வீணுய்போச்சு
மீனாட்சிபிரியாளாலே பின்பெரும்வாழ்வுண்டாச்சு மன்

---

கிர்த்தனம்-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்,

பல்லவி.

தேடிதேடி திகைத்தாளே-திவ்யதடாதகையை
கூவிகூவியழைத்தாளே

அநுபல்லவி.

மாடிமஞ்சங்களிலும் மலர்தடாகங்களிலும்
கூடகோபுரங்களிலும் கொலுச்சாவடிகளிலும் தே
வேணிகுசுமம்வாட வேர்வைபெருகியோட
சாமரம்சேவகாள்போட சகிமார்களுடன்கூட தே
ஸ்தன்னியம்சுரந்துவழிய சந்தனம்ஜவ்வாதழிய
கண்கள்சிவந்தவிழியாய் காலம்தப்பிநாழியாய் தே

தைலமிட்டுநீராட்ட தன்கைபோஜனமூட்ட
மெத்தைமேல்வேடிக்கைகாட்ட மீனாட்சிபிரியாளைகூட்ட தே

---

கீர்த்தனம்-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஓடிஉல்லாசமாய் வாடியம்மா அங்கே
வாடிவருந்துறான் தந்தைசும்மாயிங்கே ஓடி

அநுபல்லவி.

பேடாபூரிபேணி செய்திருக்கேன்
பெரியதங்கத்தாலம் வைத்திருக்கேன் ஓடி

சரணங்கள்.

லக்ஷபோசனஞ்செய்ய கார்த்திருக்கார்நீ
லக்ஷியஞ்செய்யாமலெங்கும் வீற்றிருக்காய் ஓடி
கோகிலமேஉன் குரலைக்காட்டு
குழந்தாய்உன்வூதல்வாத்தியத் தையானும்மீட்டு ஓடி
மதுரைமீனாட்சிபிரி யாள்மகிழ்கண்ணே-நடு
மத்தியானகாலங்களாய் விட்டுதேபெண்ணே ஓடி

---

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கண்டாள்காஞ்சனமாலை-கதம்பவன
செண்பகச்சோலையிலே கண்

அநுபல்லவி.

அண்டர்துதிக்கதண்டை பூண்டபாதத்தழகேன்
கெண்டைபோல்நீண்ட கண்டநயனத்தழகேன்
வண்டுபோல்கறுத்து வளர்குந்தளத்தழகேன்
தொண்டரிர்தயம்போல் நிர்மலதந்தத்தழகேன் கண்

சரணம்.

நீலோத்பலங்கள் நிறைந்தநீரோடையேன்
நீராழிமண்டப பங்களாமேடையேன்
கமகமென்னசுகந்தம் வீசும்பூவாடையேன்
கனிகமுகிக்கனி கடக்குகிறகடையேன் கண்
வீணாகானங்களுடன் பாடுகிறஓசையேன்
வேடிக்கைக்காக செய்கிறசிவபூசையேன்

ஓங்கிபந்துகளைவிட் டெறிகுகிறஓசையேன்
ஒன்றுக்கொன்றுலிங்கனஞ்செய் தணைக்குகிறஆசையேன் க

மதுரைமீனாக்ஷிபிரியாள் தியானிக்குமுகத்தையேன்
மந்தஹாசமாய்வசனிக்கும் மாதுரியத்தேன்
சகியாளுடனேசண்டை போடும்சாதுரியத்தேன்
சமாதானம்செய்தர வணைக்குகிறசமர்த்தேன் க

கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

தங்கமே இங்கேநீவாடி-தடாதகாயென்
தங்கமே இங்கேநீவாடி

அநுபல்லவி.

கொங்கையில்பாலையுண்ணு குலம்விளங்கநீயெண்ணு
மைந்தரில்லாயென்மண்ணு மகிழ்ந்துபரிபாலனம்பண்ணு தங்

சரணம்.

பாலமுதுஊட்டுகிறேன் பட்டுப்பாவாடைகட்டுகிறேன்
தோடுஜிமிக்கிபூட்டுகிறேன் தொட்டிலில்வைத்துஆட்டுறேன் தங்
முன்னோர்தவபாக்கியமே தென்மதுரைசிலாக்கியமே
எந்தனிடவாக்கியமே உந்தனுக்குயோக்கியமே தங்
நீருண்டமேகம்போலா நேத்திராநந்தலோ
மீனாக்ஷிபிரியாள்மகிழுங்காலால் மெதுவாய்நடந்துஎன்பாலா தங்

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

அம்மாஉந்தன் அந்தப்புரத்துக்கு நான்வல்லபோடி
எந்தாயேஉந்தன் தங்கக்கிரஹத்துக்கு நான்வல்லபோடி
அருமையாக வழைக்குறுயந்த
பெருமைகளெல்லாம் நானறிவேனடி. அம்

அநுபல்லவி.

சும்மாஜகத்தில் ஜெனித்தஸ்ரீஜாதிபோல்
என்னை நினைக்குறுய்
சீனியிலேசில அவிழ்தங்களைச்சேர்த்து
சிக்குனக்குபூஜி யென்றுகொடுக்கிறுய் அம்

சரணம்.

மீனாக்ஷிபிரியாளுக்காகலீலைசெய்ய
வந்தபவானியாச்சே
முன்னேயசரீரிவாக்கா யாகசாலையில்
ஈசன்சொன்னதுனக்கு மறந்துபோச்சே அம்

---

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

ஓடியோடிபிடித்தாளே-உன்னிதமாய்நல்லதிண்ணை
மேலம்பாளைதேடிதேடியெடுத்தாளே

அநுபல்லவி.

நாடியேநல்ல கனிகளையூட்டி
நானாவிதவிம் பங்களைக்காட்டி
முத்தாஹாரத்தை கழற்றியேபூட்டி
முத்துமிட்டாலிங்க னங்கள்செய்துகட்டி ஓடி

சரணம்.

மைந்தரில்லாமனது ஸ்தாபங்கள்பாழ்க்க
மடிமீதில்வைத்து மதலைச்சொற்கேழ்க்க
வாசலில்விளை யாடித்தெரிழுக்க
வஞ்சிமீனாக்ஷிபிரி யாள்கொஞ்சிபிழைக்க ஓடி

ஆசிரியவிருத்தம்.

செல்வியைஸ்ரீமான்தேவி சிறுநகைசெய்துகொஞ்சி
ஸ்தனந்தனை கொடுத்தணைத்தாள்
கல்வியைக்கனமாய்க்கற்ற கணவனார்மடியின்மேலே
களிரென கொணர்ந்துவைத்தாள்
நல்வினைவிரதத்தோடே நாடியேவந்தோர்க்கெல்லாம்
நல்லபோஜன மளித்தார்
மல்லிகைமெத்தைமேலே மன்னனேமகளைவைத்து
மகிழ்ந்துமே சுருள்கொடுத்தாள்

---

செல்வியுடன் சிங்காரமாய்வசனித்த கொம்மி.

இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

எந்தனைவிட்டிந்தநேரம் என்ஜனனிஎன்கண்மணியே
எங்கடிநீபோயிருந்தாய் என்ஜனனிஎன்கண்மணியே
பட்டணத்துவீதியிலே என்ஜனகபிதாஎன்னையா
புட்டடித்தேன்பெண்களுடன் என்ஜனகபிதாஎன்னையா

உன்பொன்னனபுஜங்களினல் என்ஜனனிஎன்கண்மணியே
நீட்டிழுதியலையலாமோ என்ஜனனிஎன்கண்மணியே
ஆயிரக்கால்மண்டபத்தில் என்ஜனகபிதாஎன்னையா
நான் அம்மானையாடிருந்தேன் என்ஜனகபிதாஎன்னையா
உன்கமலநயனனுக என்ஜனனிஎன்கண்மணியே
நீகாயெரிந்துஎந்தலாமோ என்ஜனனிஎன்கண்மணியே
மீனுக்ஷிபிரியாள்மகிழ என்ஜனகபிதாஎன்னையா
மெத்தைதமேலேநித்திரைசெய்தேன்என்ஜனகபிதாஎன்னையா

---

## பாலைவிளையாடின கொம்மி.

மலையத்துவஜபாண்டியர்முன்னல் மகாதபங்கள்செய்தத்தினல்
மதுராம்பாள்மனமகிழ்ந்து மகளாகவேபிறந்து
ஸ்ரீஜனங்களோடிருந்தாள் செல்விசிறப்பாய்வளர்ந்தாள்
வைகாசிமாதத்திலே வசந்தமண்டபமேடைமேலே
நந்தவனசோலையிலே நாகரீகஓடையிலே
புஷ்பவனச்சோலையிலே பொத்தாமரைப்பொய்கையிலே
பெண்களுடன்கூடிக்கொண்டாள் பூரித்துபந்தாடிநின்றுள்
அந்திநேரமானவுடன் ஆயிரம்தோழிமாருடன்
சிங்காரவனமறந்தாள் சீக்கிரமாய்வெளியில்வந்தாள்
தென்னலடிக்கிறது திவ்யகெந்தம்வீசுறது
நிலாவோஇறைக்கிறது இராத்திரிபோதாகிறது
வாரும்சகிமாரேஎன்றுள் வாசலிலேயோடிநின்றுள்
பட்டணத்துவீதியிலே பார்க்கழகாய்வாசலிலே
பாலலீலைசெய்துகழ்ந்தாள் பாடிவிளையாடிவந்தாள்
விஸ்தாரவீதியிலே விசித்திரமானவாசலிலே
வேடிக்கைகள்செய்துகழ்ந்தாள் ஓடிவிளையாடிவந்தாள்
மகராஜர்வாசலிலே மாணிக்கமேடைமேலே
மத்துநன்றுய்சுத்திவந்தாள் மகிழ்ந்துவிளையாடிவந்தாள்
கூடாரபந்தலிலே கோமேதகமேடைமேலே
குஞ்சுகளோடிவந்தாள் குந்துமைபிடித்திருந்தாள்
நடவானபந்தலிலே நாகரீகதிண்ணைமேலே
சிரமமாயிருக்குதென்றுள் செல்விசயனித்துக்கொண்டாள்

பெற்றஅன்னைஉற்றுப்பார்த்தாள் புத்திரிக்குபசரித்தாள்
மலையத்துவஜர்ஓடிவந்தார் மகளைமாரோடேயணைந்தார்

கால்பிடிக்ககரம்பிடிக்க காரியஸ்தாள்கௌரிவிரிக்க
பன்னீரைகொணர்ந்துதூர பாங்கிமார்கள்தான்விசிற

துரைமீனலோசனியே தூங்காதகண்மணியே
பாலமுதுஉண்ணுஎன்றாள்பள்ளிகொள்ளுபின்னேஎன்றாள்

செங்கமலச்சேவடியில் சங்கிலிகொஞ்சநொடியில்
தங்கநிலைவாசற்படி தாங்கிவந்தாள்ஓரடி

கரத்திலிட்டவளைகுலுங்க கழுத்தில்முத்தாரமிலங்க
காஞ்சனமாலைஇடைமேல் கனசொகுசாய்வந்தாளம்மே

ஸ்வயம்பாகசாலையிலே ஸ்வர்ணதீபச்சோதியிலே
தடாதகையையழைத்து தரமாய்தங்கத்தாலம்வைத்து

உண்ணிருடிகண்ணேயென்றாள் அன்னைபரிமாறிநின்றாள்
புத்துருக்குநெய்யமுது பெண்களோடேபுசித்துமாது

வைத்தவெந்நீராரவைத்தாள் வலக்கரத்தைசுத்திசெய்தாள்
பாலாலேவாய்கொப்பளித்தாள் பன்னீராலேபாதம்துடைத்தாள்

நிறையத்தீனிதண்டிஉண்டாள் நீலாள்மன்னன்நேரேநின்றாள்
சீமான்சிந்தைமகிழ்ந்தெடுத்தார்சிராட்டிஓர்மொழியுரைத்தார்

அலையாதடிகண்ணேயென்றார் ஆத்திலிருபெண்ணேயென்றார்
விளையாடாதேமானேயென்றார் வேர்க்குதடிதேனேயென்றார்

மலையத்துவஜர்மதிமுகத்தை மதுராம்பாள்நிமிர்த்திசற்றே
மீனாக்ஷிபிரியாட்காகநன்னுமெதுவாய்வெகுவார்த்தைசொன்ன

---

ஸ்ரீமத்தடாதகாதேவி

## தந்தையைப் பூஷணங்கள்கேட்ட கொம்மி.

இ-ம்-சங்கரா-ரூபகதாளம்.

இடையில்நீரிட்டஒட்டி யாணம்எருகுது
எந்தன்மேனியில்-அதினால் வேர்வைபெருகுது

தோடிஜிமிக்கிகளை-தோளால் தொடமுடியவில்லை
தோடாவங்கிகடகப்பாட்டிலே பாணிக்கிபோறயில்லை

சதகிருதுக்கள்செய்து-வெகு செலவாகிப்போச்சோ
சந்திரஹாரமெனும்-செய்யப்பெண் கூடஇல்லாமலாச்சோ
லோபத்தனங்களெல்லாம்-எந்தன் நிவிதமித்தியமாக
லோகாதிசயமான-உடைமை உடம்புநிருப்பண்ணியிடு

புதைத்துவைக்காதேபொருளை பூதம்கொண்டுபோய்விடும்
பொன்களெல்லாமுறுக்கி-நேக்கு பூஷணமாய்பண்ணியிடும்
பாரிப்பாடகந்தண்டை-பாதசரங் கொலுசுநீதந்தால்
பாதத்தில்போட்டுக்கிறேன் இனிவேண்டாம்பழசுகளிந்தா

ஆணிப்பொன்னைகடைந்து-தங்க அரும்புஇசைத்தாண்டா
ஐம்பதுலட்சம்பொன்னுக்கப்பா எனக்கிப்போசெய்துகொண்டா
பச்சைப்பிரபைகள்வைச்சு நன்றாய்தைச்சமுத்துச்சுருக்கு
உச்சிதமாயெனக்கு-உச்சியில் வைச்சுபின்னிஇருக்கு

குண்டுகுண்டாய்பெரிதாய்-நன்றாய் கோத்தபவழமாலை
கோடிவராகனுக்கு-வாங்கிக் கொடுநீயுன்கையாலே
சிங்காரகண்டியெல்லாம்-ஒன்றாய் சேர்த்திசைக்கமுகப்பு
சீமையிலேயிருந்து-நேக்கு வரவழைநீசிகப்பு

காந்திகண்டோர்பிரமிக்க-டக்கா பதக்கம்போட்டுசரடு
கல்லுபரீக்ஷைபார்த்து-வாங்கிக் கொணர்ந்திடுநீகுருடு
கடற்கரையிற்சென்று-நன்றாய் கப்பலில்பார்த்துமுத்து
கம்பியுடனேவாங்கி-எந்தன் கெம்புசரத்திற்சுற்று

வியாபாரியிடத்தில்-ரத்ன வாளிவைரமுருகு
வாங்கிகொணர்ந்துயிட்டு-மாணிக்க மாட்டலுடன்திருகு
நாகரீகமாக-நாலு நவரத்தினங்கள்வைத்து
நாசிகைக்கியழகாய்-நன்றாய் கொணர்ந்துயிடுநீநத்து

விசாலலலாடத்துக்கு-வெகு விசித்திரமானபொட்டு
வேலைப்பாடாகச்செய்து-விழுந்திடா மல்வெவசைவைச்சொட்டு
ஆயிரம்பாத்திகட்டி-நன்றாய் அற்புதபூந்தோட்டம்போட்டு
அன்றலர்ந்தமலரை-நேக்கு ஆரமாய்தொடுத்துசூட்டு

நயிஸாய்சித்தாடை-நாலு கெஜத்தில்நன்றாயெடுத்து
நாரியரைப்போலே-கொய்து மேலாடைபோத்தியுடுத்து
முன்னுடைமடியில்திலங்கத் திருப்தியாய்வைத்துவஸ்து
மீனாட்சிபிரியாள்மகிழ்-அசைந் தாடஇசைநீகுஸ்து

மலையத்துவஜர் மகளுக்கு
மாணிக்கபூஷணங்கொடுத்தகொம்மி.

இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளசாப்பு.

செல்வதுரைச்சியைஸ்ரீமான் சேர்த்துமேயணைத்தார்
செவியில்முகம்வைத்து சிலசேதிகளுரைத்தார்

மலையத்துவஜமன்னன்நகை வர்ணனையைகேட்டார்
மந்திரிசுமதியையந்த க்ஷணத்தில்கூப்பிட்டார்

கணக்கர்காரியஸ்தானை கருணையாய்பார்த்தார்
கஜானகதவைதிறவென்று கோலைக்கொடுத்தார்

நீதியரைக்குள்ளேசத்திய சந்தனர்கள்நுழைந்தார்
தேத்திரானந்தமானஉடை மைகள்எண்ணிபதிந்தார்

தங்கதாம்பாளத்திலே தருந்தாபரணங்கள்வைத்தார்
தடாதகைராஜாத்திஇந்தா வென்றெடுத்துதான்கொடுத்தார்

மகிழ்ந்துமகராஜிமாணிக்குடைமையைபூட்டிக்கொண்டாள்
மதுரைமீனாட்சிபிரியாள் மனதைகூட்டிக்கொண்டாள்

---

ஸ்ரீமத்தடாதகாதேவி
## கோலாட்டம்போட்ட கும்மி.

இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

மதுரையிலேமீனாட்சி மகளாகவேபிறந்து
மலையத்துவஜர்மனையில் மகிழ்ந்துயிருந்துவளர்ந்து

கோலாட்டம்போட்ட லீலையைகும்மிஇசைக்க
குமரஜேஷ்டபிராதாநீ கூடவாநான்பிழைக்க

ஐந்துவயதிலம்மன் குஞ்சுகளுடனேகூடி
ஆயிரக்காலகன்ற மண்டபத்திலேநாடி

பிருதிவியெடுத்துஅம்மன் பசுவன்பிரதிஷ்டைசெய்தாள்
பாலாளுடனேயடை பார்த்துபார்த்துமேஓய்தாள்

துந்துமிவாத்தியத்துடன் நீர்பில்லெடுக்கவெண்ணி
தெப்பகுளத்திலேபோய் தொனைந்துஸ்நானங்கள்பண்ணி

காடுசெடியிற்சென்று கதம்பமலர்கள்கொய்து
காலைமாலைஇரண்டுகா லங்களும்பூசைசெய்து

தோதகமாடிதா — யூட்டுந்தயிரன்னமுண்டு
தோழிமார்களுடனே — ஸ்ருங்காரஞ்செய்துகொண்டு
பட்டுப்பாவாடை — ரவிக்கைமேலாடைகட்டி
பக்ஷணம்லக்ஷணம்விதம் — தருகச்சொல்லிதான்திட்டி
கல்லிழைச்சதங்கோ — லாட்டகழிகள்கொண்டு
கதம்பவனராஜன் — கனத்தசபைபோய்நின்று
ஐம்பத்தாறுதேசத் — தரசர்களையும்பார்த்து
அவரவர்க்குத்தகுந்த — உரமுறைவைத்தழைத்து
காசிராஜனிடத்தில் — வந்துமுன்னாலேபேசி
கனசாதுரியமாய்பரி — ஹாசம்பண்ணியேசி
கெங்கைபார்க்கும்சீமை — உனக்கென்றேம்பதாழ்த்தி
கேட்டபணம்கொடுத்து — போநீயெந்தனைவாழ்த்தி
அன்னபூரணிதாசன் — தந்ததெல்லாந்தான்வாங்கி
சோழன்சமுகத்துக்கு — முன்னாலேவந்துதங்கி
காவேரிதண்ணிபாய்ச்சல் — உனக்குளன்னகுறைச்சல்
காதைக்கொடுத்துப்போய்பெண் — பேத்திகளைவரச்சொல்
கொச்சிமலையாளர் — கொடுத்ததெல்லாம்கைகொண்டு
குலசேகரன்குமாரர் — கொலுகூடத்திலேநின்று
புன்சிரிப்பாகவிது — சமயமாவென்றுகேட்டு
பெண்களுடனேநன்றாய் — கூடிக்கோலாட்டம்போட்டு
ஜாதிகுசுமம் — கசங்கிஉதிரஓடி
சரஸ்வதிக்குமேலே — சாரீரஸ்வரங்கள்பாடி
பாதசரம்சப்திக்க — பறந்துகுதித்துபாய்ந்து
பத்துமணிநேரம்நேர்ந் — துடனேசிறுத்திஓய்ந்து
எல்லோருடன்விமானம் — ஏறிமாளிகையில்வந்து
இன்பபோசனம்செய்த — பின்புஎழுந்திருந்து
ஜோராய்ஜொவந்தரையை — நடத்தும்நீரென்றுரைத்து
சொந்தபந்துமன்னரெல் — லாரையும்வரவழைத்து
பட்டணம்ஜோடிக்க — சொல்லிபறையடித்து
பக்ஷயம்சித்ரான்னம்பல — விதமாய்மிகஜோடித்து
பௌர்ணமிபொழுது — போனவுடனேகிளம்பி
பெண்களெல்லாரையும் — சொல்லியெங்கும்விளம்பி

பத்துவிதமலரை முத்துப்பல்லக்கில்சாத்தி
பகல்வத்திமத்தாப்புடன் பசுதேவரையேத்தி

கூட்டமாகபோகிகள் கொம்புசுமந்துவர
கொழுந்துவேர்தாண்டகாரம்பூண்டுபெண்ணெல்லாம்சேர

விசித்திரசரிகைவெள்ளை சித்தாடைகளுடுத்தி
விருதுவாத்தியபாண வெடியோடெங்கும்கிறுத்தி

கொந்துசரம்கொண்டை குடுமியிலெல்லோர்க்கும்சூடி
குட்டிகளுடனேகரம் கொட்டிகுதித்துப்பாடி

பாண்டியர்ஆக்ஞையாலே பாங்கிமார்கள்விசிற
பாலரொளொன்றுக்கொன்று விரோதிக்காமலுசிற

அத்தர்பன்னீரைஆற்று நீர்போலள்ளியிறைக்க
அத்தனைபேரும்ரத்ன ஆலாத்திகளெடுக்க

சந்திரன்இந்திர திசையிலிருக்கையிலே
சித்திரவீதிசுத்தி வந்தாள்பொத்தாமரையிலே

புலித்தோலனைபூசித்து பசுவைபானியத்தில்விட்டாள்
பொன்மாலைபோடஎல் லோரும்பூரித்துசாப்பிட்டாள்

தங்கப்பல்லாக்குகளில் பெண்களெல்லாரைவைத்து
தந்தைதாயாரெல்லோரும் தாம்பூலங்கள்தரித்து

மாசிவீதிமார்க்கமாய் மாளிகைவந்துசேர்ந்தார்
மலையத்துவஜர்மகளை மாருடெடுத்தணைத்தார்

குழந்தைமீனாட்சிபிரியாள் கும்மியாயிதனைக்கட்ட
கோலாட்டம்விருத்தம்நன்றாய் எடுத்துமுடித்துவிட்டாள்

ஆக கீர்த்தனம்-உரு.

விருத்தம்-அ. கும்மி-சு.

சிவமயம்.

ஸ்ரீமத்தடாதகாதேவி

# பட்டாபிஷேகக் கீர்த்தனை.

க-விருத்தம்.

வயதைந்துஆனவுடன் வாசிப்பில்மகளை வைக்க
யத்தனித்தார்
பயந்தபலராசருக்கும் பத்திரிக்கையெழுதியே
வரவழைத்தார்
மயனுலேமதுராபுரி நகரியைமங்களாகாரமா
யலங்கரித்தார்
ஜெயபேரிகள்முழங்க சிறியரத்நத்லைதபாத்திவாத்தியா
ரெழுதிவைத்தார்.

க. கி-ம்-இ-ம்-காமவருத்தனி-அடதாளசாப்பு.

பல்லவி.

சகலவித்தையும் கற்ருள்
சந்திரவம்சத்துப்பெண்-சாதுவாகிசமர்த்தாய்
சகலகலையும் கற்ருள்.

அநுபல்லவி.

ஆகமவேதபு ராணபுஸ்தகங்கொண்டு
அதிகவிநயமஜே யர்க்குளடங்கிநின்று (சகல)

சரணங்கள்.

மந்த்ரதந்திரஅஸ்த்ர சாஸ்திரமுறைதெரிந்து
மதுரைமீனுக்ஷிபிரி யாளைதினம்நினைந்து (சகல)

உ-விருத்தம்.

சாதுரியமாய்ரத கரிபரிநடத்துகிற
வகையறிந்தாள்
ஏதுநிகரில்லாவேங்கை சிம்மம்வாழ்வனம்போம்வேட்டை
யாடிவந்தாள்
மாதுரியமாய்மாதா பக்ஷியம்பாலன்னமிட
புசித்தெழுந்தாள்
சாதுசிகாமணியைசந்திர குலத்தரசர்பார்த்து
மொழிபொழிந்தார்.

உ. கீ-ம்-இ-ம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

கண்மணிநான் சொல்வதைக்கேளு-கதம்பவனத்தையாளுஎன்
கண்மணிநான்சொல்வதைக்கேளு.

அநுபல்லவி.

பெண்ணுருவாயுதித்தாய் பூமிதனில்ஜனித்தாய்
மைந்தர்விடாய்தணித்தாய் மானேஎந்தனைக்காத்தாய்-கண்

சரணங்கள்.

நீயேபாராளும்வீரம் பார்க்கவேணும்என்சாரம்
இந்தாகிரீடரத்னாரம் தந்தேன்அரசன்பாரம்-கண்

உன்முத்தானவாய்திறந்து உத்தாரங்கள்நீதந்து
பெற்றவன்மேலேபரிந்து சித்தம்வைத்தாளறிந்து-கண்

எந்தன்கவலைதீரு இந்தநகரைக்காரு
முன்னேமனதுதேரு மீனாக்ஷிபிரியாளைப்பாரு-கண்

ரு. கீ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயாநீநல்லயோசனைசெய்தாய்
அஞ்சும்ரெண்டும்அறியாபாலைக்கு அபிஷேகஞ்செய்ய
ஐயாநீநல்லயோசனைசெய்தாய்

அநுபல்லவி.

ஒய்யாரமாயழைத்து உகந்துமடியில்வைத்து
என்னையெடுத்தணைத்து ஏருதவார்த்தையுரைத்து-ஐயா

சரணங்கள்.

பாலவயதுஅண்ணா பாராளுவதுஎன்ன
விளையாட்டுப்போலேசொன்னாய் வாயைமூடுஎன்னண்ணா-ஐயா

மெத்ததவமிருந்து புத்திரனையடைந்து
பொன்னணிமுடியணிந்து பூரித்துப்பாருஇருந்து-ஐயா

நாரீநாடாளலாமா நம்பகுடிக்கீதாமா
மூன்மதியில்லாமல்போ மீனாக்ஷிபிரியர்கள்நேமா-ஐயா

ச. கீர்த்தனம்-இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

எந்தன்செல்வகுமாரி உந்தன்சிந்தைதளரலாமோ
இதுவென்ன ஜாலம்.

அநுபல்லவி.

பந்தவினைகள்தீர்க்க வந்தாய்நீஎன்னைக்காக்க
அந்தரலோகத்தில்சேர்க்க அமரர்களைநான்பார்க்க
அகிலம்செழித்திட உதித்ததேவியே
யாககுண்டத்திலவ தரித்தபவானியே-எந்தன்

சரணங்கள்.

பாலைநானென்றுரைத்தாய் பாவிஎன்மொழிதடுத்தாய்
பிடிவாதங்கள்பிடித்தாய் பெண்காணியென்றுசலித்தாய்
உன்கரபாணமொன் றுலகம்பிளக்குமே
ஒருநூறாயிரம் சேனையைநறுக்குமே-எந்தன்

இந்திராதிதேவர்களும் ஈசர்முதல்மூவர்களும்
எட்டுதிக்குபாலகர்களும் மட்டில்லாதமன்னர்களும்
மண்டியேயுன்னை எதிர்த்தபோதிலும்
கண்டதுண்ட மாகாமல்போவாரோ-எந்தன்

கோடிபுத்திரர்ள்பிறந்தாலும் குதூகலமாயிருந்தாலும்
உந்தனைப்போலேயாவாளோ எந்தன்ஜநநந்தீர்ப்பாளோ
முன்னேநானென்ன தவங்கள்செய்தேனோ
மீனாட்சிபிரியாள்தாயுன்னை பெண்ணாபடைந்திட-எந்தன்

ரு-விருத்தம்.

ஜெனகருரைதாண்டாத ஸ்ரீமீனலோசனி
சரிசெய்யென்றாள்
கனகரத்நமுடியசைந்து கருத்திலுள்ள
கவலைவென்றார்
சனகாதிகள்சூழ சதாநந்தகுருசாமிமுன்
வருககண்டார்
வானகர்போல்மதுரை வரிசையாயலங்காரம்
செய்குகின்றார்.

தரு. இ-ம்-பூபாளம்-அடதாளசாப்பு.

பட்டாபிஷேகம்என் பாலகிக்குஎன்று
அஷ்டதிசைபேரி யடித்தார்
எட்டுதிசைக்குஓலை எழுதியனுப்பிவிட்டு
இங்குள்ளபேருடன் களித்தார்
சுந்தரேசரிட சந்நிதியில்வந்து
சிந்தைமகிழ்ந்து சேவித்தார்
சீக்கிரமாக சிவாலயங்கள்முழுதும்
சிறப்பாகவே யலங்கரித்தார்
அளவற்றபூஜா திரவியத்தைக்கொடுத்து
அபிஷேகங்களைச் செய்யச்சொன்னார்
ஸ்கந்தன்கணபதிக்கும் திரிபுரசுந்தரிதேவிக்கும்
வேணதுபசரித்தார் நன்று
நல்லசுபமுகூர்த்தத்தில் நாலுதெருவீதியும்
நல்மதுரைபெங்கிலும் கோலமிட்டார்
பூரணகும்பம் ஸ்வர்ணகலசத்தில்
புரோகிதர் பூரித்தெடுத்தார்
பொன்மாலைபுஜத்தாலே தக்கபாலிகை
தடாதகைக் கென்றுதெளித்தார்
மின்னலொளியைப்போல மன்னன்மதுரையெங்கும்
மேன்மையாக அலங்கரித்தார்
மீனாக்ஷிபிரியாள் மகிழமதுரையெங்கும்
கல்யாணஞ்சொல்லியழைத்தார்.

ச-விருத்தம்.

பூதலத்தோர்புசிக்க பெண்மாலை போஜனப்பொருள்
சேகரித்து வைத்தாள்
ஏதுமில்லா ஏழையென்று இறப்பவர்க்கு
எதுகேட்டாலும் வாரிஈவாள்
சீதமணமலர்களை சிங்கார வனந்தனிலேவந்து
சிந்தைமகிழ்ந்து கொய்தாள்
பாதசிரபரியந்தம் பாலகிச்குபணிக்காய்
அலங்காரஞ்செய்தாள்.

---

ரு. கீர்த்தனம்-இ-ம்-துஜாவந்தி-அடதாளசாப்பு.

பல்லவி.

காஞ்சனமாலை கன்னிகாரத்நத்துக்கு
கலகலென்றலங்கரித்தாள்-கண்டோர்சிலாகிக்க
கலகலென்றலங்கரித்தாள்.

அநுபல்லவி.

மஞ்சளைப்பூசி மங்களநீராட்டி
மடியாய்ப்பட்டாடை பிடியிடையில்கட்டி-காஞ்

சரணம்.

தாழம்பூஇதனை தரகதைத்து
தாண்டாருக்கோடி தலைசாமான்வைத்து-காஞ்
கதம்பம்புனுகு கமகமென்றுபூசி
கண்ணேமுத்தேநன்று காட்டென்றுபேசி-காஞ்
மெலிதாய்செதுக்கி இழைத்தாபரணம்சாத்தி
மீனாக்ஷிபிரியாள் மகிழ்வைதான்வாழ்த்தி-காஞ்

நி-விருத்தம்.

மதுரைமீனாக்ஷி மகுடாபிஷேகம் மண்மீதினிலாவு
மானிடர்கள் கேட்டார்
புதிதாகபூஷணம் பொருளைரொம்ப செலவழித்து
பெண்களுக்கு செய்துபோட்டார்
பாதுகைகளோடும் பலவாஹனங்களோடும்
பரிவாரங்களுடன் புறப்பட்டார்
தீதுரூதறியாத தென்னவனைந்து
தெரிசனம் செய்திட்டார்.

---

கூ. கீ-ம்-மோகனம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சகலபந்துக்களும்வந்தார்-சந்திரசேகர
தாசன்சபையிலிருந்தார்

அநுபல்லவி.

ஆகமவேதபு ராணமறிந்தோர்களும்
அல்லும்பகலும்அர்ச்சனை செய்யும்ஹரபக்தர்களும்
சகலத்தையுந்தியாகம் செய்தசந்நியாசிகளும்
சார்வகாலம்சமாதி செய்யும்சிவயோகிகளும்-சகல

சரணம்.

சாதுசங்கத்தால் பழகினசினேகிதரும்
சதுர்சாகரத்துக் குட்பட்டஅரசரும்
மனைவிஜெனன வழியிலுள்ளஉறவாரும்
மதுரைமீனாக்ஷிபிரி யாள்மகிழஅனைவரும்-சகல

எ. கீ-ம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்.

பல்லவி.

ஆருக்குண்டிந்த பிரதாபம்
ஹரரைபத்திசெய்து-நீபெற்றவைபவம் ஆருக்

அநுபல்லவி.

பாருக்குள்பணமிருந்தென்ன-அது
பாசத்துக்கேதுகரமாறதுநன்று
நெடுநாளாய்வெகுபேர்கள்சொன்னுநாங்கள்
நேர்க்கஇன்றறிந்தோம்ராஜமன்னு ஆருக்

சரணம்.

எத்தனைஜென்மம்பூஜித்தாய்-நிஜ
சத்தைநீசந்ததியாகவேபெத்தாய்
முந்தியெங்களுக்கறிவித்தாய்மீனுக்ஷி
பிரியாட்காகஎங்களைவரவழைத்தாய் ஆருக்

அ. கீ-ம்-இ-ம்-துஜாவந்தி-சாபுதாளம்

பல்லவி.

எல்லவரும்இங்கேவாருங்கோள்-மீனுக்ஷிமகு
டாபிஷேககாட்சிபாருங்கோள்

அநுபல்லவி.

சொல்லஅறியேன் உபசாரம்சொந்த
சுதனுய்என்னையாள்வ துங்கள்பாரம்
எந்தனுக்கினிமே லென்னவிசாரம்-எல்லாம்
தீர்ந்துபோச்சுது இந்தவாரம்

ஏழைஎன்னண்டென்னிருக்கலாம்
உங்களாசீர்வாதம்பெருக்கு
பண்ணவேண்டும்நீங்கள்சுருக்கு
பார்க்கஅழகாய்கருக்கு எல்ல

சரணம்.

நிஞ்சிற்றுநான் செய்வதைக்கண்டு-கெவு
ரவமாய்கிரிபோ லெண்ணிக்கொண்டு
அன்னம்பானி யங்களையுண்டு-யாவதையும்
தங்களதாக வெண்ணிக்கொண்டு

கெந்ததாம்பூலம் கிரகித்து
களேபரத்தை நிர்வகித்து
மித்திரனுய் என்னைபாவித்து
மீனுக்ஷிபிரியாளை நினைத்து எல்ல

சு-விருத்தம்.

போகிகள் விவேகிகள் யோகிகளெல்லோரும்வர உகந்தழைத்தார், மகிமையுயர்மதுரேசனுய் மனதிலெண்ணி அவரவர்க்குத்தகுந்த ஆசனமளித்தார், திருதிகென்றுதிவளர்த்தி திரவியங்களாலே ஓமாகுதிகொடுத்தார், சுகியாய்வளர் மீனுள்வர சமயமிதுவென்று சுமதியோடுரைந்தார்.

---

சு. கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

அழைத்துவா பெண்ணே-மந்திரி
ஆலோசனைசொல்லும்-தந்திரி (அழை)

அநுபல்லவி.

தழைத்தவேணியே தடாதகாகண்மணியே
சிரித்தவதனியே சீக்கிரம்போய்நீயே (அழை)

சரணங்கள்.

அம்பாரியின்மேலே-அவளை வைத்துநீமுன்னாலே
என்செவிமனம்போலே-சுதனிசொல்லும்வழியாலே (அழை)

என்குலத்துக்கேர்க்க எல்லவரும்பார்க்க
சுபகரகருக்காய் சுமதிநீசுருக்காய் (அழை)

தாயுடனேகூட தாசிமார்சாமரம்போட
முன்னேமகுடம்சூட மீனுட்சிபிரியாள்கொண்டாட (அழை)

எ-விருத்தம்.

சுமதிஜோருயெழுந்திருந்து ஸ்வர்ணகர்ணுபரணம்மின்ன
நாமர்த்தபிகயத்தோடுகாரியர்கள் நடக்கையில்கர்த்தனங்கள்பண்ண
கமகமென்னகந்தம்வீசும்கன்னிகா மடந்தனிலேவந்ள்நன்று
தாமசம்செய்யாமல்தங்கரதந்தனிலேஏறி தாயைவருகச்சொன்னுர்.

---

௧௦. கீ-ம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

இராஜாத்திவா-ரமணியசத்திவா
இராஜகரக்குமாரி-நீவா-வா வா (இரா)

அநுபல்லவி.

ஆசைமிகுந்துஎன்னை அழைக்கச்சொன்னுரேஎன்னை
நாழிகளாடிமுன்னே நடந்துவாடிஎன் அன்னை
நவரத்நகிரீடந்தரிக்க-நீவா வா வா (இரா)

சரணங்கள்.

இந்திரநீலங்களாலே இழைத்தாசனத்தின்மேலே
உன்னைவைத்திருந்தநாளே அபிஷேகஞ்செய்வதாலே
உகந்துவருகச்சொன்னார்-நீவா வா வா (இரா)

முத்துபல்லாக்கில்வைத்து மெத்தனம்புரிந்து
தாளமேளமடித்து தங்கக்குடைபிடித்து
உன்தாய்மாரையுமழைத்து-நீவா வா வா (இரா)

முனிவர்கள்காத்திருக்கார் முகூர்த்தத்துக்காரம்பிக்க
மறையோர்கள்சூழ்ந்திருக்கார்மன்னர்வழிபார்த்திருக்கார்
மீனாக்ஷிபிரியாளைக்காக்க-நீவா வா வா (இரா)

---

௧௧. கீ-ம்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி

வந்தாளேமதுராம்பிகா-வைரம்வைத்த கிரீடத்தைவகிக்க
வந்தாளேமதுராம்பிகா

அநுபல்லவி.

சந்திரபிம்ப முகம்பளபளென்க
சர்வாபரண சரம்சலசலென்க
தாண்டகாரம்ஜெம்ப கைஜிலுஜிலென்க
தங்கசரிகைதுகில் தகதகென்ன வந்

சரணங்கள்.

கட்டியன்கிட்ட தங்கத்தடிபிடிக்க
நாட்டியப்பெண்கள் நன்றாய்ப்பாடிநடிக்க
சட்டப்படிவிருது குடைபிடிக்க
அஷ்டதிசைபேரி வாத்தியங்களடிக்க வந்

மாதர்சூழகன்னி காமங்கடந்து
வலரணைமீதி லன்னம்போல்நடந்து
மேனிபூரித்துள்ளம் சந்தோஷமடைந்து
மீனாக்ஷிபிரியாள் தியானசபைதொடர்ந்து வந்

அ-விருத்தம்.

பெண்ணைபூர்ணமதிமுகம்மலர்ந்து மனம்உகந்துபார்த்தார்
கண்ணேவாடியம்மாவென்று கரங்களைப்பிடித்தார்
மண்ணையாளும்மகுடமுடிக்கிசைந்த மாணிக்கமாலைகள்தரித்தார்
விண்ணைவெல்லுவீரியைவிசித்திர சிம்மாசனத்திலேற்றிவைத்தார்.

கஉ. கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

சிம்மாசனத்திலிருந்தாள்
ஸ்ரீமான்சிந்தைமகிழ்ந்தார் சிம்

அநுபல்லவி.

மும்மாரிபொழிய முறைவேதவழியாய்
துஷ்டர்களொழிய தர்மாக்கிகளழிய சிம்

சரணங்கள்.

வில்பிடித்தவீரி வேங்கைபோல்தைரி
யுத்தரணசூரி உத்தமர்க்குபகாரி சிம்
பாஷைபலசொல்லி பக்தவசாய்நல்லி
மரகதவல்லி மீனாக்ஷிபிரியாள்சொல்லி சிம்

க௩. கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

பட்டாபிஷேகம்செய்தார்
பாண்டியர்பாலகிக்கு பட்டாபி

அநுபல்லவி.

எட்டாவிசாலமான மண்டபத்தில்
எண்ணேழ்வேந்தரெல்லோரும் கூடிகளித்து
ரத்நமயமான சிம்மாசனத்தில்
மகாராசகுமாரியை உட்காரவைத்து
நாழிகள்நக்ஷத்திரங்கள் போதைகள்வேளையைபார்த்து
நவரத்நங்களிழைத்த கிரீடங்களைத்தரித்து
நாலாவிதபேரிகை வாத்தியங்களையடித்து
நல்மதுரைஸ்ரீமான்தன் நாயகிமாருடன்பூரித்து பட்

சரணங்கள்.

ரம்பையர்கள்நின்று நர்த்தனமாட
ராகத்துடனேநாரதர் சங்கீதம்பாட
மந்திரிபிரதானிகள் வந்துகூட
வந்தமன்னர்களை எதிர்கொண் டழைக்கஓட
ஐம்பத்தாறுதேசத்து ராஜர்களும்ஒன்றாகக்கூட
அஷ்டைதிசைகேழ்க்க அதிர் வெடிகளெங்கிலும்போட
கோமளாகாரமீனாக்ஷி முகத்தைவந்தோர்கள்தேட
குலசேகரர்குமாரர் கூப்பிட்டழைத்துக்கொண்டாட பட்

சதானந்தமுனி மந்திரம்உரைக்க
ஜனக்கூட்டங்களும்அங்கே வந்துமேமொய்க்க
பிராமணர்கள்பிரசங்கம் செய்துவாதிக்க
பலராஜரெல்லோரும் கப்பணங்கள்வைக்க
முப்பத்துமுக்கோடிதேவர் புஷ்பங்கள்வாரியிரைக்க
மோகனுவதாரியைக் கண்டுமூவர்களும்பூரிக்க
பெண்ணரசையாள்வதற்கு பூச்சக்ரகொடைபிடிக்க
பூரியேவாரீர்மீனுட்சி பிரியாள்மகிழக்கொடுக்க பட்

---

## கச. கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்ரீங்காரமுடிசூட்டினர் செல்வமீனுக்ஷிக்கி
ஸ்ரீஹாரத்திசுத்திகொட்டினர்

அநுபல்லவி.

தன்கையால்தாயார் நீர்பூசினுள்
தடாதகைக்குதிர்ஷ்டி தீரமஞ்சள்நீரைவீசினுள்
சர்ச்சனுளவள் சமுகம்வந்துபேசினுர்
துர்ச்சனுள்தூர விலகிப்போய்கூசினுர் ஸ்ரீங்

சரணங்கள்.

முப்பழம்பக்ஷ யான்னம்உண்டார்
மொஹராதெக்ஷணை தாம்பூலம் திருப்தியாகிக்கொண்டார்
சகலபந்துவும்ஏக காலத்தில்வரக்கண்டாள்
சந்தோஷமான சாகரத்திலேகின்றுள் ஸ்ரீங்

இராஜமகிஷியெல்லாம் ஒற்று
ரிஷிபத்தினிகளை பிரார்த்தித்து பலவரங்கள்பெற்று
விலையுயர்ந்தாப ரணம்நல்லமுத்து
வேண்டியதுபாத காணிக்கைவைத்து ஸ்ரீங்

உலகமுழுதும் ஒன்றுய்க்கூடி
ஒத்துமையாய்நன்றுய் பேசியெல்லோரும்உறவாடி
முன்னேமங்களமாய் கல்லியாணங்கள்பாடி
மீனுக்ஷிபிரியாள் தாயாரைக்கொண்டாடி ஸ்ரீங்

---

௩௫. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

பாலைபவனிவாராள்
பார்க்கவெகுஜோராய்

அநுபல்லவி.

மாலைமேலேதடுக்க மாதராலாத்தியெடுக்க
விருதுகொடைபிடிக்க வெடிவேகமாய்வெடிக்க பாலை

சரணங்கள்.

பட்டத்துயானைமேலே பகல்புறப்பட்டாப்போலே
சுகந்தமலர்களாலே ஜோடித்தராஜவீதியிலே பாலை

தொண்டர்கள்தோஷவினாசி தோகைமயில்பச்சைப்பிரகாசி
தந்தம்தெரியமந்தஹாசி தீவுபாஷைகளெல்லாம்பேசி பாலை

கிஞ்சினிநாட்டியமாட கின்னராள்கிருதிகள்பாட
மின்னேதாளங்கள்போட மீனாட்சிபிரியாள்கொண்டாட பாலை

௯-விருத்தம்.

மேல்வீதி வருகையில் வேதியர் சந்தோஷித்து
கரங்கள் கொட்ட
சோலைபோல் சுரசபலம் கனிந்து இருசாரியாய்
செந்தேன்கள் கொட்ட
கோலைகரி துதிக்கையில் கொடுத்து கூட்டங்களை
விலக்கி யோட்ட
வேலைவிசித் திரமாய்செய்த வேந்தர்திரு மாளிகையில்
வந்துசந் தோஷப்பட்டாள்.

---

௩௬. கீர்த்தனம்-இ-ம்-பிலஹரி-ஆதிதாளம்.

பல்லவி.

சுபகரமனைவந்துகண்டாள்-சுந்தரமாடகூட
கோபுரங்களிலேறிநின்றாள் சுபகர

அநுபல்லவி.

சபையில்வரிசையாய்போட்ட வெள்ளிகுருச்சிகளேன்
ஜாதிரத்னத்தாலிழைத்த சயனமிச்சுகளேன்
பாண்டியர்பாணிக்கிரஹணம் செய்தபலதுரைச்சிகளேன்
பக்கத்திலுலாவும்பாங்கிப் பெண்சிறுஇடைச்சிகளேன் சுப

சரணங்கள்.

இராஜமகிஷியெல்லாம் கிரீடாகிரஹத்தழகறிந்து
இரத்னஜன்னலேன்கண்ணாடி கதவைவுங்கண்டுமகிழ்ந்து

பொன்மாலைநீவெகுபுண்ய சாலியென்றுபுகழ்ந்து
பூரித்துபெண்களெல்லாம் சேவித்துபுஜத்தாலணைந்து சுப

மாணிக்கமணிகளாலே இழைத்தநிலைப்படியேன்
மேகமண்டலமட்டும் உலாவுகிறபொன்மாடியேன்
தென்னனுக்குலாவவரு கும்பூவாடைமேடையேன்
தேன்போலேமாதுரியமான தீர்த்தம்நிறைந்தஜலடையேன் சுப

எங்கும்ஏகமாய்படுத்த தங்கத்தளவரிசையேன்
புத்துருக்குநெய்யுடன் போடும்போஜனஉரிசையேன்
மனோஹரமாகச்செய்த மேல்வேலைதாரிசையேன்
மீனாக்ஷிபிரியாள்பக்தி பண்ணப்போறபேரிசையேன் சுப

௧௦-விருத்தம்.

அம்மான்மார் ஆசீர்வாத வரிசைகளை பரப்பியே
பணங்கள் போட்டார்
செம்மையாய் சன்மானம் பெற்றெல்லோரும் சென்றுபோய்
சந்தோஷப் பட்டார்
மும்மாரி முடைகளொன்றும் பண்ணாமல் பயிர்முகம்
பார்த்து கொண்டார்
நம்மாலே யானமட்டும் நடத்திடுவோம் அரசென்று
நங்கை புறப்பட்டாள்.

---

௧௭. கீர்த்தனம்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

முத்துபல்லக்கின் மேலேறிவாராள்
மோஹனாங்கி மீனம்பாள்
ரத்னசபைபோய் சிம்மாசனம்ஏற முத்து

அநுபல்லவி.

கொத்துமல்லிகைமலர் கூந்தலில்முடித்து
குதூகலமாய்பாடகபாதத்தை
பார்க்கவிநோதமாய் மடித்து
வாசனைதாய்பூலாதிகளடக்கி
வம்பர்கள்வழக்கெல்லாம்-தீர்க்ககச்சேரிக்கி முத்து

சரணம்.

பத்மமுகத்தில் புலாக்கிசைந்தசைய
பாண்டியராஜன்குமாரி
பத்துமணிஆச்சுதென்று வெகுவெனசயாய்
மாதாகாஞ்சன மாலைகண்டுகொண்டாட
மதுரைமீனாட்சி பிரியாள்தினம்பாட முத்து

## ௧அ. கீர்த்தனம்-பந்துவராளி-ரூபகதாளம்

### பல்லவி.

சிம்மாசனத்தில் சிந்தைமகிழ்ந்து
செல்வகுமாரி கொலுவிருந்தாள்
சுற்றுவரசைனி யங்கள்சக்திசபை
எங்கிலுமேவந்து நிறைந்தாள் சிம்

### அநுபல்லவி.

கம்மல்ஜிமிக்கி இருகரணங்களில்
கண்டோர்மனதெல்லாம் கிரஹிக்க
கப்பணங்கட்டிட வந்தராஜர்காலில்
விழுந்தடிக்கடி ஸ்துதிக்க சிம்

### சரணங்கள்.

கட்டியன்மந்திரி பிரதானிகைகட்டி
வாய்பொத்தி எதிர்நின்றுகூச
காரியஸ்தர்க ளடிக்கடிவந்தாக
வேண்டியது களைப்பேச சிம்

மந்தஹாசமாக மாணிக்கரத்ன
பெஞ்சிபீடத்திலே சாய்ந்து
மட்டியானபொல்லா துஷ்டர்மீதில்
கோபித்துசிம்ம குட்டிபோல்பாய்ந்து சிம்

கானமீனாட்சிபிரி யாள்மனதிலினை
தியானம்செய்து தினம்பாட
கன்னிகாபுரியி லுள்ளபெரியோர்கள்
கண்டுமகிழ்ந்து கொண்டாட சிம்

## மங்களம்.

### ௧௯. இ-ம்-அரிகாம்போதி-ரூபகதாளம்.

### பல்லவி.

மங்களம்ஜெய மங்களம்சுப
மங்களம் மகராஜிக்கு
திங்கள்குலத்தில் தீயில்ஜெனித்து
தினமும்தென் மதுரைரக்ஷிக்கு மங்களம்

### அநுபல்லவி.

தங்கமானபெண் ணங்கமெடுத்து
செங்கோலாளும் ராஜாத்திக்கி
எங்கும் மாய்நிறைந்த
பங்கஜமுக பிரம்மவித்தைக்கி மங்களம்

சரணம்.

அன்பாய்மீனு க்ஷிபிரியாள்
அர்ச்சனைசெய்யும் துரைசானிக்கு
அகிலனலில் ஆத்திதைலம்
ஏத்திசெரிந்து வளர்ந்தவேணிக்கு மங்களம்

பட்டாபிஷேகக்கீர்த்தனை முற்றிற்று.

ஆக கீர்த்தனை-௧௧. விருத்தம்-௮.

---

உ

கடவுள் துணை.

ஸ்ரீமத்தடாதகாதேவி

# செங்கோல்செலுத்திய கீர்த்தனை.

௧. கீர்த்தனம்-இ-ம்-சாமா-சாபுதாளம்

பல்லவி.

பாண்டியர் பரவசம் கொண்டார்
பாலராஜ்யபரிபாலனம் கண்டார்

அநுபல்லவி.

ஏண்டியம்மா வென்றழைத்து
ஏகசத்திர திறமையுரைத்து
சகலசம்பத் தையும்கொடுத்து
சபையோரைஇன்னு ரின்னுரென்றுகாண்பித்து பாண்

சரணம்.

காஞ்சனமாலை யுடன்கூடி
கெங்கையமுனை நதிபோய்நீராடி
அழியாபதவ பரத்தைத்தேடி
ஹார்மீனுக்ஷிபிரியாய் அன்னையைக்கொண்டாடி பாண்

---

உ. கீர்த்தனம்-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

சொர்க்கபதத்தை போயடைந்தார்-சூராள்ஸ்துதிக்க
சொர்க்கபதத்தை போயடைந்தார்

அநுபல்லவி.

வர்க்கவழிக்குநல்ல வபணமகளை வைத்து
அர்க்கனுலாவுமட்டு அழியாப்பெரும்பேர்பெத்து-சொர்

சரணங்கள்.

சதகிருதுசயன்புத்ர காமேட்டியனேகம்செய்து
சத்தியசதாசிவத்தை நித்தியம்மனதில்ஒய்து-சொர்

மலையத்துவஜமன்னன் மானிடஜெடலத்தைமாரி
மதுரைமீனாட்சிபிரியாள் மகிழ்விமானமேறி-சொர்

௩. கீர்த்தனம்-இ-ம்-மாஞ்சிகம்-ரூபகதாளம்.

பல்லவி.

வஞ்சனை நீ செய்தாயேஐயா
வருந்திஎன்மனம் நையா வஞ்

அநுபல்லவி.

அஞ்சாதேயென்றுசொல்ல ஆருமுண்டோஉன்னையல்லால்
முந்தியேநீஎன்னை தள்ள மோசமசெய்தாயேமெள்ள வஞ்

சரணம்.

புத்திமதிசொல்லாமல் பூரித்துஇங்கேகில்லாமல்
சத்துருக்களையெல்லாம் சிறப்பாய்விவாஹம்செய்யாமல் வஞ்

நான்பிறந்தகாரணமோ நக்ஷத்திரபேதகமோ
மன்னுஉனக்கீதாமோ மீனாட்சியாள்கோபமோ வஞ்

க-விருத்தம்.

தந்தைதா னிறந்தபின்பு தயங்கியே தடாதகா
மனம் தளர்ந்தாள்
விந்தையானகூந் தல்விரிந்திட வெம்பும் தாய்மடியின்
மேலே யிருந்தாள்
மந்தைபோல் மனிதர்கள் மயங்கியே மகாதேவி
மனையில் வந்தார்
சிந்தை நொந்த செல்விக்கு சிலாசில
தெளிவுகளைப் பொழிந்தார்.

---

௪. கீர்த்தனம-இ-ம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்.

பல்லவி.

தடாதகா நீதளர்ந்திடலாமா உந்தன்நெறைக்கி
தகுந்ததினிசெய்யவேண்டாமா தடாத

அநுபல்லவி.

வாடிநீஅழைத்தாலே-வருவாரோஇனிமேலே
சீக்கிரமாய்பொய்கையிலேஸ்நானமும்நீசெய்யவில்லை தடாத

சரணம்.

நாடுநகரமிருக்க நாங்கள்வெகுபேரிருக்க
பெற்றதாயுனக்கிருக்க கத்தியேன்கலங்கிருக்காய் தடாத

எள்ளும்ஜலமும்எடுத்து இசைந்ததொர்ப்பைபிடித்து
பொத்தாம்பரையிலிறைத்து புண்ணியரைக்கரையேத்துதடாத

வேந்தனைநினைத்திடாதே வீண்போதுகழித்திடாதே
மலர்க்கண்ணால்நீரைவிடாதேமீனாட்சிபிரியாளைக்கெடாதேதடா

ரு. கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்.

பல்லவி.

பாலமீனாட்சி பாரைபரிபாலித்த
பிரபல்யமஎன்னசொல்வேன் பக்திவிநய பிர

அநுபல்லவி.

காலையில்கல்லிழைச்ச கட்டிலைவிட்டு
கர்ணமிருத கானங்கள்கேட்டு
அருணோதயத்தில்அர சாங்கத்தோடபுறப்பட்டு
அலர்ந்தேமோதபத்மநீர் ஆடிஅரர்க்கர்க்கியம்விட்டு பால

சரணம்.

ஊழியமாதா ஒருகோடிபேர்மடிய
உலர்த்தி வேணிமுடிய
மேலைபனிவிலகி வெய்யலாய்வெடிய
மீனாக்ஷிபிரியாள்கவி பாடிகண்ணீர்வடிய பால

சா. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி.

தோழிமார்சூழ துரைசானிவாராள்
வாணிவலக்கரத்தை நாணிபிடித்துஜோராய் தோழி

அநுபல்லவி.

ஆழியினொளியாலே யாதித்தியன்காந்திமழுங்க
அரசர்குலத்துநீதி முறைப்படிஒழுங்க தோ

சரணங்கள்.

உத்தமிகாஞ்சனமாலை யிடத்தினிலுத்தரவுபெற்று
சித்தமெல்லாம்சிவ லிங்கத்தின்பேரிலேவைத்து தோ

பத்துதிசைவானவர் ஒத்துபார்த்துமனதுஒய்ய
பாண்டியகுலசேனை வேண்டியஅர்ச்சனைசெய்ய தோ

அந்தணர்களைக்கண்டு அடிக்கடிவசனித்துநின்று
அதிகவிநயத்துடன் அஞ்சலிசெய்துகொண்டு-தோ

மதுரையிலுள்ளமஹாத் மாக்கள்மகிழ்ந்துமலர்பொழிய
மங்களாகாரமான மாசிவீதிவழியாய்-தோ

பரிமளமிகுந்தபூஜா திரவியவாசனைவீச
பட்டமாராளெல்லோரும் கிட்டேவந்துமேபேச-தோ

நளினபாதங்களாலே நடபாவாடைமீதில்நடந்து
நல்மதுரைமீனாக்ஷி பிரியாள்பெருமானைத்தொடர்ந்து-தோ

எ. கீ-ம்-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்,

பல்லவி.

தேவிசிவாலயத்தில் நுழைந்தாள்-பூஜா
திரவியங்களை வாரிசொரிந்தாள்

அநுபல்லவி.

சாவியினால்சபையைத் திறந்தாள்
ஆவியிருக்கஉடல் மறந்தாள்
தாவித்தரைதனிலே பணிந்தாள்
மேவிவிமானேசனை நினைந்தாள்-தே

சரணங்கள்.

சிங்காரமாய் ஜெம்பகைதொடுத்தாள்
சுந்தரேசருக்கிதென்று கொடுத்தாள்
சந்திரகலாதரரை யடுத்தாள்
சரணமென்று சந்நிதியில்படுத்தாள்-தே

மலரிலிருந்த காம்புகளைக்கொய்தாள்
மதுராபுரேசரை பூஜைசெய்தாள்
மேனிபுளகாங்கித மாகிவைதாள்
மீனாக்ஷிபிரியாளுக்கு பக்திசுதாள்-தே

அ. கீ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

தடாதகாதங்கம்தினம் தானங்களீந்தாள்
தாபதாரித்திரியர்கள்தாயே தேஹியென்றுஇறந்தார் தடா

அநுபல்லவி.

ஆடைமேலின் தோரையன்பாய்
அம்பாள்பார்த்தாள்-அவளாயுசுபரியந்தம்
அணிந்தும்ஆகாமல் அமோகமாய்கொடுத்தாள்
தீனர்களை தயவாய் தினம்விசாரித்தாள்
தீர்வைதள்ளித்தரமாய் தரைகள்ரொபஸ்தாபித்தாள்-தடா

சரணங்கள்.

ஏழைஅனுதிகள்எல்லோ ரையுங்கூப்பிட்டாள்
இந்திரபுரிகர்ப்பகத்தருபோல்
தாரேன்எவர்க்கேது தேவையென்றுகேட்டாள்
மேருபோல்மின்போரிட்டவஸ்து யாவதையும்தொட்டாள்
மெத்தாசைபடைத்தோர்க்கும் பூர்த்தியென்கவாரிவிட்டாள்-தடா
அங்கபங்கர்மலைக் கண்டுமனம்நைந்தாள்
அதற்கவிழ்தமான அமிர்த
கடாட்சத்தால்பார்த்தப்போதே நிவர்த்திசெய்தாள்
முன்னோர்நிதியாய்தேடிவைத்த தனத்தைக்கண்டெடாய்தாள்
மீனாக்ஷிபிரியாள்மன மகிழெல்லோர்க்கும்வாரிஈதாள்-தடா

உ. விருத்தம்.

நித்தியவிதியெலாம்சிரத்தையுடனே நீலவர்ணிமுடித்தாள்
வாத்தியங்களோடேகிரகம்வந்து வைதீகர்களுக்கிலைபடுத்தாள்
மத்தியானபூசைமகாதேவருக்கு மணியினுள்ளேபடைத்தாள்
சுத்துகின்றசேவகாள்மேல்சீறியே செல்விசிலமொழிகொடுத்தாள்.

---

கூ. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

பூசுராள்கருதும் அற்புதசாக
சமயலில்தீர்ந்த ஏஸ்வயம்பாகா
இன்னம்என்னபொன் சருவத்தில்வேத
எத்திருக்காய் நீசொல்என்முன்பாக

அநுபல்லவி.

கேஸ்ரிபார்த்துபேடா பூரிச்செய்தாச்சா
கட்டளைப்படி கிரீஜருக்குப்போச்சா
தகதகென்றிந்ததங்கத் தாலத்தைதேச்சா
தடைசெய்தாளோதா கொண்டுவாபோபொன்கூஜா-பூ

சரணங்கள்.

பன்னபலம்மாங்கனி நாளிகேரம்கிறு
பந்தியிலேமுந்திரிவை யெல்லோருக்கும்கூறு
சீனியேன்நெய்யேன் சனகனைவலிலேசேரு
ஸ்ரீமீனாக்ஷிபிரியாள்மகி ழெல்லோர்க்கும்பரிமாறு-பூசு

## கo. கீ-ம்-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

தாயேநீர்தயவுசெய்துஅமு துண்ணஇரும்நீரம்மா
தாசர்கள்தாமசவேலைகண்டு
ஆயாசம்வேண்டாம்அங்கம் வேர்க்கிறதுசும்மா-தா

அநுபல்லவி.

பேயைக்கொல்லபெருமானைசேவிக்கபோனம்பொழுதாச்சு
பேணிலாடுபெரிதாகரொம்பச்செய்து
பத்தாண்டாபால்வைத் தனுப்பினேம்காம்தீச்சு-தா

சரணங்கள்.

மதுரைமீனாக்ஷிபிரியாளுக் காகஇதைபொருநீ
மண்மீதிலுள்ளமன்னர்கள்போற்றும்
மாதரசேயெங்கள் மேலேமன்னித்தொரு-தா

## கக. கீ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

போஜனம்செய்தாளே-மீனா போஜனம்

அநுபல்லவி.

பூசுராளுடன்பூரித்து யாசர்களைஅரவணைத்து போ

சரணம்.

வாசனையாய்வள மாய்தாய்பரிமாற
தாசரெல்லோர்க்கும்தங்க பங்காபோட்டுவிசிற போ
மதுரைமீனாக்ஷிபிரி யாள்மனம்மகிழ்பாலே
மாணிக்கம்இழைத்தஆரு தரித்தசெங்கரத்தாலே போ

## ரு. விருத்தம்.

பாங்கிபரி மளநீர்விட பாதகர வதனங்களை
சுத்தி செய்தாள்
ஓங்கிஉண்டோர் ஆசீர்வாதம்செய்ய உகழ்ந்துமே தாம்பூலம்
தரித்து ஒய்தாள்

வாங்கிகங்க ளுதிகளை வாரிக்கொண்டு தாய்வர
அவயவங்களை ஈதாள்
பொங்கிபூ முடியைத்தானே கோதபோ தாச்சுது
போடியென்று வைத்தாள்.

கஉ. கீ-ம்-இ-ம்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

அம்மா நீ என்னடிசும்மா சீவுசிரூய்
எந்தனுக்குநேரமாச்சே என்

அநுபல்லவி.

ஆதித்தியன் அமரதிசைச்கடந்து
உச்சிநேரமாய் ஓடிப்போச்சே அம்

சரணங்கள்.

கம்மல்ஜிமிக்கிகெம்புசரம்வாளி
கனக்குதெனக்கினிவேண்டாம்
கண்டித்துநீகாணுவோர்க்கழகாயிட்டால்
கர்ணங்கட்குப்பாதையுண்டாம் அம்
வாழைமலர்போலேபாரியென்வேணியை
தாழமுடிந்தினிபோடு
வாடாமல்லிகையைபாடமாய்வைத்துநீ
இடையிலேவாறேன்சூடு அம்
அட்டிகைசுட்டிஒட்டியாணமெல்லாம்கெட்டி
யார்நீமுடிந்துக்கோடி
கட்டிலில்மெட்டி கழற்றிபோட்டிருக்கேன்
சட்டென்றெடுத்துக்கொண்டாடி அம்
ஞாயந்தப்பிபொல்லா வம்பர்களோட
நப்பரெல்லாம்ரொம்பயிருக்கு
நம்பள்மீனாட்சிபிரியாள்மனமகிழ ஆனல்
போட்சுருக்கா முத்துச்சுருக்கு அம்

ச. விருத்தம்.

பின்னலே ஒருநொடியில் கொழுந்துவேறே செய்தழகாய்
பின்னி வினிவிட்டாள்
முன்னலே மதிமுகத்தில் மையுடன் மநோரமண்ய
திலக மிட்டாள்
பொன்னலே தாளமேளம் திண்ணைதெரு வெங்கும்
திறமாகக் கொட்ட
என்னலே யானமட்டும் எழுதிடுறேன் தீர்ப்பென்று
என்தாய் புறப்பட்டாள்.

கரு. கீ-ம்-இ-ம்-சகாஞ-ரூபகதாளம்.

பல்லவி.

சங்கரிதேவி சபாமண்டபத்துக்கு
சந்தோஷமாகவாராள் சங்கீதத்துடன் சங்க

அநுபல்லவி.

மங்களமான மகுடம்தரித்து
ஸ்ரீங்காரமாய்கையில் செங்கோல்-பிடித்து-சங்க

சரணங்கள்.

இராஜாத்தி இராஜன்குமாரி
இரத்நம்இழைத்த ரதத்தின்மேல்ஏறி-சங்க
மாதரிருகரம் வெண்சாமரம்போட
மதுரைமீனுட்சி பிரியாள்தினம்பாட-சங்க

கச. கீ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

இராஜாங்கமாகக் கொலுவிருந்தாள்
ரோஜாப்பூஜோடித்த சதளிலே இரா

அநுபல்லவி.

தேஜோமயமாய் கிரீடம்மின்ன
திவ்யசரிகைசார் மாணதிண்டிலேசாய்துந்துநன்று
கணக்காய்கப்பணம்வாங்கி கரத்தில்செங்கோலேத்தாங்கி
எங்கும்எச்சுஓங்கி எவரிடத்திலும்பயம்நீங்கி-இரா

சரணங்கள்.

சிறப்பாயெங்கிலும் செங்கோல்நடத்தி
சிறுத்தஇடையில்சித் தாடகலேநன்றுயுடுத்தி
மூன்றுகுஜகுமாரி மோகனவதாரநாரி
வெகுசாய்தெரிந்தவிவகாரி விசித்திரசிம்மாசனத்திலேறி-இரா
மாதாகாஞ்சன மாலேபார்க்க
மதுரைமீனுட்சி பிரியாள்தினம்கவிகள்சேர்க்க
கண்டோர்பிரமிக்கும்கன்னி கதம்பவனத்தைஉன்னி
அதிபாலேயானசின்னி அனேவர்களுக்கும்செய்துநன்னி-இரா

செங்கோல்செலுத்திய கீர்த்தனே

முற்றிற்று.

ஆக கீர்த்தனே-கச ஆக-விருத்தம்-ச.

உ

சிவமயம்.

ஸ்ரீமத்தடாதகாதேவி

# திக்குவிஜய கீர்த்தனை.

விஜயமீனாட்சிதேவிக்கு தேவர்கள்
கப்பணங்கட்டிய கொம்மி.

க. இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

கல்லுக்கள்முத்துக்களேன் நல்லநல்ல காவடிகெங்கைகளேன்
காசிதேசத்தரசன்மீனாட்சிக்கி கப்பணமாய்க்கொடுத்தார்

பனாரஸ்பட்டுக்களேன் நல்லநல்ல பாவாடைசுருட்டுக்களேன்
பிரயாகைஅரசன் மீனாட்சிக்கிப் பகுதியாகக்கொடுத்தார்

ஆனைகள்அஸ்வங்களேன் நல்லநல்ல ஆயுதபாணங்களேன்
அயோத்தியாபுரியரசன் மீனாட்சிக்கி அற்பணமாய்க்கொடுத்தார்

குருச்சிபெருஞ்சிகளேன் நல்லநல்ல கூடாரக்கோர்வைகளேன்
குருகுலத்தரசன்மீனாட்சிகொலு வில்கொணர்ந்துவைத்தார்

கத்திகள்வத்திகளேன் நல்லநல்ல கண்ணாடிகுளோப்புகளேன்
காவேரிபட்டணராசன் மீனாட்சிக்கி சேரிமுன்னாலேவைத்தார்

சொர்ணஜோடுகளேன் நல்லநல்ல வர்ணமாடுகளேன்
சோளதேசத்தரசன்மீனாட்சிக்கி சொந்தமாகக்கொடுத்தார்

கெண்டிஉருளிகளேன் நல்லநல்ல வண்டிவாகனங்களேன்
கேரளம்சீமைராஜன் மீனாட்சிக்கி தாராளமாய்க்கொடுத்தார்

சம்பாநெல்லுக்களேன் நல்லநல்ல சாப்பாட்டுசாமான்களேன்
சந்திரகுலத்தரசன் மீனாட்சிக்கி சாஸனம்செய்துவைத்தார்

பூசும்புனுகுகளேன் நல்லநல்ல வாசனைபில்லைகளேன்
புதுக்கோட்டையரசன்மீனாட்சிக்கி பூரித்துமேகொடுத்தார்

மேஜைபெட்டிகளேன்நல்லநல்ல மெத்தைதுப்பட்டிகளேன்
மிதுலாபுரியரசர் மீனாட்சிபிரி யாள்மகிழக்கொடுத்தார்

க-விருத்தம்.

கப்பண மெல்லாம் கெடுவில்லா வாசினி
கணக்காய் கிரகித்தாள்
அப்பட சென்னி அரண்மனையில் அதைஅன்னைமுன்
கொண்டே நிறைத்தாள்

உற்பாதஸ்தானம் இன்னம் மலையிலேயே என்றுதாய்
கரம் விரித்தாள்
எப்படி இனிநானுன்னை வைத்திருப் பேனென்று
கிலேசித் துரைத்தாள்.

---

கீ-ம்-இந்துஸ்தான்-காபி-சாபுதாளம்.

பல்லவி.

அன்னமேநான் என்னசெய்குவேன்
கன்னிபருவம்காலக்ஷிமிஷமாய்கடந்துபோச்சே அன்

அநுபல்லவி.

மன்னுதிமன்னரெல் லாம்வந்துஆச்சே
மத்திகுஜமாத்திரம் மறையாமல்போச்சே-அன்

சரணங்கள்.

ஆருஇல்லாதநான் நாரியானேன்நீ
ஆளன்தேடும்யுவதி யானுயோமானே-அன்

கல்லியாணம்செய்து காணப்போறேனே
கணவன்கிரகத்தில்வைத் துன்னை பாறேனே-அன்

மதுரைமீனாட்சிபிரி யாள்மகிழ்செல்வம்
மேகவர்ணன்மகன்விடும் கணையெப்படிவெல்வம்-அன்

உ. கீர்த்தனம் இ-ம்-பைரவி-சதுர்ஜாதிரூபகம்.

பல்லவி.

என்ன ஆலோசனை செய்தாய் என்தாயேநீதானிப்போ
என்ன ஆலோசனை நீசெய்தாய்

அநுபல்லவி.

சின்னவேலைகளை நீயெண்ணி

ஸ்திரீதேவிசெழிக்கும் ஸ்ரீங்கராமுகக்கமலம்கன்னி
இத்தைதஹ்ருதயத்தில்வைத்து நித்திரை ஆகாரம்அற்று
மத்திகுஜத்தைப்பார்த்து கத்தாதேடிகவலையாற்று-என்

சரணம்.

இந்திரலோகம் எங்கும்சொல்லுவேன்
எமன்நிருதிவாயு வருணனையும்வெல்லுவேன்
கைலைமலையையும்பேர்ப்பேன் காலாந்தகனை ஒருகைபார்ப்பேன்
உந்தன்காதலையுந்தீர்ப்பேன்எந்தன் மீனாட்சிபிரியாளையும்கார்ப்பேன்

## உ. திக்குவிஜயகொம்மி.

சாந்தகணபதியைப்பணிந்தேன் சண்முகர்சங்கரரைநினைந்தேன்
சாரதிக்விஜயம்பாடத்துணிந்தேன் சதாசாதகம்செய்மீனாட்சி

கதம்பவனகாட்டுக்குள்ளே காஞ்சனமாலைகோட்டைக்குள்ளே
கல்லெழைச்சவீட்டுக்குள்ளே கன்னிகையாய்வளர்ந்தாள்மீனாட்சி

சாரட்டுவண்டிமேலேறிகொண்டு கோரட்டுகூடத்துக்குள்ளேசென்று
ஏரிட்டெல்லாருமிருக்கக்கண்டு இந்தரன்போல்கொலுவிருந்தாள்மீனா

பட்டமும்செங்கோலும்தரித்து பாரையணிக்காய்பரிபாலித்து
பக்கத்துராசர்களைப்பகைத்து படைசேகரித்தாள்மீனாட்சி

நகரிவாழ்வோரதைக்கேட்டு நாடினைதைநடுவிலேவிட்டு
நாலாவர்ணத்தாரும்கோர்ட்டு கச்சேரிவரக்கண்டாள்மீனாட்சி

தேடிவந்தபேர்களையழைத்து திக்குவிஜயம்செய்யஆலோசித்து
தினங்களைஸ்திரமாயுரைத்து திவ்யதீர்ப்புகொடுத்தாள்மீனாட்சி

மனமகிழ்ந்துளமுந்திருந்து மலையத்துவஜர்மனையில்வந்து
மணக்கத்தைலங்களணிந்து திவ்யமஞ்சள்குளித்தாள்மீனாட்சி

பட்டையிடையிலேகட்டிக்கொண்டு பலபணிகளைபூட்டிக்கொண்டு
பிராமணரெல்லாரையும்கூட்டிக்கொண்டு யாகசாலையில்வந்தாள்மீனா

தாய்பரிந்திடஅன்னம்புசித்து தாதிதாம்பூலம்தரித்து
தனையாள்போய்வாறேனென்றுரைத்து தங்கரதத்திலேறினாள்மீனா

வீட்டுக்குவெகுவீரரை வைத்து கோட்டுக்குகோடிகுமான்வைத்து
நாட்டுக்குநாணயநாதன்வைத்து நல்லவேலைவிசாரித்தாள்மீனாட்சி

தேர்களிலேஅறுநூறு திவ்வியமானம்அறுநூறு
தரமாய்பல்லக்கறுநூறு கூடதயாரென்றாள்மீனாட்சி

ஆனைகளிலேஅநேகாயிரம் அஸ்வங்களிலேஅநேகாயிரம்
அற்புதவிருதநேகாயிரம் கூடஆஜரென்றாள்மீனாட்சி

பால்பசுவிலேபத்துலட்சம் பாரிசாரர்கள்பத்துலட்சம்
பாங்கிபெண்ணிலொருபத்துலக்ஷம் கூடபுறப்படென்றாள்மீனாட்சி

கத்திவீராளிலொருகோடி கெதைவீராளிலொருகோடி
காண்டீபவீராளிலொருகோடி கூடஉணக்குகேட்டாள்மீனாட்சி

அதிரவெகுவெடிகள்விட அந்தணர்பொன்னகூதைகள்போட
ஆலோசித்ததன்றேகைகூட அசல்சகுனம்கண்டாள்மீனாட்சி

கூடாரசாமான்முன்போக குருஞ்ச்சிபெஞ்சிகள்போக
கூட்டம்இருபுறமும்போக கொடைமத்தியில்வாராள்மீனாட்சி

மலைகள்மதுகுகள்தாண்டி மரங்கள்மைதானங்கள்தாண்டி
மணல்நதிமடங்கள்தாண்டி மஜிலிவிசாரித்தாள்மீனாட்சி

பகல்போற்பஞ்சணிக்குத்தங்கி பரிவாரங்களுடன்இரங்கி
பர்னசாலைமுனிவர்க்கிரங்கி பலம்வைத்துபிரார்த்தித்தாள்மீனாட்சி

அகலமாகடேறுஅடித்து ஆயிரம்ஜவான்பாருகொடுத்து
அற்புதமானஅரைதடுத்து அதில்இரங்கிஇருந்தாள்மீனாட்சி

சம்பாபொங்கல்புளியோரை சர்க்கரைசேர்த்துநெய்ஒக்கரை
சாகம்மிகுந்தளரிசேரையெல்லாம் சமயல்செய்யென்றாள்மீனாட்சி

யாசகர்களைஅவரணைத்து போசனத்துடன்பொருள்கொடுத்து
வாய்சாலகியாயெங்கும்வாசித்து வனபோசனம்செய்தாள்மீனாட்சி

வசந்தகாலதென்னலடிக்க வானசர்போல்கானம்ஜோடிகதவ
வந்துகுயில்கூவிநடக்க வனவேடிக்கைபார்த்தாள்மீனாட்சி

சந்தனமரச்சோலையிலே சந்திரன்உலாவையிலே
சாவதானமாகதன்ஜாகையிலே சற்றேசயனம்செய்தாள்மீனாட்சி

அலர்ந்தமலர்கழன்றுதிர அஷ்டதிசைபேரிகளதிர
அன்னம்பறவையெல்லாம்கதற அன்றெழுந்திருந்தாள்மீனாட்சி

காலகிரமத்தையங்கேமுடித்து கறந்துசீரம்காச்சிக்கொடுத்து
காடுகடந்துகரைபிடித்து கணக்கிராமங்கண்டாள்மீனாட்சி

குளக்கரையில்கூடாரம்போட்டு கோவிற்குபடிகட்டளையிட்டு
கோடிபூசுராளுக்கன்னமிட்டு குலதெய்வத்தைகும்பிட்டாள்மீனாட்சி

சாமார்த்தியசூராளைக்கண்டு சண்டைக்குவந்திருக்கிறோமென்று
சாஸ்திரப்படிதூதாளைக்கொண்டு எங்கும்சர்க்கழைத்தாள்மீனாட்சி

ஆயுதஅஸ்திரங்களாலேவீசி அன்னியரரசரெல்லாரையும்ஏசி
அமர்மொழிஅகந்தைகள்பேசி யாரையும்அஞ்சஅடித்தாள்மீனாட்சி

ராஜர்களிலேஅனேகதுஷ்டாள் ராட்சசாளிலேஅனேகமுட்டாள்
ரணக்களத்திலனேகசெட்டாள்களை றத்தவதையிட்டாள்மீனாட்சி

காசிதேசம்மலையாளம் கடற்குட்பட்டபூமிவளம்
கார்த்தகானைகட்குநீர்வளம் கொடுத்தாப்போலடித்தாள்மீனாட்சி

சீமைகளையெல்லாம்பிடித்து ஜெயபேரிபெரிதாயடித்து
சேவகனாயாளென்றுகொடுத்து சீக்கிரமாய்ப்புறப்பட்டாள்மீனாட்சி

தளங்களைதிருப்பியழைத்து திவ்வியமானதிருஷ்டியாலேபார்த்து
தேவலோகத்தில்வந்துகுதித்து தீரதண்டிராபோட்டாள்மீனாட்சி

இந்திரபுரிகொள்ளையடித்து இன்பவஸ்துக்களெல்லாம்பரித்து
இருந்துவாழஅவனைவைத்து எரிதீதிக்கில்வந்தாள்மீனாட்சி

ஆட்டுக்கடாவைஅதட்டிஓட்டி காட்டுலாப்பட்டமான்போலவாட்டி
தாட்டுவாதன்தலையைஆட்டி தென்திக்கிலேவந்தாள்மீனாட்சி

நரகங்களையெல்லாம்அழித்து நமதுதேஹம்னையஅடித்து
நம்முடையாளாயிரென்றுரைத்து நிருதிதிக்கில்வந்தாள்மீனாட்சி

முன்னாலேயவனைச்சாத்தி மீனக்கொடியெங்கிலும்ஏத்தி
மித்திரனாயிரென்றுவாழ்த்தி நேர்மேற்கேவந்தாள்மீனாட்சி

வருணனுடனேவாதாடி வந்துவணங்கமுடிசூடி
வாழ்ந்திருநீயென்றோடி வாயுமூலைக்கிவந்தாள்மீனாட்சி

காத்தையும்காத்தாய்பறக்கடித்துகப் பணத்தையும்கனமாய்கிரகித்து
காரியஸ்தனாயிரென்றுரைத்து கனவேகமாய்ச்சென்றாள்மீனாட்சி

குபேரனைவந்துஒங்கி கொடுத்தரத்நங்களெல்லாம்வாங்கி
கோபுரம்சூழ்ந்தகைமீதங்கி கோடிசங்கம்கோஷித்தாள்மீனாட்சி

பிரமதகணங்களெல்லாமறைந்து பாணங்களாலேபதறடித்து
உன்பஞ்சையாண்டி எங்கேயென்றுரைத்து அங்கேபத்தியுலாத்தினாள்

நந்திபூதங்களெழுந்திருந்து நாலுவாசல்களாலும்நுழைந்து
நயனங்களாலேநீர்பொழிந்து நாதனண்டையழக்கண்டாள்மீனாட்சி

செல்வனாமூர்த்திதரித்துகொண்டு வேதசத்ரங்கள்பிடித்துகொண்டு
சிவகணங்களைசேர்த்துக்கொண்டு சுந்திரர்வரசேவித்தாள்மீனாட்சி

சரிகைதிண்டிலேசாய்ந்துக்கொண்டு சக்திதனுசைபிடித்துக்கொண்டு
சாரதியைரதத்தைவிடென்று சாம்பமூர்த்தியண்டைவந்தாள்மீனாட்

பணிகள்பூண்டஇருதோளேன் பாலியனுவந்தஆளேன்
பாணியில்உருவியாளேன் ஒத்தும்பார்த்துபிரமித்தாள்மீனாட்சி

திரிபுரங்களைத்தகிக்கவிவ தெக்ஷணதிக்காய்போதிக்கும்தவ
தீரனுனதனுசோடென்முன்வாவென்று தீண்டியழைத்தாள்மீனாட்சி

போர்க்கஞ்சிஓடிப்போகாதே புறங்கொடுத்திடலாகாதே
புருஷனுனலிங்கேவிட்டேகாதேயென்றுபுன்சிரிப்புகொண்டாள்மீனா

கைலையைக்கப்பணமாநிவை கட்டோமென்றலமர்க்காரம்பம்செய்
காயத்தைபோஷித்துக்கொள்ள உன்கைசற்றேகாட்டுபார்ப்போமெ

பாண்டியர்பிரபஞ்சத்துபாக்கியம் பதிக்கிபோக்கிநீயோக்கியம்
பர்வதத்துள்போவோம்வாசிலாக்கியமென்க பார்த்துகோபித்தாள்

அகந்தைகொண்டராசகுமாரர் அஸ்திரம்போடுறேன்நில்லுநேரா
அல்லென்றுல்சலம்விடப்பால்சேருயென் றதட்டியடித்தாள்மீனாட்சி

மந்தஹாசமாய்மஹான்சிரித்தார் மன்மதன்போலமாரைமறைத்தார்
மருவியென்னையணையென்றுரைத்தார் அதைக்கேட்டுகொர்ச்சித்தாள்

வில்லையெடுக்ககிழேவிழுந்தாள் விகிர்தம்தீர்ந்தவகையறிந்தாள்
வீசினகத்தியைதூரெறிந்தாள் விமானம்விட்டிறங்கினாள்மீனாட்சி

முத்தனம்மெழுகுபோலுருகி மோகத்திசர்மேலாசைபெருகி
மொகப்புடன்மேகலைசருகி முத்துச்செடிபோலேநின்றாள்மீனாட்சி

மேகமேனிக்கிமங்கில்யம்கட்ட மேருவைவில்லாய்கொண்டவர்கிட்ட
மேலேஅமராள்பூமாரிகொட்ட வெள்ளிமலையில்வசித்தாள்மீனாட்சி

மாதமாச்சரியமெல்லாம்ஒடுங்கி மீனாட்சிபிரியாள்மனதுக்குளடங்கி
மாலையிடும்வேலைக்குத்தொடங்கி மேலைலீலைகள்செய்தாள்மீனாட்சி

---

உ. கீர்த்தனம் இ-ம்-உசேனி-சாபுதாளம்.

பல்லவி.

பேசுங்கோள்எல்லவரும்அடிசகியே
பிராணேசருடனே இந்நேரம்

அநுபல்லவி.

வீசுங்கோள்வெண்சாமரத்தால் அடியேசகியே
வேடிக்கையாய் ஸொரத்தாய்
மாசற்றமரகத வல்லிக்குபூமாலைகொண்டு
ஈசாசிங்குள்ளசிவ கணவகளோடுவாருமென்று பேசு

மாதாஇருக்கிருளென்று அடியேசகியே
மரியாதையோ டெதிரேபோய்நின்று
எதிருஜாமியம்தென்மதுரையைத்தாரேமென்று
மீனாட்சிபிரியாளுக்காக இருந்தாளவேண்டுமென்று பேசு

---

ச. கீ-ம்-இ-ம்-சஹாணு-ரூபகதாளம்.

பல்லவி.

தேவாதிதேவாசரணம் தேவியைவிவாகம்செய்ய
இதுநல்லதருணம் இதுநல்லதருணம்.

யாவரையும்போய்ஜெயித்தாள்
அமரல்லஅசலத்தை அறியகுதித்தாள் தே

பாண்டியராஜன்குமாரி
ஆண்டவரேஇவள் உமக்கேற்றபாரி தே

நிச்சியதாம்பூலம்வாங்கும்
இச்செல்வியைஉமது மடியின்மேல்தாங்கும் தே

முன்னேஎங்கள்மொழியைக்கேளும்
பின்னேமீனாட்சி பிரியாளைநீராளும் தே

உ-விருத்தம்.

மோடியாய் முதல்வன் நேரேவரட்டு மென்று
மௌனமாகவே யிருந்தார்
நாடிவந்த நல்மதுரை ராணியந்த ஜாடைக
ளெல்லாம் அறிந்தார்கள்
சாடிநின்ற இருபடையும் கூடியுறவாய்
புகழ்ந்தார்
கோடிமன்ம தாகிருதர் முன்சென்று குயில்போ
லொருமொழி பொழிந்தாள்.

க. சீசபத்தியம் ஆனந்தபைரவி.

ஆதியேசோதியே ஆநந்தரூபியே
அறியாதசெருவிசெய்த பிழைபொறுத்து
மலையத்துவசபாண்டியர் மருமகனுகவே
மதுராபுரியில்வந்து பிரவேசித்து
திரிமூர்த்திமுதல்தேவர் யாவரையும்வரவழைத்து
தேவர்கரத்தால்திரு மங்கிலியம்தரித்து
அம்ஸதூளிகாசயனமஞ்சத்திலெனையழைத்து
ஆசையாயணைந்தாலிங்கனம்கொடுத்து

இத்திருவிளையாடல் நீர்செய்யாதபோனால்
மற்றவர்க்குபத்நி நான் ஆகுவேனோ
எத்தனைநாளானாலும் கன்னிகையாயிருந்து காலங்கழிப்பேன்

உ. இதுவுமது.

இந்ராதிதேவர்முதல் யாவர்களையும்ஜெயித்த
ஏகசக்ராதிபதியே பெண்ணே
சந்திரவம்சம்செழிக்க சகலசம்ப்ரமத்துடன்
திங்கள்தினம்வாரேன் விவாகம்செய்யவுன்னை
சதுரங்கசேனையும் சாதுசிகாமணியும்
சந்தோஷமாய்மதுரை சேர்ந்துமுன்னே
ஐம்பத்தாறுதேசத் தரசர்களையுமழைத்து
அழகாகநகரியலங் கரியென்கண்ணே
சாமகிரியங்களை சேகரித்தையானல்
சியாமளியை பார்த்தகண்ணால் மற்றபேரை நான்பார்ப்பேனோ
எத்தனைபேர்தடுத்தாலும் இத்தினம்கல்யாணம் நிறுத்துகிறதில்லை.

---

ரு. கீ-ம்-சுருட்டி-மீசுரதாளம்.

பல்லவி.

திக்குவிஜயம்செய்து திரும்பிவர்தாள்
திருகுஜம்மறைந்தபின் திக்

அநுபல்லவி.

| | |
|---|---|
| பக்கத்தில்மந்திரிபிர | தானிசேனையணிய |
| சொக்கநாதருக்கவள் | புஷ்பமாலையணிய திக் |

சரணங்கள்.

| | |
|---|---|
| ரதகஜதுரகப | தாதியுடன்கூடி |
| ரமண்யநாயகருடன் | நயந்துவார்த்தைகளாடி திக் |
| சதுரங்கதாளமேளம் | ஜெயபேரியடித்து |
| சந்திரகுலசுந்தரி | சொந்தஅன்னையிடத்தில் திக் |
| கர்ப்பகம்காமதேனு | புஷ்பவிமானங்கொண்டு |
| அற்புதமானஅட்ட | திக்குகளிலும்சென்று திக் |
| வெள்ளிமலையெங்கும் | போய்மீனக்கொடிபோட்டு |
| விசயமீனாட்சிபிரியாள் | பக்குக்குள்ளகப்பட்டு திக் |

ந. விருத்தம்.

தேவபுரி திருவெல்லாம் தளமெடுத்து போய்போர்பொருதி
பிடுங்கி பரித்தாள்
நவநிதிகளை யுங்கொணர்ந்து நரர்காண நகரியெங்கிலும்
நிறைத்தாள்
காவல்கசா னுவுக்கு குண்டும்கையுமாய் கோடிதிண்டர்களை
தூண்டி வைத்தாள்
ஆவலோடே யணைத்தன்னைக்கு தான்போய்வந்த திறமைக
ளெல்லாம் உரைத்தாள்.

சு. கீ-ம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி.

என்னசொல்லுவேனம்மா
எங்கள்ஈசானியர் தங்கக்கோவில்சிறப்பை
நான் ஏதென்று சொல்வேனம்மா

அநுபல்லவி.

மின்னல்மின்னலைபோலே மெருகிட்டபொன்பாறையாலே
படுத்தமலைப்படியேன் எடுத்துஏறுபிடியேன்
அடித்தவிம்பத்துடியேன் பிடித்தவிடைக்கொடியேன்-என்

சரணங்கள்.

மாணிக்கக்கல்லைஉடைத்து மதில்வாடிஎங்கும்இணைச்சு
கோபுரங்கள்-தூக்கிருக்கு தோமேதங்களை தாக்கிருக்கு
அளகைக்கதிகமர்க்கிருக்கு நானறியாநேகம்பாக்கிருக்கு-என்

சப்தபிரகாரம்வளைத்து சயையிரிடமும்பொடித்து
எட்டாமாளிகைக்குள்ளே இழைத்துஇலசைவாய்வெள்ளை
வைத்தவிமானக்கல்லை வருணிக்கஎன்னாலில்லை-என்

விஸ்தாரமானவீதி வார்ப்புதளவரிசைசோதி
எங்கும்தேசசாய்மின்னுறது எந்தஒளிகளையும்உண்ணுறது
என்மனம்அதையேபோய்எண்ணுறது நான்உன்சோரிங்கேபண்ணு

ஏகபூஞ்சோகாடு இங்கில்லையந்தகனிகளுக்கீடு
புலிகன்றுக்குபால்பொழிகிறது பேதமற்றெல்லாம்இழைகிறது
அங்கருவியார்வழிகிறது அன்பர்வம்பெல்லாம்ஒழிகிறது-என்

காணக்கண்ணாயிரம்வேணும்கருத்துள்ளோர்க்குள்ளேயதுதோணும்
மங்களாகாரவாசல் மறைசாஸ்திரபுராணம்பேசல்
பூசாப்பொருள்வாசனைவீசல் புண்ணியாள்பசனைசெய்கிறகூசல்-என்

பஞ்சணையென்பதெல்லாம்பொய் பிரபுஆவர்நான்பார்த்தேன்மெய்
கற்பகநாடெங்கிலும்வாட்டம் கைலையிலேதான்காமதேனுகூட்டம்
அங்கேநாங்கள்மீனக்கொடிபோட்டோம் அன்னேநோக்காகஇங்கே
வந்துவிட்டோம்-என்

சிலர்சீமைதான் ஸ்ரீஜெனிப்பிடம் சில்லரையெல்லாம்பிரதிவிம்பபடம்
கிரியெங்குமரம்பையர்களாடல் கேழ்க்கின்னரராள்பாடல்
சாஜனுக்குசாரூபஉடல் சரண்யாட்குசாயுஜ்யக்கடல்-என்
ஹரிஅயர்அமராள்சேர்ந்து ஆலயத்துக்குள்ளேபூந்து
அர்ச்சனைசெய்கிருள் ஹரஹரவென்றேய்கிருள்
உடலாவிபொருளைசகுருள் உள்ளம்உருகிகைநகிருள்-என்
பெரோரஜதபுரி பிரபலமானநகரி
சனகாதியோகிகள்போற்றல் சதுர்வேதமுனிவர்கள்வாழ்தல்
சங்கைகரியகணங்கோடிசுத்தல்கண்டேன் நான்கெந்தமாரிதூத்தல்-எ
அடிக்கடிஅற்புதவாத்தியகோஷம் ஆறும்பூசல்பூணலறவேஷம்
வாயால்வெகுதொண்டர்வாழ்த்துருள் வலமாய்சிலதிண்டர்சுத்துரு
நெய்யால்தீதீண்டிஎஏத்துருள் மெய்யோர்குகைமாத்துருள்-என்
தாகம்பசியங்கேயில்லே தாள்மைதாழ்வுகளோயல்லே
என்னேரமும்ஆனந்தகூத்து எங்கும்பக்திநீர்ஞானப்பயிர்நாத்து
திக்குபாலாளெல்லாம்கரம்சேர்த்து தினம்சேவித்துபோருழ்வரபெற்
வாகனங்களில்நான்ஏறி வாதித்தேனந்தவைபவனையுஞ்சீறி
மந்தஹாசமாய்சரித்தார் மானேதேனேயென்றழைத்தார்
விகிருதகுஜத்தைதீர்த்தார்விவாகம் செய்கிறேனென்றிசைத்தார்-எ
மாயைக்குள்ளாகிளமைநீக்கார் மாதுநானல்லருபாளேநோக்கார்
சிவராஜப்பையன்வெகுமோடி நீயெய்ததவத்தால்வாறேனென்ருரடி
வாகினிவாழ்வுஉயர்ந்தகொடிவங் தெதிர்ப்போக்குவனுவானபாணம
பாலககுமாரனடி என்பாணிபத்திடபாத்திராடி
கிரீடகுண்டலதார் கெம்பீரமானஸ்வரர்
மன்னர்முறையறிந்தவீரர் மீனாட்சிபிரியாளொய்யாரர்-என்

ரு-விருத்தம்.

மீனணிகொடி யாலேவந்த மேன்மைகளெல் லாம்மெல்லி
யென்னையோ டுரைத்தாள்
மானணிமன்னனே மருமகனைப் வாய்த்திட மங்கை
காஞ்சனை பூரித்தாள்
தேனனுமலர் முடித்தாள் தோழிமாரெல்லாம் தெரிந்து
உள்ளே சிலாகித்தார்
பூனணிபிடிபாத புஜங்க பூஜணனென்று பொய்மொழு
யாய்சிந் தித்தாள்.

எ. கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்.

பல்லவி.

வேண்டாம்வேண்டாமடி என்தாயே-இந்த
பாண்டியன்பேரைகெடுத்து ஆண்டிக்கிமாலையிட
வேண்டாமடிதாயே

அநுபல்லவி.

கொண்டகணவன்குடி சொந்தமுனக்குண்டா-உன்னைக்
கொண்டாடுமண்டலத்து மன்னர்கள்கண்டா
திண்டாடுராள்தடாதகை யிவளென்று-உன்னை
யண்டினயன்புள்ளார் மனதெல்லாம்சுண்ட வே

சரணங்கள்.

கோத்திரம்குலமுறையோகிடையாது-நீதி
சாஸ்திரமாராஜாங்கம்-தெரியாது
வாசப்பூசந்தனங்கள்பிடியாது-ஸ்மசானம்
வீட்டுஉன்னண்டையில் தரியாது வே

உன்பித்தம்தெளியவேமருந்து கொடுக்க உன்னை
பெற்றபிதாவானாலுந்தான் இங்கேயிருக்க
இந்தபாருக்குள்ளேவீராள் வெகுபேர்கள்பறக்க அந்த
பஞ்சைமேலேயாசை உன்மனதையுருக்க வே

சம்மந்திபேர்களோ வருகமாட்டார்-ஸ்வயம்
ஜாதிஜெனங்களுன்னை சேர்க்கமாட்டார்
சாகரந்தனையாளிங்கே தங்கமாட்டார்பொல்லா
சாஹாசிமாயையிந்த வலைபோட்டாள் வே

பெற்றவள்தான்எத்தனைநாள் வைத்துபடைப்பாள்-பத்து
புத்திரனைபெற்றுடனே மெத்தசலிப்பள்
அத்தைவீடுபோயிருந்தால் சற்றேபிழைப்பாள்-மெத்தை
மாடிகட்டிவாழ்ந்திருந்தால் ஒத்துஉழைப்பள் வே

ஆனைகுதிரைசேனை தன்நகரில்லைஉன்
னருமைபெருமை யறிவார்களுமில்லை
மாமியார்மாமனார் உற்றார்பெற்றாரில்லை மாது
மீனாட்சிபிரியாளுக்கு இதுவெகுசல்லை வே

கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-ஏகதாளம்.

பல்லவி.

இராஜாத்திராஜரடி சகியே-ராஜாத்திராஜரடி
இராஜதாசலவாசமடி சகியே-ராஜாத்திராஜரடி

அநுபல்லவி.

கேசவர்க்குநேசரடி-சகியே
எனக்கேற்றஈசரடி விஸ்வாசரடி
கேசவர்க்குநேசரடி தாசர்மேல்விஸ்வாசரடி
எனக்கேற்றஈசரடி ஈரேழுலகவாசரடி(இரா)

சரணங்கள்.

தங்கமேருவைப்படைத்தார் சகியே
எங்கும்தானாக வியாபித்தார்
தங்கமேருவைப்படைத்தார் எங்கும்தானாகவியாபித்தார்
வெங்கமாகவேதவித்தார் பங்காளபதவிவைத்தார்(இரா)

மூன்றுகண்படைத்தநாதன்-சகியே
மூவர்கள்பூஜித்தபாதன்
மூன்றுகண்படைத்தநாதன் மூவர்கள்பூஜித்தபாதன்
சகலசாஸ்திரவேதன் சடையிலாடியவாதன்(இரா)

நாகாபரணம்பூண்டார்-சகியே
நாதனைப்போலே வேறுண்டா
நாகாபரணம்பூண்ட் நாதனைப்போலேவேறுண்டா
எல்லவர்களும்வேண்ட ஈரேழுலகம்ஆண்ட(இரா)

மன்மதனினும்ஒருவர்-சகியே
மதுராபுரிவருவர்
மன்மதனினும்ஒருவர் மதுராபுரிவருவர்
தருகாதெல்லாம்தருவர் புரியாமலேசேருவர்(இரா)

சிலர்களுக்கும்நேசித்த-சகியே
நீலவேஷத்தை நேசித்தார்
சிலர்களுக்கும்சேவிதர் நீலவேஷத்தைநேசித்தார்
மறலியைமாரினுதைத்தார் மீனாக்ஷிபிரியாளைக்காத்தார்(இரா)

ச-விருத்தம்.

சர்வேசன் சரித்திரங்களை சவிஸ்தாரமாய் சியாமளியாமல்
சொல்லக் கேட்டான்
பார்ஜனகி நாங்கள் பரிகாசமாய் மொழிந்தோ
மிதென்று கும்பிட்டாள்

சீர்சித்திரை மாதம்தேதி திதிவாரம் எல்லாந்தேடி
வந்து கிட்ட
ஊர்களுக்கு உயர்த்தியாய் பத்திரிகை பலவிதமாய்
எழுதி விட்டான்.

திக்குவிஜயக்கீர்த்தனை-முற்றிற்று.

ஆககீர்த்தனை-அ, ஆகவிருத்தம்-ச, கொம்மி-உ.

---

உ

சிவமயம்.

## ஸ்ரீமத்தடாதகாதேவி

# திருக்கல்யாணக் கீர்த்தனை.

க. கீ-ம்-இ-ம்-தர்பார்-ஏகதாளம்.

பல்லவி.

எங்கும்அனுப்பினன் பொன்னோலை
எழுதிகாஞ்சனமாலை (எங்கு)

அநுபல்லவி.

தங்கபாளங்களை உடைத்து
திராசுநிறையில்லாமல் சிப்பியண்டைவாரிகொடுத்து
தீர்ந்ததைக் காராளைப்பிடித்து
திருக்கல்யாணபத்ரிகைக்கு வாசகவக்கணை அச்சடித்து
தங்கள்குலச்செல்வி தரித்தமீனமுத்ரையிட்டு
தாவிதங்கக்கிரியேன் தாண்டும்வீராளை விட்டு(எங்)
ஐம்பத்தாறுதேசத்தரசர்க்கும்
அசலம்ஆரண்யம் ஆலங்களில்வசிக்கும்பெரியோர்க்கும்
ஆனமீனாட்சி பிரியர்கட்கும்
அதிவைபவமாய் நடத்துங்கல்யாணத்தி லெல்லோர்க்கும்
மஞ்சள்தானங்களுக்கு மாணிக்கங்களைஇழைத்து
மறவாமலேசாமான்ய உறவாரையும்நினைத்து

உ. கீ-ம்-இ-ம்-காம்போதி-மிஸ்ரஜாதிரூபகம்.

பல்லவி.

பூர்த்தியாய்பெண்கள் சாமான் சேகரிச்சாள்
பொன்மலைபோஜன் பொருட்குபணிக்குறைச்சாள் (பூர்)

அநுபல்லவி.

வார்ப்பதிக ரசபட்சயமும்
வுத்தர்ச்சிவாசனை சேர்த்தசீனிக்ஷீரமும்
அன்றுருக்கிய கோஆஜியமும்
அச்சுவெல்லம்சர்க்கரை செந்தேன்கனிதாக்ஷயமும் (பூர்)

சரணங்கள்.

ரவையை திறமாயுடைச்சு
ராஜர்கள்சிலாகிக்க லாரிநன்றாய்யுடிச்சு
வெள்ளிச்சருவங்கள் வார்ப்பிச்சு
விதம்விதமாய்தத்தியோன்னத் துக்குடன்துணையடைச்சு (பூர்)
நாலாவித தயிலமாட்டி
நளபாகசாலைவெகு விசாலமாய்க்கட்டி
தும்மைநிறம் தண்டுலம்தீட்டி
அம்பாரியாய்ஹரர் அசலம்போலெங்கும்கொட்டி (பூர்)
காரணத்துடன் கலந்தகண்ணி
கருதுமீனாக்ஷிபிரியாள் கடைத்தேறஎண்ணி
பொரிதினுசு பொடிகள்பண்ணி
புதுசாஏரிதடாகம் எங்கும்கொணர்ந்துதண்ணி (பூர்)

---

ங. கீர்த்தனம்-இ-ம்-நோட்டு-ஏகதாளம்.

பல்லவி.

நகர்அலங்கரித்தார் நாகரீகமாய்மதுரை
நகர்அலங்கரித்தார்

அநுபல்லவி.

ஆகாசமட்டும்நீட்டியே நுணிவைரமண்டபம்கூட்டியே
சிங்காரஸ்தம்பம்நாட்டியே சித்திரவீதியெங்கும்பந்தலோட்டியே (ந)

சரணங்கள்.

ரத்னமணிகளாலேயே ரஜதாசலபுரிபோலேயே
உகந்துமேசெய்தாள்வேலையே அதிஉன்னிதமாய்அந்நாளையே (நக)

மாவிலைசரம்தொடுத்துமே நல்லமகரதோரணம்இசைத்துமே
வரிசைவாழைபதித்துமேவாசலெங்கிலும்பன்னீர்தெளித்துமே (௧௧)

தங்கசங்கிலிபூட்டினாள் தகதகென்றுஊஞ்சலைமாட்டினாள்
முன்னேபாலிகைகள்கூட்டினாள் மீனாக்ஷிபிரியாகோலம்ஓட்டினாள் (௧)

---

௪. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-ஏகதாளம்.

பல்லவி.

நாகஸ்வரங்கள் கோஷித்தார்
நல்மதுரைமீனாக்ஷிசுந்தரர் திருக்கல்யாணத்தில் (நா)

அநுபல்லவி.

சகலமும்தெரிந்த சங்கரியதைக்கேட்டாள்
சபையிலெல்லோர்க்கும் சந்த்ரஆரம்சால்வைபோட்டார் (நா)

கின்னராள்கிம்புருஷாள் போலேகிருதிபாடி
ரம்பையைப்போலேரெம்ப மாதர்நர்த்தனம்ஆடி (நா)

மத்தளமல்லாரிதாள மேளங்களைக்கொண்டு
மதுரையிலேமீனாக்ஷிபிரியாள் தாய்சமுகம்நின்று (நா)

---

௫. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-ஏகதாளம்.

பல்லவி.

சரியாய்சரியாய் சதுர்வர்ணத்தாரும்வந்தார்
சியாமளிசாலைசோலைபோல் இருக்குதென்றுசொல்லிஉகழ்ந்தார்

அநுபல்லவி.

ஹாரியாய்யாவரும்தங்கள் பாரிபாலருடனேகூடி
நாரிதிக்விஜயஞ்செய்யவந் தபோதிட்டகட்டளைப்படி

சரணங்கள்.

தங்கள்பெண்கட்குமங்களம் வரக்கண்டவர்போலேபொங்கி
தடாதகாதர்மசாலைசத் திரங்களில்அடிக்கடிதங்கி (சா)

பாருக்குள்பிரபலமான பாண்டியர்தேசம்செழித்து
பானீயம்பலம்பலமா யிருப்பதைப்பார்த்துபூரித்து (சா)

தினமும்மீனாக்ஷிபிரியாளுக் கிந்தவிதம்தியானம்தோண
தேவர்கள்வந்துநடத்தும் திருக்கல்யாணசேர்வைகாண (சா)

சு. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

மீனரத்நம் கொலுவிருந்தாள்
மேளம்முழங்க கல்யாணமண்டபத்தில் மீன

அநுபல்லவி.

ஆனமந்திரிகளே கூப்பிட்டாள்
யாவரையும்தகுந்த மரியாதையோ
டழைத்துவாபோவென் றனுப்பிவிட்டாள்
வந்தோர்களே யழைத்தாள்
வாராதோர்காரணம் விசாரித்தாள்
பெஞ்சிமே லுட்காரவைத்தாள்
பந்துபலமாய் வரபூரித்தாள் மீன

சரணங்கள்.

காரியஸ்தர்களெல் லாரையும்பார்த்தாள்
கிரீடகிரமமுறைப்படிக்கு காருபாருசெய்துநெரித்தாள்
கோத்தரும்புயெங்கும் சாத்தென்றாள்
குலோப்புலாந்தர் தீபம்ஏத்தென்றாள்
அத்தர்ஆறுபோ லூத்தென்றாள்
அள்ளிக்கதம்பத்தாள் தூத்தென்றாள் மீன

பாகம்பல தினுசுபண்ண
பரிசாரர்களே தான்நேர பார்த்துபுதுசுபுதுசாகசொன்னாள்
சனகமுதகமாதுரியம் செய்யென்றாள்
சாரகண்டப்பால் பாகுவையென்றாள்
கொட்டுகூசாதே கோநெய்யென்றாள்
கொண்டாடுவாள் மீனாட்சிபிரியாள்மெய்யென்றாள் மீன

---

விவாகச்சேர்வைக்கு விஸ்வத்திலுள்ளோர்கள்
வந்த கொம்மி.

சுபகரசாமான்கொண்டு சொந்தபந்துவந்தாள்
கஜனசுலபிசுகமொழி சொல்லிச்சொரிந்தாள்
தோளெடுக்கதோழிப்பெண்கள் சீரோடேவந்தாள்
தொண்டர்துரைச்சிதுகில்துய்யவை தொட்டுமகிழ்ந்தாள்
அத்தைபச்சைபூசஅதி அந்தஸ்தாய்வந்தாள்
அன்பர்ஆநந்திஅந்தஅதி கருமையறிந்தாள்

| | |
|---|---|
| பாலிடபெரியபாட்டி | பாட்டனோடுவந்தாள் |
| பக்தர்பிருந்திபத்மாட்சியாலே | பார்த்துமகிழ்ந்தாள் |
| சித்தம்மைஜெனத்துடன் | சிறப்பாகவந்தாள் |
| சீலர்சித்திக்கும்சிவ | சிம்மாசனத்திலிருந்தாள் |
| நாகரீகம்செய்யநன்றாய் | தெரிந்தோர்கள்வந்தார் |
| நம்பினோர்நாயம்நடு | சபையிலேயிருந்தாள் |
| எண்ணெயிட்டுநீராட்ட | ஏவலாளர்வந்தார் |
| இன்பர்ஹ்ருதயம்இருப்பவள் | ஈதெல்லாம்அறிந்தாள் |
| வஸ்திரம்வகையாயுடுத்த | வல்லாளர்வந்தார் |
| வானோர்வணங்கும்வைரமுடி | வஞ்சிமகிழ்ந்தாள் |
| உன்னிதஉடைமையிட | அறிந்தோர்கள்வந்தார் |
| உத்தமர்உள்ளுலாவும்மை | உகந்துமகிழ்ந்தார் |
| தலைபின்னத்தரமான | தாதிகள்வந்தார் |
| தாசர்தியானிக்கும்தடாதகா | தங்கம்மகிழ்ந்தாள் |
| பூமுடிக்கபுத்தியோர்பொன் | கத்ரியோடவந்தாள் |
| புண்ணியாள்பூஜிக்கும்புவனேஸ் | வரிபூரித்திருந்தாள் |
| மையிடகையிலஞ்சனை | மையுடன்வந்தாள் |
| மலையத்துவஜர்மகள்மன | மகிழ்ந்துயிருந்தாள் |
| திலதமிடதறமாய்திரவி | யத்துடன்வந்தாள் |
| தீனள்தேடும்தேவிதிரிநேத்திரர் | திசைபார்த்துமிருந்தாள் |
| விசித்திரகோலமிடவெகு | பேர்கள்வந்தார் |
| வேதம்விளம்பிவிவாகச்சேர்வை | யிலேயிருந்தாள் |
| ஆடகாள்பாடகாள்விக | டர்கள்வந்தார் |
| அகிலாண்டகோடிபிர்மாண்டநா | யகிமகிழ்ந்தாள் |
| கொட்டுமேளக்காராள்கூட்டம் | கூட்டமாய்வந்தார் |
| குலச்சேகரர்குலச்செல்வி | கொலுவிருந்தாள் |
| போகிகள்விவேகிகள் | யோகியெல்லாம்வந்தார் |
| வாகினியுபசரித்து | வசனித்துயிருந்தாள் |
| கடைபோகப்பலவியா | பாரியெல்லாம்வந்தார் |
| கல்யாணமீனாக்ஷிபிரியாள் | கவிபாடிமகிழ்ந்தாள் |

ரு-விருத்தம்.

மதிஒதியின்கடல் மகிழ்போல் மதுரையைக் கண்டோர்க
ளெல்லாம் மனம்பூரித்தாள்
பதியதிபல பேர்களும் பாண்டியர்பெண் ணமைத்துவைத்த
விடுதிகளிலே வசித்தாள்
நதிசதியறிந்து கொண்டோன் நேரமாகிறதென் றங்கேநந்தி
கணங்களே நெரித்தார்
ஆதிகதியென் றடுத்தோர் திக்கோர்கட்கு திருமுகங்க
ளுடன் தெரிவித்தார்.

---

எ. கீ-ம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி.

சம்மந்திஜனம் சிறப்பாய்சேர்த்தாள்
சிவகணங்கள்சர்வலோகம் எங்கும்போய்பாக்குவைத்தழைத்தாள்

அநுபல்லவி.

அம்மான்ஹரிலக்ஷ்மிக்குரைத்தாள்
அயன்வாணி இந்திரன்
இந்திராணியெல் லோர்களேயும்அழைத்தாள்
சாகரம்நதிகளேயும் மறித்தாள்
சாஸ்த்ரவேத புராணத்தையும்
சரீரத்தோடு வாவென்றிழுத்தாள்

மலேயனுமேரு எங்கும்போய்நன்று
மதுரேசர்விவாகம் விஸ்தாரமாய்சொன்று
யாவர்களும்ஹார் புரிவரும்பின்ன
அதிவேகமாய்ஆதி பரன்முன்போய்நன்று சம்

சரணம்.

நாழிநாள்வாரம் திதிகேட்டாள்
நக்ஷத்திரம் கிரஹம்
மாதம்வருஷத்துடன் புறப்பட்டாள்
வன்னிஎமன் நிருதியையுங்கூப்பிட்டாள்
வருணன்வாயு குபேராள்
வாகனத்துட னே கூட்டம்போட்டாள்

எல்லவருமீசர் கிரிவந்துநுழைந்தார்
எள்ளிடம்மீதியில் லாமலேநெரிந்தார்
முனிவர்கள்மூவலம் வந்துபணிந்தார்
மீனாட்சிபிரியாள்கவி பாடவேதுணிந்தார் சம்

அ. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

சங்கரர்ஸ்ரீரங்காரம் செய்துகொண்டார்
சௌந்தரபாண்டிய ராஜராகினின்றார் சங்

அநுபல்லவி.

தங்கசரிகைசால்வை தரமாய்தரித்துபோர்வை
லீலாமனுஷராகி நீலாள்மேல்மன துஏகி
குண்டலம்கண்டியாட குண்டோதரனோடுகூட
பதக்கம்பணிஜொலிக்க பாண்டியவசரம்பலிக்க
குந்தளகுடிபின்னசைய கோர்வைஹாரம்இசை
மாதர்மனம்மயங்க மன்மதன்வெக்கிபதுங்க
கதம்பம்புனுகணிந்து காஞ்சனைபெண்ணைநினைந்து
நிலைகண்ணாடிநேர்பார்த்து நெற்றியில்திலகம்வைத்து
ஆழிஅருணனல்மின்ன அதிபால்யராகினன்ன
சுகந்தமலர்கள்சூடி மீனாக்ஷிபிரியாளைத்தேடி

---

௯. கீ-ம்-இ-ம்-தோடி-மீசுரஜாதி-ரூபகம்.

பல்லவி.

சுந்தரேசர்வாரார்-ரிஷபாரூடராய்-ராஜ
சுந்தரேசர்வாரார்

அநுபல்லவி.

இந்திராதிதேவர்கள் சூழஎட்டுதிக்குபாலரும்
பத்தினியுடன் பாதம்தொழ
பிரமதாணம்பக்கத்தில்தாழ பாண்டியர்மனையில்போய்
பலநாளும்விருந்துண்டுவாழ
வாத்தியகோஷம்அதிர வானவர்கள்மலர்தூர
திவ்யஅலங்கிருதராய் தேவியுடனேசேர (சுந்)

சரணங்கள்.

லக்ஷம்தேவஸ்திரீகள்கூட-லக்ஷம்சரஸ்வதி
இந்திராணியும்கல்யாணம்பாட
அண்டம்அதிரவெடிபோட-அப்சரசுகள்வெகு
அற்புதமாய் நர்த்தனம்ஆட

திரிமூர்த்தியுடன்கூடி தென்மதுரையைநாடி
முன்னேவேகமாயோடி மீனாக்ஷிபிரியாளைத்தேடி சுந்

க௦. கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

மாப்பிள்ளை மதுரைபங்காளா தோட்டத்திலேவந்தார்
மாலயன் இந்திராதிகளுடன் மாப்பிள்ளை

அநுபல்லவி.

காய்ப்புள்ளகனிகளெல்லாம் கலகலென்றுதிர
கண்டெடுத்துஎல்லவரும் புசித்துமேசதுர
மாஞ்சோலையில் மகிழ்ந்துநின்றார்
பூஞ்சோலையைப் புகழ்ந்துக்கொண்டார்
தன்சேனையு டனேநின்றார்
தாய்மந்திரிஎதிர் கொண்டுவந்தார் மாப்

சரணம்.

அற்புதமாய்கந்தபுஷ்பத் தாலேஅர்ச்சித்தார்
ஆயிரம்தாதிமார்கூட நின்றுபசரித்தார்
இரத்நரதத்தை ஜோடித்தார்
இராஜவீதிகளைக் கோடித்தார்
முன்னமேளங்களை யடித்தார்
மீனாக்ஷிபிரியா ளைப்பிடித்தார் மாப்

---

கக. கீர்த்தனம்-இ-ம்-அடாணா-ரூபகதாளம்.

பல்லவி.

திமிதிமென்ன தேரின்மேலேறிஜோராய்
தீவட்டிபாணம் மத்தாப்புடன்தேவர்கள்
சூழதிரிநேத்திரர் வாரார் திமி

அநுபல்லவி.

காமியாற்கற்புடை யோரும்கலங்கி
கண்வாங்காமலேமோகிக்க அழகைக்
கண்டகதம்பவனப் பெண்டுகொண்டு
கிழங்கின்கூட தகிக்க
இராஜகன்னிகைக ளெல்லாம்ஆசிக்க
பிர்மகுலப்பெண்களும் கொஞ்சம்யோசிக்க திமி

சரணங்கள்.

ஸ்வாஹாபதிசுந்த ரேசர்க்குதிவ்விய
  வாசனைப்புகைகொடுக்க ஸ்வர்ண
கிரியைத்திருகி ஒடித்ததீரன்
  உயர்ந்தவிசிறி பிடிக்க
உத்தரதிக்கோன் ரத்நம்வருஷிக்க
இந்திரபுரிபெண்கள் எங்கும்நடிக்க திமி

பூரணகும்பங்கள் ஏந்திபூசுராள்
  வந்துஎதிர் காணமுன்னே
போனமாரன் தேகம்பெற்றுதிரும்பி
  வாரானோ வென்றுதோண
வம்பர்களில்லா ஏகபுத்ரமண
வாளன்வரமகிழ்ந்துள் போய்மீனாள்நாண திமி

நீலாள்நல்ல அதிர்ஷ்டசாலியென்று
  நாலாவர்ணத்தாரும்பேச-இரு
நேத்திரத்தாலுற்றுப் பார்த்தபேர்களுக்
  கெல்லாம் புதுசுபுதுசாய்
மித்திரன்மழுங்கி மேல்வரகூச
மீனாட்சிபிரியாள்தினம் பக்திவலைவீச திமி

---

௧௨. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மும்மூர்த்திகளும்வந்துகூடினார் முந்திமதுராபுரியை
நத்தினோரண்டையெல்லாம் போய்நாடினார்

அநுபல்லவி.

சண்முகர்சகலபரி வாரத்துடன்கூடினார்
சனகாதிமகாயோகிகள் சதுர்வேதங்கள்ஓதினார்
சாஸ்திரக்ஞாள்கூடிப்ரசங் கம்செய்துவாதாடினார் (மு)

சரணங்கள்.

கௌரியும்கிரீஜருங்கல்யாணக் கோலம்செய்துகொண்டார்
தாமரைசுதனிபதி தாரைகள்தான்வளர்க்கநின்றார்
பிர்மாசரஸ்வதி புரோகிதர்வேலையைக்கொண்டார் (மு)

இந்திரன்இந்திராணியும் கந்தமெல்லோர்க்கும்பூசினர்
சந்திரர்சபையில்சாமிக்கு சாமரம்வீசினர்
சுந்தரேசர்சிம்மாசனத்தி லிருந்துபேசினர் (மு)

தேவபாண்டியரென்றுதிவ்ய மாயொருநாமமிட்டார்
திரிகாலம்தெரிந்தசதா நந்தர்முந்திகூப்பிட்டார்
தேடிதியானித்துதினம் மீனாக்ஷிபிரியாள்கும்பிட்டாள் (மு)

கூ-விருத்தம்.

திமிதிமென்ன வேநாரிநட னம்வைத்து சுராள்நராள்
சூழ்ந்து தெரிசித்தார்
சாமிசௌந்தர துரைக்குசந் தனத்தயில மிட்டுபரிமள
பானியம் வருஷித்தார்
மாமிமகுடம் ஆழிஅருணாளா லலங்கரித்து மங்கள
மேளங்களை கோஷித்தார்
பூமிபுகழ் பெண்களெல்லாம் பூர்ணமுகி பொன்மேனிக்கும்
பூஷணம்பூட்டி போஷித்தார்.

---

கூ. கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

மதுரைமீனாட்சிக்கு மங்களநீராட்டி
பெண்களலங்கரித்தார் தென் மதுரை

அநுபல்லவி.

காதில்கல்லிழைத்தமுரு குஜோடுஜிமிக்கியிட்டு
காரைகண்டிமாணிக்க பதக்கம்மாரிலேபோட்டு
பத்துகெஜத்தில்பள பளென்னபஞ்சுபட்டு
பாதபரியந்தம் பணிக்காககொய்துவிட்டு ம

சரணங்கள்.

தரமாய்பாடகம்தண்டை பாதசரம்கொலுசுமெட்டி
தாசர்தியானிக்குந்திரு வடிகமலத்தில்பூட்டி
வாசனை தயிலத்தால் கேசத்தைவாரிகூட்டி
வைரப்பிரபைஜடைஸ்ரீங்காரம் செம்மையாய்கட்டி ம

தங்கசரிகைரவிக்கை நன்றாயெடுத்து
அங்கமறையகொங்கை மத்தியிலேமுடித்து
பரிமளமலரை பணிக்காய்மாலைதொடுத்து
பந்தாடபாணியில் புஷ்பச்செண்டுகொடுத்து ம

பூரணச்சந்த்ர முகத்தில்திலகம்பொன்னாய்
பூர்த்தியாய்சகலஸ்ரீங் காரமுஞ்செய்துநன்றாய்

ககனகூட்டத்துக்கு ளகப்பட்டாப்போல்காந்திமின்ன
கல்யாணமீனுட்சிபிரியாள் கருத்துருகிபக்திபண்ண ம

கச. கீர்த்தனம்-இ-ம்-புன்னுகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

பரதேசம்வாரார்
பாலசுந்திரதுரை-சாமிஜோர்சபைநேராய் பர

அநுபல்லவி.

சரஸ்வதிசுக ஸ்வரம்படிக்க
சகலவாத்தியங்களும் செவிக்கிஇன்பமாயடிக்க
அன்பர்ஆநந்தித்து நீர்வடிக்க
ஹரியும்அயனுமிரண் டண்டையும்கைலாகுதொடுக்க
மும்மூலைதீர்ந்தாள் மோகிக்க
முநிவரெல்லாம் ஸ்துதிக்க
காஞ்சனமாலை களிக்க
கன்னிகாதானம் கிரகிக்க பர

சரணம்.

பணம்பெற்ற பணிகளையிட்டு
பிராகிருதாளைப்போலே பிரபஞ்சவாழ்வுக்காசைபட்டு
ஜோசியரை லக்னம்கேட்டு
சுபகரமாய்நல்ல முகூர்த்தத்திலேபுறப்பட்டு
மாமியார் வரத்திஞலே
மீனுட்சிபிரியாள் தவத்திஞலே
ஸ்தனம்மறைத்த உறத்திஞலே
சொல்லிஉத் தரவின்மேலே பர

எ-விருத்தம்.

கைலைபதிகனங்களுடன்கல்யாணமண்டபம்வந்தேறிநின்ருர்
அதிலேஸ்வரியையழைக்கஹரிபாரியைஅதிவேகமாய்போநீயென்ருர்
துகிலைவிரிசொருகணைமேல்துந்துமிவிருதுகளுடனேசென்ருள்
மயிலேமாலையிடசமயமங்களமாய்மகாசபைக்குவாருமென்ருள்.

---

கரு. இ-ம்-இந்துஸ்தான்காபி-ஏகதாளம்.

பல்லவி.

வாடிவாடிராஜகுமாரி-பாண்டியராஜகுமாரி
ஓடிமாலைசூடி ஊஞ்சலாடவாடி

அநுபல்லவி.

மோடிமோஹன மூவரும்நன்ற
முகூர்த்தகாலம்என்று அழைத்துவரச்சொன்ன (வா)

சரணங்கள்.

சூரனேர் சுதனிசேயே
ஸ்வயம்ப்ரகாசமாய் ஜொலிக்கும்ஸ்வர்ணசாயே (வா)

பூர்ணமெய்பூர்ண சந்திரகாந்தி
போடபுஜத்திலேஜெம்ம காசரப்ஏந்தி (வா)

ஒத்துநாயனம் பத்தியாய்ஊத
முத்துமீனாக்ஷிபிரியாள் மகிழும்மாதா (வா)

கசு. இ-ம்-நாதநாமக்கிரியை-சதுர்ஜாதி-ரூபகம்.

பல்லவி.

பளீர்பளீரென்றுவந்தாள் மீனாம்பாள்
பரமேசர்க்குமாலையிட ஆசையுடன்ரொம்ப

அநுபல்லவி.

கலீர்கலீரென்று சிலம்புசப்திக்க
காட்சிகண்டோர்பின்றோர் தெரியாமலேநெத்திக்க
மதுகண்டபிரமரம்போல மனிதர்சித்திக்க
மஹாதேவர்கரத்திரு மங்கில்யம்பத்திக்க (பளீ)

சரணங்கள்.

லட்சுமிசரஸ்வதி கரங்களைப்பத்தி
லாயகாய்மின்னடையால் மேலீரையொத்தி
மாலையிடஹாரம்ஒன்றை பாணியில்சுத்தி
மண்டலம்பதினாறு ஒன்றாய்கூடியசபைநத்தி
குஞ்சுகள்ஒருகோடி தன்கூடவருக
கொண்டாடும்மீனாக்ஷி பிரியாட்குசேர்வைதருக
முக்கண்ணர்முன்நிற்க வெட்கிவேர்வைபெருக
முத்துமேகலைசிறுத்த இடையில்சற்றேசருக (பளீ)

கஎ. கீர்த்தனம்-இ-ம்-இங்கிலீஷ்நோட்டு-சாபுதாளம்.

பல்லவி.

மாலைமகிழ்ந்து சூடினாள்
மகதேவருடன் கூடினாள்மீனா

ஓலைஜிமிக்கி உடமைஅசைய
மாலைபதக்கம் மாரிலசைய
சேலைகள்சிறு இடையிலசைய
பாலைபாணி யாலேவிசையாய் மாலை

சரணங்கள்.

பாண்டியராஜர் குமாரத்தி
பராபரமான ஆதிநாயகி
மதுரைபோர்க் கறுகூலகி
மீனாக்ஷிபிரியாள் பரிபாலகி மாலை

ஊசல்.

ரத்நமணிமண்டபத்தில் நல்லமுத்தாலலங்கரித்து
சங்கரரைவரன்வரித்து மீனாக்ஷிசெங்கரத்தால்மாலைதரித்து
மலையத்துவஜர்மாளிகையில் மதுராம்பாளாடிஞூஞ்சல்
தேவிதிருஊஞ்சலிலாட திவ்யரம்பையர்கள்பாட
ஈரேழுலகும்ஒன்றுய்கூட இன்பவெண்சாமரங்களிருபுறமும்போட
மீனாக்ஷிபிரியாள்மகிழ தேவியாடிஞூஞ்சல்

லாலி.

கந்தரசுபிமப்பட்டு சூக்ஷ்குடையில்சொலிக்க
ஜோராய்சொர்ணூஞ்சலில் ஜோதியிருந்தாள்சொக்கர்மோகிக்க லா
சந்திரனைவென்றமுகத்தில் சுழிசோபித்துமின்ன
ஜாதிரத்நஆடபீடத்தில் சாய்ந்திருந்தாள்சக்திநன்று லா
மதுரைமீனாக்ஷிபிரியாள் மகிழ்ந்துதினம்பாட
மகதேவர்வாமபாகத்தில் மாதிருந்தாள்கூட லா

இ-ம்-தேசிகதோடி-அடதாளம்.

பல்லவி.

லாலிபாடினாள் நீலவேணிக்கு
லக்ஷ்சுமிலாலிபாடினாள்

அநுபல்லவி.

தாலிகூரைகளை தாங்கிக்கரங்களிலே (லாலி)

சரணங்கள்.

சந்திரசகோதரி சாரங்கர்மனோகரி (லாலி)
ஊஞ்சலையாட்டி உல்லாசமாய்நீட்டி (லாலி)
மீனாக்ஷிபிரியாள் மேலானபக்திசெய்ய (லாலி)

கஅ. இ-ம்-ஆனந்தபைரவி-மீசுரதாளம்.

பல்லவி.

கன்னூஞ்சலாடியிருந்தாள்
காஞ்சனமாலைமகிழ்ந்தாள் கன்

அநுபல்லவி.

பொன்னூஞ்சலில்பூரித்து பூஷணங்கள்தரித்து
ஈஸ்வரனரிடத்தி லாசைகள்ரொம்பவைத்து க

சரணங்கள்.

உத்தமிபெற்றகுமாரி நித்தியம்சர்வாலங்காரி
பக்தர்கள்பாபசம்ஹாரி பத்மமுகஒய்யாரி க
அசைந்துசங்கிலிபாட உயர்ந்துஊர்வசிபாட
இசைந்துதாளங்கள்போட மீனாக்ஷிபிரியாள்கொண்டாட க

கசு. கீர்த்தனம்-இ-ம்-காபி-சாபுதாளம்.

பல்லவி.

தேவிஊஞ்சலாடினாள் திவ்ய
ரம்பையர்கள் பாடினார்

அநுபல்லவி.

மூவர்கள்முனிவர்கள் கூடினார்-கூடி
மோக்ஷஸ்வரூபியைத்தேடினார்
முத்திமயபாதம் சக்திசரித்து
முத்துப்பந்தலின்கீழே சித்தம்பூரித்து தேவி
மீனாக்ஷிபிரியாள் தினம்தமிழிசைக்க
மின்னலொளியைக்கண் டெல்லோரும்பூரிக்க
சுஜனர்கள்சந்தோ ஷித்துகரங்கொட்ட
சுந்தரபாண்டிய ராஜப்பிரபுகிட்ட

உ0. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-பால்-ஏகதாளம்.

பல்லவி.

இரத்நஊஞ்சலிலாடினாள்
பத்மசுதனிபாடினாள்-நவ இரத்

அநுபல்லவி.

முத்துசரங்கள்குலுங்கிட ரத்னஹாரமாரிலேயலங்கிட
சுத்திஷும்சகிதுலங்கிட நடுமத்தியில்மன்னனுடன்கூட இர

மதிமுகம்மந்தஹாசமாய் மன்னனிடத்திலேமனநேசமாய்
பாஸ்கரன்போல்பிரகாசமாய் பரதேவதைவெகுவுல்லாசமாய் இர

தேவர்கள்மலர்போடவே திரிமூர்த்திகள்வந்துகூடவே
மித்திரன்பத்தினிபாடவே மீனாட்சிபிரியாள்தினம்தேடவே இர

உக. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-பிலாவல்-ரூபகம்.

பல்லவி.

ஆடினாள் ஊஞ்சல் சர்வேசர்
பாடினார்நாரதர் வீணைவிலாசர் ஆடி

அநுபல்லவி.

கோடிபாஸ்கர ப்ரகாசர்
கொண்டாடுவோர்உள்ளே நின்றாடும்நேசர்
தாசர்கள்கிலேசவிநாசர்
தடாதகைதன்னை தழுவஉல்லாசர் ஆடி

சரணங்கள்.

பூர்வத்தில் காஞ்சனமாலை
பூர்ணதபசுகள் செய்ததினாலே
ராஜகுமாரனைப் போலே
ரத்னமிழைத்தபொன் பீடத்தின்மேலே ஆடி

கல்யாணகோலங்கள் கொண்டு
கடைக்கண்ணாலடிக்கடி தேவியைக்கண்டு
அற்புதாபரணங்கள் பூண்டு
ஆலாஸ்யபுரிராஜவாசலில்நின்று ஆடி

பீதாம்பரணங்கள் தரித்து
பின்னேவேணியில் சுகந்தம்முடித்து
மந்தஹாசமாய் சரித்து
மதுரைமீனாட்சிபிரியாளைநினைத்து ஆடி

உஉ. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்

பல்லவி.

சங்கரிஊஞ்சலாடினாள்
சரஸ்வதிசபையில் பாடினாள்
சகலஜீவாளும்கூடினார்
சாஸ்வததம்பதியைத் தேடினாள் சங்கரி

அநுபல்லவி.

அங்குள்ளோர் யாதென்மறந்தார்-தங்க
மேனியைத்தியானித் துகழ்ந்தார்
பங்கஜடியில் விழுந்தார்-அங்கம்
பொங்கிபுளகாங்கித் தெழுந்தார் சங்கரி

சுரபுரிநாரியர் சூழ-சகி
வந்துசரணத்தில் தொழ
குலசேகரன் குலம்வாழ குடி
பிரஜைகளெல்லாம் வந்துதாழ சங்கரி

சுவாஹாவாசப் புகைபோட்டாள் சம்
ஹாரன்சகிசெய் பணிகேட்டாள்
நிருதிநேசிபோய் பாலிட்டாள்நீர்
நிரைவான்நேத்திரி பன்னீர்விட்டாள் சங்கரி

ஹரித்திரான்னம் பிசரினுள்-அஞ்சனை
யமர்ந்து விசிறினுள்
மணிஅளகையான் சிதறினுள் மீனுக்ஷி
பிரியாள்யாதென் உதறினுள். சங்கரி

---

உரு. கீர்த்தனம்-இ-ம்-பிலஹரி-ரூபகதாளம்.

பல்லவி.

மாப்பிள்ளை துரையை ஊஞ்சலில்பார்த்தாள்
மாமியார்மகிழ்ந்துமலரக்ஷதையாலே அர்ச்சித்தாள் மா

அநுபல்லவி.

காப்புடன்சங்கிலிரத்ந கணையாழிகண்டிகொடுத்தாள்
தோப்புள்ளகதம்பாரண்யத் தையாளும்நீரென்றுரைத்தாள்
ரதியும்கண்டுமோகிக்க பதிபாலைக்குவரித்தாள்
ராஜனைகல்யாணமண்ட பத்தில்வாருமென்றழைத்தாள் மா

சரணங்கள்.

மஞ்சள்காணியாய்மதுரை ராஜ்யத்தைபட்டங்கட்டி
மறையோர்சதாநந்தரால் மாணிக்கமகுடம்சூட்டி
முன்னுலேபோய்ஊஞ்சலை தன்னுலேதாகம்தீரஆட்டி
மீனுட்சிபிரியாள்பக்தி பண்ணப்பால்பழங்களையூட்டி மா

---

உச. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மங்களம் பாடினளே
தங்களூஞ்சலாடும்-தடாதகைக்கு பெண்கள் மங்

அநுபல்லவி.

பங்கஜபாத கமலங்களைத்தொட்டு
பாரினுள்ளராஜ பத்னியெல்லாம்பாலிட்டு மங்

சரணங்கள்.

வெள்ளிச்சொப்பேன்விளக்கேன் தங்கமறக்காலேன்தாங்கி
வீசிபச்சைப்பொடியை விட்டௌறிந்துஓங்கி மங்
லக்ஷ்மிசரஸ்வதிஇந்தி ராணியெல்லோரும்சேர்ந்து
லக்ஷணமீனாக்ஷிபிரியாள் வாழ்வைதிருவலம்வந்து மங்

ஒடம்.

மீனாட்சிசுந்தரேசாள்-கல்யாணம்
செய்துகொண்டாள் புதுசாய்
கன்னூஞ்சலாடியபின்-கல்யாண
மண்டபத்தில்வந்தாள் மணைமின்
ரத்நமணிபீடத்தில்-ராஜாங்க
மாயிருந்தாள் ரதியும்பதியும்போல
சுராள்நராள் சூழ்ந்துகொண்டார்-சொந்த
வேலையாயாவதையுங் கைக்கொண்டார்.

முடுகு.

மாப்பிள்ளை துரையைமனம் மகிழ்ந்துமேயழைத்தாள்
மலரோடு அக்ஷதைகளாலே அர்ச்சித்தாள்
சதுர்சாகரத்துக்குட்பட்ட பூமியைக்கொடுத்தாள்
சால்வையொடுசர்வா பரணங்களையுந்தரித்தாள்
மயில்போலமணையில்வளர்ந்த மகளையெடுத்தாள்
மறலீலைக்குஇந்தாருமென்று மகிழ்ந்துமேகொடுத்தாள்
இருகையால்கன்னிகையை தானமாய்கிரகித்தார்
ஏற்றுகொண்டேனென்று நன்றாய்பதில்மொழியுரைத்தார்
முந்திவிநாயகரையும் முனிவரையும்பூசித்தாள்
பிந்திவிவாகம்பெரிதாக எத்தனித்தார்
உச்சிதமாய்ப்பட்டெடுத்து உமையவளுடுத்தாள்
அச்சுதரும்மடிமேலே வைத்துமேபூரித்தார்

திமிதிமென்னவாத்திய கோஷ்டங்களையடித்தார்
தேவிகண்டத்திலே திருமங்கிலியம்தரித்தார்
ஆகாசத்தில்அமராள் புஷ்பம்வருஷித்தார்
ஏகாசனத்திலே இருவரும்ஜொலித்தார்
சுபகரமாகவெகு சுமங்கிலிகள்கூட
சோபானையொடுகௌரி கல்யாணம்பாட
அம்மான்மார்சேனைகள் யாவரும்பூரித்தார்
செய்யவேண்டியசீரை சபையெங்கிலும்கிரைத்தார்
கனகரத்நகாலாழி பீலியைகொடுத்தார்
செங்கமலஅங்குயிலில் பெண்களும்தரித்தார்
சதுர்முகஸ்வஹாயதியை ஜ்வாலையாய்வளர்த்தார்
சங்கரர்ஓமாகுதி சகலமுமுடித்தார்
மண்ணளந்தமாதவரும் மகிழ்ந்துபொறியிட்டார்
மதுராம்பாள்வாங்கிஎக்கிய மூர்த்தியின்மேல்போட்டாள்
அம்பிகாபாதமெடுத் தம்மியின்மேல்வைத்தார்
அக்கினியைமூன்றுவலம் சுத்தியேஸ்துதித்தார்
கண்டுமேயெல்லோரும் கலீரெனசிரித்தார்
காஞ்சனமாலைகவலை நீங்கியேபூரித்தாள்
தகதகென்னதங்கதாம் பாளத்தைஎடுத்தாள்
ஸ்ரீங்காரமாயதிலே மஞ்சள்நீர்கரைத்தாள்
முத்துகளைவாரிஅதின் மத்தியிலேவைத்தாள்
அத்தையரும்பத்மினியும் ஆலத்திஎடுத்தாள்
பூரியைவாரியே வேணதுகொடுத்தார்
பூரித்துஎல்லவர்க்கும் போஜனமளித்தார்
மாதாகாஞ்சனமாலை கண்டுமேகளித்தாள்
மதுரைமீனாட்சியாள் கப்பலாயிசைத்தாள்

ஏலலோ ஈஸ்வரனார்-மதுரேஸ்வரியை
கல்யாணம் செய்துகொண்ட லீலைஇது

அ-விருத்தம்.

வேண்டிய் விசாலாட்சியை விதிமுறைப்படி விவாகம்
செய்து கொண்டார்
பாண்டிய னய்ப்பாராள மகுடஆபா ணங்களைப்
பூண்டு கொண்டார்
தூண்டி சிற்பசாஸ் திரியைசீக் கிரம்வாலய
மொன்று செய்யென்றார்
வண்டி வண்டியாய் பூஜாதிரவி யங்களுடனே
வலமாகி சென்றார்.

உச. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மங்களம் பாடினளே
தங்கஊஞ்சலாடும்-தடாதகைக்கு பெண்கள் மங்

அநுபல்லவி.

பங்கஜபாத கமலங்களைத்தொட்டு
பாரிலுள்ளராஜ பத்னியெல்லாம்பாலிட்டு மங்

சரணங்கள்.

வெள்ளிச்சொப்பேன்விளக்கேன் தங்கமறக்காலேன்தாங்கி
வீசிபச்சைப்பொடியை விட்டுஎறிந்துஓங்கி மங்
லக்ஷ்மிசரஸ்வதிஇந்தி ராணியெல்லோரும்சேர்ந்து
லக்ஷணமீனாக்ஷிபிரியாள் வாழ்வைதிருவலம்வந்து மங்

ஓடம்.

மீனாட்சிசுந்தரேசாள்-கல்யாணம்
செய்துகொண்டாள் புதுசாய்
கன்னூஞ்சலாடியபின்-கல்யாண
மண்டபத்தில்வந்தாள் மணைமின்
ரத்நமணிபீடத்தில்-ராஜாங்க
மாயிருந்தாள் ரதியும்பதியும்போல
சுராள்நராள் சூழ்ந்துகொண்டார்-சொந்த
வேலையாயாவதையுங் கைக்கொண்டார்.

முடுகு.

மாப்பிள்ளை துரையைமனம் மகிழ்ந்துமேயழைத்தாள்
மலரோடுஅக்ஷதைகளாலே அர்ச்சித்தாள்
சதுர்சாகரத்துக்குட்பட்ட பூமியைக்கொடுத்தாள்
சால்வையொடுசர்வா பரணங்களையுந்தரித்தாள்
மயில்போலமனையில்வளர்ந்த மகளையெடுத்தாள்
மறலிலேக்குஇந்தாருமென்று மகிழ்ந்துமேகொடுத்தாள்
இருகையால்கன்னிகையை தானமாய்கிரகித்தார்
ஏற்றுகொண்டேனென்று நன்றாய்பதில்மொழியுரைத்தார்
முந்திவிநாயகரையும் முனிவரையும்பூசித்தாள்
பிந்திவிவாகம்பெரிதாக எத்தனித்தார்
உச்சிதமாய்ப்பட்டெடுத்து உமையவளுடுத்தாள்
அச்சுதரும்மடிமேலே வைத்துமேபூரித்தார்

திமிதிமென்னவாத்திய கோஷ்டங்களையடித்தார்
தேவிகண்டத்திலே திருமங்கிலியம்தரித்தார்
ஆகாசத்தில்அமரர்கள் புஷ்பம்வருஷித்தார்
ஏகாசனத்திலே இருவரும்ஜொலித்தார்
சுபகரமாகவெகு சுமங்கிலிகள்கூட
சோபானையொடுகௌரி கல்யாணம்பாட
அம்மான்மார்சேனைகள் யாவரும்பூரித்தார்
செய்யவேண்டியசீரை சபையெங்கிலும்நிரைத்தார்
கனகரத்நகாலாழி பீலியைகொடுத்தார்
செங்கமலஅங்குயிலில் பெண்களும்தரித்தார்
சதுர்முகஸ்வஹாபதியை ஜ்வாலையாய்வளர்த்தார்
சங்கரர்ஓமாகுதி சகலமுமுடித்தார்
மண்ணளந்தமாதவரும் மகிழ்ந்துபொரியிட்டார்
மதுராம்பாள்வாங்கிஎக்கிய மூர்த்தியின்மேல்போட்டாள்
அம்பிகாபாதமெடுத் தம்மியின்மேல்வைத்தார்
அக்கினியைமூன்றுவலம் சுத்தியேஸ்துதித்தார்
கண்டுமேயெல்லோரும் கலீரெனசிரித்தார்
காஞ்சனமாலைகவலை நீங்கியேபூரித்தாள்
தகதகென்னதங்கதாம் பாளத்தையெடுத்தாள்
ஸ்ரீங்காரமாயதிலே மஞ்சள்நீர்கரைத்தாள்
முத்துகளைவாரிஅதின் மத்தியிலேவைத்தாள்
அத்தையரும்பத்மினியும் ஆலத்திஎடுத்தாள்
பூரியைவாரியே வேணதுகொடுத்தார்
பூரித்துஎல்லவர்க்கும் போஜனமளித்தார்
மாதாகாஞ்சனமாலை கண்டுமேகளித்தாள்
மதுரைமீனாட்சியாள் கப்பலாயினசத்தாள்

ஏலலோ ஈஸ்வரனார்-மதுரேஸ்வரியை
கல்யாணம் செய்துகொண்ட லீலைஇது

அ-விருத்தம்.

வேண்டியே விசாலாட்சியை விதிமுறைப்படி விவாகம்
செய்து கொண்டார்
பாண்டிய னய்ப்பாராள மகுடஆபா ணங்களைப்
பூண்டு கொண்டார்
தூண்டி சிற்பசாஸ் திரியைசீக் கிரம்வாலய
மொன்று செய்யென்றார்
வண்டி வண்டியாய் பூஜாதிரவி யங்களுடனே
வலமாகி சென்றார்.

உடு. கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி-அடதாளசாப்பு.

பல்லவி.

லிங்கபிரதிஷ்டை செய்தார்
லீலாவிநோதரும்-கோலாகலமாயெய்தார்

அநுபல்லவி.

அங்கம் பரவசமாகி

ஆகமசாஸ்திரப்படி செய்துஆலயமீதிலேகி
நன்மைதருவாரென் றுதிருநாமமிட்டு
நால்வேதசாரமறிந்தசதா நந்தரைமந்திரம்கேட்டு லி

சரணம்.

மீனாட்சிபிரியாள் தமிழிசைக்க

மேகமேனிகுடும்ப சகிதமாய்தினம்போய்பிரார்த்திக்க
மூலஸ்தானத்தில்முக்கண்ணன் சாநித்தியமாய்ஜொலிக்க
முப்பத்துமுக்கோடிதேவர் புஷ்பங்கள்வாரிஇறைக்க லி

சூ-விருத்தம்.

இகாபீஷ்டரை பூஜைசெய்து எழுந்திருந்து தன்னைத்
தானே ஸ்துதித்தார்
சாகபட்சிய அன்னம் விருந்தருந்த சகல
பேர்களையு மழைத்தார்
மகாமுனி இருபேர் சிதம்பர தெரிசன
நேமிஎன் றுரைத்தார்
பகவான் வெகுகிருபை யுடனேபாரிதோ எங்கும்நான்
தானேஎன் று நடித்தார்.

உசு. கீர்த்தனம்-இ-ம்-யமுனகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

நடனமாடினார்-நல்மதுரையோர்கள்கூடினார்
நாதர் நடனமாடினார்

அநுபல்லவி.

கடலலங்கிட சுடரொடுங்கிட
சடையோர்போற்றிட கொடையோர்வாழ்த்திட ந

சரணங்கள்.

கைலநாதன் கல்யாணவிநோதன்
சங்காதிபோதன் சதுர்மறைவேதன் ந

சபையொன்றுண்டாக்கி சிலம்பணிதூக்கி
பட்டப்பணிநீக்கி பதஞ்சலியைநோக்கி ந

கன்னியிட்டமாலை கழன்றுதிரமேலே
தில்லைவனம்போலே தென்மதுரையிலே ந

நெற்றிசற்றேவேர்க்க சத்திபன்னீர்வார்க்க
தாளலயத்துக்கேர்க்க தாசரெல்லாம்பார்க்க ந

அம்பலத்திலேறி ஆனந்தமேல்மீறி
இச்சகத்தைதூறி இருமுனிவரைய்ங்கூறி ந

சுராள்கிராள்நெறிய சுகந்தம்சொரிய
பிரமதகணம்பரிய பரமர்பெரிய ந

உண்டிடழைத்திட்டு உதவாதென்கவிட்டு
மிருதங்கம்போட்டு மீனாட்சிபிரியாளைத்தொட்டு ந

கo-விருத்தம்

பதஞ்சலிவியாக்கியபாதர்பகவானைப்பணிந்துபலவரங்கள்பெற்றார்
சதாநந்தயோகிமுதல்சகலபெரியோரும்விருந்துபுசித்தார்
நாதன்சபாமண்டபத்தில்நாழிக்கொருவிதமாய்வேடிக்கைவைத்தார்
சதாமீதுசரிசெய்திடக்ஷணத்திலேகுண்டோதரன்வந்துகுதித்தார்.

---

## குண்டோதரனுண்ட கொம்மி.

குண்டோதரனுண்டலீலையை கொம்மிபாடுகிறேனென்னுவாலேயே
வாணிவிநாயகரே வாக்குகவிநீர்செய்குவீரே
மீனாட்சிதிருக்கல்யாண முகூர்த்தங்களானபின்புநன்று
ஜெனங்களெல்லாரும் கூடிக்கொண்டு
சேர்ந்துவிருந்து புஜித்துக்கொண்டு
தாம்பூலங்களும் தரித்துக்கொண்டு
தடாதகாயிடத்தில் சொல்லிக்கொண்டு
ஆயிரக்கால்மணிமண்டபத்தில் யாவரும்போயிருந்தார்பூரித்து
காரியஸ்தரெல்லாம்கூடிவந்து கல்யாணதேவிகாலிற்பணிந்து
எந்தாயேஉன்திருக்கல்யாண எடுத்தோதஒர்யுகம்வேணு
உண்டஜனமொருகோடியுண்டு தின்றஜனங்களைக்கண்டதின்று
இன்னும்லக்ஷம்ஜனம்வந்தாலும் நன்னுபக்ஷமுடனுண்டானாலும்
மாளாதுசாதம்மலைமலையாய் சேதமாகிறதென்றார்நிறைய
ஊழியரோதஉள்ளம்தளர்ந்தாள் ஒருநொடியிலெழுந்திருந்தாள்
ஆயிரசகியைக் கூட்டிக்கொண்டாள்
அன்னசாலையிலே போய்நின்றாள்

வெள்ளிமலைபோலஅன்னங்களேன் விசித்ரசாகஷ்டரசங்களேன்
வேந்தன்குமாரிகணக்களர்ந்தாள் வேதனையாகிமனந்தளர்ந்தாள்
தோழிமார்களை யழைத்துக்கொண்டாள்
துரைஜோர்சதவிலே போய்நின்றாள்
கல்யாணமண்டபத்தில் கனகரத்னசிம்மாசனத்தில்
மந்தஹாசம்பண்ணியேசிரித்து மன்னராஜரிருந்தார்பூரித்து
அந்தவேளையிலம்மன்பயந்து அடிகள்மேலேமுடிகுனிந்து
கலகலென்றுநடந்துவந்தாள் கமலபாதத்திலேபணிந்தாள்
புன்சிரிப்பாகபூரித்துகொண்டார்வஞ்சியேநோக்காசிர்வாதமென்றார்
பூரித்துதேவி எழுந்திருந்தாள்
பூமியைப்பார்த்துக் கொண்டேயிருந்தாள்
வடிவாளைநேர்கிமிந்துகண்டார் வந்தகாரியங்கள்ஏதுஎன்றார்
பக்தியுடனேபயந்துகொண்டு பதிபாதங்களைப்பார்த்துக்கொண்டு
வணக்குயில்சப்தித்தாப் போலேநன்ஞ
வாயைதிறந்தொரு வார்த்தைசொன்ஞ
ஏகசக்கிரங்களையாளும் எந்தன்பிராணேசரேநீர்கேளும்
வேலைக்காரரெல்லாம்ஓடிவந்து வேண்டிவணங்கிஎன்னைபணிந்து
அம்மாஞத்துபந்துகளுக்கு ஆயிரம்பக்குவம்பண்ணியிருக்கு
பிறந்தாத்துஜனங்களுக்கு பொங்கல்புளியோரைசெய்திருக்கு
புக்காத்துசம்மந்திகட்கு புதுசாய்செய்யவேணும்எங்களுக்கு
வாய்த்தமாப்பிள்ளை யுடன்கூட
வருவோர்சொல்லென் றார்உலைபோட
தெரிந்தமட்டோர் கணக்குப்போட்டே
திட்டம்செய்யுமென்று சட்டமிட்டேன்
அந்தபடிக்குஅவள்கருகா யநேகபக்குவங்கள்செய்திருக்கார்
பால்குழம்பிலேஎத்தனையோ பாயசங்களிலெத்தனையோ
தேன்குழம்பிலேஎத்தனையோ தேங்காய்பாலிலேஎத்தனையோ
கூபங்கள்கூபங்க ளாகஅநேகண்டா
கொப்பரையிலே யிருக்குதென்றாள்
புட்டுவடையிலேஎத்தனையோ பொரிவடங்களிலெத்தனையோ
அற்புதபக்ஷயங்களை வர்ணித்தார்
அசலம்போலிருக் கென்றுரைத்தார்
எந்தன்பெருஞ்சேனைகள்கருக்காயெத்தனைபேர்களோவந்திருக்குறார்
அத்தனைபேரும்அதைபுசித்து ஆனந்தமாயிருக்கிறாள்பூரித்து
தங்களிடதளங்கட்காக தயார்செய்ததிவ்யபாக

சாகவஞ்சனுதிகள்வீணுய்    தேசம்போம்போலிருக்குதென்னுள்
வாசனைவிலகிவேகம்    வந்தினிமேலேநொந்துபோகும்
உம்மாலேவெந்த    பொருட்குமுன்னு
ஒருவழிகளைச்    சொல்லுமென்னுல்
வலுவாய்வருத்தம்வந்துசம்புக்கு    வகையாய்வாய்திறந்தார்வம்புக்கு
கீர்த்திகொண்டதடாதகையாட்கு    கெருவங்களும்ரொம்பயிருக்கு
சாந்தமாய்நாமிருந்தால்நீதியாய்    சட்டைகள்செய்துஇவள்மதியாள்
கருவபங்கம்பண்ணவேணுமென்று    கங்காதரரும்நினைந்துகொண்டு
அம்பாளகம்பாவத்தையழிக்க    ஆலோசனைபண்ணிப்பார்த்தார்
கோபங்களையும்    அடக்கிக்கொண்டார்
குண்டோதரனை    நினைந்துக்கொண்டார்
பக்தன்வயிற்றுக்குள்ளேபுகுந்து    படவக்கினியாய்நாமிருந்து
பெருமதுராபுரியைவீணுய்    வெரும்நகராயடித்தோமானுல்
அகம்பாவங்களெல்லாம்ஒடுங்கி    அப்போவசப்படுவாளடங்கி
இந்தப்படிசெய்யவேணுமென்று    இருந்தாலோசனைசெய்துகொண்டு
தேவிதிருமுகம்பார்த்துநன்னுதிரி    நேத்திரர்சிலவார்த்தைசொன்னுர்
பாண்டியராஜன்குமாரகியே    பாருக்குள்ளேபணக்காருநீயே
ஏகசக்கிராதிபதிதாண்டி    எட்டுதிக்குகளையுந்தூண்டி
அமராபுரிசூராளையுங்கண்டித்    தரசையாண்டவள்நீதாண்டி
ஏளனமாகநீபேசாதே    இந்திரன்போலென்னைவீசாதே
இராணிலாயக்கைகாட்டாதே    ராங்கிமோடியோடிமிறட்டாதே
குடைபிடித்துக்கொண்டுகருக்காய்    கூடகணமொன்றுவந்திருக்க
வாவென்றுநீஅழைத்தாயா    வரிசைகளைக்கொடுத்தாயா
கூவிநீவந்துஅழைத்தாயா    கொணர்ந்தித்தனைகொடுத்தாயா
சம்மந்தியென்றுமதித்தாயா    சீரெல்லாம்வைத்துக்கொடுத்தாயா
சமர்த்துகள்இருந்தாலெனக்கு    சட்டையாய்தோணுமடிஉனக்கு
சமத்துவங்களிருந்தால்எனக்கு    சிறப்புதோணுமடிஉனக்கு
பிரபுநீயென்றுதெரியாதா    பதியுடனேகூடவாதா
ஏழையானஎனக்கிசைந்தேச்சா    இசைந்தபின்பும்ஏறுபேச்சா
சேனைசேரென்றுவிறட்டிரையே    சீக்கிரமென்றுஅதட்டுரையே
எந்ததேசத்திலேபோவேண்டி    யாரைவாவென்றுஅழைப்பேண்டி
அண்ணன்தம்பிகள்கிடையாது    அன்னைதந்தைகள்எனக்கேது
கூடப்பிறவிகிடையாது    குருதெய்வங்களெனக்கேது
அம்மானுரும்கிடையாது    அநேகபந்துக்கள்எனக்கேது
பட்டாம்புதேவி    உன்பட்டணத்தை

பட்டங்கட்டிக்கொண்ட வன்நான்பித்தே
சீமையாண்டவிவகாரி உன்செங்கோலைஆள்பவன்நான்நாரி
பட்டமும்செங்கோலுமுன்னதுதான் பிர்மகபாலங்களென்னதுதான்
நாடுநகரெல்லாம்உன்னதுதான் காடுமலையெல்லாம்என்னதுதான்
அரைக்ஷணத்துக்குள் ஒடுகிறேன்
அகஸ்தியரையானு மழைத்துவாறேன்
பாலன்ஆசையால்குண்டோதரன் பசியினாலேதாவாடுகிறான்
சிலனாகையால்குண்டோதரன் சிவனேயென்றவன்தேடுகிறான்
அன்புடன்நீயவனையழைத்து அமுதுசாலையில்கொண்டேவைத்து
புத்துருக்குநெய்ச்சம்பாவும் பொரிதினுசுகளில்றெம்பவும்
சக்கரைபொங்கலுடனேவைத்து சம்பிரமபோஜனம்படைத்து
இன்னோர்வேளைக்கு கையிற்கொடுத்து
இங்கேஅனுப்புமென் றார்நொடித்து
அதிர்ந்தசொல்கேட்டறியாதசொல்லி அவர்முன்நிற்கநடுங்கிநல்லி
கூர்நயனங்கொஞ்சம்சிவந்து குண்டோதரனுடனேநடந்து
அகண்டாகாரமனையிற்சென்று அலுவல்அடிமைகளைக்கண்டு
துரைமார்மாப்பிள்ளைக்குமெலுக்காய் தோழனாயிப்பூதம்வந்திருக்க
இத்தனைபேரி லொருத்திபிரஸந்தா
இங்கேவாவென்று அழைத்திருந்தாள்
அற்புததீனிலேஉயர்ந்த அவ்வாயிலித்தனைகொடுத்திருந்தாள்
இத்தனைபேச்சுக் கிடமேதுஎன்னாள்
இன்றந்துமேசில வார்த்தைசொன்னாள்
அதிகாரங்கள்செய்துஅதட்டி அண்டினபேர்களெல்லாரையுந்திட்டி
அரண்மனையைவிட்டோடி போங்களென்றாள்
அடிக்கப்பொன்கோல் புஜத்திற்கொண்டாள்
காரியஸ்தர்கள் கண்டுநடுங்கி
கைகட்டிவாய்பொத்திக் கொண்டொடுங்கி
தாயேநீகோபங்கொள் ளாதேயென்றார்
தாசர்மேல்தப்புத் தான்தள்ளுமென்றார்
குண்டோதரரை உள்ளேயழைத்தார்
கோடித்தவஸ்து வெல்லாம்காண்பித்தார்
பிரமதகணமேநீர்வாருமென்றார் பக்ஷயவர்க்கங்களைப்பாருமென்றார்
சகஸ்திரசுத்துமுருக்குதென்றார் சகடம்போலடுக்கியிருக்குதென்றார்
தித்திக்கப்பாகுசெலுத்திவைத்த தேன்குழல்கள்யென்றுரைத்தார்
ரவைகடலைபயரால்பிடித்த லட்டுண்டைகள்அதென்றுரைத்தார்

ஆச்சியத்திலேதட்டியெடுத்த அதிரசமதுவென் றுரைத்தார்
சீனிஏலம்கலந் துதிச்ச க்ஷீரவத்தல்களதென் றுரைத்தார்
பர்வதம்போலுயர்த்திப்பிடித்தபருப்பு தேங்காய்களதென் றுரைத்
சிப்பிட்டிசைத்தரசத்லைதக்கண்டார் செருமலைபழங்களதென் றூர்
மட்டைநாளிகேரம்போல்பெருத்த மாம்பழங்களதென் றுரைத்தார்
பசுவின் ஆற்சிறத்தில்நனைத்தபனசச்சொளை அதென் றுரைத்தார்
கற்கண்டுசன்னம்கலந் துவைத்த கனுமுத் துக்களதென் றுரைத்தார்
தரமாய்தேன் தனிலேநனைத்த திராக்ஷபழமதென் றுரைத்தார்
கணுக்கழற்றிவெட்டி லுவித்த கரும்புதுண்டமதென் றுரைத்தார்
ஜலம்வீசைக்குமேலேமிருந்த செவ்விளநீரதென் றுமொழிந்தார்
தீவந் துதின்றாலும்ஆகா துதிரிலோகரும் தீங்க்குபோதாது
உண்டிடும்பேர்களைதேடுகிறோம் ஒருவரையுங்காணோமல்வாடுகிறோம்
வாரிநோக்கிட்டுகுறைந்துபோமா வலியன்குடித் துகடல்நீராமா
ஈசானிரிப்படிஏசலாவா எஜமானியைஎதிர்த் துபேசலாமா
மதுரையாள்மகாராஜாத்தி மதியாமல்சொன்னாரேஎன்னபுத்தி
காலையொன்றேடிங்கேவந்தவற்கு கணிச்சம்காரஸ்யம்என்னி
செல்வியாள்சற்றேசருகவிட்டால் சிரமொருவரும்வணங்கமாட்டார்
தெரியாத்தனத்தி னாலேஇந்நாள்
திரிநேத்திரர்சில வார்த்தைசொன்னார்
அறியாத்தனத்தினாலேமுந்நாள் அதிகமாய்சிலவார்த்தைசொன்னார்
மெத்ததயாபரர்சொன்னதினால் குற்றமில்லைநீருட்காருமென்று
போஜனெலை பொருக்கியெடுத்தார்
புரோக்ஷித்துபொன் தரையிற்படுத்தார்
தங்ககெண்டியில் தண்ணீரைவைத்தார்
திரட்டிப்பாலை முன்னேபடைத்தார்
வெள்ளிச்சொம்பில்வெல் லுதகம்வைத்தார்
விசாலஅப்பம் வாரிப்படைத்தார்
போளிலாடுபேடா சேவைபடைத்தார்
பூரிபேணிசுகியம் ஜிலேப்பிவைத்தார்
தொன்னைநிறைய தோய்ந்தநெய்விட்டார்
தோசையிட்டலி சட்னிபோட்டார்
ஷட்ரசவிருந்தன்னம்படைத்தார் சம்மந்திசாப்பிடுமென் றுரைத்தார்
எரிபசியால்இவர்துடித்தார் இன்னம்போடுபோடென் றுபுசித்தார்
பரிசாரகாள்அவையறிந்தார் பத்துக்கோடிபேர்கொண்டாடிவந்து
கறண்டியாலேசிலர்கேட்டார் கல்சட்டியோடேசிலர்போட்டார்

அகப்பையாலேசிலர்கேட்டார் அன்னவெட்டியோடுசிலர்போட்டார்
தாம்பாளத்தாலேசிலர்கேட்டார் தவளுயோடேசிலர்போட்டார்
பொன்கிண்ணத்தாலே சிலர்கேட்டார்
போகணியோடே சிலர்போட்டார்
உப்பேரிநூறுபேரெடுத்தார் குப்பலாய்கோபுரம்போல்படைத்தார்
அவியலாயிரம்பேரெடுத்தார் அசலம்போலேயள்ளிபடைத்தார்
சாம்பார்சருவத்தோடெடுத்தார் சாப்பிடசந்தோஷித்துபடைத்தார்
ததிக்காடிதாஞெடெடுத்தார் தாலந்தாலந்தாலமாய்ப்படைத்தார்
நதிகொள்ளுங்கடல் போலேகொண்டார்
நிறையகொண்டு வாருங்களென்ருர்
ஸ்வயம்பாகிகள்போட்டுசலித்தார் சோர்ந்துஸ்ரமத்துடன்படுத்தார்
அங்கசிங்காரியதையறிந்தாள் பொங்கல்மடப்பள்ளியில்நுழைந்தாள்
வயறுதாரியைவந்துகண்டாள்வாரி நீர்சாப்பிடுகாணுமென்ருள்
உமையாளுத் தரவையறிந்தார்
உள்ளேபோய்உண் டொழிச்சமுனைந்தார்
அன்னப்போர்முன்னே போய்வாயைவைத்தார்
அதில்மீதியில் லாமலழித்தார்
கூட்டல்வாட்டல்துவட்டலென்ருர் குழம்புகறிரசத்தையுண்டார்
ஆடினஎண்ணெய்விட்டுநிறக்க அனேகசித்ரான்னங்கள்செய்திருக்க
விரும்பியவைஎல்லாம்புசித்தார் வற்றலாடங்களேயுமொழித்தார்
பருப்புபச்சடிகளைதின்ருர் பஞ்சாமிர்தம்பால்பாகுமுண்டார்
ரொட்டியைதீயிலேவாட்டிதின்ருர் தட்டினஅடைவடையுமுண்டார்
இஞ்சிகொளஞ்சிமாங்காய்மணக்க எண்ணெய்களில்உசிலித்திருக்க
ஊறுகாய்தொக்கோ டதையுமுண்டார்
நூறுவகைதொகை யலேயுந்தின்ருர்
குடைந்துதாழி யெல்லாம்சோதித்தார்
கடைந்தபோர்வெண் ணெயும்புசித்தார்
சோமன்நிறம் வெளுக்கப்பொறித்தார்
சோமாசியப் பளத்தையும்பொசித்தார்
களிக்குப்பலே உடைத்துவிட்டார்
புளிகொத்தோடே துடைத்துவிட்டார்
சாரசனகனையேசிலாகித்தார் காரமரவார்ப்போடதையும்புசித்தார்
கேசரிபாத்தெல்லாம் வாரித்தின்ருர்
கிளரினஒக்காரை களேயும்உண்டார் [தின்ருர்
சீனிமுந்திரிமுதகத்தையுமுட்டார் சீமைமிட்டாயிஎல்லாவற்றையுந்

வடித்தகஞ்சிகளையுங்குடித்தார் புளித்தபுருன்னத்தையும்புசித்தார்
காதடைக்குதேபசிநேக்கென்றார் காந்தலேனுங்கிடையாதாவென்றார்
பக்குவமானதெல்லாம் ஒழித்தார்
பச்சைகறியில்போய் பாணிவைத்தார்
முழுபறங்கிக் காய்களையுமுண்டார்
மோதகம்போலதை மென்றுதின்றார்
பூசினிக்காய்களைப் போட்டுக்கொண்டார்
புடலங்காயெல்லாம் எங்கேயென்றார்
கத்தரிக்காய்காம்பை ஆய்ந்துதன்றாய்
கொத்தவரைக்காயோடே கொட்டிக்கொண்டார்
வெண்டைக்காய்வெள்ளரிக் காயுந்தின்றார்
சுண்டக்காய்சுரக்காய் களையும்உண்டார்
பச்சைபாவற்காய் பலாக்காயுந்தின்றார்
மொச்சைக்காய் முருங்கக்காயுமுண்டார்
கதலிக்காயைதானோடேதின்றார் கந்தமூலாதிகளையுமுண்டார்
நிலக்கடலையை தோலோடேயுண்டார்
பலகுப்பலை கண்ணாலேகண்டார்
கட்டிமாம்மழத்தின் கிட்டேசென்றார்
கொட்டையோடேவாரிக் கொட்டிக்கொண்டார்
மொந்தன்பழத்தை தோடோடேதின்றார்
முத்ததேங்காயை முடியோடேஉண்டார்
பச்சகாடன்பழத்தையும்புசித்தார் உச்சிதக்கனியெல்லாம்ஒழித்தார்
சாதபலன்களையும்புசித்தார் தாகம்தாகமென்று துடித்தார்
குடம்குடமாய்தயிருகளேன் ஆடம்ஆடமாய்ப்பாலுகளேன்
கடகடென்றவர்தான்குடித்தார் கலீரென்றுகைகொட்டிசிரித்தார்
தைலாச்சியதோணியைக்கண்டார் தாவியதிலேபோய்நீந்தியுண்டார்
நீர்மோர்பானகத் தையுங்குடித்தார்
ஊர்அகிழ்தூர வெல்லாந்துடைத்தார்
பொற்றும்பரையை வற்றடித்தார்
தெப்பகுளத் தண்ணியுந்துடைத்தார்
ஏரிதடாகநீரையும்உண்டார் நகரிஎல்லைசுற்றிச்சென்றார்
உற்றார்ஊராரிதையறிந்தார் ஒகோஅதிசயமிதென்றழைத்தார்
பலதினுசாக பேசிக்கொண்டார்
பார்த்தோரெல்லாரும் பிரமித்துநின்றார்
கூட்டமத்தியில் நின்றுகுதித்தார்

கொண்டாவதேனும்      தின்னவென்றுரைத்தார்
சிங்காரதோட்டத்திலும்      நுழைந்தார்
தொங்குந்தேனடை      யெல்லாம்பிழிந்தார்
குருத்துரித்துரளை த்தடைத்தார்      கொழுந்துபிஞ்சையும்புசித்தார்
செடிகொடிகாய்களையும்பறித்தார்      சருகுதழைகளோடுபுசித்தார்
பத்திரிபாக்கேலத்      தையும்பறித்தார்
வெற்றிலைவாழிலை      யோடுபுசித்தார்
நெய்விட்டவன்னிபோ      லாகுதென்று
மெய்பசியாலிதோ      போகுதென்றார்
வீடுகள்தோறும்      புகுந்துஉண்டார்
வெள்ளிமலைபோல்வளர்      தண்டுலத்தைக்கண்டார்
ஈர்க்கஞ்சம்பா அரிசியீதென்று      இருந்திடம்தெரியாமலுண்டார்
முத்துச்சம்பா      அரிசியீதென்றார்
மூட்டைமூட்டையாக      போட்டுக்கொண்டார்
சத்துமா அவலையும்புசித்தார்      சர்க்கரைவெல்லங்களையுமொழித்தார்
திரட்டுப்பால்போளை      போய்க்கண்டார்
உருட்டியுருட்டி      போட்டுக்கொண்டார்
பருப்புவகைகளையுந்தின்றார்      எரிப்புபொடிகளையும்உண்டார்
உப்புபுளிமுள      காயும்உண்டார்
கைப்புத்துவர்ப்      பெல்லாத்தையும்தின்றார்
சீராமுளகுபெருங்காயம்      சதுர்த்தாளுக்கியவெங்காயம்
தொம்பைகளில்      வாரிக்கொட்டிக்கொட்டிருக்க
அம்பாரியாயெங்கும்      போட்டிருக்க
பலசரக்கோதையும்புசித்த ர்      பானைசட்டிக்குதுரையுமுடைத்தார்
நாலாபண்டத்தையுந்      தின்றுவிட்டார்
நவதானியச்சேரைபோய்      புன்னிவிட்டார்
உளுந்துதுவரைகளையுமுண்டார்      உமிநொய்தவிடுகளையுந்தின்றார்
புண்ணாக்கைபாரை      பாரையாயுண்டார்
புளியங்கொட்டையை      வாரித்தின்றார்
கடுகுவெந்தயங்களையுமுண்டார்      காருமணிகோதும்பையுந்தின்றார்
கொள்ளுக்கம்பு      கேழ்வரகுமுண்டார்
எள்ளுவரகுசோளத்      தையுந்தின்றார்
நெல்லிலும்லக்ஷம்கலம்புசித்தார்      நிற்கலையேக்ஷுத்தென்றுரைத்தார்
இன்னம்பசிக்குதே      யென்றிரைந்தார்
இருட்டிடுக்கெங்      கிலும்நுழைந்தார்

களையினாலேகீழேவிழுந்தார்கள்வழி போனவுடனெழுந்திருந்தார்
சிபாமளிசமுகத்தில்பறந்தார் சாதம்சாதமென்றுஇரைந்தார்
க்ஷூத்தென்றசொல்லை சுவைஅறிந்தாள்
சோரீயவெட்கி தலைகுனிந்தாள்
மாப்பிள்ளைசகா அதையறிந்தாள்
நயம்புமொழிகள் சொல்லத்துணிந்தார்
பெருமான்முன்னேநீ ரேன்வந்தீரென்றார்
பெருமைமொழியேன் விண்டீரென்றார்
இப்படிசோதனைஆகுதென்றார் எந்தனுடல்நொந்துபோகுதென்றார்
கூழேனும்குத்து கொண்டாருமென்றார்
நீரேனும்இத்தனை தாருமென்றார்
ஏதேனும்ஓர்வழிபாருமென்றார்எப்படியேனும்என்பசிதீருமென்றாள்
பிறந்தாத்துசெப்பியும் புடுங்கள்கேட்டாள்
பூந்தாத்துபூதத்தின்வாயி லகப்பட்டாள்
ஸ்திரீரத்னசிந்தாமணிபயந்தாள் சிவபக்தரென்றுரொம்பபயந்தாள்
ஏச்சுபேச்சுகளையுங் கேட்டுக்கொண்டாள்
ஈசர்முன்போய்பொம்மை போலேநின்றாள்
எங்கும்நிறைந்தோரிதையறிந்தார் ஏதுமறியாதபோல்மொழிந்தார்
உண்டவன்ஏன்இன்னம் வல்லையென்றார்
உன்பண்டப்பாதுகார்க்கி றானோவென்றார்
ஆண்டியென்றெனைவெறுத் தானோவென்றார்
ஆஸ்திகாரியென்றனை யடுத்தானோவென்றார்
இருக்கட்டும்அவன்மகா தோஷியென்றார்
எந்நாளும்நீதானேவைத்து போஷியென்றார்
கேலிமொழியை கௌரிகேட்டாள்
கெங்காதராகாரென்று கும்பிட்டாள்
சச்சிதாநந்தாசரணமென்றாள் சர்வலோகேசாசரணமென்றாள்
தீனதயாளோசரணமென்றார் தேவாதிதேவாசரணமென்றாள்
உன்மகிமையறியாமலிடறு உதாசினம்செய்ததுரொம்பஉண்டு
அடியாள்செய்தஅபசாரம்பொறுத் துச்சாரமாகவேகிரஹித்து
குற்றம்வைத்தெந்தனைதள்ளாமல் கோபமாயெண்ணிக்கொள்ளாமல்
குண்டோதரன்பசி தீர்க்கவேணும்
கொலுவிலும்எந்தனைச் சேர்க்கவேணும்
சேர்க்கவேணும்சிவசங்கரரேஎன்றாள் பார்த்தஅழகிபடிந்துநின்று
அந்தவேளையில்கணமும்வந்தார் அகோபசிபசியென்றுபறந்தார்

அன்பர்துன்பத்தைஹரார்பார்த்தார் ஆனந்தவனவாசியைநினைத்தார்
அன்னபூரணி அதையறிந்தாள்
அஸ்யவர்னமத்திவிட் டெழுந்திருந்தாள்
தும்பைநிறமாய் வெளுத்துக்கொண்டாள்
ததிபால்வெண்ணெய் பிசறிக்கொண்டாள்
சாப்பாட்டாசாமிக்கு முன்னேசென்றாள்
அன்னசாகரம்போல் குழயாகின்றாள்
பசிப்பேய்கொண்டோ ரிதையறிந்தார்
பறந்தின்மேலே போய்விழுந்தார்
திருப்தியாய்தொந்திசரியஉண்டார் தீர்த்தம்தீர்த்தம்தீர்த்தமென்றார்
ஆரணிபாகனதைக்கேட்டார் நீரணமங்கையரைக்கூப்பிட்டார்
தேணியில்வாழ்மாதரையறிந்தாள் வேகவதியாகிஓடிவந்தாள்
குண்டோதரன்நின்றுமரித்தார் குகைபோல்வாய்திறந்துகுடித்தார்
வைகைநதிமணலிற்படுத்தார் விடாயாறிவந்துகுடைபிடித்தார்
அற்புதலீலையை அமராள்பார்த்தார் கற்பகமலர்களைவருஷித்தார்
எண்ணேழுதேசத்து மன்னருங்கண்டார்
இறைபொருள்வைத்து எதிரேநின்றார்
பட்டணத்தோர்கள் பார்த்துபயந்தார்
பாணிகட்டிவாய் பொத்தியிருந்தார்
துரையம்மாள்வீரவரப்படங்கி தோகைமயில்போல்நின்றுளொடுங்கி
முத்தொழில்வல்லோன் பார்த்துசிரித்தார்
எத்தனையோநான்கற்றவ னென்றுரைத்தார்
அஷ்டலட்சுமிகளையுமழைத்தார் அசையாதிங்கிரென்றுக்யாபித்தார்
இரத்னமயமானமண்டபத்தில் முத்தாசனத்தில்மெத்தைவிரித்து
இந்திரன்போலேமனமகிழ்ந்தார் சந்திரவம்சராஜாத்தியுடனிருந்தார்
மதுராம்பாளுடன்கூடிக்கொண்டு மந்திராலோசனைகேட்டுக்கொண்டு
சிறப்பாய்செங்கோல் செலுத்திவாழ்ந்தாள்
செல்வமீனாக்ஷிபிரியாள் தினமுந்தாழ்ந்தாள்

கக-விருத்தம்.

பூதம்புகுந்து போனபின்பு பூர்வம்போல் பொருளை
யெல்லாம் சேகரித்தார்
கதம்ப குசும்பஞ்சூடி கலகலென்ன கல்யாணிக்
கலங்க ரித்தார்
பதமான கம்பளம் பத்தியாய்ப் பந்தலிலே
பார்க்கஜோ ராய்விரித்தார்
நாதநாட் டியங்களுடன் நாரியர்கள் நலங்கிட
வந்து அழைத்தார்.

உஎ. கீர்த்தனம்-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

மருமக துரையே நீர்வாரும்
மனையாளுடன் நலங்குட்காரும் (மருமக)

அநுபல்லவி.

சிறுத்தஇடை அழகியுடன்சேரும்
செந்தாமரை நயனியை
எடுத்துமடிமேல்வைத்தழகுபாரும்
செல்வக்குமாரிஒரு சொல்லும்பொறுக்கமாட்டாள்
க்ஷணங்கூட உமக்கொரு சிகிச்சைகள்செய்யமாட்டாள் (ம)

சரணங்கள்.

வாய்திறவாமயிலது எங்கள்பெண்சாதி
மகராஜரே நீரவளை
என்னசொன்னாலும் எதிர்த்துபேசத்தெரியாது
எத்தனை தபசுகள் செய்திருந்தீரோமுன்னே
பத்தினிவாய்தானிப்போ பத்துதரம்நான்சொன்னேன் (ம)

குடித்தினமுறை தெரிந்தகுணசாலி
குலசேகரபாண்டியர்
குலம்விளங்க வந்தராஜியபரிபாபாலி
முந்திபாரியஆலோ சனைகளெல்லாந்தெரியும்
மீனாக்ஷிபிரியாளுக்காக லீலைசெய்துநெரியும் (ம)

உஅ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்பிலாவல்-ரூபகம்.

பல்லவி.

நலங்கிடவாரும் என்நாதா
நவரத்நபந்தலில் என்னுடவிநோதா (நல)

அநுபல்லவி.

பாலப்பருவம் கொண்டசாமி
சதுர்சாகரத்துக்கு உட்பட்டபூமி
தந்தகாஞ்சனமாலை நேமி-பார்க்க
ஆசைப்படுகிருள் பிரபுவேதங்கள்மாமி (நல)

சரணங்கள்.

தங்கள்மனம்போல் நடப்பேன்
தாய்தந்தைகுருதெய்வம் பதியாய்ப்பாவிப்பேன்

நித்தியம்பக்தியாய் சேவிப்பேன்
உற்றசேதியுமக்கு மெத்தையில்வந்துரைப்பேன் நல

சந்தனம்புனுகு பூசுகிறேன்
சாமரம்விசிறி தாசிபோல்வீசுகிறேன்
பெருமையில்லாமலே பேசுகிறேன்
பெரியோர்கள்வந்தால் சிகிஷைநான்செய்கிறேன் நல

சயனகிரஹத்தில் வருவேன்
சந்தோஷமாய்சாமி போலேசேருவேன்
புசிக்கப்பொருள் செய்துதருவேன்
பஜிக்கும்மீனாக்ஷிபிரியாள் பவ்ங்களை மறவேன் நல

---

இ-ம்-சங்கராபரணம்.

சொர்ணமயபாத்திரத்தில் சுபகரசாமான்கள்வைத்து
மாப்பிள்ளையைமகிழ்ந்தழைத்து மணைமேலேவைத்தாள்பூரித்து
காஞ்சநயனிகரத்தால் மஞ்சளைமகிழ்ந்தெடுத்தாள்
சாதுரியமாய்நலங்கிசைத்தாள் சகலபேர்களும்சிலாகித்தாள்
அங்கவஸ்திரத்தைதொட்டாள் அவரண்டையிலேஎடுத்துப்போட்
திவ்யகந்தம்பூசிவிட்டாள் வெகுதீர்த்தமாய்திலகமிட்டாள்[டாள்
சுகந்தஜாதிஅரும்பெடுத்தாள் சுகமாகசரம்தொடுத்தாள்
மகாதேவர்வேணியையடுத்தாள் மீனாட்சிபிரியாள்மகிழமுடித்தாள்

---

உக. கீர்த்தனம்-இ-ம்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

நலங்கிடுகிறாள் மீனலோசனி நாதருடன்வந்துகூட
நாரதரும்நல்ல கானங்களைப்பாட
நானாவிததாளம்போட நலங்

அநுபல்லவி.

நீலவர்ணிதிவ்ய மஞ்சளைஎடுத்து
நித்யானந்தரைக் குறித்து
பூரித்துபூபதி பாதத்தில்யிட்டாள்
புஷ்பஹாரம்மாரில் போட்டாள் நலங்

ஸ்வர்ணபன்னீருசொம்பை ஜோதியெடுத்தாள்
சுந்தரேசர்மேலே தெளித்தாள்
வாசனைகெந்த பரிமளம்பூசினாள்
வணங்கிசாமரம் வீசினாள் நல

விஸ்தாரமாய்நீண்ட நெற்றியைத்தொட்டாள்
கஸ்தூரிதிலகங்க ளிட்டாள்
மல்லிகையைசெல்வி கையாலேயெடுத்தாள்
மஹாதேவர்வேணி யிலேமுடித்தாள் நல

தங்கத்தாம்பாளம் தகதகென்றெடுத்தாள்
தாம்பூலங்களுடன் கொடுத்தாள்
முன்னாலேநன்னாக பத்தியும்படித்தாள்
மீனாக்ஷியாள்மன தைசதாபிடித்தாள் நல

## க. சீசபத்தியம்.

என்பிராணராஜரே ஈரேழுலகவாசரே
மனைவிநான்சொலுமொழியை மகிழ்ந்துகேளும்
பதியேதெய்வமென்றெண்ணி பத்திபாய்பூசைபண்ணி
நித்தியமும்நானும்மைச் சேவிக்கவேணும்
கோடிமன்மதரூப கூடிஎன்னாலானமட்டும்
நாடியேபணிவிடை நான்நடத்துகிறேன்
அதிலேசிலஅபசாரம் ஆயிரம்நான்செய்தாலும்
உபசாரமாகவே தாம்ரக்ஷித்து

குற்றங்களைத்தனை நான்செய்தபோதும்
சித்தத்தில்வைக்காமல் க்ஷமித்துக்காரும்
பிராணசகாபோல என்னை அணைந்து ஆளும்

## உ. இதுவுமது.

மலையத்துவஜன்சுதனி மங்களமிருதுவசனி
செங்கமலநயனியே செல்விகேளாய்
எந்நேரமும்எந்தன் வார்த்தைதவறாமலே
சொன்னபடிசுகமாய் நீநடந்தாயானால்
சந்திரனைக்கண்ட சாகரம்போலபொங்கிநான்
மாதுவெகுசாதுவென்று மனையில்வாழ்வேன்
தேவரம்பையானாலும் தேடிஇங்கேவந்தாலும்
தேவிஎனக்காவியென்று திரும்பிப்பாரேன்

சந்த்ரகாந்தமண்டப மஞ்சத்தில்நாடி
சந்தோஷமாய் சரசம்செய்துகூடி
பஞ்சவர்னக்கிளியே உன்னைக்கொஞ்சிவசனிப்பேன்

---

நலங்கு வர்ணமெட்டு.

சங்கரிஇங்கே சந்தோஷமாய்வாடி
சமமாயிருந்தாசனத்தில் எந்தன்முன்னிரடி
பரிகாசம்செய்துபாங்கி மார்களத்தைக்கண்டார்
பாலயுவதியையங்கே விடமாட்டோமென்றார்
தோழிப்பெண்களே எனக்கொருஉதவிசெய்
உங்கள் துரைசானியை இங்கேகொணர்ந்துவை
இஷ்டமுண்டானுலிங்கே வந்துமலர்சூடும்
இவள்சமுகம்பார்த்திசைந் தால்கரம்மேல்போடும்
சரிகைபீதாம்பர தலப்பைபிடித்திழுத்தார்
சமீபத்தில்வைத்துசகிமாரைப் பாரென்றுநகைத்தார்
மஞ்சள்குங்குமகெந்த தாம்பூலங்களைஎடுத்தார்
மதுரைமீனுட்சிபிரியாள் மகிழ்ந்திடபூரித்தாள்

கூ0. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

கர்ணுமிர்தபாக்ஷி-கீர்த்தோஷி
நலங்கிடுகிறேன் நானுக்கு
தருணத்தில் மோடிசெய்யாமல்
தாடிகர சரணம்நேக்கு. கர்ணு

அநுபல்லவி.

திருக்கழுத்தில் திவ்யகந்தம்
பன்னீர்பரிமளங்கள் பூசுகிறேன்
தேனேஉன்னைத் தேடிதினம்
கூடிகுலாவிப் போகிறேன் கர்ணு

சரணங்கள்.

விசாலலாடத்தைநேர்
நிமிர்ந்துகாட்டடிநீயெனக்கு
விசித்திரமான திலகம்
வைக்குறேன் நானுனக்கு கர்ணு

மீனாக்ஷிபிரியாட்காகளன்
முன்னாலேவந்து உட்காரு
மெதுவாய்இமைகளை நீக்கி
கடைக்கண்ணாலே என்னைப்பாரு கர்ணா

## ௬௧. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-சாபுதாளம்.

பல்லவி.

சுந்தரசாமிசொகுசாய்நலங்கிட்டார்
சுந்தரிபயந்தவள்போல்அபி
நயம்செய்தவயவங்காட்ட சுந்தர

அநுபல்லவி.

இந்திராதிகளைப்புடைத் ததிப்புஜமென்றுகூசினார்
என்னையுஞ்சாடுமிந்த கெந்தகப்பணமென்றுபூசினார் சு

சரணங்கள்.

சன்னமஞ்சளாலேசாணத்தை லயனையலங்கரித்தார்
சந்திரகாந்தமுகத்தில் குங்குமம்கோணமல்வைத்தார் சு

நீண்டநீலவேணியில் செண்பகமலர்ஒரும்பசூட்டினார்
நேத்திராகந்திக்கு நேராககண்ணாடிகாட்டினார் சு

மெதுவாய்இளந்துளிர்மணந் துணையோடேமடியிலிதார்
மீனாக்ஷிபிரியாள்மனம்போல் வாழென்றுசீர்வாதம்செய்தார் சு

## ௬௨. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி.

செண்பக செண்டெடுத்தார்
மீனாக்ஷிசுந்தரேசாள ஒரும்போர்போலடித்தார்

அநுபல்லவி.

அன்பர்கள் தெரிசிக்க
ஆகாசத்திலே அமராள்பூவருஷிக்க
கைலையைவிட்டு கதம்பங்காட்டுக்குள்ளே
கனதபசிகாஞ்சன மாலைவீட்டுக்குள்ளே ()

சரணங்கள்.

நாகஸ்வரம் கோஷிக்க
நாரணர்நால்முகர் நன்னீர்தூரிபோஷிக்க
பதக்கம்பணிகள் பளபளென்றசைந்தாட
பரமர்முனிபவானி பின்வாங்காமலேஜாட ()

படையென்று பலர்பதுங்க
பக்கத்திலுலாவும் பாங்கிபெண்களும்மொதுங்க
ஆசைஜாடையாலறிந் தல்லென்றுபின்வந்துசுத்த
அந்தணர்பொன்னக்ஷ தைகள்அள்ளிதூத்த ()
சர்வலோகமும் சிலாகிக்க
சாதுரியமாயெறிந் தேந்துவதையூகிக்க
மதுரைமீனாக்ஷிபிரி யாட்குக்கவிசேர
மதிவம்சமண்ணிம் மகாவிநோதஜோர ()

---

கூ௨. கீர்த்தனம்-இ-ம்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

பந்தாடினர் பரமசுந்தரர்
பாண்டியராஜன் பெண்ணோடே
பட்டணத்தார்கரம் கொட்டிச்சிரிக்க
பதினெட்டுவாத்தியமடிக்கபூ பந்

அநுபல்லவி.

சந்திரசேகரர் சிந்தைபூரித்து
செந்தாமரை மலரைஎடுத்து
ஓங்கிஉமையவள் நேராகஅடித்தார்
தாங்கிதடா தகைப்பிடித்தார் ப

சரணம்.

பக்கத்தில்தோழர் பரிகாசம்செய்ய
பவானிபூபந்தலை விட்டெறிய
நெற்றிகள்வேர்த்து நிலத்திலேசொரிய
முத்தாஹாரம் மாரில்பதிய ப
பத்தங்குலியிலும் முத்திரைமோதிரம்
சுற்றியெங்கும் காந்திஜொலிக்க
பத்தினியோடவர் ரத்தினபந்தலில்
பக்தர்மகிழ்ந்து பூரிக்க ப
வெட்கத்துடன்வேத வல்லியைசொக்கரும்
சற்றேகடைக்கண்ணால் கண்டு
வாச்சுதுமீனாட்சி பிரியாள்தாய்கமக்கென்று
பூச்சென் டிருகையில்கொண்டு ப

௩௪. கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

சிறப்புடன்மீனும்பிகைமலர் செண்டாலேயடித்தாள்
கரப்புண்டகைலாசநாதர்மேல்-வெகு சிறப்

அநுபல்லவி.

சரஸ்வதிசபையில்நின்று பாடியேகளித்தாள்
சனகாதிமகாயோகிகள் கூடியேகுதித்தாள்
வஜ்ரமணிவளேகுலுங்க கச்சிஆரம்அலங்க
பச்சைவர்ணபந்தலிலே உச்சிதமாகயிருந்து சி

சரணங்கள்.

அடிக்கடிபூபந்தெடுத்து அனேவரும்கொடுத்தார்
ஆதிசிவன்வாங்கிஜோதி நேராகஅடித்தார்
ஈஸ்வரிமனம்பூரித்து இருகையாலேந்திப்பிடித்து
கறுத்தமேனிசிறுத்தஇடையில்தரித்தபீதாம்பரம்துவள சி

முப்பத்துமுக்கோடிதேவர் புஷ்பங்கள்பொழிந்தார்
அற்புதமாய்பந்தைசிவப்ர காசர்மேலெறிந்தாள்
மண்டலமெல்லாம்புகழ கண்டபேர்மனம்மகிழ
அண்டர்நாயகியும் அதிசுந்தரபாண்டியதுரைமேல் சி

நாகரீகபந்துநடு மத்தியிலிருக்க
நாதரும்தேவியும்வகை நாடியேஎடுக்க
செங்கமலத்தைகிரகித்தாள் தன்கணவரையும்செயித்தாள்
மங்கையர்கூடிசிரித்தாள் மீனுக்ஷிபிரியாள்பூரித்தாள் சி

௩௫. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகம்.

பல்லவி.

ஆடினளற்புதமாய்
அன்பர்மகிழ மீனும்பாள்மலர்செண்டாடினர்

அநுபல்லவி.

கோடிசூரிய உதயம்போல்காந்தி
கோபங்களற்ற குணநல்லசாந்தி
ஈசரெறியும்பந்தை கையிலேந்தி
தாசரிடத்திலதிபிரியபிராந்தி ஆடி

சரணங்கள்.

புத்தியோர்யுக்தியை பத்திக்கொண்டாட
மத்தியில்மாதர் வெண்சாமரம்போட

சுத்திவரசகிமார் நின்றுபாட
சக்தியுஞ்சபாபதி யுடனேகூட ஆடி

பட்டம்நெற்றியில் பிரகாசமாய்மின்ன
கட்டிதரித்த சுகுமாரப்பெண்ணை
இஷ்டமீனாட்சிபிரியாதிருகண்ணை
அஷ்டதிக்கையும் ஜெயித்தஅன்னைநன்று ஆடி

கஉ-விருத்தம்.

செண்டாடி கைசிரிட்டு தென்மதுரை தம்பதி
ஸ்தானம் முடித்தார்
கொண்டாடி வளர்வன்னியை கிரகம்விட் டேகாதேயென்
றோர்மொழி கொடுத்தார்
வண்டாடி விரிந்திடா அரும்பெடுத்து வாகனம்
வலுவர்ப் ஜோடித்தார்
குண்டாடி குலுங்குகின்ற சிவிகை மேலேறி
கொட்டு மேளமடித்தார்.

நகூ. கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

செல்வமீனும்பிகா மெல்லபதியுடன்
பல்லாக்கூர் கோலம்வாராள்
நல்லமதுரை நகரியதிர செல்வ

அநுபல்லவி.

உல்லாசமாக ஒருகோடிசுராள்நராள்
சூழ்ந்துமே ஜோராய்நடக்க
குல்லாக்கண்டிகடுக் கன் அருளுடன்
வில்லாள் விருதெடுக்க
சில்லரைஜவான் ஜெனங்களை முடுக்க
நல்லரம்பையர் நடனக்கும்மியடிக்க செ

சரணம்.

பச்சைநீலம்சிவப் புச்சிதமான
உயர்ந்தபாணங்கள்விட
இச்சேர்வைக்கும் கண்டதில்லையென்று
எல்லோரும்சந்தோஷப்பட
கச்சையாட கற்புடையோரெல்லாங்கூட
கொச்சையில்லாமல் குதூஹலமாய்பாட செ

பந்திபந்தியாம் பதினெட்டுவாத்தியம்
முந்தியெங்கும்அதிர

பச்சைமஞ்சள்பானீ யங்கள்பன்னீர்களே
பந்துபிரியாள் சிதற
குன்றுமுனிவ ரெல்லாம்மறைத்தற
கோநெய்தீவட்டி கூட்டங்களுக்கெதிர செ

ஆரம்தாண்டா ஆபரணுதிகளே
அபாரமாய்வாரிப்பூண்டு
அந்தணர்மந்திரத் தோடய்யன் தந்த
தாம்பூலந் தரித்துக்கொண்டு
செங்கமலக்சடை யாலேஅடிக்கடி
சுந்திரரைக்கண்டுசற்றேசருகசெவைபடுத்தித்திண்டு செ

பத்துநூறுயிரம் வைத்தகுழையால்
அதிரவிட பீரங்கி
பாணத்தைக்கண்டு மிறண்டவன்போல்மோகித்
துப்பதிமின் ஒதுங்கி
தங்கசரிகைரவிக்கைமேல் தகதகென் றுமின்னவங்கி
தமக்குசாமான்தரும் சிரகத்துக்குகிரகம்தங்கி செ

கெந்தர்வாள்கல்லிழைத்த கனகதண்டி
கைகொம்புசுமக்க
அந்தரத்திலே கெந்தமாரிகளாலே
ஆடைகொஞ்சம் நமுக்க
வீதியிலேதோழிமார்களெல்லாம் வந்துசிரம்நிமிர்க்க
வெளியிடமீனுக்ஷிபிரி யாளைவைத்துதமுக்க செ

கரு-விருத்தம்.

உச்சிதப்ர வேசமாய் உடனே உகந்தாசீர்
வாதங்கள் செய்தாள்
மெச்சு வித்வாம்சாள் மகிழ்ந்திட வெகுமானம்
வேண்டியது வாரியீந்தாள்
சச்சிதாநந்த ருடன்கிரம மாக்கியஹதர்மம் சகலமும்
நடத்தி ஓய்ந்தாள்
அச்சுதர் அணையாளை அர்ச்சிக்க அன்றேயத்தனம்
செய்தரும்பு கொய்தாள்.

---

வரலட்சுமி மங்களம்.

---

மீனுட்சியம்மனும் வரலக்ஷ்மியம்மனே
அர்ச்சிக்கவேணுமென்று ஆசைகொண்டு

புதுசாகமண்டபம் பொன்னாலேகால்நிறுத்தி
நன்னாகளங்கிலும் ஸ்ரீங்காரம்செய்தாள்

(ஜெயமங்களம் சுபமங்களம்)

பார்க்கஅழகாகவே தீர்க்கமாய்மதிலெங்கிலும்
விசித்திரமாகநல்ல சித்ரமெழுதி
முத்துசரங்கள்தொடுத்து ரத்தனங்களாலேஜோடித்து
சுற்றிலும்ஸ்ரீங்கார பிம்பம்பதித்தாள் ஜெ

மாவெலேதோரணம் வரிசைவாழைகமுகு
இருசாரியாய்வீதி யெங்கும்நிறைத்து
குலேயுடனேமாங்காயும் தேங்காய்பலாக்காயும்
பங்காகபந்தலெங்கும் பழங்களிசைத்தாள் ஜெ

மல்லிகைமலரெடுத்து முல்லேயுடனேதொடுத்து
மங்களமாய்தொங்களங்கும் சரங்களிசைத்து
நேமமாய்விரதஅநுஷ் டானங்களே முடித்து
சியாமளவர்ணிஸ்நானம் செய்துவந்தாள் ஜெ

இரத்னதீபம்ஏற்றிவைத்து பத்மகோலங்களிட்டு
பணிக்காகபஞ்சவர்ண பொடிகள்போட்டு
சொர்ணசிம்மாசனத்தில் ஜோதியாய்பிரதமைவைத்து
அன்புடனேஹரிவல்லமைக் கலங்கரித்தாள் ஜெ

ஆயிரம்மாதர்கள் மங்களமென்றுபாட
அளவற்றவாத்திய மதிர்வெடிகள்போட
பதிவிரதைநோம்புகள் நூர்க்கிருளென்றுபல
பிராமணாளெல்லவரும் வந்துகூட ஜெ

அச்சுதனார்வக்ஷஸ்தலத்திலே விளங்குகின்ற
லக்ஷ்மியைதியானித்து பிரார்த்தித்துஅம்மன்
கெந்தபுஷ்பாக்ஷதை குங்குமங்களேக்கொடுத்து
சரணத்தில்சஹஸ்திரார்ச் சனைகள்செய்தாள் ஜெ

விதவிதமாப்பக்ஷியங்கள் விசித்திரமாய்கொணர்ந்துவைத்து
அணியணியாய்கனிகளா யிரம்படைத்து
தூபதீபங்கொடுத்து பொற்பாததிருவடிக்கு
அற்புதமாய்கற்பூர ஹாரத்திஎடுத்தாள் ஜெ

மௌனமாயிருந்துமகா லக்ஷ்மியைபூசைசெய்து
மாதாவும்மகளுமாய் ஒய்ந்துமனது

பெருமையில்லாமலே பெரியோரையுபசரித்து
வாயனதானம் வாரிவழங்கினள்

லக்ஷம்பூசுரர்கட்கு போஜனங்கள்செய்துவைத்து
தெக்ஷணைகள் திருப்தி யாகவேகொடுத்து
சுக்ரவாரம்தவறும லித்தப்படிபூசைசெய்து
மீனுக்ஷிபிரியாள்மகிழ வாழ்ந்திருந்தாள்

---

நஎ கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

மங்களம் ஜெயமங்களம் ஸ்ரீமதுரைமீனுட்சிக்கு
மங்களம் சுபமங்களம்

அநுபல்லவி.

பங்கஜலோசனிக்கு பாபவிமோசனிக்கு
சாதுரியவசனிக்கு சர்க்கரான்னபோஜனிக்கு மங்

சரணங்கள்.

ஆனிவிருத்திரஹிதைக்கு அதிபதிவிரதைக்கு
அன்பர்பந்தபாதைக்கு அவிழ்தமானபோதைக்கு மங்

அரசர்போல்வாழும்ஹாரிக்கு அழியாஅஸ்திரதாரிக்கு
மான்வேட்டையாடும்வீரிக்கு மதகஜவாரிக்கு மங்

காஞ்சனமாலைகண்ணுட்கு கருநீலவர்ணபெண்ணுட்கு
மதுராபுரிமண்ணுட்கு மீனுட்சிபிரியாள்எண்ணுட்கு மங்

திருக்கல்யாணக்கீர்த்தனே

முற்றிற்று.

---

ஆக கீர்த்தனே-நஎ. ஆக-விருத்தம்-கஈ-கொம்பி-உ.

சிவமயம்.

## ஸ்ரீமத்தடாதகாதேவி

# பள்ளியறை கீர்த்தனை.

க-விருத்தம்.

தினம்திரு நாள்நடத்தி பண்டிகை கண்டுகொண்
டாடிக்கொண் டிருந்தாள்
வனவாசிக ளும்வாசல் விட்டுவில காமலே
மலேம றைந்தாள்
மீனுள்ருது சோபனமாய் மன்னன்மரு வும்பருவத்
தோட வளர்ந்தாள்
ஆனஅன்னை அதையறிந்து அன்றேதிரக்ஷி செய்து
சீரெடுத் தலர்ந்தாள்.

## உடமைச் சீர்கொடுத்த கும்மி.

சாயகுருச்சிகளாம் மீனுட்சிக்கு
சயனக்கமிச்சுகளாம்
சந்திரகுலத்தரசி மீனுட்சிக்கு
சாந்திக்குச் சீரெடுத்தாள்

பனாரஸ்பட்டுகளாம்-மீனுட்சிக்கு
பச்சைசுருட்சுகளாம்
பாண்டியரிட பாரி-மீனுட்சிக்கு
வேண்டியசீர்கொடுத்தாள்

பொன்னுல்சரிகைகளாம்-மீனுட்சிக்கு
புதுரவிக்கைகளாம்
புண்ணியவதிமகிழ்ந்து-மீனுட்சிக்கு
பூரித்துமேகொடுத்தாள்

ஸ்ரீங்காரபீலிகளாம்-மீனுட்சிக்கு
தங்கநாற்காலிகளாம்
சீமையெல்லாம்ஜெயித்த-மீனுட்சிக்கு
சீதனமாய்க்கொடுத்தாள்

வெள்ளிபெட்டிகளாம்-மீனுட்சிக்கு
விசித்திரபெட்டிகளாம்
விவேககுணசம்பன்னி-மீனுட்சிக்கு
வெகுவிதமாய்க்கொடுத்தாள்

முத்துக்கொண்டைகளாம்-மீனாட்சிக்கு
ரத்நதண்டைகளாம்
மோஹனாவதார-மீனாட்சிக்கு
முச்சீர்வைத்துக்கொடுத்தாள்

தங்கத்தோடாவாம்-மீனாட்சிக்கு
திங்கப்போடாவாம்
தாயார்மனமகிழ்ந்து-மீனாட்சிக்கு
தானேரொம்பக்கொடுத்தாள்

காப்புகொலுசுகளாம்-மீனாட்சிக்கு
செகப்புதினுசுகளாம்
ஸ்ரீங்காரமாக-மீனாட்சிக்கு
செய்துரொம்பக்கொடுத்தாள்

அற்புதவங்கிகளாம்
ஆயிரம்பாங்கிகளாம்
அன்னைமனமகிழ்ந்து-மீனாட்சிக்கு
உன்னிதமாய்க்கொடுத்தாள்

காரைகண்டிகளாம்-மீனாட்சிக்கு
ஏறப்பொன்வண்டிகளாம்
காஞ்சனமாலையப்போ-மீனாட்சிக்கு
கணிச்சமாகக்கொடுத்தாள்

நட்சத்திரமாலைகளாம்-மீனாட்சிக்கு
நவரத்னஓலைகளாம்
நாகரீகமாக-மீனாட்சிக்கு
நாலாவிதம்கொடுத்தாள்

வைரமுருகுகளாம்-மீனாட்சிக்கு
வாளித்திருகுகளாம்
வியாபாரியிடத்தில்-மீனாட்சிக்கு
வாங்கிரொம்பக்கொடுத்தாள்

சூரத்துமுத்துகளாம்
சுழித்தநத்துகளாம்
சூரசேனன்சுதனி-மீனாட்சிக்கு
சொந்தமாகக்கொடுத்தாள்

அத்தர்பூசெண்டுகளாம்
மெத்தைகள்திண்டுகளாம்

சற்றிகெந்தம்விச-மீனாட்சிக்கு
நித்தநித்யம் கொடுத்தாள்
மாணிக்கபில்லாக்காம்-மீனாட்சிக்கு
ஆணிப்பொன்பல்லாக்காம்
மீனாக்ஷிபிரியாள்மகிழ-மீனாட்சிக்கு
மேலின்னமும் கொடுத்தாள்.

கதவுதிறக்கிற பாட்டு.

திங்கள்குலம்செழிக்க வந்தமீனாம்பிகைக்கு
சாந்திகல்யாணத்தை சிறப்பாகசெய்தார்
சாகரத்துக்குட்பட்டபேரெல்லாம் வந்துமேஒய்ந்தார்

இரத்னமணிகளாலே பள்ளியறைஜோடித்து
சித்ரமணிமஞ்சத்தைச் சிறப்பாயிசைத்தாள்
நல்லமுத்துசரத்தை யெடுத்துயரத்தொடுத்தாள்

உச்சிதமானஉள்ளுக் குயர்ந்தகுளோப்பைஏற்றி
நாலுபுறமும்நிலைக் கண்ணாடிபதித்தாள்
பார்க்கஉன்னிதமாகப் பஞ்சணைமெத்தைவிரித்தாள்

சுந்தரபாண்டியதுரையேன் செல்வத்தடாதகையேன்
சீக்கிரமாகமஞ்சத்தில் ஏற்றியேவைத்தார்
புரோகிதரும்பூரித்து மந்திரமுரைத்தார்

தங்கமயசங்கிலியை பெண்டுகள்பிடித்தசக்கி
உன்கணவனன்டையி லிரென்றோடியேவந்தார்
திவ்வியமங்களமாய் சங்கீதங்கள்பாடியிருந்தார்

அந்தவைபவகாட்சியை காஞ்சனமாலைகண்டு
அற்புதபள்ளியறையை சாற்றியேவிட்டாள்
அழகானபொன்சாவியாலே பூட்டுகள்போட்டாள்

திமிதிமெனதேவகோஷ வாத்தியங்களையடித்தார்
தேவியும்மஞ்சத்தைவிட்டு கீழேகுதித்தார்
தென்மதுரைஸ்ரீமான் கில்லென்றுபூசெண்டாலடித்தார்

பச்சைவாணியும்வெகு லெஜ்ஜையுடன்பயந்து
உச்சிதஸ்தம்பத்தின்கீழ் ஒளிந்துமிருந்தாள்
ஆதிஅச்சுதர்சகாகுணத்தை அறியவிருந்தாள்

பாலரானசுந்திரரும் லீலைசெய்யஆசைகொண்டு
நீலவேணியண்டையிலே நேரநடந்தார்
திவ்யகோலங்கொண்ட தேவியந்தஜாடையறிந்தார்

பாலையானயுவதியை வாரிஎடுத்தணைத்து
மஞ்சத்தின்மேலே மடியில்வைத்துமகிழ்ந்தார்
பின்புகொஞ்சியேகூடிக்குலாவி வஞ்சியிருந்தாள்

மல்லிகைமலரெடுத்து செல்விகூந்தலில்முடித்து
வாசனைபரிமளங்கள் பூசியிருந்தாள்
விஸ்வாசமாகவேகலந்து பேசியிருந்தாள்

சொர்ணபன்னீர்சொம்பை ஜோதிஜோராயெடுத்து
ஆதிநாதரங்கமெங்கும் அள்ளித்தெளித்தாள்
பதிபாதகமலத்தைப் பிடித்துபூரித்தாள்

திறப்பட்சயத்தைப்புஜித்து திவ்யதாம்பூலந்தரித்து
தேவியும்நாதரைவந்து சேவித்திருந்தாள்
திவ்யமெத்தைமேலே ஒத்துமையாய்நத்திஉகந்தாள்

புண்ணியகுமாரகியும் பூ.:தியுமாகக்கூடி
பொன்னூஞ்சலாடியே பூரித்துயிருந்தாள்
கரிகைதிண்டின்மீது சாய்ந்துசயனித்துமகிழ்ந்தாள்

மீனாட்சிபிரியாள்ஸ்துதிக்க மேளவாத்தியங்கோஷிக்க
நித்திரைநீங்கியே பர்த்தாபாதம்சேவித்தாள்
அம்பாள்நித்தியமுமிந்தப் படியாகவசித்தாள்

ஸ்ரீ தனக் கும் மி.

ஸ்ரீங்காரமானமீனம்பிகைக்கு மங்களத்திரட்சிசெய்தன்றைக்கு
பெண்களெல்லாரு மாய்கூடிமறுநாள்
பள்ளியறையிலே கொண்டுவிட்டாள்

மாப்பிள்ளைமஹாராஜர்கோபித்து மணக்கோலங்களெல்லாம்களைத்து
தேவிமுகத்தையும் பாராமலவர்
திரும்பிகோபித்துக் கொண்டிருந்தார்

குடுமிகுசுமத்தாலவிழ்த்தெரிந்தார் உத்தரியத்தைஉள்ளேயெறிந்தார்
கட்டிலின்கீழே கனககோபத்துடனவர்
முக்காடுபோட்டு முடங்கியிருந்தார்

பாண்டியன்பாலைஅன்றுபயந்து பாதவடிதனிலேபணிந்து
இத்தினம்நித்திரை செய்யலாமோ-ஜெக
நீசாஎழுந்திரு மென்றழைத்தாள்

ஆத்திரத்தோடேஎழுந்திருந்துசிவன் பாத்திரமில்லையென்றிரைந்து
மாத்திரைபொழுது நில்லாதடி
மதுராம்பாவெளியே போவென்றுரைத்தார்

என்துரையேயிப்போதங்களுக் கேதிந்தகோபங்கள்வந்திருக்கு
பத்தினியறிய சொன்னீரானால்
மனம்போலநடக்கிறே னென்றுரைத்தாள்

முச்சீர்உனக்கெடுத்தாளா வைச்சவரிசைகொடுத்தாளா
இச்சையில்லை எனக்குந்தன்மேலே
இங்கேநில்லாதே தாயண்டைபோடியென்றார்

அண்டாயில்லைசருவமில்லை ஆனைக்கால்போகணித்தானுமில்லை
குண்டானில்லை குடங்களில்லை
வெள்ளிகுத்துவிளக் குனக்கேண்டியில்லை

கட்டிலில்லைபுதுமெத்தையில்லை திண்டுதலையணைபோர்வையில்லை
மண்டலந்தனிலே கண்டதில்லையிந்த
மாமியாரைப்போல என்றிரைந்தார்

பூசும்புனுகுசவ்வாதுவைத்த பொன்னாலேபன்னீர்குப்பியிருக்க
பாரடியிந்த படுக்கையுள்ளுக்கொரு
பாத்திரமேதேனும் செய்திருக்கா

கிராம்பேலங்களிப்பாக்கெடுத்து வெற்றிலைஜாதிக்காயோடேவைத்து
தடாதகையிந்தாடி யென்றுகொடுக்கொரு
தங்கத்தாம்பாளம் தமுக்கமில்லை

தங்கக்கறண்டகம்பாக்குவெட்டி தம்பலவெட்டிகாலங்களில்லை
வெள்ளிச்சொம்பு போலேகிண்ணியில்லை
நல்லவெற்றிலைபெட்டிக ளேண்டியில்லை

உடுப்புபெட்டிஉடமைபெட்டி உச்சிதமாய்நல்லமேஜைபெட்டி
தந்தப்பெட்டி தகரப்பெட்டிசுய
தங்கப்பெட்டிஎனக் கேண்டியில்லை

பீரோவலமாரிசோபாயில்லை பீதாம்பரம்உருமாலையில்லை
சாகரத்துக்குட்பட்ட பூமிஎன்பேராலே
சாதனம்செய்து கொடுக்கவில்லை

குருச்சிபெஞ்சிகளச்சியில்லை குடியிருக்கொருவீடுமில்லை
பிடியிடையாளே யுந்தனுக்குகேழ்க்க
புத்திமதிகொஞ்சங் கூடயில்லை

வெள்ளியால்வார்ப்புசங்கிலிகளேன் விசித்ரமானபொன்சாவிகளேன்
வேதியரைக்கொண்டு ஓதிசபையிலே
வேண்டிஎன்கையிற் கொடுக்கவில்லை

மானமில்லாமல்சபையில்நின்று மஞ்சக்காணியாகஓதுமென்று
அஞ்சாமலேயவள் யாவருமறிய
புன்சிரிப்போ டுரைத்தாளேயென்றார்

அத்தைவாருமென்றழைப்பேனே முகம்பார்த்தொருவார்த்தையுரை
சித்தமகிழ்ந்து சிரிப்பேனே-அவள்[ப்பேனே
வைத்தபதார்த்தம் புசிப்பேனே

மாமியாரென்றுமதிப்பேனே மரியாதையோடினிமேலிருப்பேனே
காசுபெருமைகொண்ட காஞ்சனையைநான்
ஏசப்போறேன்பார் நாளைக்கென்றார்

ஆத்திரத்தோடேஇறைந்துவாட அவர்க்காயாசமாய்மேனிவேர்த்து
பார்க்கசகிக்காத பட்டமகிஷியும்[விட
பரபரென்றங்கே ஓடிவந்தாள்

உத்தமியாள்தன்னைபெற்றவளைஎத்தனைசொன்னாலும்பொறுத்தவளை
சற்றுமனஸ்தாபம் வைக்காமனின்று
சித்தமகிழ்ந்து சிசுருஷைசெய்தாள்

பட்டைபன்னீரில்நனைத்தெடுத்தாள் தொட்டுபதிமுகத்தைத்துடைத்
பன்னீரைவாரி எங்குந்தெளித்தாள்-பில்லை[தாள்
கந்தங்களைஜோராய் பூசிவிட்டாள்

சண்பகமுல்லைசெண்டையெடுத்தாள் ஸ்ரீமான்வேணியிலேசுற்றிவிட்
சாதுரியமாய்வெண் சாமரமெடுத்து[டாள்
தாசியைப்போலவள் வீசிநின்றாள்

சாமளவர்ணிசாதுயென்றுசிலாகித்து ஈசர்சந்தோஷங்கொண்டு
மோகத்தினால்வெகு வேகத்துடன்வந்து
தேகத்தொடுவாரி அணைத்துக்கொண்டார்

புத்திசாலிநேல்லபெண்என்றார் மெத்தமகிழ்ந்துசந்தோஷங்கொண்
கபோலத்திலேமுத்த மிட்டுக்கொண்டார்[டார்
அம்மன்கைகளிரண்டையுங்கண்ணி லொற்றிக்கொண்டார்

மஞ்சத்தினில்உட்கார்ந்துகொண்டார் கொஞ்சிமடிமேல்வைத்துகொ
பக்ஷமாய்வார்த்தைகள் பேசிக்கொண்டார்[ண்டார்
வெகுஇஷ்டமாய்தாம்பூலம் போட்டுக்கொண்டார்

செல்வியும்நாதருடன்கூடி சல்லாபமாகவிளையாடி
வெட்கத்துக்கஞ்சி வெளியில்வந்து
ஒருபக்கத்தில்போய் பதுங்கியிருந்தாள்

அந்தரங்கத்தோழிமார்கள்வந்து அம்மன்தளர்த்திகளையறிந்து
சுந்தரிஉன்முகம் சோர்ந்திருப்பானேன்
எங்களுக்குஅதை சொல்லுமென்றார்

ஒத்தசகிமார்களை பார்த்து
அங்குமணிஎடுக்க
அலசினாடி
சற்றேநயனத்தால்நீருதிர்த்து
வில்லையென்றவர்
என்னையென்றாள்

இம்மொழிகேட்டுதோழிமகிழ்ந்து
காஞ்சனையேயென்ன
ஒன்றும்நன்றாயிருக்க
எஜமானியண்டையோடிவந்து
காரியஞ்செய்தாய்
வில்லையென்றார்

பொன்மாலைகேட்டுபூரிப்புக்கொண்டு
தங்கபாளங்களை
பாத்திரம்பண்ணும்
புத்திகெட்டோம்நாமென்றெ
மேருபோல்குவித்து[ண்ணிக்கொண்டு
சிப்பியேஎன்றாள்

வெள்ளிபாத்திரம்நூறுஜோடிப்பு
தங்கபாத்திரம்
தாம்பரத்திலே
வெண்கலத்திலேநூறுஜோடிப்பு
நூறுஜோடிப்பு
நூறுஜோடிப்பு

பித்தளையிலேநூற்ஜோடிப்பு
ஈயபாத்திரம்
சீமைஇரும்பாலேயும்
பீங்கான்வகையில்நூறுஜோடிப்பு
நூறுஜோடிப்பு
நூறுஜோடிப்பு

பெட்டிவகையிலாயிரமாம்
வேஷ்டிவகையி
வெகுவிதம்விதமாகவே
புடவைவகையிலாயிரமாம்
லாயிரமாம்
கொடுத்தாள்

கல்லிழைத்தஉடமைகளாம்
விலையுயர்ந்த
விசித்ரமானவெண்
கணக்கில்லாதரவிக்கைகளாம்
விசிறிகளாம்வீச
சாமரமாம்

அற்புதமாபஞ்சப்பெட்டிகளாம்
முந்நூறுபொன்பெறும்
முகம்பார்க்கநிலைக்
அழகானமைக்கூடுசிமிழ்களாம்
சீப்புகளாம்
கண்ணாடிகளாம்

பொன்னால்புளியம்விதையாம்
அற்புதமான
சோழிசொக்கட்டாங்
நல்லபவுனால்செய்தபள்ளாங்குழியாம்
அம்மானைகழற்கொடி
காயாயிரமாம்

பார்க்கழகானமான்குட்டிகளாம்
கொலுவிம்பங்களை
விளையாடவரிசை
பஞ்சவர்ணக்கிளிகூடுகளாம்
யுங்கூடவைத்து
யெல்லாங்கொடுத்தாள்

சயனஸ்தலஜோடிப்புகளாம்
கோடிமொஹரா
குளோப்புலாந்தர்
சன்னபனாஸ்உடுப்புகளாம்
முடிப்புகளாம்
வத்தியுங்கொடுத்தாள்

பசுமணிகளிலாயிரமாம்
வேலைக்குத்தாதிக
வெகுசீதனங்களை
பால்பசுக்களிலாயிரமாம்
ளாயிரமாம்
யுங்கொடுத்தாள்

பெட்டிவண்டிகளாயிரமாம்   சாரட்டுவண்டிகளாயிரமாம்
ஆனை அஸ்வங்களி   லாயிரமாம்
அழகானரதம்பல்லாக்   காயிரமாம்

இராஜவிருதிலேஆயிரமாம்   நவரத்தினவாத்தியங்களாயிரமாம்
பூச்சக்ரகுடை   யாயிரமாம்
சூரபுருஷசேவகா   ளாயிரமாம்

ஆடுந்தாசிகளாயிரமாம்-கீதம்   பாடுந்தாசிகளாயிரமாம்
தம்புருவீணை   சுரப்போத்துடன்
திவ்யதாளமேளங்   கலையுங்கொடுத்தாள்

ஜோடுநிஜாரங்கிஆயிரமாம்   சொர்னசிம்மாசனமாயிரமாம்
அச்சுதர்நயன   அர்ச்சிதருக்கவள்
அர்ப்பணமா   யலர்ந்துகொடுத்தாள்

பூசைக்குப்பொன்னலேபாத்திரம்   வாசிக்கவேதாந்தபுத்தகமாம்
தாசிக்குவேண்டிய   காசுபணமாம்
தங்கவெள்ளிகளையும்   வாரிக்கொடுத்தாள்

பலவிதபிரதமைப்படமாம்   பஸ்மக்குடுக்கைபொன்சம்பளமாம்
பாராளவந்த   பரமதயாளுக்கு
தாராளமாயத்   தபசிகொடுத்தாள்

அம்மிஆட்டுக்கல்லிலாயிரமாம்   ஆழிபோல்கல்சட்டியாயிரமாம்
உறல்உலக்கைக   ளாயிரமாம்
உடைக்கத்திருவைக   ளாயிரமாம்

அறிவாய்மணைகளாயிரமாம்   அறிவாள்திருவலகைகளாயிரமாம்
வெள்ளிச்சல்லடை   கூடைமுறமாம்
சாமான்வாரிவைக்க   வெண்கலக்குதிராம்

வீடும்ஒன்றுவேறேவேணுமென்று   வேந்தன்மனைவியோசித்துக்கொ
மறையோர்களை   வரவழைத்து[ண்டு
நல்லமனைமுகூர்த்தங்கள்   செய்தாளாம்

நான்குபுறம்ராஜவீதிகளாம்   அதின்நடுவிலேபெருங்கோட்டைகளாம்
மேகமண்டல   மட்டுமதிலாய்
மகாமேருக்குமேலே   யெடுத்தாளாம்

அகலமானஅரண்மனையாம்அதில்   ஆயிரக்கால்மணிமண்டபமாம்
அற்புதமான   பள்ளியரையாம்எங்கும்
அம்சதூளிகா   மஞ்சங்களாம்

சுவரெல்லாம்வெகுசித்ரங்களாம்   கம்பம்உத்ரமெல்லாம்நவரத்தினங்க
குறடெல்லாம்கோ   மேதகங்களாம்[ளாம்

பெருமுத்தமெல்லாம் சுத்தபச்சைகளாம்

எங்கும்தங்கத்தளவரிசை
வாசற்படிநிலே
வைரங்களைப்
இடையில்வைத்தநீலவரிசை
மேடைகள்திண்ணைக்கு
புதைத்தாளாம்

உச்சிதமானஉப்பரிகையாம்
அடிக்கடிஜன்ன
அம்மன்பார்க்கப்
அதில்உயர்ந்தமாடிமேலேமாடியாம்
லாங்கதவாம்
பலகணிவாசல்களாம்

ஆயிரம்பிராமணப்பிள்ளைகளாம்
கட்டடந்தோறும்
கிரீடிக்ககுளம்
அமுதளிக்கஅன்னசாலைகளாம்
கிணறுகளாம்அவள்
படித்துறையாம்

அக்கினிகோத்திரசாலைகளாம்
கோக்கள்கட்ட
ராஜன்கொலுவிருக்க
அநுஷ்டானசெபம்பண்ணமடங்
கூடாரங்களாம்
கச்சேரிகளாம்

அன்றந்தமனைபோகநினைத்து
ஜோசியரோடு
நல்லசுபமுகூர்த்தங்கள்
அந்தணர்களைவரவழைத்து
கலந்துஆலோசித்து
வைத்தாளாம்

கௌரிக்குக்கிரகப்பிரவேசமென்று
ஐம்பத்தைந்துதேச
யானைமேல்பேரிகை
காரியஸ்தர்கள்சந்தோஷங்
சீமைகளெங்கும்போய்[கொண்டு
யடித்தாராம்

புண்ணியாள்புக்காம்போகிறளென்று
புத்திரர்மித்திரர்
சித்தமகிழ்ந்தோடி
பூமியோர்கேட்டுசந்தோஷங்
பத்தினியோடவர்[கொண்டு
வந்தாராம்

வீதிகளெல்லாமலங்கரித்து
உற்றூர்எல்லாருமாய்க்
ஊர்வலமிடவேணு
விசித்திரக்கோலங்களிசைத்து
கூடிக்கொண்டு
மென்றாராம்

மாப்பிள்ளையும்பெண்ணுங்கூடிக்கொண்டு
ரத்நரதத்தின்மே
மகாராஜவீதியிலே
மகிழ்ந்துஅலங்காரஞ்செய்
லேறிக்கொண்டு[துக்கொண்டு
வந்தாராம்

வரிசைகளையுமெடுத்துக்கொண்டு
பாணவெடிகளை
திவ்யவாத்தியங்களை
வாசலுக்குவாசல்நின்றுகொண்டு
விட்டுக்கொண்டு
அடித்தாராம்

ஊரிலுள்ளஜனங்கள்நின்று
அற்புதமான
முத்தாரத்திக
சீரைக்கண்டுசந்தோஷங்கொண்டு
கனிகொடுத்து
ளெடுத்தாராம்

பெண்களெல்லாருமாய்கூடிகொண்டு தங்ககூடைகளெடுத்துகொண்டு

விதம்விதமான பட்சயங்களைவாரி
வீட்டுக்குவீடு கொடுத்தாராம்

பூமிமீதுள்ளோரும்புகழ் தேவலோகத்தார்களுமகிழ
சப்தபிரகாரமும் சுற்றிஆதிபரா
சக்தியரண்மனே வந்தாராம்

மாலேசூடிஊஞ்சலாடி மங்களலாலிவாழிபாடி
கங்காதரர்கிரகந் தனிலேவந்து
கிரகப்பிரவேசங்கள் செய்தாராம்

அத்தனேபேரும்அன்னம்புசித்து வெற்றிலேசிவனுடன்தரித்து
அந்தணர்எல்லாரும் கூடிக்கொண்டு
அம்பாளுக்காசீர் வாதங்கள்செய்தாராம்

சரிகைச்சேலேரவிக்கைகளும் சால்வைசகலாத்துபட்டுகளாம்
சாஸ்திரிமாரெல்லாம் கூடிசபையிலே
ஓதிவாழ்த்தி கொடுத்தாராம்

வாங்கிஅவர்கடரித்துக்கொண்டு வாசனேப்பூவைமுடித்துக்கொண்டு
சேர்ந்துகரம் பிடித்துக்கொண்டு
சிறப்பாகமணேமே லிருந்தாராம்

மாப்பிள்ளேமகளேயுங்கண்டு மாமியார்மகாசந்தோஷங்கொண்டு
இன்னுமென்ன சீர்பாக்கியென்று
அவள்இருந்து ஆலோசனேசெய்தாளாம்

மலேயத்துவசசெங்கோலேக்கொண்டு மருமகனேநீர்ஆளுமென்று
மீனலோசனேப் பிராணேசன்பேராலே
மிராசுபதிந்து கொடுத்தாளாம்

நாகரீகமதுரைக்குஇன்று நாமேயதிபதிபானேமென்று
மீனுட்சிபிரியாள் மகிழுமாமியுடன்
குலாவிக்கொண்டு யிருந்தாராம்

---

## தலேவிசைவந்த கொம்மி.

தங்கத்தடாதகா தலேவிசைவந்த
திறமைதனே நான்கும்மிபாட
தாசர்தியானிக்கும் கணேசஅண்ணுவெகு
நேசமுடன் நேக்குவாநீகூட
மாலேப்பொழுதில் மதுரைமீனுட்சிக்கு
மாதாபின்னி யலங்கரித்தாள்

மல்லிகைஅரும்பை பன்னீரில்நனைத்து
மகள்மனதிற் கிசையவைத்தாள்
இராமின்னல்வெள்ளை யுடுத்திமணவில்லை
பூசிரவிக்கை நன்றாய்முடித்தாள்
இராஜன்கண்டாலின்று உன்னைவிடானென்று
தோழிமார்கேலிசெய்து நொடித்தார்
பாலையுவதிமாரன் பாதையாலே
பாண்டியசுந்திரரை நினைந்துகொண்டாள்
பகலிலும்பதியண்டை யிருக்கபாக்கியம்பண்ண
விலையென்றுபாங்கி யோடுகுறைந்துக்கொண்டாள்
சதாசரசமோகித சுமீனாளை
சாடையாலின்ற அன்னைஅறிந்தாள்
சகலவாத்தியகோஷ வரிசையோடுபெண்ணை
புக்காத்தில்கொண்டு விடஎழுந்திருந்தாள்
மாப்பிள்ளைதுரை மங்களமனைபுகுந்து
மாடிகளெங்கும் ஜோராய்ஜோடித்தாள்
மகளைகொண்டேயிவள் உம்மவசமென்று
கொண்டவரண்டை ஒப்பித்துக்கொடுத்தாள்
மாதர்மயங்கும் மகாசுந்திரப்பய்யன்
அத்தையைப்பார்த்து சற்றேசிரித்தார்
மாறலீலைக்குதவி மாமிபோலேமண்ணில்
யாருமாகார்கள் என்றுபூரித்தார்
எந்நேரமுமேகாந் தஸ்தலத்தில்வந்து
கடிகாயிதாக்கா ளோடேபேசினார்
இந்துகுலாளிரு தயம்அறியஈசர்
ரோஷம்வரும்படி எல்லாம்யேசினார்
நாரிநியாயங்கடந்து நகராண்டாள்நீ
நமக்குச்சரிப்படா தென்றெழுந்தார்
நாலுமறிந்தநன் மதுரைதுரையம்பாள்
ஆடையைப்பற்றி அஞ்சிநயந்தாள்
புண்ணியவதிபொன் மாலைசிங்காரஞ்செய்த
புதுமைகளைக்கண் ணாலேகண்டார்
புஷ்பகூடார மஞ்சத்திலிருந்து
போகஇளமயிலே வாடியென்றார்
நீலாள்குதூஹல மாகமகிழ்ந்து

நிகரில்லா தாம்பூலங் கள் தரித்தாள்
நிலைக்கண்ணுடிக்கு நேரிருந்ததரில்
ஆடைநனைத்து நெற்றி துடைத்தான்
தங்கபீரேவைத் திறந்துதடாதகா
ரத்தநச்சிமிழை எடுத்துக்கொண்டாள்
திலகம்திருத்தி திறமாகத்தன்
மனம்போலவிழ வைத்துக்கொண்டாள்
ஒய்யாரமாமது மையனுகந்து
கையாலேஅதைநன் ருய்க்கலைத்தார்
துப்பாப்போர்வையைப் பிடித்துதூங்குமஞ்சத்தி
லாடுவோம்வாடி யென்றழைத்தார்
தாய்தனமதத் தைரியத்தடாதகா
தன்பதிமேல்அதி கோபங்கொண்டாள்
தவமொழிய சிறப்பறியாதரு
மரேநான்வாரேன்போங் காணுமென்ருள்
சிங்காரப்பிராந்தி கொண்டசுகசெல்விக்கு
சீமான்வெகுசமா தானஞ்சொன்னர்
சீரிஅவளெதிர்க் கச்சிந்தைகலங்கி
செய்ததுபிசகென் றேங்கினின்ருர்
ஆர்க்குமடங்காத கர்விஅதையும்
அலக்ஷ்யம்செய்தன்னையாம் செல்லநடந்தார்
ஆலாஸ்யரசர் வஞ்சனைசெய்யவாலோசித்து
அன்னமேகில்லென்று பின்னேதொடர்ந்தார்
பதியைமறைக்குமான் போல்சதியென்றதை
கலைத்தேனென்று பாதையைமறத்தார்
மாதம்மொழியை மதியாமல்மற்ருெரு
வழியாலேசெல்ல பூட்டைமுறித்தார்
இக்கலகத்திற்கா ளானேமென்றீசர்
ஏங்கிமயங்கி மனந்துடித்தார்
இகாபீஷ்டா யிதைத்தீருமென்று
தண்டுபோலேதிடீ ரென்றுபடுத்தார்
மாணிக்கமஞ்சப் பெட்டிகண்ணுடிகளை
தூறிமீனதா ரெறிந்துவிட்டாள்
மன்னுஇதோவந்தேன் பாருமென்றுஉமை
நீக்கிஅணைத்தொரு முத்தமிட்டாள்

முத்தொழில்வல்லோன் மூச்சையடக்கிவெகு
மோகமூர்ச்சர்கள்போ லேயிருந்தார்
எத்தனையோஉப சாரஞ்செய்து அம்மன்
தட்டியழைக்க எழுந்திருந்தார்
பேணிலாட்டேடா சீனிக்ஷீரம்கற்கண்டு
வாரிவாயிலேவைத்து ஊட்டினாள்
பெஞ்சிமேல்கொஞ்சிக் கூடயிருந்துவீணை
வாணியைவென்று பாடிக்காட்டினாள்
சரஸ்வதிக்குமேல் சாரீரிநீயென்று
சௌந்திரபிரபு சொல்லிசிலாகித்தார்
சாந்துபன்னீரால் குழைத்துசியாமளி
மகிழமுகாரவிந் தத்தில்வைத்தார்
மருவிஅணைந்து மங்களஉல்லாசமாய்
மைகையாலேற்றி மலர்கள்வைத்தார்
மதுரைமீனாட்சிபிரி யாள்மகிழமெத்தை
மேலேலகித்தியம் கூடிசுகித்தார்

உ-விருத்தம்.

மாடமயி லோடுசதாகூடி உறவாகிமன் னன்மலரும்
மணமும் போலானார்
ஆடல்பாடல் விருதோட ரதம்ஏறி அகிலர்அம
ரரியரசு செய்யப்போனார்
ஜோடனை சபைஜோர்சுர புரியேன்ஜோ ராய்செய்து
கொணர்ந்தாளோ முன்னென் றுதோண
கடலும் கெடிக்கடங்க காயிதாவோட் கணிசகணிசமாய்
கொலுவிருந் தார்தானே.

க. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

கச்சேரிதினம் செய்தாரே
கதம்பவனத்தில் கயிலாசபதிகாமிபோல் கக்

அநுபல்லவி.

பச்சைகிரீடம்மின்ன பாரைபரிபாலித்துநன்று
மாமிதவத்திலகப்பட்டு மனைவிமொழிகளைக்கேட்டு
வாதிகளைக்கூப்பிட்டு விசாரித்துதீர்ப்புபோட்டு க

சரணம்.

பிரபலமானசபையிலே பிரகிருதபூமானைப்போலே
தைத்தசட்டையையணிந்து துஷ்டரைத்தெண்டிக்கதுணிந்து
பத்துமணிக்குவந்து பகல்முழுதுமிருந்து க

மீனாக்ஷிபிரியாள்பாட சுமதிமந்திரியுடன்கூட
வேதவிதியனுஷ்டித்து வேட்டகத்துவிருந்தைகிரகித்து
அந்தியரும்புமுடித்து ஆடல்பாடலைப்பார்த்து க

ங-விருத்தம்.

அந்திநவ மணிநேரம் ஆகியும்ஐயன் சதிர்சபையி
லேயே யிருந்தார்
காந்திரத்ன மண்டபத்தில் கருநீலாள்பாங் கிகளோடுபல
விதமாய்ப் பந்தெரிந்தார்
ஏந்திவளர்த் தெடுத்தஅன்னை இந்நேரம் இளந்தைகண்
விழியாளே யென்றுபறந்தார்
சுந்தரபாண் டியதுரையை சுருக்காயழை யென்றுசகியோ
டோர்மொழி பொழிந்தார்.

உ. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

மருமகனை அழைத்துவாபோடி
மகாவேகமா யோடி மரு

அநுபல்லவி.

அருமையான என்செல்வி அனைவர்களுக்கும்நல்லி
மனமெதுவானமெல்லி கண்விழித்திருக்காளென்றுசொல்லி ம

சரணங்கள்.

மதுரைக்கதிபதியை மகத்தானமதியை
என்ஜெனனசதியை சேரகிருபாநிதியை ம

இராஜாத்திராஜரடி ரமண்யமுகஉல்லாசரடி
நீதிதப்பாமன்னரடி லீலாவிநோதரடி ம

அற்புதாபரணம்சாத்தி அம்பாரியானைமேலேத்தி
முன்னாலேநின்றுபோத்தி மீனாக்ஷிபிரியாளைவாழ்த்தி ம

ங. கீர்த்தனம்-இ-ம்-அடாணா-அடதாளம்.

பல்லவி.

வாரும்வாரும்ஐய்சிவசுவாமி எங்கள்பின்
வாரும்வாரும்ஐய்சிவசுவாமி
வழிபார்த்துக்கொண்டிருக்கிறாள்
அங்கேதங்கள் மாமி

அநுபல்லவி.

போதும்போதும் இந்தசதசு புருஷார்ப்புதமேஉன்
சரீரமெல்லாம் வெகுசொகுசு

தேவபாண்டியராஜா திருஷ்டிவிழுமே
உந்தன் தேஜசு
தேசவித்வாமிசாள் கொண்டாடுறுள்
உன்றன் எஜசு வாரு

சரணங்கள்.

ஏனின்னம்செய்கிறீர் நீர்தாமசம்
இதைப்படைத்து போஷித்தவுடன்
துடைக்கும்துரை தங்களுக்கிதுகளெல்லாம்
சமரசம்
மதுரமானபதார்த்த பக்ஷியங்களோடபாயசம்
மாமிதருவள் புஜித்துமனைவியோடசெய்சரசம் வாரு

வேகவதியை பூலோபகாரமாய்
வரவழைத்த விசித்ரா
வெகுவீரபராக்கிரமமாய் எங்கும்ஆக்ஞாசக்கரம்
செலுத்துகிற ஏகசக்ரா
தீனர்களை தயவாய்தினம் காக்கும்கருணாசமுத்ரா
தினமும்கேழ்க்கத்திகட்டா திவ்யமானசரித்ரா வாரு

நர்த்தனமாதர்களை நிறுத்தும்அவாள்
நேரேநின்றமேயிதை
போதுமென்றுபோய் கையமுத்து
முந்நூறுபொன்னைக்கொடுத்து
பெண்கள்மனதை நிமிர்த்தும்
மீனாக்ஷிபிரியாளுக்காக லீலைசெய்தமத்தும் வாரு

---

## இங்கிலீஷ் நோட்.

பல்லவி.

பள்ளியறைபோகப் பிரபுவாரார்
பாண்டியவம்சம் பயிர்வளர்ந்தேற பள்ளி

அநுபல்லவி.

துள்ளியமாதர்கள் நடத்திட
தூபதீபமெங்கிலும் கொடுத்திட
கட்டியன்முன்கவி படித்திட
கர்ணன்வந்துகணக்கிட குறைத்திட பள்ளி

அதிர்வெடி அண்டம் அதிரவே
ஆகாசமலர்கள் உதிரவே
தூளியெழும்பிச் சிதறவே
தொண்டர்வேதங்களோதிக் கதறவே-பள்ளி
ஆனைகுதிரை சேனைகள்சூழ
அனைவர்களும் வந்துதொழ
வணங்கிகாரியஸ் தாள்தாழ
வடிவழகியுடன் கூடிவாழ-பள்ளி
பகல்வத்திபிரகாசித்து ஜொலிக்க
பார்த்தபேரெல்லாம் பூரிக்க
மீனாட்சிபிரியாள் ஸ்துதிக்க
மேகவர்ணியுடனே ரமிக்க-பள்ளி

ரு. கீர்த்தனம்-இ-ம்-சோகவராளி-சாபுதாளம்.

பல்லவி.

மாமிமனையில்வந்தார்-சுவாமி-மாமிமனையில்வந்தார்
பூமியுள்ளோர்புகழ-சிவகாமி-மாமிமனையில்வந்தார்

அநுபல்லவி.

காமிபோலசிரித்து-சாமி-கனகாம்பரம்விரித்து
காமிபோலசிரித்து கனகாம்பரம்விரித்து
சொர்ணஜோடுதரித்து சுஜனசுலபர்பூரித்து-மாமி

சரணங்கள்.

அத்தைவாருமென்றழைக்க சாமி-சற்றேவார்த்தைகளுரைக்க
அத்தைவாருமென்றழைக்க சற்றேவார்த்தைகளுரைக்க
காஞ்சனைநெஞ்சைகரைக்க கைப்பொருளெல்லாம்பரிக்க-மா

மாமன்தேவிக்குப்படிந்து சாமிமண்டையோடுமண்ணுயுடைந்து
மாமன்தேவிக்குபடிந்து மண்டையோடுமண்ணுயுடைந்து
தடாதகையையடைந்து தாரித்திரங்கள்வெடிந்து-மா

ஏகமாகப்புறப்பட்டு சாமி ஏன்கூப்பிட்டீரென்றுகேட்டு
ஏகமாகப்புறப்பட்டு ஏன்கூப்பிட்டீரென்றுகேட்டு
மிதியடியைதூரப்போட்டு மீனாக்ஷிபிரியாளைத்தொட்டு-மா

சு. கீர்த்தனம்-இ-ம்-பியாகு-அடதாளசாப்பு.

பல்லவி.

இன்னேரம் ஏன்இனிச்சேராய்
எந்தன் மனமகிழ் சுகுமாரா இந்த

அநுபல்லவி.

மந்தஹாச மதுரைவாழ்மன்னு
மாமணில்லா மனேயிது அன்னே-இந்த

சரணங்கள்.

மலேயத்துவஜர் மருமகராஜா-உன்
மகிமையோவெகு வாசாமகோசா-இந்த
சிக்கிரம்கிரீ டாகிராம்சேரு
செல்விதேகசிர மத்தையும்பாரு-இந்த
பொய்பிரபஞ்ச வேடிக்கைநோக்குண்ட
மீனுட்சிபிரியாளுக்காகநீ இக்கோலங்கொண்டாய்-இந்த

எ. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

பள்ளியரைக்குள்ளேவாரார்
வள்ளிபதிஜெனகர்ஜோராய் பள்ளி

அநுபல்லவி.

வெள்ளிபொன்மயமான விசித்திரபல்லக்கிலேறி
வேகமாய்மன்மதன்விடும் கணேயால்கனேத்துமேசோரி-பள்

சரணங்கள்.

வாசனேபுஷ்பகெந்த பரிமளங்களணிந்து
வடிவழகிமீனுனே வாரியணேயநினேந்து-பள்
ஓங்கிகட்டியருள்ளே உமையாட்குரைக்கவோட
பொங்கிமீனுட்சிபிரியாள் எங்கும்சரஸகிருதிபாட-பள்

அ. கீர்த்தனம்-இ-ம்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

சுந்தரபாண்டியமகாராஜரதோவாரார்
ஸ்வயபரிமளமீனுட்சி உன்னுடனேசேர சுந்தர

அநுபல்லவி.

மந்தாரைமல்லிகைமலர் வேர்கொழுந்துகள்கொண்டு
மாமியார்அந்தப்புரம்போய் விருந்தமுதிருந்துண்டு சுந்

சரணம்.

மீனாட்சிபிரியாள்மனம் மகிழ்ந்துமேஸ்துதிக்க
மேகமேனியேஉன்னுடன் மெத்தைமேல்ரமிக்க சுந்

௬. இங்கிலீஷ்பாண்ட்-சாபுதாளம்.

பல்லவி.

சாமிசமயமிது வரலாம் வரலாம்வரலாம்
சாமிமருமகளை மருவிச்சேரலாம் சேரலாம்சேரலாம்என் துரை

அநுபல்லவி.

நிமிஷம்கூடஇனி என்னால்தடையில்லை
என்னால்தடையில்லை
நேத்திரத்தால்நிமிர்ந்து பார்த்துநீர்கேளுமென்சொல்லை சாமி

சரணம்.

தங்கபல்லாக்கைவிட்டு இங்குஇரங்கும்
நீர்இங்குஇறங்கும்
எங்கள்மீனாட்சிபிரியாள் மகிழமஞ்சத்திலிறங்கும்

௭-விருத்தம்.

மயங்கிய மதுரைமீனு மஹாதேவரை அர்ச்சித்துமலர்
கரத்தைப் பிடித்தழைத்தாள்
சயனஸ்தலம் வந்துசௌந்தர துரையைஜாதி ரத்நபெஞ்சுமே
லுட்கார வைத்தாள்
தாயாரனுப்பிய தமுக்குசாமானை கூஜாகொழம்பு பாலையுங்
கொடுக் கெடுத்தாள்
அயல்மாதர் கட்கஞ்சி நிற்கலுயனதை அறியாமல்
கொஞ்சியோர் மொழியுரைத்தார்.

௮-ம்-ஆனந்தக்களிப்பு.

மோடிசெய்யாமலேவாடி
மோகனுங்கிமுல்லை மலர்மாலைசூடி மோடி

தேடிமாலை யிட்டகண்ணே
நாடிவந்தேன்நான் நயந்திங்கேஉன்னை
பாண்டியமக ராஜன்பெண்ணே
சௌபாக்கியவதியே நீயென்றன்முன்னே-மோ

கஞ்சஇதழ் போல்நயனி
காஞ்சனமாலை வளர்த்தசுதனி
பவழத்னதப் பழிக்கும்வதனி
பக்தர்கள்பாபம் ஒழிக்கும்பவானி-மோ

பக்கத்தில் வந்துஉட்காரு
வெட்கத்தைவிட்டு நிமிர்ந்தென்னைப்பாரு
சர்க்கரைபால் பலம்சேரு
பக்குவம்செய்தென் பாணியில்பரிமாரு-மோ

பூஷணம் செய்துதருவேன்
பிரியாமல்உன்னுடன் பூரித்துசேர்வேன்
மற்றொருத் தியைமருவேன்
மீனாட்சிபிரியாள்வாழ்வுன்னை க்ஷணமேனும்மறவேன்-மோ

ரு-விருத்தம்.

நட்சத்திரம்மத்திமதிபோல்நாராயணர்நாரியர்நடுவேநின்று
மட்சநாதன்ஏன்தாமசம்பாலையுவதியேபந்தாலடிப்பேனென்றார்
அட்சணம்அதிவிநயாள்ஆர்க்கவோம்என்றுலோசனைசெய்தாள்நன்று
இட்சணம்என்சகிமாரேஇவ்விடம்விட்டுவிலகியிரென்றுசொன்னாள்.

## ஸ்ரீமத்தடாதகாதேவிக்கும் சகிஜெனங்களுக்கும் சம்வாதக் கொம்மி.

---

பிரபுஇன்றிங்கேவந்துட்டார்-பாங்கிநீபோடி
சகிபகலில் நீவாடி
பதினாயிரம்பெண்களிருக்கிறோம் பாடநீவாடி
மீனாட்சிபடுக்க பின்போடி

ஈசரின்றுவந்துவிட்டார்-பேசாமல்போடி
சகிபெருமத்தி யானத்தில்வாடி
எல்லவரும்சேர்ந்திருக்கிறோம்-இங்கேநீவாடி
மீனாட்சிஅங்கேபின்போடி

சொக்கரின்றுவந்துவிட்டார்-சுருக்காய்நீபோடி
சகிசூரியோ தயத்தில்வாடி
சொக்கட்டாங்காய்பறித்திருக்கிறோம்-ஆடநீவாடி
மீனாட்சிகூடபின்போடி

இராஜரின்றுவந்துவிட்டார்-ரதிகேளிபோடி
சகிநீஇராப்போன பின்வாடி
சரிகைரவிக்கைகொணர்ந்திருக்கிறோம்-தரிக்கநீவாடி
மீனாட்சிரமிக்கப்பின்போடி

நாதனின்றுவந்துவிட்டார்-நான்வல்லைபோடி
சகிநாளைவாருங்கோடி
காலையில்வெகுவேலையிருக்குது-சோலைக்கேனும்வாடி
மீனாட்சிலீலைக்குபின்போடி
மின்னுடைகளைப்பிடித்திழுப்பார்-வேல்பேசாமல்போடி
சகிமன்னனில்லாதபோதுவாடி
மீனாட்சிபிரியாளுக்காக நாங்கள்போகிறோமடி
மீனாட்சிநீங்கள்சேருங்கோடி

௬-விருத்தம்.

தோழிமார் போனவுடனே தூங்கரையைசாற்றி தங்கத்தாப்பாள்
சங்கிலிகள் போட்டாள்
நாழியாகுமுன் நாதன்இன்று நம்மிடம்வந் தாரென்று
சந்தோஷப் பட்டாள்
ஆழியணிந்தங் குலியாலாய்ந்த இளந்துளி ரெடுத்து
திரிதிய மிட்டாள்
மொழிமுத்து கோத்தாப்போல் செவ்வாய்தி றந்துஸ்ரீமா
னெதிரிருந்து சிரித்துகேட்டாள்.

பல்லவி.

ஏனிந்தமோகங்கொண்டீர்சுவாமி-எனக்
கிஷ்டசகிகளும்கிட்டயிருக்கையில்நீர்

அநுபல்லவி.

நான்சொல்லுகிறசில நியாயவசனத்தைநீர்கேளும்
நாளைமுதல்நடுசாமத்தில் வந்தெனை நீராளும்

சரணங்கள்.

தோழிமார்களிருக்கையில்
துரையேநீரென் கரத்தைதொட்டு
தூக்குமஞ்சத்திலாட வாடியென்றுவாய்விட்டு — ஏனி

காமன்கணையினாலே
களைத்துவந்த சுகுமாரா
காசாசைகொண்டதாசிபோலென்னை நினைந்திரா — ஏனி

இராசபத்னியிடத்தில்
ரகசியமாய் வருகவேணும்
ரம்பைபோல்ரூபமாதர்க்கு ரொம்பவேகனுசம்தோனும் — ஏனி

மண்மீதில்மன்னரைப்போலே
மங்களாகாரமாய் வாழும்பிரபுவே
மாலயன்தேடவகப்படாத என்றன்சற்குருவே ஏனி

மாமிஇவர்காமியென்று
மனைவியைவிட்டின்றேஒழிப்பாள்
மதுரைமீனாட்சிபிரியாள் கவிபாடிசிரிப்பாள் ஏனி

ஸ்ரீமத்தடாதகாதேவிக்கும் சௌந்தரபாண்டியதுரைக்கும்

## சரசவாதக் கொம்மி,

---

அம்மாநானென்னசோரனே அர்த்தராத்திரியில்வருவேனே
மயிலேஉன்னைவிடுவேனே மறுமாதரைநான்தொடுவேனே
இராசனேஉள்ளேவாரும் ரோசாப்புசெண்டைஇங்கேதாரும்
இரத்னஊஞ்சலிலுட்காரும் இரதிபதிபாடையைத்தீரும்

வெள்ளிவிளக்கைஏற்று இந்தப்பள்ளியரையைப்பார்த்து
பஞ்சணைமெத்தைவிரித்து என்பக்கத்திலுட்காருபூரித்து
கெண்டைவேஷ்டியைகட்டிக்கும் கழுத்தில்முத்தாஹாரத்தைபூட்டி
த்வணியில்மலர்சூட்டிக்கும் தளிர்வெற்றிலைசுளைப்போட்டுக்கும்

சந்தணஞ்ஜோராய்பூசடி திவ்யசாமரங்களால்வீசடி
சரசமொழிகள்பேசடி சியாமளிமுன்சொன்னதுமோசடி
நம்பரெல்லாம்ஒழிந்ததா பலவம்பாவழக்குதீர்ந்ததா
கப்பணமரையில்வந்ததா கச்சேரிகணக்குப்புரிந்ததா

உந்தன்மனப்பிரகாரம் அதுஒழிந்ததிந்தவாரம்
எந்தனுக்குபசாரம் நீசெய்ததுபோதுமின்னேரம்
நித்தியானந்தமூர்த்தி இத்திசைவயங்கும்உங்கள்கீர்த்தி
மறுமன்னர்களுக்காந்தி மீனாட்சிபிரியானைநீர்காத்தீர்

---

கக. கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி-அடதாளசாப்பு

பல்லவி.

சொக்கட்டானடுகிறாள்
சொக்கருடனேமீனாள் ஜோடிப்பாள்மேல்ஜோராய் சொ

அநுபல்லவி.

வெட்கத்தைபக்கத்தில்விட்டு
வேடிக்கையாய்துரைதோளின்மீதுகரத்தைபோட்டு
வெளியில்பாங்காவிசிற வேந்தர்மேலேஉசிர
நடுநிசியில்நயனம்அசர நம்பாமலேஉபாசா-சொக்

சரணங்கள்.

சதுரங்கமனைமுன்னேபோட்டு
சாரஸ்யமாய்காயை கிரமமாய்கட்டத்தில்ஏறவிட்டு
ஆனைப்பந்தயம்வைத்து அந்நாளில்ஹாரரையும்செயித்து
மெத்தைமேலேபூரித்து மீனாட்சிபிரியாளைநினைத்து சொ

கதவுதிறக்கிற பாடல்.

---

சந்த்ரகாந்தமண்டப சயனஸ்தலமஞ்சத்தில்
சரசஉல்லாசம் செய்யவாடிமோஹ
னம்பாள்முகத்தில் முத்தம்தாடி

அடியென்றதட்டிவெகு அதிகாரத்தோடழைக்க
ஆபரணங்களை இட்டீரோ-கோடி
பொன்னைக்கொடுத்தென்னைக்கொண்டீரோ

ஸ்வயபரிமளசுகுமாரி உன்விகிருத
குஜம்மறைத்து மாலையிட்டேண்டி-யுத்த
முனையில்செயித்துன்கை தொட்டேண்டி

பிராணதாரமானபிரபுவே உம்மைநானிப்போ
பரிகாசமாகச்சொன்னேன் சுவாமி-இதைக்
கேட்டால்கண்டிப்பாள் தங்கள்மாமி

பட்டத்தரசிநீயென்னிஷ்டப்படிநடந்தால்
மாதுரியவசனம் மறக்கேண்டி-உன்
மாதாஅறிய வுரைக்கேண்டி

மனைவிநானெடுத்துதரும் சுருளைகிரகித்து
மருவிசுகியும் இந்நேரம்-மீனாட்சி
பிரியாள்தேவரே நமஸ்காரம்

---

உக. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

சரசஉல்லாசலீலைசெய்தாள் சீதளசந்திரிக்கையிலே
சியாமளி அதிபிரமையினாலே சர

அநுபல்லவி.

மாரன்கணையாலடிகள்பட்டு மானமென்பதையும்விட்டு
அச்சமில்லாமலேகூடி லெச்சையில்லாவார்த்தைகளாடி சர

இருவரும்ஏகமனசா யிருந்துமேவெகுசல்லியமாய்
போகநூல்நீதிபிரகாரம் பூரித்திருந்துஅந்நேரம் சர

அதிரூபபால்பரைப்பார்த்து அசையாமல்நின்றுபிரமித்து
வதியபூமாலைபோய்தொட்டு வந்தழகாய்முத்தமிட்டு சர

மீனாட்சிபிரியாளுக்காக மெத்தைமேலிருந்துமோக
தாகங்கள் தணியகெஞ்சி தழுவியணைந்துபோய்கொஞ்சி சர

---

கக. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி.

நித்திரைசெய்துவைத்தாள்
ஈசன்பத்தினிபூரித்தாள்

அநுபல்லவி.

முத்துநீர்வைத்து சுருள்கள்மடித்து
முத்திரைமோதிரம் கரத்தால்கொடுத்து
பதவடியை பற்றியேஎடுத்து
பக்திவிநயத் துடனேபிடித்து நி

சரணங்கள்.

சுற்றிவாசனை செண்பகபூச்சோலை
மத்தியிலேமகா மேருவைப்போல
மாணிக்கமயமான மாடிமேலே
மதுரைமீனாட்சிஅதி பிரியத்தாலே நி

தோளின்மேல்தங்க வீணையைமாட்டி
தாங்குமஞ்சத்தை சற்றுநேரமாட்டி
சாஸ்திரபிரகாரம் சுருதிகளைக்கூட்டி
சங்கீதகானங்களைப் பாடிக்காட்டி நி

மீனாக்ஷிபிரியாள் மனதுமகிழ
மேனகைரம்பை ஊர்வசிபுகழ
வானவர்பூமாரி பெய்துபுகழ
விடையுமான்கள்வெள்ளாட் டிகளைவிட்டிகழ

## தாலாட்டு.

பாண்டியபிரபு ஈன்றெடுத்தபாலே
மகாபதிவிரதை சிரோமணியேயினிமேலே
கண்விழிக்கமுடி யாதடிஉன்னாலே
சயனிநாஞ்சனமாலை கோபிப்பாளென்னை நாளை
வேந்தர்வேஷத் திற்கிசைந்தவீரா
வேடிக்கைவார்த்தைவேண்டாம் என்தாயுமக்கொருநிகரா
மோசஞ்செய்தென்னைத் தூங்கவைத்தாயா
மோகினியைத்தேடிப் போகப்போகிறீரோ
ஸ்திரீஹார நடுநாயகக்கண்ணே
சஹஸ்ராதிசௌந்திர சரீரப்பெண்ணே
மேனகைவந்தாலும் போகேன்பிரிந்துன்னை
மீனாக்ஷிபிரியாள்மகிழ இதிலேநம்படிஎன்னை

கச. கீர்த்தனம்-இ-ம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

சயனஞ்செய்துகொண்டாள்
சாதிரத்தினமஞ்சத்தின் மேலேநன்றாய் சய

அநுபல்லவி.

பயத்துடன்படுத்து
பலவிதவத்தி வாசனைபிடித்து
சேலைஅலங்கிடாமல் மாலைகுலுங்கிடாமல்
சித்திரமெத்தைமேலே வைத்தபிரதிமைபோலே சய

சரணங்கள்.

தண்டில்திருவடி உதைந்து
திவ்யசரிகைதலையணை மீதில்சாய்ந்து
தென்னல்வந்துஅடிக்க முல்லைமுகம்வெடிக்க
அதிகநித்திரையற்று அர்த்தராத்திரிசற்று சய
துரைமேல்கரம் போட்டுக்கொண்டு
தூங்காளினயனத்தை மூடிக்கொண்டு

பிதற்றிப்புரண்டிடாமல் பெருங்குறட்டைவிடாமல்
கடைச்சற்கட்டிலின்மேலே கருநீலமயில்போலே சய
மீனாக்ஷிபிரியாள் ஸ்துதிக்க
மூடிக்குளோபுதிப முள்ளெங்கும்சொலிக்க
சூஸ்திரம்வைத்துவிசிற சுகமேசற்றேஅயர
மலர்த்தேன்எங்கும்சொட்ட மகராசபிரபுகிட்ட சய

---

## தாலாட்டல்.

அகிழ்மதிலைச்சுற்றி அடிக்கனேகர்காவல்வைத்தாள்
நீண்டகண்டவுயர் மாடியின்மேல்
ஆலாஸ்யஈசருடனே படுத்தாள்

சத்தியசுமதிநைநம்பி சோரபயங்கள்மறந்தாள்
சப்பிரகூட மஞ்சத்தின்மேலே
சுந்திரையணைந்து சயனித்திருந்தாள்

காஞ்சனமாலைபலத்தால் கசானாகாவலைநீங்கினாள்
கணவன்கரத்தின்மேல் சிரத்தைதவைத்து
முகத்துடன்முகம் சேர்ந்துதூங்கினாள்

உருகும்மீனாக்ஷிபிரியாளுக்குப் பக்தியீந்தாள்
இவ்வுலகாளும் ராசாத்திதன்
உடல்மறந்து நித்திரைசெய்தாள்

## திருவனந்தல்.

---

சரு. கீர்த்தனம்-இ-ம்-பூபாளம்-சாபுதாளம்.

மதுரைமீனாக்ஷிசுந்தரேஸ்வராள் ஏகாந்தமாயிருந்தொய்தார்
மலையத்துவசமனையில்மாணிக்க மஞ்சத்தின்மேல்நித்திரைசெய்
அந்தராவிலேஅஞ்சுமணிக்கு அருணரதம்எழுந்தது
அதுகண்டுமடிஒதிப்போயதன்மேல் திக்குமேருவில்மறைந்தது
சுரதிசையிலேசுப்பிரகாசமாய் சுக்கிரஉதயமாச்சுது
சுருக்காய்நட்சத்திரமெல்லாம் சோதிமழுங்கிமறைந்துபோச்சுது
முத்துக்கூடாரசந்திரகாந்தக்கல் சீதளநீர்உலர்ந்தது
முல்லைமல்லிகைமலரெல்லாம்முகம் விரிந்துமணமாம்மலர்ந்தது
தங்கப்படல்திடல்காய்கறி தறமாய்காய்த்துபெருத்தது

தோட்டம்மரத்தில்தொங்கும்சுரஸ் வர்க்கமெல்லாம்பழுத்து
பனிவிலகிபிரகாசமாய்பளீ ரென்றுபோதுவிடிந்தது
பாகசாலைக்குபட்டகஷ்டங்கள் விட்டுவேரோடுமுறிந்தது
துஷ்டனைகெட்டமிருகமெல்லாம் தூரச்சென்றுஒளிந்தது
தீயால்ஸ்வரூபம்நசிக்கும்சூடம்போல் இருட்டும்தேகமழிந்தது
குன்றருவிஏரிதடாகக் குளமெங்கும்கனைசொரிந்தது
குமிழியிட்டுவேகமாலையுடன் வைகையாறுஇறைந்தது
ஜாமச்சாவல்சதுர்த்தாள்வீதியில் சாரீரத்துடன்கூவிற்று
கிராமதேவதைகளெல்லாம்எல்லை சுற்றிஆலயம்தாவிற்று
பிராதகாலகுண்டுதொனி பாரெங்கும்பரவியதிர்ந்தது
பாரிஜாதபுஷ்பங்கள்பல பலென்றுபூமியிலுதிர்ந்தது
ஜீவராசிகளெல்லாம்சிந்தை மகிழ்ந்துகண்ணைவிழித்தது
ஸ்ரீபுமான்சங்கம்நீங்கிசுந்தர லிங்கத்தையேதியானித்து
குயில்கோகிலபட்சிகளெல்லாம் கூடுவிட்டுபுறப்பட்டது
குரங்கெல்லாம்குட்டியைக் கட்டிக்கொண்டு
தோப்பெங்கும் கூட்டம்போட்டது
சர்ப்பகூட்டங்களுக்குக்கெருடன் சதாசாதகம்செய்தது
சத்ருபாவனையற்றுசகல உயிரும்உறவாய்ஒத்தது
கோக்கள்குடம்பாலைமடியில் கட்டிகறக்ககூப்பிட்டது
காளைக்கரிபரியெல்லாம் காட்டுக்குமேயப்புறப்பட்டது
சாயாதேவிசகிதமாய்சூரிய உதயமும்ஆகலாச்சுது
சாஸ்வததம்பதிக்குமாத்திரம் கண்விழிகொடுக்காமல்போச்சுது
ஆதிலட்சுமிபதிமுதல்யாரும் ஹரன்ஆக்ஞைக்குள்ளடங்கினாள்
அகமோகங்களற்றவா ளவாள்குல தர்மம்செய்யத்தொடங்கினாள்
அரண்மனைகாரியஸ்தர்களெல்லாம் அலுவலாகிஒய்ந்துநின்றார்
அற்புதபள்ளியரையின்னம்திறவாதிருக்க புன்சிரிப்புகொண்டார்
மெத்தென்னதுகிலாடையைதுரைநடக்கும் தடத்தில்விரித்தார்
முத்துபல்லக்கைஜோடனைசெய்து வைத்துக்கொண்டுவழிபார்த்தார்
தம்பூர்வீணைசுரபத்துவாத்திய தந்திச்செடுக்கைகோதினார்
தாளமேளலயத்தோடுதாசிகள் பாடிசங்கங்களூதினார்
விதியொடுதந்ததாவனம்செய்ய தங்கத்தாழியில்வெந்நீராற்றினார்
வைகைநீராடவெள்ளிவண்டியை பூட்டிவாசலைச்சுற்றினார்
அக்கினிஹோத்திரசாலையில் அந்தணரெல்லாம்அனல்தூண்டினார்
ஆகுதிபொருளாஜராய்வைத்து அய்யன்வராதமுகம்சுண்டினார்
மந்திரிவெகுதந்திரங்களால் சுந்தரருக்கறிவித்தார்

மாடிஜோப்பளாசூஸ்திரங்களையும் ஆட்டிநன்றாய்தெரிவித்தார்
இந்தபாதைகளற்றுஇருவரும் ஜாக்கிரதையவஸ்தைநீங்கினூர்
ஏகமெத்தைமே லணைந்துசொஸ்தமாய்
சுழூத்தியிலே போய்த்தூங்கினூர்
இன்னும்சுமதிஏககாலத்தில் சஹஸ்ரவெடிகளைவிட்டார்
இதற்கும்வாரா திருக்க பொன்
மாலையைப்போயீதென் னென்றுகேட்டார்
சிவாராதனையிலிருப்பவள் சீசூஷாட்களைகெர்ஜித்தாள்
ஸ்ரீமானின்னம்செல்விஸ்தலம்விட்டு வல்லையாவென்றுகர்ச்சித்தாள்
சிதளப்பன்னீர்நனைத்ததிரிதளம் சீக்கிரமாயெழுந்தது
சிங்காரகமிச்சு மேலேபோய்சர்வா வயவத்திலும்விழுந்தது
நாரணன்நயனூர்க்கிதமாமி பூஜைப்பொருளால்முழித்தார்
நாழிபார்த்துஒகோயென்று தேவிக்குதிண்டுவைத்துகரமெடுத்தார்
மேகமேநீயெனும்கெர்ச்சித்தெழுப்ப லாகாதாவென்றுதூறினூர்
மீனுக்ஷிபிரியாள்மகிழமூடுபல் லாக்கின்மேலேவந்தேறினூர்

கசு. கீர்த்தனம்-இ-ம்-பிலஹரி-ரூபகதாளம்.

பல்லவி.

பள்ளிநீங்கிவந்தாரேபிரபு
மெள்ளப்போய்மூடுபல்லாக்கில்
கள்ளனைப்போலேறிக்கொண்டு பள்ளி

அநுபல்லவி.

அள்ளியணிந்தவிபூதி யாவதும்போயழிந்து
அம்பாள்குஜகுங்குமம் முகமதுயெங்கும்உரைந்து
வேஷ்டிகளெல்லாமஞ்சன மாயிருப்பதையறிந்து
வெட்கத்தினூலேஒரு பக்கத்திருட்டில்நுழைந்து ப

சரணங்கள்.

பூசினபுனுகுசாந்து தூசிபோலெங்குமுதிர
பூமலர்கசங்கிகாம்பு இற்றுகழன்றுசிதர
அஷ்டதிசைவாத்தியங்கள் அரண்மனை எங்குமதிர
அருமைமருமகனந்த ரங்கமாமியார்க்கெதிர ப

உத்தமருமத்தினம் உதயமானதையறிந்து
உத்தமயத்தைசித்திர மெத்தைமேல்வைத்துமறந்து
பாஸ்கரன்கூடப்ரகாச மானூரென்றுபயந்து
பரிகாசம்பண்ணும்பாலிய தோழமார்களெல்லாம்நயந்து ப

வேட்டாத்துபிரியாள் வேடிக்கைபார்க்கநின்றுகூட
வித்வாமிசாள்வந்துவேந்தரைக் காணவீடெங்கும்தேட
மேளத்துடனேதேவடி யாள்திருவனந்தல்தேட
மீனாட்சிபிரியாள்இந்தவிதம் தியானம்செய்துகொண்டாட ப

கஎ. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

நித்திரைநீங்கி எழுந்திருந்தாள்
நீலநயன மலர்ந்தாள்

அநுபல்லவி.

சித்திரைமாதப்பருவத்திலே செங்கழுநீரோடை
நீராழிமண்டபமேடையிலே
இராஜருடனேகூடி இராமுழுதும்சொக்கட்டாடி
வேணியில்மலர்கள்வாடி வெடியகாலவெகுமோடி நித்

சரணங்கள்.

கரிமேகமேனிகளெல்லாம் குன்னி-கனமெதுவான
கமலமுகங்களும் கன்னி
ஒட்டியாணங்கள்விட்டு கிள்ளட்டிகையில்கந்தம்பட்டு
கட்டுவடங்களெட்டு பொட்டுஉதிர்ந்துபோய்கெட்டு நித்

விசாலநயனங்கள்சிவந்து விசித்திரமான
திருகம்தெரித்து உதிர்ந்து
பீதாம்பரம்கிழிந்து பின்னலெல்லாம்பிரிந்து
மஞ்சள்மணமகிழ்ந்து மார்பில்முத்துமாலைபதிந்து நித்

குலுங்கிவளைகரத்தில்நழுக கோடையினல்குரு
வேர்வைகொஞ்சம்கண்டுஒழுக
இரத்நராக்கடிஅசங்கி ரவிக்கைமேல்வங்கிநசுங்கி
முன்வைத்ததாண்டாகசங்கி மீனாக்ஷிபிரியாட்காகமதிமயங்கி நித்

கஅ. இ-ம்-ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

குடித்தனமுறைகாண்பித்தாளே
குலமாதர்களைப்போலேமீனாள் குடித்

வெடியுமுன்எழுந்திருந்தோடி வேகவதியில்போய்
விதிவத்தாய் தீர்த்தங்களாடி

தங்கசெண்டி தனிலே கங்காபானிபம்கொணர்ந்து
அக்கினிகோத்ரரநுஷ் டானங்கட்குகூடயிருந்து குடி

நிதயத்தான தர்மங்கள்பண்ணி நன்மைதருவாரைதன்
குலத்திற்குதெய்வமென்றெண்ணி
பெண்களுடன்ஸ்ரீங்கார வனம்போய்பூமலர்கொய்து
பூஜைவைசுதேவாதிகட்கு வந்துசிசூஷைசெய்து குடி

பட்சயம்பார்த்தளித்துலட்சம்பூசுரர்கட்கு
பட்சமுடனேபடைத்து
கணவன்சதசில்வந்து கண்ஜாடைகளாலழைத்து
கவசகிரீடம்தரித்து கச்சேரிக்குபோமென்றுரைத்து குடி

உறன்முறையாருடன்பூரித்து ஒத்துமையாகநன்ருய்
யோகக்ஷேமங்கள் விசாரித்து
மாலைப்பொழுதின்மன்னன் வரஎதிர்நின்றழைத்து
மதுரைமீனாட்சிபிரியாளை தினம்நினைத்து குடி

---

## புஷ்பங்கொண்டுவந்துகொடுத்த கொம்மி.

தேவபாண்டியருந் தினம்போய்சதசிலே
செங்கோல்செலுத்திக் கொலுவிருந்தார்
திவ்யமீனாட்சி முகாரவிந்தத்தைத்
தரிசிக்கமோகித் துள்ளேநிரைந்தார்
கட்டியணேயென்று கிட்டேயழைத்தய்யன்
கையிலேபணப் பையைக்கொடுத்தார்
கடைத்தெருவிலேபோய் காசிபேடாவும்
குசுமமும்வாங்கி வாவென்றுரைத்தார்
சீமான்சொல்லை சிரசில்கொண்டுசேலன்
சித்திரவீதி மளிகைசென்ருன்
சீனித்தீனியும் சிவந்தபழங்களும்
வாங்கிக்கொணர்ந்து கொடுத்துநின்ருன்
மனமொத்தமகத்தான மந்திரிசுமதியை
மறைவுபாஷைகளாலழைத்தார்
மாமிமாளிகைபோய்வாரேன்சபையை
செம்மையாய்விசாரித் திருவென்றுரைத்தார்

சீக்கிரமாகஎழுந் திருந்துசிவ
சுந்தரர்பாதசாரியாய்ச்சென்றார்
செல்வியரண்மனை வாசல்வந்துநல்ல
செண்பகப் பூசெண்டை சூடிக்கொண்டார்
காஞ்சனையாளில்லாம லிருக்கவேணு
மென்றுகருத்துக் குள்ளேநினைந்தார்
கள்ளனைப்போல மெல்லநடந்துகரு
நீலவர்ணிக்குப்பின் வந்திருந்தார்
அந்தவேளையில் யுவதிமீனாட்சியும்
அரசரோடேபேச ஆசைகொண்டாள்
அஞ்சுகங்களோடே கொஞ்சிசுந்தரிப்போ
வருவாரோஜோசியம் சொல்லுஎன்றாள்
நவரத்னமணி கூட்டுக்குள்ளேகிளி
நடனம்செய்து குதித்துக்கொண்டு
நன்றாகப்பாடி பின்னாலேயென்று
நகைத்துமேசொல்லி சிரித்தன்று
சீரிலுயர்ந்தாள் சிந்தைமகிழ்ந்துஜடை
சிங்காரதிசையை நோக்கிப்பார்த்தாள்
சீமையாளும்துரை சோர்ந்திருக்க
சிசுரூஷைநாம்செய்வோ மென்றுநினைத்தாள்
இன்றிந்தவேளையில் வந்ததிசயமென்
றெல்லாசன்னலையும் சாற்றிக்கொண்டாள்
ஏ[illegible]தாராவிருத னென்றிரங்கி
ஏவலாள்போலே எதிரேநின்றாள்
வெள்ளைமல்லைபந் நீரில்நனைத்துவேர்த்த
மேனியைமுன்னே நன்றாய்த்துடைத்தாள்
பில்லைசெந்தங்களைப் பூசிஉலற
விசிறிவந்தசிரமத்தைத்தணித்தாள்
சாதுசிகாமணி மாதுதடாதகா
பதிவிரதாதர்மங்களைக்கண்டார்
சந்திரவிம்பமுகத்தாளேசம
மாயிரென்றருகில் வைத்துக்கொண்டார்

என்னையொருபொருளாய்நினைத்துநீர்
இந்நேரம்வந்ததேதுராஜமன்னு
ஏதுந்தெரியாமல் நான்பலயோசனை
செய்கிறேன்சீக்கிரமாய் சொல்லுமன்னு
மதுரைப்பட்டணமாதரசேஎன்
மனதைப்பரிக்கிறபெண்மயிலே
ஏதுன்னைப்பிரிந்திருக்கத்தெரியாமல்
வந்தேனென்றுநொடித்தார்தையலே
சங்கரியும்புன்சிரிப்புக்கொண்டுஅவர்
அங்கவஸ்திரமுடிப்பையவிழ்த்தாள்
தின்னத்திவ்யவஸ்துகளிருக்கதேவ
ருக்குக்கொடுத்துத் தானும்புசித்தாள்
ஜாதியரும்புயிருக்குதடிஜெக
ஜோதியுனக்கோர்வையென்றுரைத்தார்
சீக்கிரமாகமுடிந்துக்கோடிஜடை
தனிலேயென்றுகையிற்கொடுத்தார்
வாங்கிஅம்மன்வலக்கரத்தால்வீசும்
வாசனைகளைகிரகித்துக்கொண்டாள்
நீங்கினீர்மன்னுபோனவுடனேபுஷ்பம்
ஏதென்றுகேழ்ப்பாளேதோழியென்றாள்
ஈசர்கொணர்ந்துகொடுத்தாரென்றால்
எல்லாருமாய்சேர்ந்து என்னைநொடிப்பார்
இந்தகேலிக்குநான் ஏற்படமாட்டேன்
என்றுஉரைத்தாள் உமைகண்டிப்பாய்
புத்திசாலிபொழிந்தமொழியைப்பொன்
மாலைபுண்ணியசுதன்கேட்டுநன்றாய்
மெத்தசமர்த்திவிநயங்களை
சிலாகித்தோர்யுக்திபண்ணிக்கொண்டார்
படுக்கையுள்ளேபனுசுபோர்வையிலே
பத்திரமாயிதை வைத்துவைநன்னு
பாதிநிசியிலேவந்துநான்நோக்கு
பணிக்காகசூடுறேன்என்றுசொன்னர்

அஞ்சனமணிந்த அழகுகண்ணனை நான்
போய்வாறேனென்று கச்சேரிசென்றார்
காஞ்சனமாலை கண்ணுடிகதவண்டை
யிருந்துயிதுகளை யெல்லாங்கண்டாள்
லஜ்ஜைக்கஞ்சி ரகசியமாய்ப்பூகை
ஒளிக்கிறபெண்ணை வந்துபார்த்தாள்
லட்சணங்களமைந்ததா என்றுசும்மாநான்
சூட்டுகிறேன்வாடி யென்றழைத்தாள்
நீண்டவேணி நிலத்திலேபிறளாமல்
இரத்தினபீடத்தி லிருக்கவைத்தாள்
நிகசிரபரியந்தம் நகைகளைப்
பூட்டிவைத்து பின்னிபூரித்தாள்
பச்சைமேனி பாலசூரியன்போலே
பிரகாசித்து ஒய்யாரமாயிருந்தாள்
கச்சையசைய கதம்பவனராசர்
பய்யனும்வந்து பார்த்துஉகந்தார்
அஷ்டதிக்காண்டவள் பட்டமகிஷியாய்
வீட்டிலடங்கிவேந்த ரோடுவாழ்ந்தாள்
இஷ்டப்படிக்கி எல்லாம்மீனாக்ஷிபிரியாள்
பாடியெல்லோர்க்கும் போதித்திருந்தாள்.

---

மங்களம்

சிலசுந்தரேசருக்கு ஜெயமங்களம்
ஸ்ரீமத்தாலாஸ்யவாசருக்கு சுபமங்களம் சில
லீலாவிலோலருக்கு நீலாகிலம்நின்றவர்க்கு
பாலனைப்பாராள்பவருக்குகோலனைக்கோல்கொண்டவர்க்கு சில
வாழமீனாட்சிசதிக்கு வந்துமேவாய்த்தபதிக்கு
பாமராள்பிரதிவாதிக்கு பக்தஜனகிருபாநிதிக்கு சில
குண்டோதரன்ஆண்டவர்க்குகோர்வைபணிபூண்டவர்க்கு
மாமிவிருந்துண்டவர்க்கு மீனாட்சிபிரியாள்கண்டவர்க்கு சில

பள்ளியறைகீர்த்தனை
முற்றிற்று.

---

ஆக கீர்த்தனை-கஅ-ஆகவிருத்தம்-சு-கொம்மி-சு

சிவமயம்.

ஸ்ரீமத்தடாதகாதேவி தாயாருக்கு

# ஏழுகடலழைத்த கீர்த்தனை.

க-விருத்தம்.

சாதுகாஞ்சனமாலைமகள்வாழ்வைக்கண்டுதினம்மனம்பூரித்தாள்
தீதில்லாதெய்வமுனிவரத்தெரிந்துபாடல்தான்படிக்கவைத்தாள்
காதில்ரத்னபணிகள்மின்னகௌரியைகிரீஜன்கிரீடைக்கழைத்தார்
ஏதுயின்றுஇசையேனென்கயீசர்மோகித்துஒருமொழியுரைத்தார்.

---

க. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

என்னடிநீவெகுஜாலம்செய்குறாய் அடியே மீனலோசனி
என்னைமாரனுயுதத்தண்டைகாண்பிவித்து — என்

அநுபல்லவி.

பின்னடிவைத்தன்னம்போலேநடக்கிறாய் ஏ மீனலோசனை
பிரியமில்லாதவள் போலேயிருக்கிறாய் — என்

சரணங்கள்.

கபடிமோடியிதுநானறிகுவேனடி-ஏ மீனலோசனி
கண்டிப்பாயின்றுபூச் செண்டாலடிப்பேனடி — என்
மீனாட்சிபிரியாளுக்காக என்முன்னேநில்லு-ஏ மீனலோசனி
மெத்தைமேல்வாரேனென்று ஒருவார்த்தைசொல்லு — என்

---

உ. கீர்த்தனம்-இ-ம்-அடாணா-அடதாளம்.

பல்லவி.

ஏனடிக்கடிவந்துவுலாத்துறீர் என்தாய்அந்தப்புறத்தில்
எள்ளளவேனும்இங்கிதந்தெரியாமல் போமோயிந்தவிதத்தில்

அநுபல்லவி.

மானம்மரியாதைகள் மறந்துமனம்
மயங்கிவந்தமன்ணா
மாமியார்காஞ்சனமாலை பூஜைகள்செய்
கிறசாலை இதன்ணா-நீர் — என்

சரணங்கள்.

ஆரும்அறியாமல் அர்த்தராத்திரி
தனிலிங்கேநீர்வாரும்
அப்போதேதேனும் தடைசொன்னால் தப்பாமல்
தெண்டித்தென்னைச்சேரும்நீர் ஏனடி

என்னசொன்னாலும் எல்லாரும்அறியநான்
இங்கேவருகமாட்டேன்
எங்கள்மீனாட்சிபிரியாள் மகிழ மணவாளா
பாளிதோநான்போட்டேன்-நீர் ஏனடி

ரு. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-சாபுதாளம்.

பல்லவி.

போகாதே பெண்மயிலே
ஆகாதுவாபாயிலே-நீ போ

அநுபல்லவி.

வேகுதுஎன் திருமேனி
வீசுதுகெந்தம் உந்தன்வேணி போ

சரணம்.

சோலைச்சாவி கையத்தாரேன்
நீசொன்னபடிநான் செய்கிறேன்-நீ போ

ஸ்ரீமான்பெற்ற செல்வப்பெண்ணே
இந்தசீனிபணி யாரம்பாலுண்ணே-நீ போ

ஆருமற்றஏழை நானுண்டி
உன்னை அண்டி பிழைக்கவந்தேண்டி-நீ போ

மனோகரி மாதுரியபாஷி
மீனாட்சிபிரியாட் காகஎன்னைபோஷி-நீ போ

ஸ்ரீமத் தடாதகாதேவிக்கும் சுந்திரபாண்டியருக்கும்
சம்வாதக்கொம்மி.

இன்னும்சின்ன வார்த்தைவாயிலே
வந்தமட்டும் நீர்சொல்லும்
இந்தகிரகத்தை விட்டுஅந்தப்
புரத்தில்தூரப் போய்நில்லும்

என்னபெருமையடிமீனாட்சி
    என்னஒய்யாரமடி
உன்னைவிடுவேனோடி ஏகாந்த
    ஸ்தலத்திற்கெழுந்திரடி
வேந்தர்மனையில் வந்துவெளியேவா
    வென்று அதட்டுகிறீர்
வேண்டாமிந்த ராவேண்டல்வேணிகளை
    தீண்டியே திட்டுகிறீர்
கோட்டையிலேபிறந்தோர் உன்னைப்போலே
    கோடிகுமாரியுண்டு
நான்கேட்டதில்லை கணவனுடனேசென்
    றுலவமானமென்று
வம்புவளத்தாதீர் கதைகேழ்க்க
    வந்தோரெல்லாம் சிரிக்க
வசந்தமண்டபத்தில் போய்வாறேன்
    மீனாக்ஷிபிரியாள் பூரிக்க

---

ச. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

காஞ்சனமாலையதனைக்கண்டு மனமகிழ்ந்தாள்
கதைகளினிபோதுமிது வென்றெழுந்திருந்தாள்
ஊஞ்சலினுயர்ந்தபட்டுப் பாய்களைப்போட்டாள்
உன்னிதபன்னீரைமதி லெங்கும்வாரிவிட்டாள்
    மஞ்சத்தில்மெத் தைவிரித்தாள்
    மருமகனைவந் தழைத்தாள்
    பெண்ணுக்குப் புத்திஉரைத்தார்
    போடினீயென்று சிரித்தாள் காஞ்

பாதசரம்கொலுசுமாட்டி பீலிகள்குலுங்க
பவுன்மாலைசந்திரகாரம் ஜடைஸ்ரீங்காரம்இலங்க
    செல்விஉள்ளே வந்துநின்றுள்
    சுந்திரரும் சேர்த்துக்கொண்டார்
    பட்சிசம்பால் பழங்களுண்டார்
    பார்த்தம்மன்சந் தோஷங்கொண்டாள் காஞ்

இரத்நதீபங்களைப்பிரகா சமாய்தீண்டினர்
இராஜாத்திகரத்தைப்பிடித் தழைத்துவேண்டினர்
நகைத்துத் தாம்பூலங்கொடுத்தார்
நயந்துவாடி யென்றழைத்தார்
மாமியாரை ஸ்துதித்தார்
மனைவியுடனே ரமித்தார் காஞ்

பத்தியுடனேபிரபு நித்திரைபோனர்
பாஸ்கரன்பிரகாசித்து உதயமாயானர்
வெடிந்தபின் வந்துகூப்பிட்டாள்
வேந்தர்போவென் றனுப்பிவிட்டார்
ரகசியவார்த்தை களைக்கேட்டாள்
ரசவத்தாய்போய் ஜனங்களைக்கேட்டாள் காஞ்

சிலர்களுடன்ஸ்ரீங்கார தோட்டத்தில்நடந்தாள்
சண்பகமுல்லைமருவேர் கொழுந்துகள்கொணர்ந்தாள்
தைலாதிகளை யெடுத்தாள்
தடாதகைகூந்த லில்துடைத்தாள்
வேணியைவாரி யெடுத்தாள்
விதம்விதமாய் மலர்முடித்தாள் காஞ்

பில்லையுடனேவங்காள மஞ்சளையரைத்தாள்
பன்னீரைவென்னீராய்வெள்ளிச் சருவங்களில்வைத்தாள்
அற்புதாப ரணங்கள்பூட்டி
அருமையாகவே னீராட்டி
மீனக்ஷிபிரி யானைக்காட்டி
அனுப்பிவிட்டாளே என்பாட்டி

---

ரு. கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்.

பல்லவி.

மன்னன்முன்னேபோய் நன்ஞகில்லு
மாமிமனையாநோக்கு என்னபயம்வார்த்தைசொல்லு

அநுபல்லவி.

சின்னஞ்சிறுபால்யவயதுனக்குசீவலில்மணம்
சேர்த்துசுருள்கொடுமயக்கி
கோபகுணங்களெல்லாம்போக்கி கலவியால்
கணவனைவசமாக்கி

பரிகாசம்செய்துசிரித்து பஞ்சணேமேலேசுகித்து
யாத்திரைபோகக்குறித்து ராத்திரிபேசுபூரித்து மன்

சரணம்.

பிராணேசாவாருமென்றழை பதிக்குப்பிரியம்
வரும்படிக்கு பணிவிடைசெய்துழை
புத்தியாகபோதித்தேன்பிழை புஷ்பத்தைப்புருஷன்
மார்பிலெரிந்து மனதைக்குழை
லச்சையெல்லாம்தூறவிட்டு உச்சிதமேனியைதொட்டு
அவரிச்சைபோல்திலகமிட்டு பச்சைமீனாட்சிபிரியாளைக்கூட்டு

---

சு. கீர்த்தனம்-இ-ம்-அரிகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

பதியேஇதை யினிகேளும்
பணிவிடைஏவு பாரியைநீராளும் பதியே

அநுபல்லவி.

சதியானமாமி சாகரம்செல்லநேமி
அரசனுப்பூமி ஆளுகிறஎன்சாமி பதி

சரணங்கள்.

கோல்தரித்தகையா புஜம்மறைத்தமெய்யா
மீனாட்சிபிரியாள்ஐய்யா மேலானபக்திசெய்யா பதி

---

எ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-ஏகதாளம்.

பல்லவி.

சிங்காரதோட்டத்து பங்களாவுக்கு
பெண்கள்நாயகமேநாம் போவோம்நீவாடி சிங்

அநுபல்லவி.

தங்கமேஉன்னைப்பெற்ற தாயார்பூரிக்க-செங்
தாமரைவோடையில்சாக ரங்களைஅழைக்க சிங்

சரணங்கள்.

மெலிந்தஎன்மாமி மகிழ்ந்துனீராட
மீனாட்சிபிரியாள் தினம்நினைந்திதைப்பாட சிங்

அ. இ-ம்-ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

ஆருமறியாமல் அருணவுதயத்தில்புஷ்
பாரண்யமீதில்சென்றார்
அற்புதமானஉப்பரிகையின்மேலேறி
இப்பிரியமான மீனாட்சியுடனேநின்றார் ஆரு

அநுபல்லவி.

தேருகரிவிமானம் ஏதுமில்லாமல்பாத
சாரியாகவே பிரபுவந்தார்
தேன்பெருகுமலரை திருக்கரத்தாலெடுத்து
தேவிதிவ்யமாரின் மீதில்மகிழ்ந்தெறிந்தார் ஆரு

காமக்கோடிபீடத்து கனகாம்பரதாரியை
கண்டுமகிழ்ந்து பூரித்தார்
கந்தபசிகாஞ்சன மாலைகண்டுகளிக்க
கதம்பவனத்தில் கடலேழும்வரவழைத்தார் ஆரு

மாண்டமாமனுரை தூண்டிமண்ணுலக
மீதில்கொணர்ந்து காட்டினுர்
மதுரைமீனுட்சிபிரியாள் மனமகிழ்ந்திட
மாமியுடனேனீராட்டி கைலைகூட்டினுர் ஆரு

---

## தேவபாண்டியன் தாசிவீடுபோய்வந்த கொம்மி.

மாப்பிள்ளை துரைமதுரையிலே
மாசிவீதியிலே போகையிலே
தாசியொருத்தியைக் கண்டுகந்தார்
ஈசர்மயங்கி மனையில்வந்தார்

தாயில்லாச்சேயை தனியேவைத்தார்
தத்தாரிதனத் துக் காரம்பித்தார்
போஜனங்களையும் செய்துகொண்டார்
பூஷணங்களுந் தரித்துக்கொண்டார்

கல்லிழைத்தருணுள் போட்டுக்கொண்டார்
காதிலேகடுக்கனிட்டுக் கொண்டார்
சரிகைபனுரஸ் உடுத்திக்கொண்டார்
சால்வையைத்தோளிலே போட்டுக்கொண்டார்

கெண்டைவேஷ்டி எடுத்துக்கொண்டார்
கிராம்பேலம்பாக்கிலை போட்டுக்கொண்டார்
பில்லைவிசேஷமாய் பூசிக்கொண்டார்
முல்லையரும்பை முடித்துக்கொண்டார்

மூத்திரைமோதிர மிட்டுக்கொண்டார்
மூட்டைமொஹராவை கட்டிக்கொண்டார்

சற்றேசந்தடிகட்குப்பயந்தார்
சனங்களில்லாதபோதெழுந்தார்

சந்துவழிகளாலேநுழைந்தார்
சாவதானமாகப் பதுங்கிவந்தார்
கோட்டையில்ராசபுத்திரியைவைத்தார்
குடிசையில்புகுந்து கதவிடித்தார்

தங்கத்தடாதகாதேவியன்று
தன்கணவன்மேலே ஆசைகொண்டு
பள்ளியறையில் வந்துமகிழ்ந்தாள்
வெள்ளிக்கமிச்சின்மேல் வீற்றிருந்தாள்

பத்துநாழிகளானவுடனே
பதிவருகாமல்போனவுடனே
என்மாயமென் றெழுந்திருந்தாள்
இன்பசகியண்டை ஓடிவந்தாள்

எங்கிருந்தாலும் ஈசரைநன்றாய்
இங்கேயழைத்துவா போடிஎன்றாள்
பாயைவிட்டவ ளெழுந்துமுன்னாலே
தாயேநல்லதென்று தேடப்போனாள்

நகரிஎங்கிலும் பார்த்தலுத்தாள்
நாதனைக்காணமலே தவித்தாள்
போகப்பெண்வீதிகளிலும்சென்றாள்
பூபாலரைக்கண் டொளிந்துநின்றாள்

திரும்பியுந்தேவர் கதவிடித்தார்
திறவடிவாய் திறந்துஅழைத்தாள்
கையிலேகாசைக்கொண்டாருமென்றாள்
பையிலேபவு னிருக்குதென்றார்

பத்துபுமானுக்கு மத்தியிலே
சத்தும்பயமச்சமன்னியிலே
காம்பராவுள்ளேபோய் கட்டிவிட்டாள்
சாம்பமூர்த்திக்கு ஆசனம்போட்டாள்

குத்துவிளக்கை கொளுத்திவைத்தாள்
ரத்தினகம்பளத்தை விரித்தாள்
தென்னல்வாடைக்கவ ளாசைப்பட்டாள்
ஜன்னலைநன்றாய் திறந்துவிட்டாள்
முன்னிருந்தோரை எழுப்பிவிட்டாள்
திண்ணையில்போமென்று தள்ளிவிட்டாள்

அதிலொருவ னெழுந்திருந்து
அவளைசாஷ்டாங்கமாய்ப்பணிந்து
பெண்சாதியை யடித்தேனே
பூஷணத்தைபிடுங்கிக் கொடுத்தேனே
திண்டாடவிடாதே என்றழுதான்
தெய்வம்நேக்குநீ என்றுதொழுதான்
திரும்பிஒருவ னோடிவந்து
தேவடியாளை ரொம்பநயந்து
பங்குமனைகளை விற்றேனே
பணத்தையுன்கையில் கொடுத்தேனே
திங்கச்சோறு மற்றேனேயென்றான்
தயவுநீசெய்ய வேணுமென்றான்
பின்னுமொருபையன் பிரலாபித்து
பிராணசகியே பாரென்றழைத்து
சாதிமுறைமையை விட்டேனே
சதமென்றுந்தனைத் தொட்டேனே
காமனல்வாடுகிறே னேயென்றான்
கண்ணேநீகருணை செய்வாயென்றான்
விடனொருவ னோடிவந்து
விசருஎன்னடி என்றிரைந்து
ஆயிரம்வேலியைத் தந்தேனே
அன்னைதந்தையை யிழந்தேனே
மாதேவுன்னை விடுவேனோவென்றான்
மானமில்லாமலே வாடியென்றான்
அத்தனைபேரையு மவள்தட்டி
அநியாயம்செய்து அடித்துதிட்டி
துஷ்டாளேபோங்கடா என்றுரைத்தாள்
வெட்டுவேனென்று வாளுமெடுத்தாள்
கடுக்கனையும் கழட்டிக்கொண்டாள்
உத்தரியத்தையு முரிந்துக்கொண்டாள்
தலைமுண்டாசும் பிடுங்கிக்கொண்டாள்
தள்ளிதாப்பாளையும் போட்டுக்கொண்டாள்
அத்தனைபேரும் அழுததுகண்டு
ஆம்படையானை நினைந்துகொண்டு

வேசியுறவை நன்றாயறிந்தார்
வேட்டாங்களிலே போயிருந்தார்
கண்ணாடியால்முகம் பார்த்துக்கொண்டாள்
நன்றாகசிங்காரஞ் செய்துகொண்டாள்
அத்தர்பரிமளம் பூசிக்கொண்டாள்
மெத்தைமேல்வந்து உட்கார்ந்துகொண்டாள்
பிரபுவேநீரிங்கே வாருமென்றாள்
பவுன்மாலைபண்ணித் தாருமென்றாள்
சீமானேயென்னைச் சேருமென்றாள்
ஜடைநாகம்செய்து தாருமென்றாள்
கணையாழியேன் கண்டியேனென்றாள்
கழற்றிஎன்முன் னெறியுமென்றாள்
பணம்நாழிக்குநூறு வாங்குவேனென்றாள்
பாதிஎண்ணிமுன்னே வையுமென்றாள்
மஞ்சத்திலேறி படுத்துக்கொண்டாள்
ஊஞ்சலைசற்றே நீர்ஆட்டுமென்றாள்
கிரீடாதிபதிகேட்டு சிரித்து
கெட்டுதுவேலை யென்றுநினைத்து
பத்தினியோடே யிருந்தாள்ஒய்வள்
எத்தனையோ உபசாரஞ்செய்வள்
பசித்தபோது அமுதிடுவள்
புசித்தபின்பு வந்துகூடுவள்
வேர்த்தபோது எல்லாம்விசிர்வள்
கார்த்திருந்து கெந்தம்பூசுவள்
அவளைவிட்டிவ ளண்டைதுண்டாய்
வந்ததுபிசகென் றெண்ணிக்கொண்டார்
எந்தவிதத்திலே யானாலும்
இவ்விடம்விட்டு கிளம்பவேணும்
தந்திரம்செய்துபோக வேணுமென்று
தானேயாலோசனை பண்ணிக்கொண்டு
நல்லதுவென்று எழுந்துநின்றார்
கொல்லையிலேபோய் நான்வாறேனென்று
கனவிசையாய் வெளியில்வந்தார்
கரிபோலன்று காலால்நடந்தார்
திரும்பித்திரும்பி பார்த்துக்கொண்டார்
தேவிதெருபோ யிளைப்பாரிகின்றார்

பார்த்திருந்தபாங்கி ஓடிமுன்னால்
பட்டத்தரசிக்கு இதெல்லாம்சொன்னாள்
சாதுசிகாமணி கேட்டுமகிழ்ந்தாள்
சந்தோஷமாய் சயனித்திருந்தாள்
காமனுசர்காமி போலெழுந்து
கூத்தியிடம்போய் கூடாதிருந்து
காவலாட்கஞ்சி வெட்கிப்பயந்தார்
ஆவலோடம்ம னிடத்தில்வந்தார்
வாருமென்றவ ளழைக்காமல்
வந்துவணங்கி சேவிக்காமல்
நித்திரைசேரவள் போல்பிரசந்தா
சற்றேயரைக்கண்ணை மூடியிருந்தாள்
நெட்டறியாமல் நாதன்நடந்தார்
தட்டிஎழுப்பக் கிட்டேதொடர்ந்தார்
சட்டென்றவள் கட்டில்விட்டிறங்கி
தொட்டிடாமல் நில்லென்றுளொதுங்கி
நல்லவர்போல நயந்துகொண்டார்
நாயகியேஎன்ன சொல்லுமென்றார்
சொல்லஎன்ன கிடக்கிறது
உள்ளங்கிடந்து பதைக்கிறது
வீட்டிலேஒண்டியாய் வைத்துவிட்டு
வேசியோடெல்லாம்போய் பேசிவிட்டு
அர்த்தராத்திரி என்னைநினைந்தீர்
கர்த்தனே இங்கே குலாவவந்தீர்
முந்திமுதல்ஜாமம் பூரித்து
மோகித்தவளுடனே சுகித்து
மூன்றும்ஜாமம்போ மென்கவிட்டு
முடங்கவந்தீர்நீ ரென்னையிட்டு
ஆசையுமன்பும் அவளிடத்தில்
கள்ளங்கபடமும் என்னிடத்தில்
கனிச்சமாய்வாழ்ந்த குலத்தை
கனங்குறைத்தடிக்கிறீர் கூத்தே

போதும்போதும் உம்முறவு
தாரும்உன்செங்கோலை இந்திரவு
நித்தியம்படி யரிசிதாரேன்
வெற்றிலைப்பாக்கு வேணதுதாரேன்
கூத்திக்குகாசும்நான் தாரேனன்றாய்
கொண்டங்கேதானேபோங் காணுமென்றாள்
அண்டத்திலுள்ள சீவர்களுக்கு
உண்டிடாகாரம் கற்பித்தவர்க்கு
பண்டந்தாரேனென் றிடகோபித்து
கண்டத்தைப்போல் முகம்கறுத்து
துடித்தகுண்டோ தரர்க்குநிரைய
வடித்தமுது கொடுத்தாயா
பிடித்தெந்தன் முன்னே விட்டுநன்றாய்
படித்ததுமறந் தாயோவென்றார்
இம்மொழிகேட்டு அம்மன்பயந்து
இருந்தகெருவங்க ளும்மறந்து
பிராணநாதரைப் பார்த்துபிரமித்தாள்
குரோதம்விட்டுக்கொண் டாடியழைத்தாள்
நித்தியம்போல யுபசரித்தாள்
பத்தியாய்ப்பாத பூசைமுடித்தாள்
தாசியண்டை நடந்ததைநன்றாய்
நேசமன்னனேக்கு சொல்லுமென்றாள்
தேவடியாள் மோடிகளையன்று
தேவிகேழ்க்கப்பதில் சொல்லிக்கொண்டு
மீனாக்ஷிபிரியாள் பொழுதுபோக
வானைவென்றாளோடு வாழ்ந்தழகாய்

எழுகடலழைத்த கீர்த்தனை

முற்றிற்று.

---

ஆக கீர்த்தனை-அ, விருத்தம்-க, கொம்மி-உ.

உ

சிவமயம்.

# ஸ்ரீமத்தடாதகாதேவி

# மசக்கைப்பாடல்

உக்கிரபாண்டியர்ஜனன லீலையைநானுரைக்க-திவ்ய
விக்கிரகவிநாயககண்ணே நீமுன்வாசுருக்கா
மலையத்துவஜர்மாளிகையில் மதுரைமீனாக்ஷி-மகா
தேவரோடரசாண்டிருந்தாள் ஸ்ரீதன்ஆக்ஷி
சந்ததியைஎண்ணிசாதம் சயணக்களற்றுசவுந்தர
சரீரமெல்லாம் கிருசமாயிளைத்து
பக்திவிநயத்துடன் பதிமுன்போய்நின்றாள்-பாண்டி
யர்க்குபேரனுண்டாகும் வழிபாருமென்றுசொன்னாள்
சுந்தரஸ்ரீமான்சிந்தை மகிழ்ந்ததைக்கேட்டார்-சீக்
கிரமாகசுமதிமந்திரியைக் கூப்பிட்டார்
சத்திரம்சாவடிசாலைக ளெங்கும்கட்டென்றார்-ஷட்
ரசபதார்த்தத்தோ டன்னதானங்கள்கொட்டென்றார்
அஷ்டமிசஷ்டியநேக பட்டினியெடுத்தார்-ஆகமப்
படிசாந்தன் கௌரிபூஜைமுடித்தார்
சதகிருதுசயனம்புத்ர காமேஷ்டிகள்செய்தார்-சகல
சம்பத்துஞ்சதுர்வேதமறையோர்க்கு வாரிந்தார் சகல
கிராமதேவதைகட்குகாப்பு கட்டிப்பூசைபோட்டார்-காளி
கோவில்தோறும்போ யுடுக்கடித்துகுறிகேட்டார்
பிரதிஷ்டைசெய்தஇகாபீஷ்டரை பிரபலபடுத்தினர்-பிராத
காலந்தோறும்போய்தினம் பூஜைநடத்தினர்
கெங்கைசேதுஹிமோத் பத்மகிரீராடினர்-கேட்டார்
வரங்கொடுக்குமீனாட்சி சந்நிதியிலோடினர்
ஆடிவீதிஅடிப்பிரதக்ஷணம் பண்ணிவந்தார்-அபி
ஷேகார்ச்சனை திரவ்ய மமோகமாய்வாரியிந்தார்
நெய்விளக்குநிலைவிளக்கு மாவிளக்கேற்றினர்-சிக
சிரபரியந்தம்பலபணி செய்துசாற்றினர்
முன்னேமுளைத்தமூலலிங்கத் தண்டைபோய்நின்றார்-முத்து
போலொருபுத்திரனைத் தாருமென்றுவேண்டிக் கொண்டார்

சோமாஸ்கந்தருக்குதேர் திருவிழாநடத்தினர்-ஜோசி
யாளை வரவழைத்து கரரேகையைக்காட்டினர்
திரிகாலந்தெரிந்தோர்ஜாதக யோகத்தைப்பார்த்தார்-திவ்ய
மானதனயன்வருநா ளிதென் றுஉரைத்தார்
பூரித்துபிறகுதாம்போய்பூசுராள் போஜனம்செய்தாள்-புஷ்ப
மெத்தைமேல்மகாதேவருடன் மருவியேஒய்தாள்
பாலசுப்பிரமணியரதை பார்த்துபூரித்தார்-பள்ளி
யறையில்பாதிரிசியில்போய் கெர்ப்பத்தில்பிரவேசித்தார்
மதுரைமீனமயங்கிமகா மசக்கைகள்கொண்டாள்-மலே
யத்துவஜனுற்றர் ஊராருபசரித்துநின்றுள்
கேசரிபாத்துபேடா பூரிபேணிசெய்தார்-கிளி
மொழிகமலகரத்தில் கணிசமாய்கொணர்ந்திந்தார்
ஆவலுடன்அம்மனதை வாங்கிபுசித்தாள்-அசலக்
கனிதேனுக்காசிக் கரசரோரடேயுரைத்தாள்
மனைவிகேட்டுவாய்மூடுமுன்னதை எட்டில்குறித்தார்-மண்
மீதிலுலாவும்மன்னர் களுக்கெல்லாமறிவித்தார்
தேசராசரெல்லாம்திருமுகத்தை வாசித்தார்-தேவ
பாண்டியர்பத்தினிகெர்ப்ப மென்றெழுதியிருக்கபூரித்தார்
அங்குள்ள அபுரூபவஸ்துக்களை யனுப்பித்தாள்-அதி
லுயர்ந்ததேன்பாகுசெங்கரும்பு செல்விபுசித்தாள்
தேவிதினதேகத்துக்குத் தென்னல்வாயுவீசினர்-திகபா
லாள்தினம்வந்துதேவை ஏதென் றுபேசினர்
கப்பம்காமதேனுவை இந்திரனனுப்பினா-குபே
ரன்புஷ்பகவிமானத்தை போவென்றெழுப்பினர்
பிரமதகணம்பதினலுலோகமெங்கும் போனர்-பல
காய்கனிகிழங்கு கொணர்ந்துகொடுத்தெதிர்நின் ஞர்
புத்துருக்குநெய்யில்பெண்கள் பொரிதினுசுபொரித்தார்-புளி
யோரைபொங்கல்சம்பாதத்தியோன்னம் புசியென் றுரைத்தார்
லட்சம்தோழிமார்களையும் பட்சமாய்கூட்டிக்கொண்டாள்-நிலா
போஜனம்வனபோஜனம் நீர்போஜனமுண்டாள்
இட்டலிபுட்டுவடைதிறட்டி பாலைத்தின்னுள்-எட்டாம்
மாடிமேலேகுட்டிகளோடுலாவியேநின்னுள்
கடற்குட்பட்டபந்துபிரியாள் பார்க்கவந்துகூடினர்-ஸ்கந்த
ரைகெர்ப்பத்தில்வசித் தழகைகண்டுகொண்டாடினர்
மசக்கைசீராட்டிமகமல் ஆடையுடுத்தினர்
தினந்தோறும்விருந்திட்டு திருநாள்நடத்தினர்

நாழிக்கொருதினுசுநகைக ளலங்கரித்தார்-நடபாவாடை
மேல்நடத்திநவரத்தின தூணுஞ்சலில்வைத்தார்
முத்துத்ரிதியம்வைத்திளந்துளிர் அத்தைகொடுத்தாள்-சித்
தம்மைமார்மிதியடிமடிமேல் வைத்துபிடித்தாள்
வேர்த்தபோதுவெண்சாமரங்க ளாலேவீசினார்-அதை
பார்த்தபாங்கிபரிந்து பரிமளத்தைப்பூசினார்
இராஜபரமேஸ்வரியா யெல்லோரும்பாவித்தார்-இராக்
காலங்களிலும்பிரியமனம் வராமல்சேவித்தார்
காலாகாலம்பாராமல்கேட்பதை செய்துகொடுத்தார்-கால்
நிமிஷம்கூடகண்மூடாமல் கெர்ப்பணியைபோஷித்தார்
ஷண்முகர்உள்ளிருந்துயர்ந்த உணவைத்தூண்டினார்
சர்வகாலமும்சங்கரிதிவ்ய தீனியைத்தண்டினார்
அடிக்கடியில்லாததைகொண்டாவென் றெல்லோரையும்வைதாள்
அதிசயகர்ப்பந்தரித் தபிநயஜாலம்செய்தாள்
கப்பலேறிகாரியஸ்தாள் சீமைகளில்சென்றார்-கரு
மாயம்நயம்பாராமல் வாங்கிவந்துவைத்துநின்றார்
உண்டுபண்ணிரட்சித்தழிப்பவள் உற்றதைப்பார்த்தால்-ஒன்றும்
அறியாதவள்போலது நாமங்களைவிசாரித்தாள்
சாரகண்டம்சீனிநவரசபலமுத் தோட்சேர்த்துண்டாள்-சமயல்
ஆசாமியைசனகமுத்த மாதுரியம்செய்யென்றாள்
வேலைவித்வான்விசித்ரவேகல் வகைகளைக்கேட்டார்-வெள்ளி
அடுப்பில்பொன்னுருளி வைத்தகில்தீயிட்டார்
கூட்டல்வாட்டல்துவட்டல் திறமாய்ப்பாட்டுஎடுத்தார்-கேட்ட
கெடுவில்தாட்டெடுத்து கூட்டமாய்கொண்டுகொடுத்தார்
வாசனைவார்ப்பதிரசத்தை வாகினிவாரினாள்-வயிற்றில்
வேலன்விளையாடும் வேதையால்விஷமாய்தூறினாள்
தீவிலிருந்துவந்ததையும்வேண்டு மென்றிரைந்தாள்-தோழி
மாரைநான்பொறுக்கேண்டி பிள்ளைநோயென்றுரைத்தாள்
ஜன்னல்மாடிபெஞ்சியைவிட்டு கீழேஇறங்கினாள்-ஸ்ரீமான்
சுந்தரரால்வந்த தென்றுறங்கினாள்
அன்னம்பானியம்தெம்பாய் கால்கரம்ஒய்ந்துபடுத்தாள்-அதி
ரூபலாவண்யசரீரம் இளைத்துவெளுத்தாள்
கணவனைக்கண்டுகசந்து தூரஒதுங்கினாள்-கபாட
பந்தனம்செய்து காணமல்பதுங்கினாள்

ஏகதாநவிருதன்என்செய்வோ மென்றுதிகைத்தார்-ஏகாந்
தஸ்தலத்தில்போய் புழுதிபூமியில்படுத்தார்
சர்வாலயசுந்தரிசுகத்தை சிந்தித்துகாந்தினர்-சாயா
தேவிசகாயம்சால மந்தமலர்போல்மாந்தினர்
இந்தவிபரீதத்தைமந்திரி மார்கள்பார்த்தார்-இதற்
கென்னசெய்யலாமென் றெல்லோருமாயாலோசித்தார்
பொன்னுடுமண்ணாட்டி னுள்ள போகமாதர்க்காள்விட்டார்-புருஷ
தீராள்பயந்துபோய்பாய்ந்தா ராய்ந்துபார்த்துகூப்பிட்டாள்
திறவடிவாள்ஒருகோடிபேர் உகந்தோடிவந்தார்-தேவ
பாண்டியர்படுக்கையில்போய் ஆடிப்பாடியிருந்தார்
மேருவும்மெழுகாயிளகும் சரமொழிசொன்னர்-மெத்தை
மேலேஅத்தர்பன்னீரைவீசி சற்றுநேரம்நின்றார்
மன்னாஎங்களைமருவ வாவென்றுகூவினர்-மஞ்சம்
ஏறிஆலிங்கனஞ்செய்து அணைக்கத்தாவினர்
கட்டிலின்மேல்கனதீரன் கலீரென்றுசிரித்தார்-காஞ்சனை
பெண்ணொழியயாரையுங் கருதேனென்றுரைத்தார்
கல்லுகூடசில்லாகும்உங்கள் ரூபத்தைக்கண்டால்-கன்னி
மார்களேநான் காமதகனரடியென்றார்
பாலயுவதிகளவரை பார்க்கப்பயந்தார்-பரப்
பிர்மமேகாப்பாற்றுமென்று பாதத்தில்விழுந்தார்
தங்கமேனிப்பெண்களேயிங்கே வாவென்றழைத்தார்-தாசிகள்
தர்மங்களையெல்லாம் தயவாவுரைத்தார்
நாளென்றுக்கேகபுமானுடே கூடியேநின்றால்நாலு
பதவிகளும்உங்களண்டை நாடிவருமென்றார்
தேவிதிக்விஜயம்செய்துசேர்த்த தனத்தையெடுத்தார்-தேங்
காய்பழம்பாக்கிலைபணிகள் வைத்துகொடுத்தார்
ரம்பைபோல்ரூபமாதரெல்லாம் ரொம்பசிலாகித்தார்-ரதம்
ஏறிப்போயன்பர்கட் கிடங்கொடுத்துபதம்பெற்றார்
இராஜீதராணி பாங்கிகளையெண்ணினர்-ரதி
பதிபாதையோடுபார் பரிபாலனம்பண்ணினர்
மாறனல்மெலிந்தமாப் பிள்ளையைமாமிமார்பார்த்தார்-மக
ளண்டைபோய்முத்தேகாவென்று சித்தம்மைமாரழைத்தார்
கணவன்களையானர் போய்வாவென்றவாள்சொன்னள்-கம
லக்கண்கனியாய்கோபித்து காதில்வாங்காமல்நின்னள்
அன்னைவாலேமுன்னேநில்லாதே போவென்றுகெஞ்சினள்-ஆகா
தென்றபாட்டிமார் களையடிக்கமிஞ்சினள்

தாபத்தினுல்சீதள சலக்கரைபோனுள்-தரித்த
கருதெரிக்குமோவென் ருலோசித்தாள்தானுய்

பிள்ளையாசையாலேமெள்ள உள்ளேநடந்தாள்-வெள்ளை
யெடுத்துவேர்வை துடைக்க பன்னீரில்கலந்துகொணர்ந்தாள்

தள்ளாமையாய்வருதே என்செய்வேனென்று-ஏங்கினுள்
யெடுக்காமலென்னேரமும் தங்கைமச்சியில்தூங்கினுள்

கன்னிகாபுரிமாதர்கூடி கண்ணைநீக்கினுர்-களை
யாற்றிவைப்போமென்று கனபிரியமாதூக்கினுர்

வற்றலாடியுடன்துணையோ டமுதுவாயிலூட்டினுள்-வள
வஞ்சனத்தையும்வஞ்சி வேண்டாமென்றுகுமட்டினுள்

பட்சணம்லட்சம்விதம் எடுத்துஎண்ணினுர்-பாணி•
யிலொன்றைக்கொடுத் துண்ணென்றுபசாரம்பண்ணினுர்

குஞ்சாலாடுஅல்வாஜிலேபியை கொஞ்சமெடுத்தாள்-குமரன்
ஜேஷ்டையாலெதிர்க்க குஞ்சுகளண்டைக்கொடுத்தாள்

பஞ்சாமிர்தம்பாயசம்பால் தேன்ததிசேகரித்தாள்-பானகம்
நீர்மோர்இளநீரானும் குடியென்றுகொடுத்தார்

போஷிப்போவரபிடத்துத்தள்ளி போவென்றதட்டினுள்-போஜ
னப்பொருளைப்பிடுங்கி பூமியில்வீசிக்கொட்டினுள்

ஆடையாபரணங்களை யெடுத்துஎறிந்தாள்-ஆரும்
இல்லாதஅந்தப்புரத்தில்போய் அலைந்துதிரிந்தாள்

மாதமொன்றுஇரண்டுமூன்று நாளாகிபொருத்தாள்
கைதெளிந்துமலர் நயனங்களைமுழித்தாள்

அந்திக்குளிநீராடயலங்காரம் செய்துகொண்டாள்-அன்
னம்போலசைந்துநடந்து அன்னகசாலைபோய்நின்ருள்

பசிக்குதம்மாபுசித்துபோதாச்சு போடுங்கோளென்ருள்-பாக
சாகங்களை தண்டி திருப்தியாய் வாங்கியுண்டாள்

பால்குழம்பைஆற்றிப்பதப் படுத்திகுடித்தாள்-பாக்
கேலாசாதிபத்திரிசுருள் மென்றுகடித்தாள்

நாகரீகமாய்கொத்தரும்பு கூந்தலில்முடித்தாள்
நயனஸ்தலம்போய்வலிய கதவையிடித்தாள்

துகிலணையில்தூங்குகின்றராசன் யாரென்றுவிசாரித்து-துரை
சானிதானென்றுகொஞ்சம் நகைசெய்தறிவித்தாள்

மர்ப்பிள்ளைமுறைப்படிமோடியாய் போடியென்ருர்-மகா
சதிநயந்துசரணம்சுவாமி திறவும்நீயென்ருள்

கோமளாகாரப்பெண்குற லோசையைக்கேட்டார்-கோபம்
குழுகிகுதூகலமாய்வெள்ளி விசைவிலடக்கிவிட்டார்

சரசலீலக்குசுகமாய்வந்த சமுகத்தைப்பார்த்தார்-சொல்ல
ஒன்றுய்நாவெழாமல் சோப்பாவில்மோகித்தார்

மீனரத்நம்மெத்தைமேலே வருகலாமென்றுர்-மேக
மேனிஇதுசமயமென்று லிங்கனம்செய்துக்கொண்டாள்

முன்னடந்தமோடிகளை எடுத்துநொடித்தார்-முல்லை
பந்தைபன்னீரில்நனைத்து மோகனுமேலேயடித்தார்

கச்சேரிகாரியம்கணக் கெல்லாம்மறந்தார்-கல்
யாணியொடுவசனித்து எந்நேரமும்காயாடிக்கொண்டிருந்தார்

ஐந்தாமாதம்பிறந்துடன் அத்தைமார்கள்பூரித்தார்-அதி
வைபவமாய்வளைகாப்பு அடுக்கயத்தனித்தார்

நாறுகோடிவராகன் செலவுக்குதிட்டம்போட்டார்-உருக்
கியடித்தபொன்னோலை எழுதிஊரெங்கும்விடுத்தார்

கால்நிறுத்திகாஞ்சனை மண்டபம்ஜோடித்தார்-கதம்
பவளத்தைகைலாச கிரிபோலேயடித்தார்

வளையால்வெகுபேர்களுக் கச்சாரம்கொடுத்தார்-வேலை
யுயர்ந்ததாய்வெகுவண்டியில் கொண்டாவென்றுரைத்தார்

செல்லமருமாட்குசீவி செண்பகைவைத்தார்-சிர
சரணபரியந்தம்சிறப்பாய் சிங்காரித்தார்

மூவர்தேவர்முனிவர்மானிடரெல்லாம்வந்தார்-முகூர்த்தம்
பார்த்துமுத்துபந்தலில் மணைமேல்வைத்துமகிழ்ந்தார்

வேதகீதவாத்திய ஓசைவிஸ்வமதிர-வளைச்
செட்டவெகுபேர்வந்தார் விசாலாட்சிக்கெதிரே

கருநீலம்வைத்தருகுபோல் வளையடுக்கினுர்-கல்லி
ழைத்தபொன்காப்பை பூட்டிவிடாமல்மடக்கினுர்

முன்கையில்மின்னல்போல்பிரகாச வைரத்தோடாபோட்டார்-மோ
ரம்நெளிஉச்சிதமாய் பச்சைவைத்திழைத்திட்டார் [தி

இரத்நதீபம்ஏற்றி முத்தாலாத்தியெடுத்தார்-ராசா
பத்கிரிஷ்பத்கிமார் கூடியாசீர்வதித்தார்

வந்தயுவதிகட்குவளை வங்கிபட்டாளிபோட்டார்-வார்த்
தீபவஞ்சிமார்கட்குகாப்பு கொலுசுகளிட்டார்

சம்பங்கிதயிலம்தாதிக ளெல்லோர்க்கும்தேய்த்தார்-ஸ்நானம்
செய்துசிறப்பாய்ஊர் கோலம்வந்துபுசித்தார்

தென்மதுரைபெண்டுக ளெல்லோரும்கூடினுர்-தினந்
தினம்மீனுளைகொலுவில் வைத்துப்பாடினுர்

உதிக்கன்போல்உமைஉயர் தாசனத்தில்சொலித்தார்-உன்னி
பாங்காவைஒருகோடிபேர் ஓயாமலசைத்தார்
சந்திரகாந்தவளையோட்சத்தில் விளங்கும்காட்சியை-சன
காதிமத்தியிலிருந்துசாமி பார்த்தார்மீனாட்சியை
ஆரண்யவாசிகட்கறிக்கை யிட்டாத்திலழைத்தார்-ஆறு
மாதம்பிறந்துடன்ஸ்ரீமந்தம் செய்யமுகூர்த்தம்வைத்தார்
மாசிவீதியெங்கும்ரசத ஸ்தம்பம்மாட்டினார்-மேரு
கிட்டஸ்வர்னத்தகடு எடுத்துமேலொட்டினார்
மாளிகையில்மனோரண்ய திட்டாணிகள்போட்டார்-மதில்
திண்ணைதெருவெங்கும் திறமாய்க்கோலமிட்டார்
முல்லைமல்லிமருமாவிலை தோரணம்தொடுத்தார்-மேள
தாளமோதத்தரமாயென் னேரமும்அடித்தார்
சுந்தரன்தேவியோடுமங்கள நீராடிமகிழ்ந்தார்-இந்தி
ரதம்பதிபோலே காசனத்திலிருந்தார்
அந்தணர்சாந்திரமந்திர செபம்செய்துதெரிசித்தார்
அமிர்தகொடத்தைஎடுத்தையன் அம்பாட்குவருஷித்தார்
சரிகைச்சேலைசால்வை சபையிலோதிக்கொடுத்தார்
சதாநந்தரனுக்கிரகத்தா லதைவாங்கியுடுத்தார்
தங்கதடாதகைதக தகென்றுமின்னினாள்-தலை
யாற்றிதயிலம்ஏற்றிதாதி தரமாய்பின்னினாள்
மாலைமாற்றிபாணிபற்றி மன்னன்மறைகேட்டுநின்றார்-மந்த
காசமாய்மீனாள்கடைக்கண்ணால் கண்டுசந்தோஷங்கொண்டாள்
பொன்னமியல்கன்னிகா யரும்புநறுக்கினார்-புது
வஸ்திரத்திலதையெடுத்து வைத்துமுருக்கினார்
சப்தரிஷிகள்கூடி சாமகானம்பொழிந்தார்-சந்திர
வம்சராசாத்திக்குசுவாமி மூக்குப்பிழிந்தார்
வாணிவீணைவாசித்துப்பாடி ஆலாத்தியெடுத்தாள்
வரபிரஸ்தாள்சோபனாட்சதைகளை வாரியிரைத்தாள்
சாஸ்திரசம்பிரதாயப்படி ஸ்ரீமந்தம்செய்தார்-சதுர்
வர்ணத்தாரும்சிலாகித்து சந்தோஷித்துஒய்தார்
சாக்குசாக்காய்தூக்குமட்டும் தெட்சணைகொடுத்தார்-சம்பிர
மமாய்விருந்திட்டு ஆசீர்வாதம்முடித்தார்
பூச்சூட்டபுடவைபுதினு சாய்நெய்பச்சொன்னார்-புறந்
திரன்சிப்பியைசபை சோடியென்றுநின்னார்
சாயரட்சைவேளையில் சாதிசுகந்தம்எடுத்தார்-சபா
மண்டபத்தில்சதகுசும கூடாரம்சோடித்தார்

லட்சதீபங்கோடிகுளோபுகளேத்தினர்-லய
ஞயாசனம்பரப்பி வாசனநீர்ஊத்தினர்

மங்களதிரவியம்தங்கதாம் பாளங்களில்வைத்தார்-மன
வத்திகளைச்சித்திரச் செடிகளில்கோர்த்தார்

ராஜீவலோசனிக்கு ரதிரேசாதைத்தாள்-ருக்
கடிசடைநாகம்சுட்டி பட்டம்பிரபைவைத்தாள்

லக்ஷ்மிசரஸ்வதிபக்கத்தில் கைலாகுகொடுத்தார்-லாய
காய்விருதோடுவந்து மாணிக்கமணேமேலேவைத்தார்

சகலவாத்தியங்களையும்ஏக காலத்திலடித்தார்
சலங்கைசப்திக்கரம்பையர் அபிநயத்தோடுநடித்தார்

சுரபுரிநாரியர்சுபசோபனம்பாடினர்-சோரைப்
பார்க்கவெகுபேர்களங்கேவந்துகூடினர்

பாலபிம்பபட்டுபார்ப்போர் பிரமிக்கக்கட்டினள்-பதம்
சுதனிரத்நதாண்டாவைத்து பணிக்காய்பூச்சூட்டினள்

சுன்னமாயிழைத்தமஞ்சளால் சதிநலங்கிட்டாள்
சாயாதேவிரோகணியோடு சுழற்றிசாமரம்போட்டாள்

சங்குச்சுண்ணும்பிட்டு சுருள்ஸ்வாகாகொடுத்தாள்
ஸமகாரன்சகிதம்பலம் தாலத்திலேந்திப்பிடித்தாள்

நிருதிநேசிநேரால் கண்ணுடிகள்காட்டினள்-நீர்
கிரைவான்நேத்ரிவாசனே பன்னீர்வீசிக்கொட்டினள்

வாயுவாழ்மயில்மாயமாய் ஒயாமல்விசிறினள்-வாச
ஞஇடிபொடிஉழை சிவ்விலிப்சரினள்

அம்மான்மார்எல்லோர்க்கும் செம்மையாய்சம்மானம்கொடுத்தார்-
யும்அயனும்பிரதப பலதானம்எடுத்தார் [அரி

அளகையரசன்அடியாள் ரத்னரத்திசுற்றினள்-அதற்
கடுத்ததிக்கோன்பத்தினிஎழுந்தெல்லோரையும்வாழ்த்தினள்

பத்தினியைபாண்டியதுரை பரிகாசமாய்கூப்பிட்டார்
சகியேஉனக்கென்னடிவேணும் சொல்லென்றுகேட்டார்

தந்தைதாயற்றசேயென்றுநன்றய் வைத்துதாங்கினர்
ஆரம்பூண்டாலுநோமென்று நொடித்துவாங்கினர்

உண்டுநின்றவண்டலூதி ஒடிஅடித்தார்-உட
மையில்படிந்தகெந்தகத்தை யுதிர்த்துதுடைத்தார்

உத்தரியத்தால்நெற்றிவேர்வை ஒத்திவீசினர்-ஒரு
திருஷ்டிகளும்தங்காமல் திருநீர்திலகம்பூசினர்

இன்றுமுதல்உன்னிஷ்டம்போலிருவென்றுஉரைத்தார்-எல்லா
சகிகளையுமழைத்துஅவள் வசமாய்ஒப்பித்தார்
சகலசாமகிரியையும்ஆஜராய் வைத்துக்கொண்டார்-சர்வ
காலமும்நாள்நக்ஷத்திரங்களைப் பார்த்துநின்றார்
ஏழெட்டொன்பதாய்பத்தாமாதம் பொன்னரைபிரவேசித்தாள்-இந்
திரனிலும்சூரனுயொரு சுகுமாரனைப்பெற்றாள்
சுகபிரஸவசுதனைசுருக்காய் வாரியெடுத்தாள்-சுரந்த
ஸ்தன்னியத்தைபானம்பண்ணென்று பாலருக்குக்கொடுத்தாள்
மைந்தன்முகாரவிந்தத்தை பார்த்துமகிழ்ந்தாள்-மடி
விட்டிறக்காமல்என் னேரமும்வைத்திருந்தாள்
சகலலோகரும்சகுனகுறி கண்டுசந்தோஷித்தார்-சரச்
சண்பகம்அமரர்கள் ஆகாசத்தில்வருஷித்தார்
சந்தனக்குழம்பால்வாசல் ததும்பமெழுகிட்டார்-சன்னதி
குங்குமத்தைக்கொணர்ந்து சதுரமாய்கோலம்போட்டார்
அஷ்டதசவாத்தியத்தோ டதிரவெடிகள்நெரித்தார்-ஆலா
ஸ்யநகரியெங்கும்கல்யாணம் சொல்லியழைத்தார்
சாரிசாரியாய்வந்தெல்லோரும் சிசுவைப்போய்கண்டார்-சர்வ
லட்சணசம்பன்னனென்றொருவர்க்கொருவர் சொல்லிக்கொண்
வேந்தர்வேதியர்சூழவைகையில் போய்முழுக்கிட்டார்-விரை [டார்
வானம்சர்க்கரைமுக்கனி முடிப்பொடுவாரிவிட்டார்
பத்துநாளும்பவானிக்குபல பக்ஷயான்னம்போட்டார்-பட்
டணத்தையலங்கரித்துபேர துரைக்குகாப்பிட்டார்
திங்கள்குலதிலகன்தீக்ஷைகள் தீர்த்துக்கொண்டார்-தேரே
ரித்தெருவலம்வந்துதென் னவன்வீடுபோய்நின்றார்
புண்ணியாசனம்செய்து போஜனபூரிகொடுத்தார்-புத்ர
உற்சவதிருநாளை பூர்த்தியாகமுடித்தார்
சக்திசந்ததிக்குசர்வாபரணம் இட்டெடுத்தாள்-சர்வே
சனண்டையிலேசமயம் பார்த்துகொடுத்தாள்
பொன்மாலைலோகித்ரனை வாங்கிசீராட்டினர்-புஜத்
தாலேயெடுத்துதித்திப்புத் தீனியையூட்டினர்
உத்தமன்அவயங்களை ஒத்தவர்பார்த்தார்-உக்கிர
பாண்டியராசரென்று திருநாமந்தரித்தார்
தைலமிட்டுசீராட்டி தாலாட்டென்றுகொடுத்தார்
தங்கத்தளவரிசை எங்கும்படித்தார்

ஓடிநடைபழகஉயர்ந்தமேடை ஜோடித்தார்-விளை
யாடவெள்ளிதங்கவிம்பம் விசித்ரமாய்வார்ப்பித்தார்
சுயஜாதிபலஜாதிகளுக்கும் சொல்லியழைத்தார்-சோதி
மயமாகஎங்கும்சொர்ண தீபம்ஏத்திவைத்தார்
கூடத்தில்கோமேதகமணி கொட்டில்பூட்டினுள்-கோடி
கொய்துவிரித்துகுழந்தையை போட்டுதாலாட்டினுள்
மின்மதிபோல்முருகன் விளையாடிவந்தார்-மீன
க்ஷிபிரியாள்ஜெனன மூலமுளையைப்பிளந்தார்

மசக்கைப்பாடல்-முற்றிற்று.

---

உ

சிவமயம்.

ஸ்ரீமத்தடாதகாதேவி

# புத்திரோற்சவ கீர்த்தனை.

## தாலாட்டு.

கண்ணுடிபோல்மின்னும் கபோலர் கண்டதெல்லாம்
அநித்யமென்றதியாகிக்கநகூலா
என்மஞ்சள்காணிஆளவந்தபாலா-பொன்மஞ்சமீதில்
சயனஞ்செய்துகேள் பழனிவேலா

தேவபாண்டியர் ஜேஷ்டபுத்ரா-தென்மதுரை
மன்னன்மலையத்துவசன்-லோகித்ரா
கன்னியர்கட்கேற்ற சற்பாத்ரா-கால்கிமிஷம்
கண்மூடடா செங்கமலநேத்ரா

தந்தையைப்போல்பேரெடுப்பாயா-தந்தம்தெரிய
சதாசிரித்தவாயா
நாலெட்டுலட்சண மமைந்தகாயா-நாளைவிளை
யாடலாம்நித்திரை போடாஎன்சேயா

சந்த்ரவம்சம்செழிக்க வந்தமைந்தா-சகஸ்ரனே
பத்மத்திலுயர்ந்த முகாரவிந்தா
சுசனர்களுக்குவெகு சொந்தா-சொர்ணமய
தொட்டிலிலேதூங்கடா-ஏஸ்கந்தா

உக்கிரபாண்டியராசனே உல்லாசா-ஒருகோடி
தவமிருந்துபெற்றேன் நான் தமாஷா
சுக்லபட்சமதிபோல்வளர் பிரகாசா-சூரசுப்ர
மண்யனேசுழுப்திபோ சர்வேசா

காஞ்சனமாலை கனபேரா-கற்பக
நாட்டரசனிலேயு மதிதீரா
மீனாக்ஷிபிரியாள்மகிழ் முத்துகுமரா-மெத்தைமேலே
நித்ரைபோடா நித்தியாலங்காரா

---

உ. கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

வேண்டாமடாபாலா அழவேண்டாமடாபாலா

அநுபல்லவி.

கண்டகுஞ்சுகளைப்போய் சண்டைபிடிக்காதே
தொண்டாஸ்துதிகொண்ட நீலகண்டர்பேரைக்கெடுக்காதே வே

சரணம்.

பாட்டிப்பதினுயிரோர்பால் ஊட்டவாராள்பாரு
வீட்டுதோழமாருடன் விஷமம்செய்யாமலேசேரு வே

அன்னப்பிராசனம்ஆயுள் ஓமம்சௌளமாச்சு
அருமைமைந்தாஉனக்கின் றைந்தாமாண்டுபிறந்துபோச்சு வே

மீனாக்ஷிபிரியாள்மனம் மகிழ்ந்துதினம்பாட
மேல்மெத்தைமேல்ஏறிப்போய் நான்வேடிக்கைகாட்டுறேன்வாடா

---

ந. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஓஉக்கிரகுமாரா
ஓடிவாடா நீஎன்நேரா ஓஉக்கிரகுமாரா

அநுபல்லவி.

சர்க்கரைகாரா கண்டம்தருகிறேன்
சூஸ்திரவிம்ப விசையைத்தருகிறேன்
சட்டையேற்றி சக்கரம்சொருகிறேன்
சாமார்த்தியமாயுன்னை எடுக்கவருகிறேன் ஓஉக்

சரணங்கள்.

பாண்டியவம்சம் வளரவந்தவித்தே
பட்டத்துயானைமேலே ஏற்றுவேன்வரமுத்தே
எந்தன்மடியின்மேலே இரடாசற்றே
உந்தன்மீனாக்ஷிபிரியாட் குன்னனைபித்தே ஒஉக்

---

தடாதகாதேவி தநயனை லாலனஞ்செய்த கொம்மி.

நல்மதுரையில் நாகரீகம்நன்றாய்
செய்துகொண்டாள் மீனாட்சி

அற்புதமாய்வளை ஆத்திரத்தில்வரவழைத்
தடுக்கிக்கொண்டாள் மீனாட்சி

காந்திவீசக்கல் லிழைத்தகங்கணம்
ஒட்டிக்கொண்டாள் மீனாட்சி

தயிலம்தராமாய் வடித்துதலை
தடவிக்கொண்டாள் மீனாட்சி

விசித்ரசீவியால் விழுந்தசிணுக்கை
விடுத்துக்கொண்டாள் மீனாட்சி

நிலைக்கண்ணாடிக்கு நேராகப்போய்
நின்றுக்கொண்டாள் மீனாட்சி

பொன்வரிதோன்றிட பிரித்துமகுடு
பிளந்துக்கொண்டாள் மீனாட்சி

வளர்ந்தவேணியை வகுத்துவகையாய்
வாரிகொண்டாள் மீனாட்சி

சுந்தரம்மோகிக்க சொருக்குசோராம்
போட்டுக்கொண்டாள் மீனாட்சி

வைரபில்லையை வலப்பாரிசத்தில்
வைத்துக்கொண்டாள் மீனாட்சி

அந்திநேரத்திலே அரும்பழகாய்
தைத்துக்கொண்டாள் மீனாட்சி

வாசனைப்பொடியை வாரிக்குழைத்து
தேய்த்துக்கொண்டாள் மீனாட்சி

பங்காளமஞ்சளைப் பூசிவெந்நீர்
வீசிக்கொண்டாள் மீனாட்சி

காசிபனாஸ் கருக்காயிடையில்
கட்டிக்கொண்டாள் மீனாட்சி

பூஷணம்புதிதாய் பொன்பெட்டி திறந்து
பூட்டிக்கொண்டாள் மீனாட்சி

இமையிரண்டிலும் இசைவாய் அஞ்சனம்
எழுதிக்கொண்டாள் மீனாட்சி

மதிமுகத்திலே மங்களகுங்குமம்
இட்டுக்கொண்டாள் மீனாட்சி

புனுகுசந்தனம் அத்தர் பன்னீர்விட்டு
பூசிக்கொண்டாள் மீனாட்சி

உன்னிதபோசனம் அன்னை மனையிலே
மன்னுக்கிட்டுக்கொண்டாள் மீனாட்சி

சாயகுருச்சிமேல் சரிகைதிண்டிலே
சாய்ந்துக்கொண்டாள் மீனாட்சி

துளிர்பத்திரி தூள்களுடனே
போட்டுக்கொண்டாள் மீனாட்சி

வேர்த்தமேனியை வெள்ளிபங்காவாலே
விசிறிக்கொண்டாள் மீனாட்சி

வீட்டுவேலைகளை கூப்பிட்டெல்லோரையும்
கேட்டுவிசாரித்தாள் மீனாட்சி

வேண்டியதுகளை வாரிப்போங்களென்று
வைப்புகள்சொன்னாள் மீனாட்சி

பக்கத்திலுலாவும் பிராணசகிகளை
பாலனைப்பாரென்றாள் மீனாட்சி

சதுர்சபைவிட்டு சேயோடுசீமான்வர
சிரித்துசேவித்தாள் மீனாட்சி

ஏகாசனத்திலே லோகநாதருடன்
நாணமற்றிருந்தாள் மீனாட்சி

இருவர்மத்தியி லிருக்கும்ஸ்கந்தரை
எடுத்துக்கொண்டாள் மீனாட்சி

உக்கிரபாண்டியர்க்கு உச்சிபின்னிஸ்தன்ய
முண்ணக்கொடுத்தாள் மீனாட்சி

வற்றகாய்ச்சிசீனி சேர்த்துக்ஷீரம்வர
வாங்கிஊட்டினாள் மீனாட்சி

முத்துக்குமாரனை முத்தமிட்டணைத்து
மெத்தசீராட்டினாள் மீனாட்சி

மன்னன்மடிமேலே மைந்தனைவைத்து
மதலைச்சொல்கேட்டாள் மீனாட்சி

கண்ணைக்காட்டிநன்றாய் கணவனையுங்கேள்வி
கேளுங்களென்றாள் மீனாட்சி

சோலைச்சாவிகளை சோரஞ்செய்யென்று
சுதனுக்குசொன்னாள் மீனாட்சி

கப்பணங்களெண்ணி கணக்குபார்க்கையில்
ஸ்கந்தனால்கிரகித்தாள் மீனாட்சி

தோட்டத்திறவுகோலை தூக்கித்தோழியண்டை
கொடுத்துத்துறத்தினாள் மீனாட்சி

ஏழைச்சிவனாரை ஏய்த்துஎடுத்து
மயக்கிவாதித்தாள் மீனாட்சி

தங்கத்தொட்டிலில் தனயனைப்போடென்று
தாதியைத்தூண்டினாள் மீனாட்சி

தமுக்குசாமான்கள் திட்டப்படிவர
தான்போய்தாப்பாளிட்டாள் மீனாட்சி

சற்றேராங்கியுடன் அத்தரைமெத்தைமேல்
அள்ளித்தெளித்தாள் மீனாட்சி

நாதன்நல்லமுகங் கோணிடக்கண்டு
குளிர்ந்துபயந்தாள் மீனாட்சி

வெள்ளிச்சாவிகளை விட்டெறியாமலே
கெட்டிசெய்துக்கொண்டாள் மீனாட்சி

வசீகரம்பண்ண வாய்திறவாமலே
ஆலோசித்துப்பார்த்தாள் மீனாட்சி

தாயற்றதநயாள் தாங்கள்தள்ளுமென்று
தாழ்ந்துதண்டனிட்டாள் மீனாட்சி

மாமிபிரியத்தினால் மறந்துமன்னன்
மருவவரக்கண்டாள் மீனாட்சி

குருகுசங்கிலி முத்துகுலுங்கிட
வெற்றிலையெடுத்தாள் மீனாட்சி

சங்குத்ரிதியங்கள் சாற்றிசந்தனம்
பூசிக்கொடுத்தாள் மீனாட்சி

சந்திரிகையிலே சங்கருடன்

சதுரங்கமாடினள் மீனாட்சி

படுக்கையுள்ளேபோய் பஞ்சணைமீதில்
பதியுடன்கூடினள் மீனாட்சி

கொத்தூஞ்சலின்மேலே ஒற்றுமையாகி
நித்தியம்நீதிபோதித்தாள் மீனாட்சி

பொழுதுவிடிந்தவுடன் பிள்ளையுடனே
புஷ்பாரண்யம்சென்றாள் மீனாட்சி

சகிஜனத்துடன் சிங்காரத்தோட்டம்
சுற்றிபார்வையிட்டாள் மீனாட்சி

அண்டவஸ்துக்களில் ஒன்றும்நீங்கிடாமல்
நின்றிடக்கண்டாள் மீனாட்சி

காணிக்கொருமைந்தன் மாணிக்கம்போல்வர
மண்மேலாசைகொண்டாள் மீனாட்சி

தோடகயிங்கரியங்களை கூப்பிட்டிவ்விடம்
தோப்பாகவேணுமென்றாள் மீனாட்சி

குன்றருவியிலேகுளித்து குலதெய்வங்களைக்
கும்பிட்டாள் மீனாட்சி

காலைப்போதிலேயே காடுகிரிகளைகளைந்து
முளையிட்டாள் மீனாட்சி

தழைந்தோப்பிலே தாமரைத்தடாக
மேடைமேல்தங்கினள் மீனாட்சி

மேகமண்டலம்போய் காய்த்தகிளைகனிக்கு
லக்குவைத்தாள் மீனாட்சி

பாணக்குறிவிட்டு எய்துபழங்களை
கொய்துவிட்டாள் மீனாட்சி

சொர்ணச்சூரிக்கையால் சேதித்துச்செல்வ
மகனுக்குக்கொடுத்தாள் மீனாட்சி

நாவிற்கினியதை தின்றுநாளிரே
உதகங்குடித்தாள் மீனாட்சி

மலைமதுஉண்டு மலர்ந்தமலர்
எடுத்துமுடித்தாள் மீனாட்சி

பதிபாகசாலை வருமுன்போக
பல்லாக்கின்மேலேறினள் மீனாட்சி

தேவபாண்டியதுரை தேரேறிவர
தெரிந்துஇறங்கினள் மீனாட்சி

பங்களாவிலேபோய் பெண்களோடன்றங்கே
டேராவடித்தாள் மீனாட்சி
வைதீகர்களைவருந்தி வனபோசன
மளித்தாள் மீனாட்சி
உப்பரிமேலேபோய் உக்கிரனுக்கு
உடமைகள்பூட்டினாள் மீனாட்சி
திருவடிகளில்திவ்விய தண்டைசிலம்
புகளையிட்டாள் மீனாட்சி
சாதிரத்னமணி சதங்கையருணாள்
குலுங்ககட்டினாள் மீனாட்சி
மின்னலொளிபோலே மேனியாய்காப்புக்
கொலுசுகையி லிட்டாள் மீனாட்சி
ஆணிவயிரங்கள் இழைத்தஆழிஅங்
குலியிலிட்டாள் மீனாட்சி
பத்துவிடத்திலே முத்தாரமாணிக்கப்
பதக்கம்பூட்டினாள் மீனாட்சி
ஆதித்தியன்போலே சாந்தியாய்கர்ணா
பரணங்களிட்டாள் மீனாட்சி
ஜோதிமயமாகசுட்டி பட்டம்பிரபைகள்
வைத்துப்பின்னினாள் மீனாட்சி
இராஜப்பையனுக்கு ரோஜாப்புசூட்டி
வாசனைகள்பூசினாள் மீனாட்சி
கொஞ்சிகொஞ்சிபோர்த்து கூர்முழிக்குமை
சாந்துகளிட்டாள் மீனாட்சி
சின்னசால்வைகட்டி முன்னாலேவிட்டு
பின்னாலேநடந்தாள் மீனாட்சி
தென்னலடிக்கையில் மன்னனோடுமாஞ்சோலை
யிலேஉலாவினாள் மீனாட்சி
போகிஎல்லோரையும் புஷ்பவிமானஞ்
ஜோடனைசெய்யென்றாள் மீனாட்சி
செங்கமலோடையில் சந்திஜெபம்செய்து
வந்ததிலேறினாள் மீனாட்சி
பார்ப்பவர்கள்மனம் பசைபோலொட்டிட
பட்டணம்சென்றாள் மீனாட்சி
கன்னிகாபுரியில் கர்ணாமிர்தகோக்ஷி
கண்காட்சியோடுவந்தாள் மீனாட்சி

அறுபதினுயிர சம்வத்ஸரம்அந்தப்
புரத்தில்வாழ்ந்தாள் மீனாட்சி
நாளைக்கொருதடம் போய்பார்வையிட்டு
குடித்தனங்கைக்கொண்டாள் மீனாட்சி
யாகிகள்யோகிகள் போகியெல்லோருக்கும்
போகவிட்டாள்ஒலே மீனாட்சி
பட்டணம்சோதித்து பாலனைப்பிரபலமாய்
படிக்கவைத்தாள் மீனாட்சி
போசனம்பூரிகள் பூரித்துமேறும்ப
வாரிவாரிவிட்டாள் மீனாட்சி
இரத்னபெஞ்சுமேலே புத்ரனைவைத்து
புஸ்தகங்கொடுத்தாள்_மீனாட்சி
தங்கநாற்காலிமேல் தானெழுந்திருந்து
தப்புகள்கேட்டாள் மீனாட்சி
பாட்டன்பாரையாள போட்டுகணக்கு
கேட்டுக்கொர்ச்சித்தாள் மீனாட்சி
வாணிவல்லபனை வேதங்கேட்டவேலன்
வாசிப்பைசிலாகித்தாள் மீனாட்சி
சுப்பிரமணியனுக்கு சொர்ணஜோடுசட்டை
கிசார்போட்டாள் மீனாட்சி
அம்புவில்லுகளை கொடுத்துஅமர்வித்தை
யுபதேசித்தாள் மீனாட்சி
சண்முகர்சங்கரர் சகிதமாய்சந்த்ர
குலத்தில்வசித்தாள் மீனாட்சி
மஞ்சக்காணிசிறை மினாட்சிபிரியாள்
மகிழரசாண்டாள் மீனாட்சி

---

ச. கீர்த்தனம்-இ-ம-கல்யாணி-சாப்புதாளம்.

பல்லவி.

பாண்டியர்பேரன்பாலாளுடனே படித்தார்
பந்தைக்கையிலெடுத்தார் பர்வதம்வனம்
ஆறெங்கும்போயடித்தார்

அநுபல்லவி.

தண்டிபுஸ்தகங்களை தேடித்தேடியெடுத்தார்
தெரிந்தவர்போல படித்தார்

வீராளுடன்வேட்டை யாடவில்லைப்பிடித்தார்
வேங்கைசிம்பங்களை தேங்காய்போலேயுடைத்தார் பா

சரணங்கள்.

உக்கிரகுமாரர்யௌவன திசையையடைந்தார்
உள்ளம்மார ஞலுடைந்தார்
மாதாகண்டுமன்னன் செவியைதினங்குடைந்தாள்
மதுரைமீனாட்சிபிரியாள் கவிவலையாய்முடிந்தாள் பா

ரு. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சோமசேகரஞ்சொர்ப்பனம் போய்சொன்னார்-சுந்த
ரேசர்மைந்தருக்குன் சுதனியைக்கொடுவென்றுநின்றார்

அநுபல்லவி.

தாமசம்செய்யாமலென் தாசஎழுந்திருந்தார்
தங்கரதத்திலேறி அங்கேநீபோயென்றுரைத்தார் சோ

மதுரைமீனாட்சிபிரி யாள்மகிழ்ந்துகவிகட்ட
மஞ்சத்தின்மேல்தூங்குகின்ற மன்னனை எழுப்பிவிட்டார் சோ

## உக்கிரபாண்டியர் விவாகசொம்மி.

விக்கிரர்விவாகத்தைநான்பாட-உமையாள்
மூத்தமைந்தனேவாகூட
காலையில்கண்ணைவிழித்தார்காந்தி
மதியைஸ்ரீங்காரித்தெடுத்தார்
தேரின்மேலேஏற்றிக்கொண்டார்-திவ்ய
வாத்தியங்களைகோஷியென்றார்
மனைவியெல்லோரையும்கூப்பிட்டார்-மறை
யோர்கள்சூழப்புறப்பட்டார்
காடுநாடுதாண்டிச்சென்றார்-கன்னி
காபுரிநகரிபோய்நின்றார்
சந்திரர்எதிர்சென்றழைத்தார்-சம்பந்தி
ராசருக்குபசரித்தார்
காஞ்சனமாலைபெண்பூரித்தாள்-காந்தி
மதிலக்ஷணங்களை சோதித்தாள்

மதுரையைநன்றுயலங்கரித்தாள்-மகனை
மனையாளுடன் மணைமேல்வைத்தாள்

கதிர்குலவேந்தன் கண்டெடாய்த்தார்-காந்தி
மதியைக்கன்னிகாதானம்செய்தார்

ஸ்ரீதனம்ரொம்பஎடுத்தார்-செல்வ
மகட்குவரிசைகொடுத்தார்

மாப்பிள்ளைபையன்பூரித்தார்-மறை
வத்தாய்மங்கில்யம்தரித்தார்

மாதாபிதாவைசேவித்தார்-மாமன்
மாமிவிருந்தைபுசித்தார்

ஊஞ்சலாடிநலங்கிட்டார்-உயர்த்
தியாய்ஊர்வலம்விட்டார்

பள்ளியறைக்குள்ளேபோனார்-பாலும்
நீரும்போலேஉறவானார்

யௌராச்சியமுடிபூண்டார்-ஏக
சக்கிரந்திறமையாயாண்டார்

சங்கரன்நீதியுரைத்தார்-சர்வ
ஆயுதங்களையுங்கொடுத்தார்

தந்தைதாய்போலபேரெடுத்தார்-தான
தர்மத்தைதினம்விசாரித்தார்

காந்திமதிமாமியண்டையிருந்தாள்-கண்ணும்
இமையும்போலே ஒத்துவாழ்ந்தாள்

மாட்டுப்பெண்ணைமகிழ்ந்துதொட்டாள்-மாணிக்க
உடைமைகளைப்பண்ணியிட்டாள்

பூவைத்துப்பின்னிபூரித்தாள்-பெண்ணைப்
போல்நன்றாய்வைத்துபோஷித்தாள்

கணவனோடுகுலாவமகிழ்ந்தாள்-கசானா
சாவியைக்கொடுத்துஉகந்தாள்

மீனாட்சிபிரியாளைநினைத்தாள்-மூல
லிங்கத்தில்போய்மன்னனோடுமறைந்தாள்

௬௱. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மங்களம்யாவர்கட்கும்
மண்விண்ணில்வாழும் சராசரங்களுக்கும்

அநுபல்லவி.

சங்கரர்குடும்பிகட்கும் சரஸ்வதிசதுர்முகர்க்கும்
ரதிபதிதாய்தந்தைக்கும் ராசகரத்துள்ளோர்க்கும் மங்

சரணங்கள்.

மாமிகாஞ்சனமாலைக்கும் மலையத்துவசபூபதிக்கும்
காந்தசுமதிமந்திரிக்கும் சதானந்தகுருமுனிக்கும்
எழுகடல்பொற்றாமரைக்கும் இன்பவேகவதிநதிக்கும்
மேருஅணுவுக்குட்பட்டோர்க்கும் மீனாட்சிபிரியாட்கும் மங்

லாலி.

ஆனைமுகர்க்குஅமரர்கள் நேசர்க்குலாலிலாலி
வல்லபையோடுசெல்லாப கணேசர்க்குலாலிலாலி
வள்ளியுடன்கூடிபள்ளி கொள்வாருக்குலாலிலாலி
தெய்வயானையைதினமணையும் வேலர்க்குலாலிலாலி
காலனைவென்றகைலாச கிரீசர்க்குலாலிலாலி
சிலைனக்காத்தசிவசுந்த ரேசர்க்குலாலிலாலி
எங்கும்நிறைந்தஇன்ப மீனாட்சிசதிக்குலாலிலாலி
இமாசலவம்சபாவன பார்வதிக்குலாலிலாலி
சேஷர்மீதில்சயனித்த சங்கேசர்க்குலாலிலாலி
ஸ்ரீதுளசிதரித்தஸ்ரீநி வாசர்க்குலாலிலாலி
க்ஷீரத்தில்வந்துசெனித்த ஸ்ரீலட்சுமிக்குலாலிலாலி
சீதளமானசந்த்ர சகோதரிக்குலாலிலாலி
சனகாதிபோற்றும் சதுர்முகவர்க்குலாலிலாலி
சத்தியலோகத்துசதுர்வேதப் பிரசங்கர்க்குலாலிலாலி
சமஸ்தகிரந்தங்களினும் சதாபித்யமானவாணிக்குலாலிலாலி
சாரீரஸ்வரம்பாடும் வீணாவாணிக்குலாலிலாலி
மேருஅணுவுக்குட்பட்ட சராசரங்கட்குலாலிலாலி
மீனாட்சிபிரியாள் பக்தியாலேபாடினலாலிலாலி

ஸ்ரீமத்தடாதகாதேவி
திருவவதாரம்முதல் புத்திரோற்சவ கீர்த்தனை பரியந்தம்
முற்றிற்று.

ஆக கீர்த்தனை-சு-கொம்மி-க.

---

சிவமயம்.

ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர்பேரில்

# பலவிதகீர்த்தனை.

## விநாயகர் துதி.

க. கீர்த்தனம்-இ-ம்-மத்தியமாவதி-ஏகதாளம்.

பல்லவி.

முந்திஎன் தந்தைமைந்தாவந்தருள்நீசெய்எந்த
வேளையிலெதைப்பாடினுமதிகள்தந்தருள்நீசெய்

அநுபல்லவி.

சந்த்ரசேகரபுத்ரா சகலவேதாந்தசாஸ்திரா
வெகுவிநோதசரித்ரா வேண்டுமன்பர்கள்மித்திரா மு

சரணங்கள்.

அருமையறிந்தஅண்ணை ஆதரவாகப்பார்கண்ணை
சகோதரிசேர்ந்திருக்கஉண்ண சாஸ்திரமுனக்கார்சொன்னார் மு

பக்திபலத்தையூட்டு பகினியைவந்துசீராட்டு
அன்னைதந்தையைக்காட்டு உன்னிதபதத்தில்கூட்டு மு

வானவர்க்கதிபதியே வாரும்கணபதியே
கிரிமீனாட்சிபிரியையே காருங்கிருபாநிதியே மு

## சுப்பிரமணியர் துதி.

உ. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி.

ஸ்கந்தாநீவந்துதுணைசெய்கூட
உன்தாய்கிருதியைப்பாட ஸ்கந்தா

அநுபல்லவி.

மந்தமதியால்நானு னைக்குந்தமிழ்க்குநல்ல
எந்தபெரியோரும் இசைவிதென்றேற்றுக்கொள்ள

சரணங்கள்.

முத்துமீனாட்சிப்பிரியாள் சித்தசஞ்சலம்போக்கி
ஒத்துகடைக்கண்ணாலே பார்த்துப்பத்தியுண்டாக்கி ஸ்க

## கௌரிஸ்துதி.

ந. கீர்த்தனம்-இ-ம்-அரிகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

கௌரிகிருபைசெய்கிருதிபாடஓ
கௌரிகிருபைசெய்கிருதிபாட
கிலேசங்கள்போக்கி
கிரீசர்க்காளாக்கி கௌரி

அநுபல்லவி.

தவரற்றுப்பாட தாசர்கள்கொண்டாட
என்மதிமேலோட இங்கிருநீகூட-கௌரி

சரணங்கள்.

கபடங்களில்லா கருணையாகிநல்லாய்
மீனாட்சிபிரியாள்கல்லா கலியிசைவாய்ச்சொல்வாய்-கௌரி

## மீனாட்சிஸ்துதிகள்.

ச. கீர்த்தனம்-இ-ம்-பிலகரி-மிசுரஜாதி-ரூபகம்.

பல்லவி.

சேவிக்கிறேன் கண்ணால்பாரீர்

அநுபல்லவி.

மன்னன்மலையத்துவஜன் பெண்ணேராசகுமாரி
தாவிவுன்பாதம்பிடித்து
செந்தாமரைமலரை மனதாலர்ச்சித்து
அர்க்கியபாத்தியம்சமர்ப்பித்து
ஆதிபராசக்திதாயேவுன்னைக்குறித்து சே

சரணங்கள்.

அம்பாளுன்னாலயந்தேடி
உன்னடியார்திருவடித்தூளை என்சிரசில்சூடி
கெங்காதரரையுங்கொண்டாடி
கௌரிதேவியே உன்கீர்த்திகளைநான்பாடி சே

தேவபாண்டியர் பிராணேசி
தென்மதுராபுரிதன்னி லெந்நாளும்வாசி
கோடிபாஸ்கரப்பிரகாசி
கோமளாங்கத்தில் சுகந்தங்களைநான்பூசி
சூலசக்ராயுதபாணி
ஸ்வர்ணச்சிலையோடொத்த அதிரூபலாவணி

பந்தங்கள் தீர்க்கும்பவானி-உந்தன்
சரணத்தினுல்மீனுட்சி பிரியாளேசேர்த்தணி சே

ரு. கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

மீனலோசனியே உன்னே நம்பினேன்-மின்னலொளி
போல்சோபித்துமன்னன்மதுரையில்வாழும் மீன

அநுபல்லவி.

ஈனர்கட்கெட்டாதபாக்கியம் எல்லோர்க்குமேலானசிலாக்கியம்
உன்திவ்யசரித்திரவாக்கியம் உத்தமர்கட்குமனேக்கியம்
எந்தனுக்கதுவேசாரம் உந்தனுல்வந்தஉபகாரம்
ஆதிசிவனேடேதாரம் சோதியேஎல்லாமுன்பாரம்-மீன

சரணங்கள்.

மங்களமிருதுவசனி மகரமீனலோசனி
தாசர்கள்பாபநாசனி சகலசீவபோஷணி
ஸ்ரீகண்டநேத்ரசந்த்ரிகா சிலர்கள்தொழும்ஜண்டிகா
மலேயத்வஜன்கன்னிகா மதுராபுரியம்பிகா-மீன

சுந்தரபாண்டியதுரைக்கு சிந்தைமகிழமயக்கி
எந்தன்மேல்பிரியமுண்டாக்கி அந்தரங்கவன்மம்போக்கி
இந்திரவிமானத்தில்வந்து இருவரும்சேவைகள்தந்து
என்னேடுமனதையாராய்ந்து உன்பாதத்தில்கட்டுவரிந்து-மீன

பாண்டியராசன்குமாரி வேண்டிவந்தோர்க்குபகாரி
தீண்டினேனுன்நாமங்கூறி ஏண்டியென்றெந்தனேவாரி
உன்னிருகையாலணேத்து என்னிருவினேயைத்தீர்த்து
மேலானபதத்திற்சேர்த்து மீனுட்சிபிரியாளேக்காப்பாற்று-மீன

சு. கீர்த்தனம்-இ-ம்-புன்னுகவராளி-சாப்புதாளம்.

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தேன் தேவிமீனுட்சிஉன்னே
நான்சதா தேடித்திரிந்தேன்

அநுபல்லவி.

நாடிஉந்தன்பதத்தை நாகரீகவைபவத்தை
நித்தியானந்தசுகத்தை சத்திநானுன்சாலோகத்தை-தே

சரணங்கள்.

ஸ்தலங்கண்டிடத்திலோடி திவ்யதீர்த்தங்களாடி
பெரியோருடனேகூடி பிரியமாய்நானுன்னேபாடி-தே

வேறேஸ்மரணே பண்ணேன் வேதமணியென்கண்ணே
சந்திரவம்சத்துப்பெண்ணே சர்வகாலமும்உன்னை-தே

ஷட்குணங்களையும்விட்டு சாஸ்திரபுராணங்கேட்டு
பார்க்கவெகுஆசைப்பட்டு பக்திவலையைப்போட்டு-தே

காளமேகவர்ணமே காரணமனோசரமே
ஆதிபராபரமே அகண்டபரிபூரணமே-தே

எங்கும்நிறைந்ததாயே எங்கண்முன்வருவாயே
தங்கமீனாட்சிபிரியையே இங்கேவந்துகார்நீயே-தே

---

எ. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

இந்திரவிமானத்தின்மேல் இருக்கும்என்தாயேயுனை
எப்போநான்வந்துகாண்பேனோ-உன்பொற்பாதநிழலில்

அநுபல்லவி.

சந்த்ரவம்சராஜாத்தி சரணமென்றோரைநத்தி
பரமபதமுக்தி கொடுக்கபக்தர்களைப்பற்றி

சரணங்கள்.

மூநூர்களுங்கொண்டாட முனிவர்சங்கீதம்பாட
சங்கரருடன்கூட சகிகள்வெண்சாமரம்போட இ

வையகத்தோர்கள்உய்ய வானவர்கள்பூசைசெய்ய
உயர்ந்தாசனத்தில்மெய்யக யோகியர்மனதெல்லாம்நைய இ

விஸ்வகர்மாவினாலே செய்தவிமானத்தின்மேலே
சகஸ்திராதியைப்போலே மகரஸ்தலமதுரையிலே இ

சனகாதிகள்புகழ சதுர்வேதமும்புகழ
மகத்துக்களும்மகிழ மாயைதன்னை தானேயிகழ இ

தேவபாண்டியர்பாரி தென்மதுரைக்கலங்காரி
மலையத்துவஜன்குமாரி மீனாட்சிபிரியாளொய்யாரி இ

---

அ. கீர்த்தனம்-இ-ம்-அரிகாம்போதி-அடதாளசாப்பு.

பல்லவி.

சரணம்சரணம் சரணம்மீனாட்சி
தரணும்தரணும் தரணுமுன்காக்ஷி சரணம்

அநுபல்லவி.

கரணங்கேழ்க்காதா கண்ணிமைமீக்காதா
நெஞ்சமிரங்காதா இந்தபஞ்சைமீதில்வாதா சா

சரணங்கள்.

ஸ்ரீங்காரஜோர்வேணி ஸ்ரீமத்கல்யாணி
செங்கோல்முத்ராபாணி சீமையாண்டராணி சா

இராஜதராங்கி இராயசங்கள்நீங்கி
மீனாட்சிபிரியாளைத்தாங்கி வைத்தாள்ளச்சோங்கி சா

---

கூ. கீர்த்தனம்-இ-ம்-சோகவராளி-ஏகதாளம்.

பல்லவி.

மீனாஉன்னைநம்பினேன்
நாணய்மனம்நம்பினேன்

அநுபல்லவி.

தீனாள்தொழும்சற்கிரியே தேவபாண்டியப்பிரியே மீ

சரணங்கள்.

காமநாசக்காரணி காலபாசநிவாரணி மீ
மாவர்சூழ்கயிலை மலைமேல்வாழும்மயிலே மீ
மலையத்துவஜன் துரைச்சி மீனாட்சிபிரியாளை இச்சி மீ

கo. கீர்த்தனம்-இ-ம்-பியாகு-சாபுதாளம்.

பல்லவி.

பவபந்தமோசனி-என்னைப்
பார்மீனலோசனி

அநுபல்லவி.

தவவடிவர்க்கு மனத்தாபங்களை நீக்கு
எந்தனிடவாக்குக் கிரங்கிலையோநோக்கு பவ

சரணங்கள்.

சந்த்ரகுலசுந்தரி சர்வாத்தசுதந்தரி
நித்தியம்நிரந்தரி நீவந்தென்னை ஆதரி பவ

பிறந்திறந்தலைந்தேன் உன்பொன்னடிமறந்தேன்
ஷட்குணங்களாலேநொந்தேன் உன்சந்நிதியில்வந்தேன் பவ

நம்பினோர்பிரதாபம் ஞானரத்னதீபம்
மீனாட்சிபிரியாள்மேல்கோபம் கொண்டாலுனக்கென்னலாபம்

### கக. கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

பாராமலிருப்பது பாண்டியமகாராஜன்
பணத்தின்பெருமையடி உனக்கம்மா
தனத்தின்பெருமையடி

அநுபல்லவி.

வாராமலேநீவெகு ராங்கியோடிருக்கிறாய்
வருந்துமடி பாலை அந் யாயமாய்ச்செருக்கிறாய்
சுதனியென்றுஎண்ணாமல் சோதனையோபார்க்கிறாய்
ஈஜனசுலபியென்றபேரை வீணாஎன்கெடுக்கிறாய் பா

சரணங்கள்.

பெற்றதாய்கைபொருளெல்லாம் புத்திரிகள்வசந்தாண்டி
பரியாலோசனைபண்ணா மலிருக்கிறாயேண்டி
அல்லும்பகலும்மீனாட்சி பிரியாளுந்தனை அண்டி
அழைக்கவாராம லிருக்கிறாயேசண்டி பா

---

### கஉ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபிரூபகம்.

பல்லவி.

கார்த்துக்கிடக்கிறேன் காஞ்சனமாலை
தன்னிகையேயுன் காலின்கீழே நீ
வீற்றிருக்கிறாய் வேந்தன்பெண்ணாகையாலே
விசித்ரவிமானத்தின்மேலேநான் கார்

அநுபல்லவி.

நாத்திளமையானபயிர்போல்நியாயம்
பிடிக்காநீசிறு இளமதலை
நெல்லென்றுநின்றிரந்தாலதுதருமோ-அது
போல்நீநயனமாளினஇதனே கார்

சரணங்கள்.

என்ராஜாங்கமிருந்தாலும்-உந்தனுக்
கிந்தொய்யாரம் உதவாது
எதுமறியாஏழைமீனாட்சிபிரியாள்வதை
வருந்தாமல்விலகிப்போகாது கார்

கங. கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகம்.

பல்லவி.

சரணம்சரணமம்மாசரணம் ஸ்ரீமீனாட்சி
தரணும்உந்தன் காட்சி

அநுபல்லவி.

ஒருநாளும்பிரியாத உலகேசருடன்கூடி
உகந்து என்னைநாடி
ஏழையடியா ளிருக்கிறயிடந்தேடி
இந்த்ரவிமானத்திலேறி எந்தனெதிரேவாடி சர

சரணங்கள்.

ஆலாஸ்யநகரியில் அசலம்போலமர்ந்தஆதி
அறியேநான் . உன்ஜோதி
எந்நேரமும்எனக்குன் மன்னனைப்பொருளாய்போதி
இன்பவெள்ளம்மீனாட்சி பிரியாளுக்குநீசாதி சர

---

கச. கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

மின்னவொளியே என்னைக்காரு
மீனநயனத்தால் கிருபையுடன்பாரு

அநுபல்லவி.

அன்னை தந்தையநேக பந்துப்பிரியர்கள்நீயே
சொன்னேன்சுதனியே சுருக்காய்போவினன் தாயே மி

சரணங்கள்.

கடலில்கப்பலைப்போலே தோன்றியழிந்தலுத்தேன்
கருணாவதியேநீ கதியென்றுனையடுத்தேன் மி
மதுரைமீனாட்சிபிரி யாட்குபத்திபாலூட்டு
மலரடிதொட்டிலில் மனதைவிட்டுதாலாட்டு மி

---

கரு. கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்.

பல்லவி.

என்மெய்யைகொள்ளைபரித்ததேவி-மீனாட்சிபிரியாள்
பொய்யைசற்றேயணை நீதாவி என்

அநுபல்லவி.

வையகம்ஈன்றஜகன்மாதா வருந்தும் ஏழையடியாள்
மீதில்உனக்குளென்ன வாதா

நான்சொல்லுவதெல்லாம் சுத்தரூதா-சுந்தரேச
பிரியைஸ்துக்கமதிநீதா
தனைரோதனம் தாய்க்குப்பாபம்
தாசர்மீனக் குண்டோகோபம்
எண்ணியாகப் பிழைக்குசாபம்
இடாமல்வந்து தீரெனதாபம்-என்

சரணங்கள்.

சுரசபலமிருந்தசோலை கனியையுண்ண
சுகம்வெளிப்புறப்பட்டாப்போல
உப்பத்திலயமற்றபாலே-உன்னிதமாக
இழைத்தரத்னரதத்தின்மேலே
ஏறியென் னெதிரேவந்து
இருதயம் தனில்புகுந்து
பக்திரத்நத் தைஈந்து
பாதுகாரூசோ ரர்க்கிருந்து-என்

கசு. கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

மதுரைமீனாட்சி மகிழ்ந்தெனைரட்சிமாளாத்
தீவினைவிறகைதீயாய்வந்துபட்சி மதுரை

அநுபல்லவி.

ஏதின்னம்பிறக்க எந்தனுவில்லை-இனிமேல்
கெர்ப்பத்தில்ஜனிப் பதுவெகுசள்ளை மது

சரணங்கள்.

விஷயமலம்விலகவேதாந் தெண்ணெய்வாரு-வெள்ளி
மலையில்மீனாட்சி பிரியாளைச்சேரு

கஎ. கீர்த்தனம்-இ-ம்-தனுசரி-அடதாளசாப்பு.

பல்லவி.

கந்நிகாகுமரி-கடைக்
கண்ணாலென்னைப்பாரீர்

அநுபல்லவி.

வன்னிநிறமேனி வாசனுபாயுசபானி
மதுரகீத்தவனி மதியாதிருக்கிறுயேநீ கந்நி

சரணங்கள்.

ஏதிப்படிசெய்தாய் ஏழையாளுக்கிரங்காதா
மீனாட்சிபிரியாள்மாதா மேலானபதத்தை நீதா கந்நி

கஅ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-சாபுதாளம்.

பல்லவி.

ஸ்ரீமீனலோசனியே-ஜெகம்புகழ்
ஸ்ரீமீனலோசனியே-சிலர்
சிந்தித்தசெல்வந்தருவாயே
செல்வந்தருவாயே ஸ்ரீ

அநுபல்லவி.

கிரியையென் னிடத்திலில்லே-சற்
கிரியையென் னிடத்திலில்லே-கௌரி
உனக்கதால்கிருபைவல்லே அதால்கிருபைவல்லே ஸ்ரீ

சரணம்.

முன்னுனக்கென்ன செய்தேனே-நான்
முன்னுனக்கென்ன செய்தேனே
மீனுட்சிபிரியரைவைதேனே பிரியரைவைதேனே ஸ்ரீ

---

ககூ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-சாபுதாளம்.

பல்லவி.

சற்றேகண்ணுல்பாரேன் துரைச்சி-நீ
சற்றேகண்ணுல்பாரேன் துரைச்சி
செத்தகெண்டைவிற்றவலேச்சி கூவிற்றவலேச்சி

அநுபல்லவி.

எத்தனேயோகத்துகிறேனே-நான்
எத்தனேயோகத்துகிறேனே
வேர்த்தாலயம்சுற்றுகிறேனே நான்சுற்றுகிறேனே

சரணங்கள்.

பாஸ்கரன்பட்டபனிபோலே-உதி
பாஸ்கரன்பட்டபனிபோலே
பறக்கும்என்பவம்நீபார்த்தாலே பவம்நீபார்த்தாலே ச

மெதுவாய்இமையைநீக்கி அதி
மெதுவாய்இமையைநீக்கி
மீனுட்சிபிரியானேநோக்கி பிரியானேநோக்கி ச

உ௦. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி.

சுந்தரபாண்டியன்மகாராஜபத்னி-சுருக்காக
சுதனியைபோஷிக்கநீயத்தனி சுந்தர

அநுபல்லவி.

அந்தர்முகமாயல்லும் பகலுந்தேடுகிறேனுன்னை
அம்பாவுன்பாதவடிரொம்ப நம்பிநான்சொன்னேன் சு

சரணம்.

செல்வமீனாக்ஷிபிரியாளையும் நீபொருளாயெண்ணு
சித்தமிரங்கிசெவியில் வந்துபதேசம்பண்ணு சு

---

உக கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

அம்பாமீனலோசனிநானுன்னைநம்பினேன்
எனக்கன்னைதந்தையநேகபந்துநீயென்றுஎண்ணினேன்என்

அநுபல்லவி.

என்பிறவிதீர்த்திடநீ என்முன்னேவாடி
தேவேந்திரனர்ச்சிக்குமிரு பாதத்தைத்தாடி அம்

சரணங்கள்.

சித்தமிரங்கிசெங்கம லக்கண்ணால்பாரு
செல்வமீனாட்சிபிரியாளை சிவலோகத்தில்சேரு அம்

---

உஉ. கீர்த்தனம்-இ-ம்-சோகவராளி-சாபுதாளம்.

பல்லவி.

சேர்வைதாஸ்ரீமீனா ஜெகமோகனா
பாதசேர்வைதாஸ்ரீமீனா

அநுபல்லவி.

திருவேதெரியாமூடம் தேவிநான்சுத்தஜடம்-சேர்

சரணம்.

தடாதகாராசாத்தி தழுவிவாயெனைநத்தி
முன்னேமூளைத்தபரம் ஸ்ரீமீனாட்சிபிரியாள்மனோகரம்-சேர்

## உங. கீர்த்தனம்-இந்துஸ்தான்காபி-சாபுதாளம்.

பல்லவி.

என்னிடத்திலுனக்கேதாகிலுமுண்டோகோபம்
ஏன்நீபேசாமலேற்றுக்கொள்கிறாயிந்தபாபம்

அநுபல்லவி.

அன்னை தந்தையாதொன்றும் நானற்றபரதேசி
அல்லும்பகலுமுன்னை நம்பியிருக்கிறேன் தாசி என்

சரணங்கள்.

தேஜோமயமாக ஜொலிக்குமேஉன்காட்சி
தென்மதுராபுரியில் விளங்குகிறமீனாட்சி
அநித்தியதேகத்தைவீணாய் நம்பிமோசம்போகிறேன்
அநியாயமாய்ஆசை வலையாலேசாகிறேன் என்

ஞானரத்னத்தைதேடத் தெரியாதநான்ஏழை
கானமீனாட்சிபிரியாள் மனதைநீவந்துகுழை என்

---

## உச. கீர்த்தனம்-இ-ம்-அபுரூபம்-ரூபகதாளம்.

பல்லவி.

ஏனினிஏனினி செய்குறாய்நீசதி
என்தாய்நீஎன்னை இகழ்ந்தெரிந்தாய்
எனக்குஇனிஎன்னகதி ஏனினி

அநுபல்லவி.

மானிஉந்தனை நம்ப மனதுமிகநான்வெம்பி
எட்டாக்கனியைஎழிம்பி தொட்டிழுக்கிறேன்காண்பி ஏனி

சரணம்

பாரில்நானேர்பரதேசி உன்பணிவிடைசெய்கிறதாசி
மின்னலொளிபிரகாசி மீனாட்சிபிரியாளோநேசி ஏனி

---

## உரு. கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

அம்மாநானென்னசெய்குவேன்-மீ
னம்பாநானென்னசெய்குவேன்
அந்தகனை எண்ணிஎண்ணி என்சிந்தைநோகுதே-அம்

அநுபல்லவி.

நம்படன்னைப்போலே தெய்வம்இந்நகர்தனிலேயில்லை
நரகாதிகளை நினைத்துநடுங்கி
அபயமென்றடைந்தேன் கேளென்சொல்லை அம்

சரணங்கள்.

பாரடிகிருபையாலே என்னை பத்மஇதழ்நயனி
பாண்டியர்பரி மடிமேலே
பாலருந்திருவிளை யாடியசயனி-அம்
மதுரையிலே உன்மகிமைகளெல்லாம் செலவாகிப்போச்சோ-அ

---

உசு. கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

என்னசெய்குவேனடி தாயே-நீ
இன்னம்வரக்காணேன்-நான் என்

அநுபல்லவி.

மன்னன்மலையத்துவஜ பாண்டியன்குமாரி
மலையன்மகிழ்ந்துபோற்றும் மகாதேவர்பாரி
மங்களமாய்ரதந ரதத்தின்மேலேறி
மகிழாசூரனைவதம் செய்தலங்காரி எ

சரணங்கள்.

குற்றம்குறைகளை உனக்குச்செய்ததில்லை
குரோதத்தனத்தால்மெய் தாசானைவைததில்லை
கல்யாணதேவிஉனக் கெந்தன்மேல்கிருபையில்லை
காட்சிகொடுத்தழைக்க இன்னம்கருணைவல்லை எ

அன்னையேஉன்பொன்னடிக் காயிரம்அபசாரம்-நான்
பண்ணியிருந்தாலும் நீயெண்ணலாமோகாரம்
பாலைநான்செய்தபிழை பொறுப்பதுந்தன்பாரம்
பரிந்துஎன்னையழைக்க உனக்குஇந்நேரம் எ

இந்திரவிமானத்தில்செழித் திருக்குந்தாயே-அந்த
மந்திரகேசருடன் கூடிவருவாயே
சந்திரகுலம்விளங்க வந்துபிறந்தாயே
அந்தரங்கப்பொருள் மீனாட்சிபிரியாட்குநீயே எ

உஎ. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஏகதாளம்.

பல்லவி.

நெஞ்சமிரங்காதோ நீலா-நெஞ்சமிரங்காதோ-இந்த
பஞ்சைக்குப்பிரசாதம் பண்ணப்படாதோ-உன் நெ

அநுபல்லவி.

வஞ்சனையாய்நான் வருந்திசொல்லவில்லை
கஞ்சயிதழ்நேத்திரி கருணைஉனக்குயில்லை நெ

சரணங்கள்.

எப்படிஏகசக்கி ராதிபதியானாய்
ஏழைக்கேனென்கரத்தால்
ஈசான்யத்திலே இளைத்துப்போனாய் நெ
சத்தியமாய்சொல்லுகிறே னுன்சரணம்சாட்சி
சர்ஜனன்தமீனாட்சி
பிரியாட்குதாகாட்சி நெ

---

உஅ. கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

வருவாய்வருவாயென்று வழிபார்த்திருக்கிறேன்
வடிவழகிமீனாட்சியம்பா

அநுபல்லவி.

திருவாய்தென்மதுரையில் உருவாய்விளங்குந்தாயே
தேஜோமயமாய் தெரிசனந்தருவாயே
சற்றுமறியாதவள்மேல் சித்தமிரங்குநீயே
சரணம்சரணம்சமஸ்தஹ்ருதயாம்போஜநிலையே வரு

சரணம்.

அந்தகபாசம் அழுந்துமென்றுநானஞ்சி
அன்னைமீனாட்சிபிரியாளுன்னுடனேகொஞ்சி
இருபாதகமலத்தைத் தருவாயென்றுநான்கெஞ்சி
இரந்துகேழ்க்கிறேன் ஏகாசனத்தில்வாழுஎன்வஞ்சி வரு

---

உகூ. கீர்த்தனம்-இ-ம்-பிலாவல்-சாபுதாளம்.

பல்லவி.

ஸ்ரீமதுரையிலே ஸ்வரமாய்வாஸ்ரீ வாயிலே

அநுபல்லவி.

திரிலோசனபிரியே திரிலோசனபிரியே
தயைசெய்தாயே ஸ்ரீமதுரை

சரணங்கள்.

அன்பையென்மேலேநீவை அன்பையென்மேலேநீவை
அருள்செய் ஸ்ரீமதுரை
பாண்டியராசன்பெண்ணே பாண்டியராசன்பெண்ணே
பாரடிஎன்னை ஸ்ரீமதுரை
சுந்தரமாதரசே சுந்தரமாதரசே
எந்தனரசே ஸ்ரீமதுரை
மீனாட்சிபிரியாளேபோஷி மீனாட்சிபிரியாளேபோஷி
மிருதுபாஷி ஸ்ரீமதுரை

௩௦. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-சாபுதாளம்.

பல்லவி.

ஏனின்னந்தாமசமோ வா ஏனின்னம்தாமசமோ
ஏழையடியாள்மீதில்மர்மமோ-இது தர்மமோ

அநுபல்லவி.

நானென்னநியாயங்கள்கெடுத்தேன்மீனா
நானென்னநியாயங்கள்கெடுத்தேன் உன்
நாமமேகதியென்றடுத்தேன் ஏனி

சரணங்கள்.

மதலைநானென்னசெய்வேன்-மீனா
மதலைநானென்னசெய்வேன் மீனாட்சி
பிரியாளினிமேலேவைவேன் ஏனி

௩௧. தங்கம்பாட்டு வர்னமெட்டு.

பல்லவி.

ஸ்ரீமதுரைமீனமுத்தே ஸ்ரீமதுரைமீனமுத்தே
சுந்தரனோடுவாடிசற்றே-ராச
சுந்தரனோடுவாடிசற்றே ஸ்ரீமது

அநுபல்லவி.

அரிஅரிச்சிதசரணி அரிஅரிச்சிதசரணி
அற்புதநீலவர்ணி-மகா
அற்புதநீலவர்ணி ஸ்ரீமது

சரணங்கள்.

சீமையாண்டசெல்வத்தங்கம் சீமையாண்டசெல்வத்தங்கம்
சிறப்பிலுயர்ந்தராசாங்கம்-அதி
சிறப்பிலுயர்ந்தராசாங்கம் ஸ்ரீமது

இந்துகுலஇளமயிலே இந்துகுலஇளமயிலே
எங்கும்நிறைந்தவையலே-ஜகம்
எங்கும்நிறைந்தவையலே ஸ்ரீமது

நன்மைதருவாரடியாள் நன்மைதருவாரடியாள்
நான்காண்பதென்றோமெய்ச்சீர்வடிய-உன்னை
நான்காண்பதென்றோமெய்ச்சீர்வடிய ஸ்ரீமது

மாயைமகிழநான்விட்டேன் மாயைமகிழநான்விட்டேன்
மீனாட்சிபிரியாள்உன்தோண்விலக்கப்பட்டேன்-முத்து
மீனாட்சிபிரியாள்உன்தோண்விலக்கப்பட்டேன் ஸ்ரீமது

---

௱௨. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-பிலாவல்-ரூபகம்.

பல்லவி.

மன்னன்பெண்ணைமண்ணண்டதரிய-மன
மகிழ்ந்துவந்து எந்தனையுமாளுநீயே மன

அநுபல்லவி.

அன்னைதந்தைகுருநீயே-என்
ஆவியங்கம் ஆஸ்திகட்காதாரம்நீயே
முன்னேயுண்டானதெய்வம் நீயே-மகா
முத்திதருகும்பரா சத்தியும்நீயே என்

சரணங்கள்.

வேதஸ்மிருதிவாக்கியம்பிரகாரம்-வே
தாந்தம்விசாரிக்கமதிதாயின்னேரம்
உன்மாயையால்வந்தபவகோரம்-அதில்
மயங்காதிருக்கும்படிசெய்யுபகாரம் மன்

சார்வகாலமும்நான்போற்றி-உன்
சரணாரவிந்தத்தில்மனமலர்சாற்றி
இங்கேசெய்கிறேன்நானும்பக்தி-நீ
இரங்கிதாடிமீனாட்சிபிரியாளுக்குமுத்தி மன்

---

நூ. கீர்த்தனம்-இ-ம்-ரூபகாம்போதிதாளம்.

பல்லவி.

உன்முத்துசுருக்கழகை உற்றுற்றுப்பார்த்து-என்
சித்தம்மகிழ்ந்தேனம்பா செல்வமீனாட்சிரெம்ப-என்
சித்தம்மகிழ்ந்தேனம்பா உன்

அநுபல்லவி.

நத்துநளினமுக நாசிகையில்சொலிக்க
நானாவிதஅலங்காரம் நன்றாய்ப்பலிக்க
இமையிலம்பரம்எந்தஒளிகளையுங்கெலிக்க
இரத்னநீலரத்னசந்தகாரமாலிகா உன்

சரணம்.

பத்தரைமாற்றுத்தங்க பாதசரங்கள்பொன்னாய்
பக்தர்கள்ஸ்துதிக்குஞ்சரணத்தையழகுபண்ண
மகாகண்டிமாணிக்கபதக்கம்மார்மேலேமின்ன
மதுரைமீனாட்சிபிரியாள்மனதுமகிழ்ந்துநன்றா உன்

---

நூச. கீர்த்தனம்-இ-ம்-தனாசரி-அடதாளசாப்பு.

பல்லவி.

தங்கமேஉன்னையல்லாமல் தரணியிலே
செந்தாமரைநயனி
தந்தைதாய்பந்துபிரியாளெனக்காருமில்லை தங்

அநுபல்லவி.

சங்கராசதாவந்துகிரீடைசெய்கிறசரசசம்சாரம்
செந்தாமரைநயனி
சார்வதானெனைசம்ரட்சிப்பது உன்பாரம் தங்

சரணம்.

வல்லபைவள்ளிதெய்வானைமடிமேல் வைத்துப்பிடித்தசரணம்
செந்தாமரைநயனி
வந்துமீனாட்சிபிரியாட்கதைநீதரணும் தங்

நூரு. கியால்மெட்டு.

பல்லவி.

வாவா வாடியம்பா
வஞ்சியுமைநெஞ்சிரங்கி புன்சிரிப்பாஎன்முன்னே
வாவா வாடியம்பா

அநுபல்லவி.

தேடித்திரிகிறேன் தேவியுன்சேர்வைநத்தி
தாடிஎனக்குநீ தடாதகைராசாத்தி வா

சரணங்கள்

தேவாதிதேவரான சுந்தரேசருடன்கூடி
தேசமெல்லாம்புகழும் தேவியிங்கேயோடி வா
காணவேணுமுன் கமலமுகக்காட்சி
கதம்பவனத்துக் கதிரானஎன்மீனாட்சி வா
இந்திராதிதேவர்கள் தொழும்இருசரணம்
எனக்குத்தருக இதுவேநல்லதருணம் வா
ரம்பைமுதலான பெண்கட்குமேலலங்காரி
ரத்னமிழைத்த ரதத்தின்மேலேஏறி வா
ஏகசக்கிரமாண்டு செங்கோல்பிடித்தகையா
என்னைநீ எடுத்தணைக்க உன்னைநானழைத்தேன் வா
சித்திரவடிவாய் சரீரமெடுத்துக்கொண்டு
செந்தாமரைப்பூவை புஜத்தில் பிடித்துக்கொண்டு வா
குலுங்கபூஷணம் தரித்தெனக்குநேசமாய்
கோடிசூரியனைப் போலேபிரகாசமாய் வா
புண்ணியபரரண்மனையில் பெண்ணாய்பிறந்தசைவம்
பூரித்தகாஞ்சனமாலை போஷித்துவளர்த்தசெல்வம் வா
குஞ்சுகளோடே குதித்தஇருபாதம்
கொஞ்சும் மீனாட்சிபிரியாட்கு தருகநீஇன்னேரம் வா

நசு. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

எப்போநான் காண்பேனுன்காட்சி
என்தாயே தென்மதுரைமீனாட்சி எப்

அநுபல்லவி.

ஒப்பாயில்லாதசுகுமாரி
அற்புதரத்நாபரணலங்காரி எப்

சரணங்கள்.

சர்வலட்சணசம்பன்னி
சந்திரகுலத்திலேவந்தகன்னி எப்

நீலமேகசியாமளம்
நேத்திராநந்தமானகோமளம் எப்

காஞ்சனமாலைக்குகொஞ்சி
லீலைகள்செய்துகாண்பித்தவஞ்சி எப்

பஞ்சப்ருவத்துபிஞ்சே
பாண்டியன்ஈன்றெடுத்தஇளங்குஞ்சே எப்

பட்டுப்பாவாடையரைச்சி
தொட்டணைக்கமெதுவானதுரைச்சி எப்

உத்தமக்ஷத்திரியஜாதி
உன்னிதமாய்விளங்குஞ்ஜெகஜோதி எப்

சூரசேனராஜன்போற்றி
சுற்றத்தார்க்குள்ளுடன்பட்டராஜாத்தி எப்

கலைகளெல்லாங்கற்றமந்திரி
காரியாலோசனையறிந்தநல்லதந்திரி எப்

சித்திராசனத்தின்மேலே
புத்திரனைப்போலரசாண்டபாலே எப்

பத்மமுகமந்தஹாசி
ரத்னசபாமண்டபத்தினில்வாசி எப்

பதினாயிரம்பேர்கள்பாங்கி
பணிவிடைவிடத்தெரிந்தசித்திராங்கி எப்

தானத்திலேவெகுதாதா
தேகியென்றோர்க்குதயவுள்ளமாதா எப்

சதாநந்தசந்தோஷி
சாதுரியமதுரகீதபாஷி எப்

தேடக்கிடைக்காததேனே
திவ்யமானஎந்தன்திருமானே எப்

மகாஅதிர்ஷ்டசாலி
மதுராபுரிராஜ்யபரிபாலி எப்

பார்க்கஅலங்கிருதமங்கை
தீர்க்கமானதிவ்யத்ரிகொங்கை எப்

ரம்பைக்குமேலானபெண்ணே
ரமண்யமானநீலோத்பலக்கண்ணே எப்

காஞ்சனம்போல்தேகக்காந்தி
காமங்கோபங்களற்றகுணசாந்தி எப்

சீமைகளாண்டராணி
சிங்காரச்செங்கோலாயுதபாணி எப்

தீர்ந்தழகுமூக்குவிழி
தென்மதுரைபெண்களுக்கெல்லாந்தோழி எப்

கால்நடையிலேயோஅன்னம்
கண்ணாடிபோலமின்னியிருகன்னம் எப்

பாருக்குள்வீராளைத்தேடி
பாணம்பிரயோகம்பண்ணும்வெகுமோடி எப்

ஆர்க்கும்அடங்காகெருவி
பார்க்கபச்சைநிறமானஉருவி எப்

தயிரியவீரியசீமாட்டி
தாயார்சலூகாய்பெற்றசெல்லக்குட்டி எப்

அதிகொர்விதராசாங்கம்
ஆயிரம்மாற்றுஅபரஞ்சித்தங்கம் எப்

பஞ்சவர்னக்கிளியே
பக்திவிக்கிரயஞ்செய்கிறமாளிகை எப்

மீனாட்சிபிரியாளுருகி
மேலேயானந்தபாஷ்பங்கள்பெருகி எப்

---

## ருஎ. லாவிவர்னமெட்டு.

மதுராபுரேஸ்வரிஎன்தாயேஉன்மலரடியை
மகிழ்ந்தெனக்குநீதருவாயே
திவ்வமான்சுந்தரரூபியேஎன்தீவினையை
தீர்த்தவனைநீகாத்துரட்சிப்பாயே
மலையத்துவஜபாண்டியன்குமாரி-மகாதேவர்
மகிழ்ந்துமருவியணையும்பாரி
ஆரகிரீடாபரணதாரி-அரவிந்த
நயனமழகாஅலங்காரி

பார்க்கழகாய்பருவதத்தின்மேலே பாஸ்கரன்
பதினாயிரம்சேர்ந்துதித்தாப்போலே
இருக்கிறாய்ஈசராகையாலே என்னசெய்வேன்
இன்னும்வரக்காணேன் என்முன்னாலே
காணவேணும்கண்ணாலேஉன்காட்சிகதம்பவனம்
தன்னில்விளங்குகிறமீனாட்சி
சகலத்திற்கும்ஆதாரசாட்சி சர்வலோக
நாயகியேஉன்னுடையவாழ்ச்சி
வெள்ளிமலைமேலிருக்கும் மங்கைபள்ளிகொள்ளும்
ரங்கர்மனதிற்கிசைந்ததங்கை
துள்ளிவிளையாடுகிற அங்கைவள்ளிபதி
வாய்திறந்துஉண்டாயிருகொங்கை
சந்த்ரவம்சத்தில்வந்தராசாத்தி-உந்தனிரு
சரணாரவிந்தங்களைநத்தி
பண்ணுகிறேன்நானுந்தன்பக்தி-பரதேவதா
வாரீர்மீனாட்சிபிரியாளைசுற்றி.

---

கூஅ. கீர்த்தனம்-இ-ம்-யமுனா-ரூபகதாளம்.

பல்லவி.

இன்னும்வரக்காணேன்என்னம்பா
என்னசெய்குவேன்மனம்வெம்புதேரொம்ப இன்

அநுபல்லவி.

கன்னங்கறுத்தமேனி கர்ணாவமிர்தத்வணி
செங்கோலாயுதபாணி செய்யாப்பசிமளவேணி இன்

சரணங்கள்.

உன்னிதுடமைபொன்னாய் உலகமெங்கிலும்மின்ன
பாலவடிவாம்நன்றா பார்க்களந்தன்கண்முன்னால் இன்

ஆசைப்பிசாசையோட்ட அகத்தையழிந்துவாட்ட
பக்திபலத்தைபூட்ட பாததரிசனங்காட்ட இன்

அஞ்சாதேயென்றுரைக்க அபயவரங்கொடுக்க
மீனாட்சிபிரியாள்பூரிக்க மின்னேநின்றுஅழைக்க இன்

நகூ. கீர்த்தனம்-இ-ம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

எப்போகாண்பேன்கண்ணனை
அற்புததென்மதுரை துரையம்மானை எப்

அநுபல்லவி.

கற்பகநாட்டையாள கரிபரிமேலேறி
துயிலிடையில்துவள
தனுசுபாணம்பிடித் திந்திரன்முடியை
தவிடுபொடியா யடித்ததீரக்கையை எ

சரணங்கள்.

இரத்நசிம்மாதனத்தில் ராஜருக்குமுன்
னின்றுவிசிறிபிடித்து
சபையிலண்ணுடம் நடந்தசங்கதியை
சாதுரியமாய்வசனிக்கிற செவ்வாயை எ

வருந்தித்தவங்கிடந்துவாசலுஞ்சூர
ஞைசுதனையடைந்து
சமுகம்பாராமல்சள்ளனை செய்துஉண்டகொங்கையை
சரிகைரவிக்கையால் மறைத்தமதுரைமங்கையை எ

முன்வளர்சந்திரிகையிலே மீனாட்சிபிரியாள்தேவரோட
சதுரங்கமாடையிலே
மோகித்திசரெழுந் திருந்துசுருள்கெந்தத்தை
முத்தமிட்டணைத்துகிர கிக்கும்முகாரவிந்தத்தை எ

---

சம். கீர்த்தனம்-இ-ம்-பிலகரி-ரூபகதாளம்.

பல்லவி.

ஏதடிஅன்னை இன்னம்விசாரணை
செய்யவில்லையென்னை ஏதடி

அநுபல்லவி.

நாதியானம்வேணுமோ என்னெம்பர்
அப்போதான்தீருமோ ஏதடி

சரணங்கள்.

பூஜாலெஞ்சம்போதாதோ புண்ய
காட்சிகிடையாதோ ஏதடி

என்னசெய்குவேனையா என்
பக்தியெலாம்பொய்யோ ஏதடி
சவலைமீனாட்சிபிரியாள்சமர்த்
தில்லைசமாதிசெய்ய ஏதடி

சக. கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

வந்ததிசயம்நானென்னசொல்லுவேன்-அடியேமீனம்மா
இனிவருந்தும்ஜனனவேரை வெல்லுவேன்அடியேன்

அநுபல்லவி.

சொந்தவிகிர்தசம்வத்சரத்திலே-அடியேமீனம்மா
இந்தஆறுமாதகுருபுஷ்யத்திலே

சரணங்கள்.

நாலாயிரத்துமூன்றூற்றிருபதுநாளாயழைக்க-அடியேமீனம்மா
நவசட்சசெபம்செய்யென்றுஉபதேசிக்க வந்த
உத்தமிமுத்துலட்சுமியைக்கொணர்ந்து-அடியேமீனம்மா
சித்தந்தயவாய்சற்றேசாசிக்யமடைந்து வந்த
அந்தர்முகமீனாட்சிபிரியாட்குநல்ல-அடியேமீனம்மா
இந்தவிசாலாட்சிலட்சுமியெங்கும்சொல்ல வந்த

---

சஉ. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

இப்படிமனமிரங்கிற்றோ இந்தவடியாள்மேல்
உனக்குக்காண்பித்தோ இப்படி

அநுபல்லவி.

அப்பன்உந்தனைப்பிரிந்ததோ-அடியாள்
அலத்தும்ரோதனம்செவிநுழைந்ததோ
இராஜகாரியமொழிந்ததோ-என்
இராகாதிகளின்றுதானழிந்ததோ இப்படி

சரணங்கள்.

பொய்யைப்புகழ்வோர்க்கும்பொல்லாள்பெண்ணை
ஏழைபொருளொன்றுமில்லாள்

மீனாட்சிபிரியாளுக்குநல்லா மெதுவாய்
வாய்திறந்துசெபம் செய்யென்றுசொல்ல இப்படி

சரு. கீர்த்தனம்-இ-ம்-அடாணா-அடதாளம்.

பல்லவி.

எனக்கிந்தபொய்யினில் பயமேதுமீனா
உனக்குஎன்மேல்கிருபை பூர்ணமாயிருக்கும்போது

அநுபல்லவி.

தனக்குத்தெரியும் தயாள்திறமாகச்
செய்கிறதியான சமாதிதானே
தோன்றியழியுந் தரையென்றுதெரிந்தபின்பு
எனக்கே துலகவுபாதி
பந்தமெல்லாந் தீர்ந்ததினிமேலே
நீவீணாய்சோதி
பக்தியா லொழிந்தாரென்னைப்
பத்தியன்று பிரதிவாதி எனக்

சரணங்கள்.

சொப்பனந்தன்னிலே இப்போநீவந்தாய்
நானொப்பேனென் றெண்ணாதேஎன்றன்
சொல்லைக்கல்லின்மேலெழுத்தாக எண்ணியொரு
கபடமும் பண்ணாதே
சேயாள்பொருள் சிறிதென்று
சேராமல்உண்ணாதே
செல்வமீனாட்சி பிரியாளை
போஷிக்கும் பெண்நாதே எனக்

சச. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-சாபுதாளம்.

பல்லவி.

உன்னைப்போல்தயாவதி ஒருவரையுங்காணேன்
உண்டென்றுளரும்வேத புராணமெல்லாம்வீணே

அநுபல்லவி.

அன்னையைப்போல் சேயையாத
ரிப்பார் யாராலுமுண்டோ
ஆனதற்றிருந்தாலும் மானிகட்கு
மனமிரண்டா உன்

எத்தனையாகி யோகிகட்
கெல்லாமோ நீமறைந்தாய்
ஏழைமீனாட்சிபிரியாட்கு
எளிதிலிறங்கிவந்தாய் உன்

சரு. கீர்த்தனம்-இ-ம்-அரிகாம்போதி.

பல்லவி.

சங்கரியை சரணமடைந்தபேர்க்கு
சம்சாரசுகதுக்கந் தொடாராது
ஜனனமரணங்களோ கிடையாது
சம்சாரசுகதுக்கந்தொடாராது

அநுபல்லவி.

அங்கமுருகியம் பிகைபாதம்போற்றி
தங்கநகையை தகதகவென்றுசாற்றி
தேவிஆலயங்கள்போய் தீபங்களேற்றி
திவ்யமானநாமாவை திருவாயால்வாழ்த்தி சங்

சரணங்கள்.

பாபமெல்லாம்பயந்து பறந்தோடும்
பக்திஞானவை ராக்கியங்கள்வந்துகூடும்
உள்ளமுருகிஎந் நேரமும்பாடும்
உமையவள்பாதத்தை உறுதியாய்த்தேடும் சங்

ஆசையென்ற பிசாசம்போய்கருகும்
பாசபந்தக்கயர் கூசியேபெருகும்
ஈசரிடத்திலிருந் தன்புகள்வருகும்
தாசரைக்கண்டால் தன்மனமுருகும் சங்

அகந்தைகொண்டஅதர்மர்கள் உறவெல்லாம்விண்டு
மகாத்மாக்களோமதுரா புரியில்போய்கண்டு
முத்துமீனாட்சிபிரியாள் நாமங்கொண்டு
மேகவர்ணிகதா வமிர்தத்தையுண்டு சங்

சசு. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-ரூபகம்.

பல்லவி.

கெண்டைவிழியாள்போல் பெண்டுகள்பூண்டுக்குள்
ஒன்றானும் கின்றிடக்காணேன்

வண்டுநிறமாம் வளர்முகதளத்துக்கு
சேஷனை இணை சொல்வதுவீணே கெண்

அநுபல்லவி.

சண்டையில்பாண்டியர் சந்ததிக்கிணைசர்வ
லோகத்திலும் கிடையாது
செண்டுபோல்குன்றை எடுத்துவளைத்திட்ட.
சிவனாலுஞ்செயிக்க முடியாது கெண்

சரணங்கள்.

முத்தனத்தடாதகைக் கிணைஇத்தரைக்
குள்ளேதெய்வம் வேறேயுண்டா
நல்லமுத்துமீனாட்சி பிரியாள்பிழைத்திடேற
சற்றேசொல்லுவீர் யாரேனுங்கண்டா கெண்

---

சஎ. கீர்த்தனம்-இ-ம்-துஜாவந்தி-சாபுதாளம்.

பல்லவி.

எந்நேரமும்இன்பத்தைத்தேடு மனதே
இந்துகுலாலை தியானித்துப்பாடு

அநுபல்லவி.

பன்னகசயனன் தங்கையைபாண்டிய
ராசன்பெற்றெடுத்த மங்கையை
ஆதியந்தமற்ற தங்கையை-பார்க்க
ஓடுமனதேநீ அங்கேயே

முத்திமயமானதேவி சக்திபாதவடியைமேவி
மத்தியேகண்டுகுலாவி சத்தியாகவேநீசேவி எந்

சரணங்கள்.

ஆதிதேவியாகவே யெண்ணி-அவட்
கன்புடனே பூசைகள்பண்ணி
சர்வலோகத்துக்கும் சரணி-அவள்
சரிதத்தைஉன் நாவிலேவர்ணி

காமக்குரோதங்களைவைத்து கல்யாணியோடுசிநேகம்செய்து
உச்சிதச்சிலையைக்கொய்து பச்சைவர்ணிக்குசாத்திரஒய்து எந்

இந்தஜெகத்தாசையைத்தள்ளு-அந்த
அம்பிகைமேலாசை நீகொள்ளு

பக்திவெரியாலேயே துள்ளு-பந்து
மித்திரர்கள்யாரையும்விள்ளு

பார்வதிபாதத்தைப்போற்றி பாதிரிமலரைச்சாற்றி
வாயாரஅம்பாளைவாழ்த்தி பேயானகோபத்தைதூற்றி எ

பாண்டியன்பாலையை மறக்காதே-பணம்
காசில்லையென்று பறக்காதே
ஏழைநானென்று இறக்காதே-நாளை
இன்னும்வீணிலே கழிக்காதே

துஷ்டமாயைத்துடைக்கும் இஷ்டகாமியத்தைகொடுக்கும்
கஷ்டமிலலாமலடிக்கும் அஷ்டயிஸ்வரியமுங்கிடைக்கும் எ

இந்திரவிமானத்திலிருக்கும்-ஜெக
தீஸ்வரிதான்மாதாவே யார்க்கும்
ஜெனனமரணங்களைத்தீர்க்கும்-சிவ
லோகத்தில்தப்பாமலே சேர்க்கும்

காலனைவராமலோட்டும் நீலமாய்வடிவைக்காட்டும்
கோலமாய்பதத்தில்கூட்டும் ஜாலசஞ்சலத்தைவாட்டும் எ

உலகமெல்லாம்பொய்யென்றுஎண்ணு-எண்ணுத
போனாலுந்தான் வாயிலேமண்ணு
சங்கரலீலைகளையுண்ணு சார்வ
காலம்சிவநாமங்கள் பண்ணு

துர்ச்சனனைக்கண்டாலோடு சர்ச்சனனுடனேகூடு
மேகவர்ணியைநீபாடு மீனாட்சிபிரியாளாய்நாடு எ

---

சஅ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-ஆதிதாளம்.

பல்லவி.

மனமே பார்பார் தினமதீபார்பார்
மதுராபுரியம்பாளை மகிழ்ந்துபார்பார் மனமே

அநுபல்லவி.

ஈனருறவொழித்து என்தாய்பதம்குறித்து
நித்தியமுந்தியானித்து சக்தியாகபாவித்து
நீலமேகசியாமளியை நீபார்பார்பார் மனமே

சரணங்கள்.

வீணுக்கலைந்திடாதே வெட்டிப்புக்கிறைத்திடாதே
காலங்கழித்திடாதே காமம்வளர்த்திடாதே
கதம்பவனத்தரசை நீபார்பார்பார் மனமே

நல்லவழியைநாடி நாரணிகிருதியைபாடி
சாதுக்களுடனேகூடி சியாமளிச்சதைத்தேடி
சாஸ்வதசர்வேஸ்வரியை நீபார்பார்பார் மனமே

ஆசைவலையைப்போக்கி ஈசன்தேவியைநோக்கி
தீவினைகளைநீக்கி தேவிக்கடியாளாக்கி
திவ்யமீனுட்சிபிரியாளாய் நீபார்பார்பார் மனமே

---

சகூ. கீர்த்தனம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

ஏனடிக்கடி துடிக்கிறுய் நோக்கெது
எப்படிபோனுலென்ன-மனதேநோக்கெது
எப்படிபோனுலென்ன ஏனடி

அநுபல்லவி.

ஞானவழியைத்தப்பிநடக்காதே-அக்
கியானத்தாலொன் றிலுமாசைவைக்காதே
பொய்யானகோள் பொருந்தபிணைக்காதே
பூமிவிஷயம் விஷயம்மலைக்காதே ஏனடி

சரணங்கள்.

வீடுமாடுதனங் கூடவராதுநீ
வீணுசைவைத்து அலையலாகாது
உன்தேகமிழந்து திண்டாடுகிறபோது
தென்திக்குபாலா தெண்டனைபொல்லாது ஏனடி

இந்தஜெகத்திலுண்டான தெல்லாம்பொய்
அந்தலோகத்தில் வாழும்அரனேமெய்
பத்தியால்புஷ்பமலர்களைநீகொய்
சித்தமகிழ்ந்து சிவார்ச்சனைகள்செய் ஏனடி

துஷ்டர்சகவாசந்தனை விட்டுப்போடு
இஷ்டமாகிஜதர சாளுடன்கூடு
நஷ்டபாலசகி லேசங்களைவிடு
அஷ்டலட்சுமீசன் சகாவைக்கொண்டாடு ஏனடி

காமக்குரோதாதி குணங்களைத்தள்ளு
ஸ்கந்தர்ஜனகர்மே லாசைநீகொள்ளு
சிநேகிதந்தப்பாது சனங்களைவிட்டு
சிற்சபைமீனுட்சி பிரியாளாகிநில்லு ஏனடி

ருo. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

இந்தஜெகத்தில்சொந்த பந்துக்களிருந்தால்
அந்தகனைஜெயிப்பாரோ-அந்திகாலத்தில்
அந்தகனைஜெயிப்பாரோ இந்த

அநுபல்லவி.

மந்தைகூட்டங்கள்போலே மனிதரிருந்தாலே
பயந்துபோகானப்பாலே பார்த்துப்பிழைஇதாலே இந்

சரணங்கள்.

மருந்தைவீணாய்க்கொடுப்பார் மடிமேல்வந்துபடுப்பார்
கண்ணால்கண்ணீர்வடிப்பார் நன்றாயுன்னைக்கொடுப்பார் இந்
மைந்தரெல்லாருங்கூடி மனம்சற்றுநேரம்வாடி
சுடலைக்கரையிலோடி சுடுவாருந்தனைத்தேடி இந்
போகிறவழியைப்பாரு புண்ணியருடனேசேரு
மேலானபாதையிலேறு மீனாட்சிபிரியாளாய்நேரு இந்

ருக. கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சாப்புதாளம்.

பல்லவி.

பொல்லாதேமாயையென்னை கொல்லாதேசும்மா-நல்ல
மீனாட்சிபிரியாள்மனதில் நில்லாதேயம்மா பொல்

அநுபல்லவி.

வல்லாமைசாமர்த்திய முனக்கிருக்கு
வையகமுழுது மாளகருத்திருக்கு
ஈரேழுலோகமுனக் குள்ளேயிருக்கு
எங்குவேண்டினும் சென்றுயாரையுமக்கு பொல்

சரணங்கள்.

உன்னைஜெயிக்கஒருயுக்தியுமில்லை-நாலு
வேதசாஸ்திரங்களை நான்கற்றதுமில்லை
சற்குருக்களைத்தேடி பணிந்ததுமில்லை-சிவ
சங்கரனார்பாதம் பூசைசெய்ததுமில்லை பொல்
மாயையான்மாதே நான்சொல்லுகிறேன்கேளு-இந்த
மண்டலமுழுதையு மகிழ்ந்துநீஆளு
தெய்வபக்தியில்லாத பேர்களைக்கைக்கொள்ளு-அந்த
தீங்கானதுன்மார்க்க ரண்டையிருந்தருளு பொல்

இந்திரவிமானத்தின் மேலேறியிருக்கும்-அந்த
சந்திரகுலத்தரசிக்குப் பொருப்பிருக்கும்
ஆனாலும்வாதென்னத்திற்கும் உனக்கெனக்கும்-எந்தன்
மீனாள்பேரைச்சொன்னா லுனக்குடல்நடுக்கும் பொல்

Mஉ காமக்குரோதலோப மோகத்துடன்கூடி-உந்தன்
கூட்டமெல்லாரையு மழைத்துக்கொண்டாடி
சூதுபொய்மோசம் செய்குவோர்களைத்தேடி-சுருக்காய்
மீனாட்சிபிரியாளை விட்டோடிப்போடி பொல்

## ருஉ. தெம்மாங்குமெட்டு.

அதிகபலவானாயிங்குநாள் அரசாண்டிருந்தாலும்
அந்தகனுயுள றிந்து அழைக்கவரும்போது
இவர்தட்ட லுருட்டலெல்லாம்
அங்கே நடவாது
உன்னை அபயமென்றேயடைந்தால்
அடிஎன்அம்பிகையேமீனாட்சி
அவன்கதிகிரமிக்கமாட்டானே.

பாரியுடன்பஞ்சணைமேல் நாள்பள்ளிகொண்டிருந்தாலும்
பாசக்கயற்றாலேயமன்வீசியிழுக்கும்போது
இவாள்பாணங்கள் தாரேனென்றாலும்
அவன்படிந்துவரமாட்டானே
உன்னை பக்திபண்ணிக்கொண்டிருந்தால்
அடிஎன்பராபரமேமீனாட்சி
அவன்பஞ்சாய்பறப்பானே.

மாடியின்மேல்மாடிகட்டிநாள் மக்களுடன்வாழ்ந்தாலும்
மறலிமகிழ்ந்துவந்து மரித்துயிழுக்கும்போது
இவாள்மனைகள் தாரேனென்றாலும்
அவன்மண்ணுலகில் வைக்கமாட்டானே
மனதில்உன்னை நினைந்தால்
அடிஎன்மரகதமேமீனாட்சி
அவன்மசகம்போல்பறப்பானே

தோழமாருடன்கூடிநாள் துரையாயிருந்தாலும்
தூதர்களோடிவந்து துடுப்பாலடிக்கும்போது

இவாள் துடியாய்த் துடித்தாலும்
அவன் தூண்டாமல்விடமாட்டானே
துரைச்சிஉனைப்பணிந்தால்
அடிஎன் துகிலழகிமீனாட்சி
அவன் தூசுபோல்பறப்பானே

கல்லாக்கலைகளெல்லாம்நராள் கற்றுயிருந்தாலும்
காலன்கொர்ச்சித்துவந்து கண்டித்திழுக்கும்போது
இவள்கதறியழுதாலும்
அவன் கருணைசெய்யமாட்டானே
கருத்திலுனைநினைந்தால்
கதம்பவனமீட்சி
அவன்காற்றாய்ப்பறப்பானே

இரும்பால்மதிலெடுத்துநராள் இருட்டிலொளிந்திருந்தாலும்
அவனெவர்க்குந்தெரியாமல்வந்து இழுத்துக்கொண்டுபோவானே
இகத்திலுனைப்பணிந்த
மீனாட்சிபிரியாளிடத்தில்
அடிஎன்ஈஸ்வரியேமீனாட்சி
அவன்எருதேறிவாரானே.

---

சுந்தரேஸ்வரர் துதிகள்.

ருசு. இ-ம்-கண்ணிகள்.

மலைபோல்மதுரையில் மருமகனாய்வாழும்
பாண்டியசுந்தரமே
பாண்டியசுந்தரமே பதிநயனத்தாலெனைப்பாருமே
தேஜோமயமாய் திவ்யவிமானத்தில்
விளங்குகிறமூலலிங்கம்
விளங்குகிறமூலலிங்கம்தெரிசிப்பதென்றோநானுன்னங்கம்
பொன்மாலைபுண்ய மருந்தால்மயங்கி
பையனாய்வந்தஐயாரா
பையனாய்வந்தஐயாரா போதிமெய்எனக்குநானீடேற
அற்புதமாக அறுபத்திநாலு
லீலைகள்செய்ததேவா
லீலைகள்செய்ததேவா அம்பாள் சகிதமாவளந்தன்முன்நீவா

ஏதுமறியா வடியாள்முன்னேவர
ஏனின்னம்தாமசமோ
ஏனின்னம்தாமசமோஙிசா வுனக்குயிதுதர்மமோ
தாயற்றதங்கத் தடாதகைக்குகூந்தல்
கோதிமுடிக்கிருயோ
கோதிமுடிக்கிருயோ தர்மமவட்கோதிப்படிக்கிருயோ
எவ்வேலையிலே யிருந்தாலுமின்றுநீ
என்முன்னே வந்துநில்லு
என்முன்னேவந்துநில்லு ஏழைக்கேதானுமோர்வழிசொல்லு
இந்திராதிகளும் ஏவல்செய்யஎண்ணேழ்
சீமையையாண்டராஜா
சீமையையாண்டராஜா மீனாட்சிபிரியாள்மகிழ்மகரத்துவஜா

---

ருச. கீர்த்தனம்-இ-ம்-பியாகு-அடதாளசாப்பு.

பல்லவி.

சம்போ மகாதேவா
சியாமளியுடன் என்முன்வா சம்

அநுபல்லவி.

அன்பர்கள்சகாயா அதியற்புதகாயா
லீலைகள்செய்தமாயா லலிதாம்பிகைநேயா-சம்போ

சரணம்.

இந்துகுலநாரி யுடன்விமானமேறி
என்தன்முன்னேகாரி யாய்நீவாசவாரி-சம்போ
மருமல்லிகாரேஜா மாலாலங்கிருகராஜா
மதுகைமகரத்வஜா மீனாட்சிபிரியாள்நிஜா-சம்போ

ருரு. கீர்த்தனம்-இ-ம்-பிலாவல்-சாபுதாளம்.

பல்லவி.

ஸ்ரீஹாலாஸ்யபதே தயாநிதே ஸ்ரீஹா

அநுபல்லவி.

பிரீதியோடென்முன்நீவா வெல்வேதா ஸ்ரீஹா

சரணங்கள்.

ஏனின்னந்தாமசமோ ஈசாதர்மமோ-ஸ்ரீஹா

சுந்திரபாண்டியமன்னா சோதிக்கிறுயென்ன-ஸ்ரீஹரா
மீனாட்சிபிரியாளுடன்வம்போ மதுரைசம்போ-ஸ்ரீஹரா

---

௫௬. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

சாம்பசதாசிவ சந்திரவம்சத்து
மலையத்வஜன் மருமகனே
சாதுசிகாமணி மாதுதடாதகா
மகிழ்ந்திடும் மனோகரனே சாம்ப

அநுபல்லவி.

அன்பாய்நானுன்பாதம் நம்பிப்பணிந்தே
அரனேநீசொந்தனேக்காரும்
அந்தவமராபுரி தேவரர்ச்சிக்கும்
அற்புதபாதத்தைத்தாரும் சாம்ப

சரணங்கள்.

மந்தகாசமான உந்தன்முகத்தைநான்
எந்ததினத்திலேகாண்பேன்
எந்தவிநயத்தினாலேயுனக்குநான்
சொந்தவடியாளாய்தோணுவேன் சாம்ப

உன்னையல்லாலெனக் கன்னியர்பேரிலே
ஆசையேதாகிலுமுண்டா
ஓடிவந்தகாலகோடிவிஷத்தைநீ
வாரியுண்டநீலகண்டா சாம்ப

மாணிக்கவளைகுலுங்க மதுராம்பாள்
மாலையிட்டமணவாளா
மாலயன்போற்றும்மகாப்பிரபுவேஉமக்
கெப்போதாகுவேன்நாளாய் சாம்ப

மீனாட்சிபிரியாள் செய்யுமூடபக்தி
களைப்பெரிதா எண்ணிக்கொள்ளும்
முன்னேயநேக பராதங்கள்நான்செய்
திருந்தாலும் நீரதைத்தள்ளும் சாம்ப

## ருஎ. கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி—ரூபகதாளம்.

பல்லவி

தேவபாண்டியராச துரைமாயதரிசனம்தாரும்
திவ்வியவிமானத்தி லேறிவாரும்மஹா தேவ

அநுபல்லவி

சேவகாள்மந்திரிபிரதானி சுற்றிலும்நிறைந்துகூட
மத்தியில்மயில்போல்மாதா மகிழ்ந்துசாமரங்கள்போட தேவ

சரணங்கள்

ஹாரகிரீடகவசகுண்டலம் அரசனைப்போலேதரித்து
அற்புதவேணியில்திவ்ய கற்பகமலர்முடித்து தேவ

அரிபிர்மாதிதேவர்கள் இரண்டன்றையும்நின்றுஸ்துதிக்க
உண்டதோர்குண்டோதரன்கூட நின்றுபொன்குடைபிடிக்க தேவ

நீறணிந்தமேனியில் பன்னீர்பரிமளமணிந்து
நீலமேகவர்ணிதடா தகையோடேகாசனத்திலிருந்து தேவ

மாமியார்காஞ்சனமாலைகண்ட மாப்பிள்ளைபோல்வடிவுகொண்டு
சாந்திக்குவாங்கினசரிகைசால்வையை யுடுத்திக்கொண்டு தேவ

மீனாக்ஷிபிரியாள்செய்யும் சிறுபத்திக்குமனமிரங்கி
மேருநிகரானரதந ரதத்தைவிட்டுகிழேயிறங்கி தேவ

---

## ருஅ. கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ரூபகதாளம்

பல்லவி

சுந்தரேசனே மீனாக்ஷிநேசனே
மந்தஹாசனே தென்மதுரைவாசனே

அநுபல்லவி

சுந்தரகலாதரா சாஸ்வதஹாரா
தீனதயாபரா தினமென்னைக்காரா சுந்த

சரணங்கள்

துன்பந்தீருமே நல்லஇன்பந்தாருமே
கண்ணால்பாருமே என்னைபெண்ணைச்சேருமே சுந்த

உந்தனைத்தேடி நான்திரிகிறேன்வாடி
இங்கேநீவாடி ஈசாவாஎன்னைநாடி சுந்த

பணிந்துன்னைத்தாண்டி நான்பக்தியைத்தண்டி
மீனாக்ஷிபிரியாளண்டி பிழைக்கிறேன்யண்டி சுந்த

---

ருகூ. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-சாபுதாளம்

பல்லவி

சோமசூரிய வன்னிநயனா
சுயபரிமளசுகமீனாட்சி மடிமேலேசயனா சோம

அநுபல்லவி

கார்மஜனகநய னார்ச்சிதசுந்தரமூர்த்தி
கருணையுடனேவந்து திருநீளந்தன் ஆர்த்தி சோம

சரணம்

பிரிதிவியுண்டானநாளாய் பிறந்திறந்ததினிபோதும்
பிரகிருதிமாயைவிடு வித்துளந்தனைக்காரும் சோம

யாருமிகழப்பாரில் நாரியாகிவந்தநான்தோஷி
அம்பாள்மீனாக்ஷிபிரி யாளை அன்பாய்நீபோஷி சோம

---

சூo. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்

பல்லவி

மதுராபுரிதன்னிலே விளங்குமங்களகரா
மாதுமீனாமனோகரா மகாதேவசங்கரா
மாதுமீனாமனோகரா மதுரா

அநுபல்லவி

சாதுக்களிருதயவாசா சகஸ்திரசூரியப்பிரகாசா
நீலாம்பிகைபிராணேசா நித்தியானந்தவுல்லாசா ம

சரணம்

மூவர்க்குமேலானபாத்திரா முகத்திலக்கினிநேத்திரா
சகலவேதாந்தசாஸ்திரா சாஸ்வதசதாசிவருத்திரா ம

காலனையுதைத்தகாலா காணஅலங்கிருதகோலா
எங்குந்நிறைந்தலோலா ஏகசக்கிரபூபாலா ம

பத்தபரிபாலகா பாண்டியவம்ச நாயகா
மகத்தோர்களுக்கந்தகா மீனாக்ஷிபிரியாட்குசாதகா ம

---

௬௧. கீர்த்தனம்-இ-ம்-சோகவராளி-சாபுதாளம்

பல்லவி

இராஜராஜசுந்தரா-ரத்னகிரீடலங்காரா இராஜ

அநுபல்லவி

தேஜோமயரூபனே தேவிபிராணநாதனே இராஜ

சரணங்கள்

வீரபராக்கிரமவீமா வேண்டாசகஸ்த்ரநாம
மதுரையாண்டமன்னவாமீனாக்ஷிபிரியாள்முன்னேவா இரா

---

௬௨. நாமாவளி-ஏகதாளம்

பல்லவி

சாம்பசதாசிவ சாம்பசிவா
சர்ச்சனாநந்த சந்தோஷசிவா
சாம்பசதாசிவ சாம்பசிவா
சியாமளவர்ணி பிராணேசசிவா சாம்ப

அநுபல்லவி

கதம்பமிருந்த ஆரண்யவாசா
காஞ்சனமாலை சுதனிநேசா
சுந்தரகலாதர சுந்தரேசா
இந்திரவிமானத்தி லிருக்குமுல்லாசா சாம்ப

சரணங்கள்

எமனை எதிர்த்துநீ உதைத்தகாலா
ஏகசக்கிராதி பதிபூபாலா
தோஷகுணங்க ளற்றதிச்சீலா
தொண்டரிருதய கமலவிலோலா சாம்ப

பாவிகள்கண்ணுக்கு பயங்கரரூரா
பக்தர்களுக்கு நித்யயலங்காரா
சத்துருவைஜயிக்கும் சாமர்த்தியசூரா
சர்வாயுதபாணி பராக்கிரமவீரா சாம்ப

மருமகபாண்டிய ராஜதுரையே
மதுராபுரிநகர்க் கதிபதியே
பிரஜைகளிடத்தில் வெகுகிருபாநிதியே
பணிந்தேன்மீனாட்சி பிரியாட்குநீகெதியே சாம்ப

சுங. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-சாபுதாளம்

பல்லவி

கத்துறதுகேட்கவில்லையோ-என்கர்த்தனேநான்
கத்துறதுகேட்கவில்லையோ-உன்
பித்துபிடித்தபேயடியாள்-பேயடியாள்-சதா கத்து

அநுபல்லவி

வற்றாகருணைக்கடலே-நீர்
வற்றாகருணைக்கடலே
சித்தாள்சேவித்தசுடலை-சேவித்தசுடலை-சதா கத்து

சரணங்கள்

காஞ்சனமாலைமாமி-காசுக்காக
காஞ்சனமாலைமாமி-கிரீடத்தால்
கரணத்தைமறைத்தாளேசாமி-மறைத்தாளோசாமி-சதா கத்து

ஏழைமீனாக்ஷிபிரியாள்-சுத்த
ஏழைமீனாக்ஷிபிரியாள்-என்னிடத்தில்
என்னிருக்குனக்குநான்செய்ய-உனக்குநான்செய்ய-சதா கத்து

---

சுச. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்

பல்லவி

ஞாயமன்றிது ஞாயமன்றியிது
ஞாயமன்றி உந்தனுக்கு
ஜயஞ்செய்தஸ்ரீ மீனாக்ஷியுடன்சிம்மா
சனத்தில்வாழும் சுந்தரராஜா. ஞாய

அநுபல்லவி

தாயார்தந்தைகுரு தெய்வம்நீயென்று
சத்தியமாகவே நித்தியம்நான்சொல்ல
தனயாள்முன்தோணத் தயங்குகிறாயே
தர்மதுரையேஉனக்கும் நெஞ்சங்கல்லா ஞாய

சரணங்கள்

சோறுநீறுசுழுத்தியை விரும்பும்
சரீரத்தில்சிக்கி சதாஎன்மனம்வெம்ப
சுயசூரவீரஉக்கிரபாலன்வாய்
வக்கணையைக்கேட்டு வீற்றிருக்கிறாய்ரொம்ப ஞாய

ஏதினிமேலேவுன்னைப்பிரிந்துஇவ்
வுலகமீதில்நானிருக்கமாட்டேன்
இந்துகுலம்புகுந்துவாழ்ந்தஏஈசா
உந்தனுக்குசகஸ்திரசலாம்போட்டேன் ஞாய

கத்துகிறஏழையடியாள்மீதில்
இத்தனைநாளாய்உனக்குஏன்வாது
உத்தமிமீனாட்க்ஷிபிரியாளுளம்நொந்து
சற்றேசபித்தாலும் சாபம்வீண்போகாது ஞாய

---

சூ௫. கீர்த்தனம்-இ-ம்-பமுனாகல்யாணி-ரூபகதாளம்

பல்லவி

இராஜசுந்திராவிருஷப வாகனமேறி
மாசிவீதிவாரார் மதுராம்பளுடன்சவாரி இராஜ

அநுபல்லவி

தேஜோமயமாய்கவச கிரீடங்கள்ஜொலிக்க
திவ்யரத்னாபரண அலங்காரங்கள்பலிக்க
தங்கவெண்சா மரங்கள்போட
தாசிகள்நர்த் தனங்களாட
சித்தாதிகள் வந்துகூட
சிவநாம கீதங்கள்பாட இராஜ

சரணங்கள்

ஆனைசேனைவிருதுவீதி எங்கிலும்நெரிய
ஹரஹரவென்றடிய மலர்கள்பொழிய
சமணரைக் கழுவிலேற்றி
க்ஷணத்திலவர் மதத்தைமாற்றி
மூவர்கள்பூசித்த மூர்த்தி
மீனாக்ஷிபிரி யானைநத்தி இராஜ

சூசூ. கீர்த்தனம்-இ-ம்-பியாகு-அடதாளசாப்பு

பல்லவி

கைலைநாதர் கதிர்கொய்துவாரார் கானகமதிர கைலை

அநுபல்லவி

ஆயுதம்அஸ்தந்தனில்கொண்டு-அடிக்கடிநின்று
சிந்தாமணி கிராமத்தில்சென்று
செந்நெல் சுமைகொண்டு கைலை

சரணங்கள்

பக்தாளை ரட்சிப்பதேஎண்ணன்-பார்க்கப்பால்வண்ணன்
முந்தியேமுளைத்த முக்கண்ணன்
மீனாக்ஷிபிரியாள் மகிழ்ந்திடும்மன்னர் கைலை

சூள. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

பக்திநித்தியம்செய்தாரே-பாணபத்திரர் பக்தி

அநுபல்லவி

இத்தரைவெம்பாய்வெறுத்து-ஈசானிய
நாமத்தைஇக்ஷுவாய்கிரகித்து
உள்ளமுருகித்தியானித்து ஓடாமல்
மனதைஓர்நிலையில்வைத்து பக்தி

சரணங்கள்

ஆத்மலாபத்தைத்தேடி-ஆனந்தமாய்
வீணையைவாசித்துப்பாடி
மூலலிங்கத்தைஓடிமீனாக்ஷிபிரியாள்
முத்திபொருளை நத்திநாடி பக்தி

சூஅ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி

பல்லவி

கார்கார் கதம்பவனீசா-என்னைக்
கார்கார் கதம்பவனீசா
கார்கமலாக்ஷிநேசா-நீகார்கமலாக்ஷிநேசா கார்

அநுபல்லவி

பாரிலுயர்ந்த பாடகர்வாதிக்கிறார்
பாரிலுயர்ந்த பாடகர்வாதிக்கிறார்
பாண்டியரும்இசை யென்றுஉரைக்கிறார் கார்

சரணங்கள்

வந்தவித்வானைநான் எந்தவிதம்வெல்வேன்
வந்தவித்வானைநான் எந்தவிதம்வெல்வேன்
வரகுணருக்குஎன்ன வழிசொல்வேன் கார்

மீனாக்ஷிபிரியாள் ஸ்துதிக்கும்சுந்தரப்பா
மீனாக்ஷிபிரியாள் ஸ்துதிக்கும்சுந்தரப்பா
மெலிந்துநான்சொல்வ தெல்லாந்தப்பா கார்

சுகூ. கீர்த்தனம்-இ-ம்-தனசரி-அடதாளசாப்பு.

பல்லவி

வீணைசீதம்பாடினார் விறகாளாகிஓடினார்சிவன் வீணை

அநுபல்லவி

பாணபத்திரர்க்காக-வந்தபாடகர்கள்போக
வடகரையில்வந்து-நடுவாசலிலிருந்து வீணை

சரணங்கள்

சராசரம்பிரமிக்க-சப்தசாகரந்திகைக்க
சுருதிகளைக்கூட்டி-சுகமாய்சாரீரம்நீட்டி வீணை

சிரசும்அசையாமல்-சுவாசம்நடுவிலேகில்லாமல்
பிரதிமையைப்போலே-பகவான்கிருபையினாலே . வீணை

கன்னிகாபுரிவாசர்-கமலமுகமந்தஹாசர்
மேனியெல்லாம்வாட-மீனாக்ஷிபிரியாள்கொண்டாட வீணை

---

எ0. கீர்த்தனம்-இ-ம்-சோகவராளி-ஏகதாளம்

பல்லவி.

கிரீஹத்தில்வந்தார்
கௌரியைக்கண்டு மகிழ்ந்தார்

அநுபல்லவி

ஈரவிறகுகொண்டு ஏமநாதனைவென்று கிரீ
முத்துப்போல்நெற்றிவேர்க்க மீனாக்ஷிபிரியாள்கவிசேர்க்க கிரீ

எக. சீசபத்தியம்.

சோமசூரியவன்னி நயனசரீரமெல்லாம்
சோர்ந்திருக்கவேண்டிய காரணங்களென்ன
சுருக்காகயிந்தசங்கதியை சுருக்காஎன்காரணங்கேட்க
கபடமில்லாமலே உரையும்நன்னா
மோகினியைக்கண்டு போகிக்கஆசைகொண்டு
அரியிடத்திலவமானப் பட்டமன்னா
மோசம்செய்துமுனிவர் பத்தினிகளைத்தொடர்ந்து
பதிவிரதாபங்கம்செய்தபிரபு நீரன்னா
வேர்வையாலேஅன்னை தந்த சால்வைநனைந்துபோச்சே
விசாலமாய்புஷ்பம் அழியலாச்சே

காலுநாரியர்களறிந்தாலிது எனக்குஏச்சே
நானென்னதவஞ்செய்தேனோஇப்படிபதிரீவாச்சே

எஉ. இதுவுமது

சந்தேகங்கொள்ளாதே சுந்தரிஎந்தன்மேல்
சத்தியமாய்சொல்கிறே னிதைநீகேளாய்
சுந்தரவிம்பமுக மந்தகாசிஉன்றன்
செங்கரம்சிந்தைமகிழ்ந்து பிடித்தநாளாய்
சொப்பனத்திலாலாலும் இப்பிரபஞ்சமாதர்களை
சுகித்துநானணைந்ததில்லை என்கேளால்
சூரனேசன்சுதனி பெற்றசுகுமாரியே
சூதொன்றுமறியே னெனை தகித்துஆளாய்
பாரமானபச்சைகட்டைகளை சுமந்துநானே
பாணபத்திரன்சத்துருவை ஜெயிக்கப்போனேன்
கோமளாகாரகுயிலே எந்தன்குடும்பமானே
கோபம்கொள்ளாமலென்னை கூடிஎன்தேனே.

---

எ௩. கீர்த்தனம்-இ-ம்-நாதநாமகிரியை-சதுர்சாதிரூபகம

பல்லவி

சுவாமிநான்சொன்ன தெல்லாம்அபசாரம்
தங்கள்மகிமையா லுங்களை இந்நேரம்குரு சுவாமி

அநுபல்லவி.

பூமியில்பூசித்தோர்கள் காமவிநாசா-புரு
ஷார்ப்புதமேஎந்தன் பிராணேசா
திவ்வியகெந்தம்இந்தாரும் தேகத்தில்பூசதேவா
நானறிவேனோஉன் பெருமைபேச-குரு சுவாமி

சரணங்கள்

தாமதகுணத்தாலே இப்படிவுரைத்தேன்-தாசி
யைத்தழுவுமற்பபூமான் போலேநினைத்தேன்
உற்றதுநீர்சொன்னபின் என்சித்தம்பூரித்தேன்-உல்
லாசமீனாட்சிபிரியாள் மகிழ்சேவித்தேன்-குரு சுவாமி

எச. கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்

பல்லவி

வைபவத்துடன் வாராரையன்-வலையன்தனையை
விவாகஞ்செய்ய சுந்தரப்பையன் வை

அநுபல்லவி

கையிலேகருஞ்சூளைக் கலயமொன்றெடுத்துக்கொண்டு
கௌபீனங்கந்தையொன்றை இடையிலேயுடுத்திக்கொண்டு
கண்டகர்குலக்கன்னிஜனகரை நேரேபோய்கண்டு
கெண்டைபிடிப்பேனென்று கடற்கரையோரத்திற்சென்று-வை

சரணங்கள்

தோணிமேல்நின்றதுறை முகத்தில்போய்வலைகள்வீசி
துள்ளியடங்காமகரத்தைப் பிடித்தெல்லாரையுமேசி
மேகலாபரணம்போடுறே னென்றுபரியம்பேசி
மீனாட்சிபிரியாட்காகமாலை சூடிமணங்கள்பூசி-வை

எ௫. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாபு.

பல்லவி

இராஜன்என்வரக்காணேன்சகியே-வெகு
சரசஉல்லாசபரிகாசஞ்செய்தெனையணைய-சிவ இராஜ

அநுபல்லவி

மோசஞ்செய்துமோகத்தினாலே தாசிவீடுபோனாரோ
மோடிசெய்கிறாளென்று ஓடிசந்நியாசியானாரோ இ

சரணங்கள்

மல்லிகைபாறும்புமணம்சிதறி வீணாகிவாடிப்போச்சே
மன்னனில்லாமலேஎன் மஞ்சமெல்லாம்பாழாச்சே இ

உயிர்விண்டுடல்போலொருக்ஷணங் கூடநானிருக்கமாட்டேன்
உன்னதப்புடவைஉண்மை யின்றையோடேநான்விட்டேன்

மாதர்வீதியிலேபோய் நேரமாகுமுன்னேநீபாரு
மீனாட்சிபிரியாட்காக பிராணேசனைக்கொணர்ந்துசேரு இ

எசூ கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்.

பல்லவி

தேடிசகிகள்திரிந்தார்-தெரு
வீதிஎங்கிலுங்கிடந்துஅலைந்தார்

அநுபல்லவி

ஓடியெங்கிலும்போய்பார்த்தார்
உத்தமரைக்காணாமலேதவித்தார்

தாதியெல்லாருந்திகைத்தார்
தங்கள்கரத்தைசிரத்தில்நெரித்தார் தேடி

சரணங்கள்

வல்லியுடன் ரமிக்கக்கண்டார்-வாரும்
வழியில்புண்ணியரைபோக்கிரியென்றார்
மீனாட்சிபிரியாள்வாழ்வண்டைசென்றார்
நீலமேகவர்ணிக்குஇதுகளெல்லாம்விண்டார் தேடி.

---

எஎ. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தக்களிப்பு.

பல்லவி

பாண்டியன்பேரைக்கெடுத்தாண்டி-பொல்லா
வம்பன்வலைநாச்சியரைப்போய்தீண்டி. பாண்

அநுபல்லவி

ஏண்டிஎல்லாதசையுங்கொடித்தாய்ஏக
தாராவிருதனென்றெண்ணிநினைத்தாய்
வருந்தியாவென்றுஅழைத்தாய்-வச்ர
மாணிக்கரத்நமகுடந்தரித்தாய் பாண்

சரணங்கள்

அம்பரவுன்னதிர்ஷ்டங்கள்பஞ்சை-அதி
பாலியமானஎவ்வனஇளம்பிஞ்சே
கருணைகுடிபுகுந்தநெஞ்சே-எங்கள்
காஞ்சனமாலைவளர்த்தபெண்குஞ்சே பாண்

இராச்சியமெல்லாம்பிடுங்குஇந்த
இராத்திரிமுதல்நீஆளத்தொடங்கு
நித்தியானதர்மசடங்கு-நீ
தானேசெய்தெங்கள்வார்த்தைக்குளடங்கு பாண்

வந்தால்நீவார்த்தைசொல்லாதேவச்சிர
ஸ்தம்பத்தில்சாய்ந்துஎதிரேநில்லாதே
கபடன்மேல்காதல்கொள்ளாதேநம்ப
கமலமீனாட்சிபிரியாளைத்தள்ளாதே பாண்

எஅ. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-சாபுதாளம்.

பல்லவி

வருகட்டும்சொல்கிறேன்திருட்டுதேவர்க்கு
பிறட்டெல்லாமறிந்தேன்போடி
இருட்டிலேயீசன்இருண்டுகொள்ளாமல்
நெருட்டுதீபத்தைபோட்டுநீவையடி வரு

அநுபல்லவி

சறட்டில்கட்டகௌபீனக்கந்தைகிடைக்
காமலேகாட்டில்கிடந்தாண்டி
சர்ப்பத்தைபூண்டசகியாசிக்குநானிப்போ
ஜாதிரத்னமகுடந்தரித்தேண்டி வரு

சரணங்கள்

மீனாட்சிபிரியாளுக்காகப்பொறுத்துக்கொண்
டின்னமுந்தான்குடிவாழவேணும்
மேலானவேதியர்கள்கேட்டுசிந்தித்தால்
வெட்கமானமரியாதிநாளைத்தோணும் வரு

---

எகூ. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி

சயனம்போய்செய்துகொண்டாள்-சங்கரி
சயனம்போய்செய்துகொண்டாள்
சந்திரன்வெண்நீயாலே சய

அநுபல்லவி

நயனத்தைமூடிக்கொண்டுநாரணி
நாதன்மேல்கோபித்துக்கொண்டு
நயனத்தை மூடிக்கொண்டு
நாதன்மேல்கோ பித்துக்கொண்டு
என்னசெய்கு வேனென்று
ஏங்கிப்பிரி யத்தைவிண்டு சய

சரணங்கள்

கபாடபந்தனம்செய்து-கடூரமாய்
கணவனைக்காணமல்வைத்து
கபாடபந்த னம்செய்து
கணவனைக் காணமல்வைத்த

மாரினபூமாலை — யைக்கொய்து
மீனாட்சிபிரியாள் — மேலேஎய்து சய

அ0. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி

கதவைத்திறந்துஎன்னைநீபோஷி
கருணாமிர்தபாஷி

அநுபல்லவி

மாதர்களுக்குள்ளே — சிலாக்கியம்
மஹாதேவாநானுன்னை அடைந்தே னென்பாக்கியமேபாக்கியம்
கருநீலமாய்கைலே — மலைமேல்வாழும்மயிலே
மெதுவாய்பனசுத்துகிலை — தரித்துவாடிஎன்பாயிலே தக

சரணங்கள்

பாண்டியமஹா — ராஜன்பெண்ணே
பத்மநயனங்க — ளாலேபாரடியேநீஎன்னை
திங்களுந்தீயாயாகுது — தேகமெலிந்துநோகுது
பொழுதுவீணாய்போகுது — பூவாடைதென்னல்வருகுது கத

மனதுஇறங்கிலே — யோநோக்கு
மாணிக்ககங்கணகரத்தால் — மணிதாப்பாளைநீக்கு
சரசமாய்வார்த்தைசொல்லு — சயனஸ்தலத்தில்நில்லு
மேவுதுமாரன்கைவில்லு — மீனாட்சிபிரியாட்காகமருவிவெல்லு கத

---

அக. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி

சுவாமியுமக்கநேகநமஸ்காரம்-கண்டார்
நகைக்கசண்டைவேண்டாமெழுந்திரும்இந்நேரம்

அநுபல்லவி

மாமிதந்தராச்சியத்தை — என்கையில்தாரும்
மலையடிவாரத்தில்குகை
யுண்டானால்தேடிப் — போய்ச்சேரும் சு

சரணங்கள்

பெட்டிசாவிகள் இங்கே — விட்டேஎறியும் சு
திட்டேதானுமீதியுண்டோ
பார்க்கிறேன் — பட்டைப்பிரியும் சு

மீனுட்சிபிரியாட்காக பொறுத்தேனிந்தயிரவு சு
ஏகதாராவிருதனில்லாப்
பதியுடன்பாரிக் கென்னஉறவு சு

---

அஉ. கீர்த்தனம்-இ-ம்-நாமக்கிரியை-சாபுதாளம்.

பல்லவி

ஆரிடபோதனேபெண்ணே
அதிகமாய்பேசாதே அறிவேனானுன்னே ஆரிட

அநுபல்லவி

தாருமாறுமாஏசாதே
தாயூரென்றுதயிரியமாய்வீசாதே ஆரிட

சரணங்கள்

பாருக்குள்வெகுபணக்காரி
பசித்தகணத்துக்கன்னமிடாதிட்டநாரி ஆரிட

நியாயமறந்தாய்நான்சபித்தேன்
நந்திமீனேப்பிடிக்கவலேயைத்தரித்தேன் ஆரிட

வலேச்சியும்நீதாணெண்ணிப்பாரு
வம்புகள்பண்ணுமல்வந்தென்னேச்சேரு ஆரிட

மீனுட்சிபிரியாள்கவிசேர்க்க
முனேந்தேனிந்தலீலேக்கு இதுஒருசாக்கா ஆரிட

---

அ௲. கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

பல்லவி

கதவைத்திறந்துகைலாகுகொடுத்தழைத்தாள்
கணவனேமீனலோசனிதங்க கதவை

அநுபல்லவி

வாதாடினதெல்லாம் க்ஷமியும்நீரென்றுரைத்து
கலவியாய்வாழ்ந்ததும் நாம்தானென்றுநினேத்து
பூசும்புனுகைஈசன் மாரில்பூசிபூரித்து
பொன்னூஞ்சலாடுவோம் வாருமென்றுவணேத்து கத

சரணங்கள்

இரத்நசிந்தாமணி கிரஹமத்திலேஒய்து
இராஜசுந்தரேசருக் குபசாரஞ்செய்து
மகத்துக்களேத்தொடரும் மாயைத்தூரத்திவைத்து
மேருவைச்சுற்றுமித்திரன்போல்மீனுட்சிபிரியாள்பித்தாய்பக்தி கத

அச. கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-அடதாளசாப்பு.

பல்லவி

பசுபதீஸ்வராஉந்தன்பாதம்-பணிந்தேன்
எனக்கின்றுசெய்நீபிரசாதம் பசுப

அநுபல்லவி

காசுபணம்நான்கேழ்க்கவில்லை-காரணத்தால்
கேளையாநீயெந்தன்சொல்லை
பக்திரசபாயசத்தை எனக்குப்போட்டு
பரமபதம்வருக வழியைநன்றாய்நீகாட்டு பசுப

சரணங்கள்

ஆகூரில்வாழுஞ்ஜெகதீசா-அம்பாள்
பங்கஜவல்லிமங்களாம்பாள்நேசா
மீனாட்சிபிரியாள் மனமகிழும்உல்லாசா
மேருசிகரான மலையின்மீதிலேவாசா பசுப

---

அரு. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-புலரவல்-ரூபகம்.

பல்லவி

காசிவிஸ்வநாதாகாரும்-கருணையுடனே
கடைக்கண்ணால்பாரும் காசிவிஸ்

அநுபல்லவி

ஈசமஹேச னேவாரும்
எந்தன்மனது மயக்கத்தைத்தீரும்
ஆசையுடன் கிருபையால்பாரும்
அரவிந்தபாதத்தில் அழைத்தென்னைச்சேரும் காசி

சரணங்கள்

பக்திஞான மெடுத்தூட்டும்
பரமபதத்து வழிகளைக்காட்டும்
அடியாருடனெந் தனைக்கூட்டும்
ஆனந்தசாகரத்தில் முழுகக்காட்டும் காசி

காமக்குரோதமோகத் தைப்போக்கும்
கைலாசபதவிக்கு யோக்கியமுண்டாக்கும்
இந்தஜெகத் தாசையைநீக்கும்
அந்தரலோகத்தமரர் போலென்னையாக்கும் காசி

திவ்யரிஷபத்தின் மேல்வந்து
தேவாதிதேவாயுன் தரிசனந்தந்து
குங்குமசுந்தரி யோடுகந்து
மீனாட்சிபிரியாள்மனதில் குடியாயிருந்து காசி

---

அசு. கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி

காசிவிஸ்வநாதனே
கருணாகடாட்சனேஎந்தன்

அநுபல்லவி

பாசவலையைத்தீரும் பரிந்துகண்ணாலேபாரும்
உந்தன்லோகத்தில்சேரும் உகந்துசாயுச்யந்தாரும் கா

சரணங்கள்

மாயைக்குமேலானமன்னா மாரிலேஆரங்கள்மின்ன
ஜோதிமயம்நீஅன்னா சொல்லத்தெரியுமோ என்ன கா

பக்கபரிபாலனே மெத்ததயாபரனே
நித்தியாநந்தரூபனே சத்தியப்பிராணநாதனே கா

உமையாள்புரத்தில்வாசா உகந்திருக்குமுல்லாசா
மின்னலொளிப்பிரகாசா மீனாட்சிபிரியாள்நேசா கா

---

அஎ. கீர்த்தனம்-இ-ம்-தனாசரி-அடதாளசாப்பு.

பல்லவி

குங்குமசுந்தரி-கோமளசரீரி

அநுபல்லவி

மங்களசொரூபி வைபவப்பிரதாபி
எந்தனிடநாபி நளினத்தில்ஞானத்தைசாபி குங்

சரணங்கள்

அன்னையடிதேவி உன்னுடன்குலாவி
ஆசையாலேமேவி அலையுதென்னாவி குங்

மறைபுகழும்மாயை மறக்குதடிதாயே
மீனாட்சிபிரியையே முன்னேகாருநீயே குங்

அஅ. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

பல்லவி

சரணம்சரணமென்னை ரட்சிக்க-இதுநல்ல
தருணம்தருணமடி தாயே சரணம்

அநுபல்லவி

விரதம்விரதமாய்வேண்டினேன்விஸ்
வேசாநாயகியுனையண்டினேன்
குங்குமசுந்தரி மங்களசவுந்தரி
சங்கரனார்பாரி இங்கிருந்தெனைக்காரீர் சர

சரணங்கள்

சற்றேகடைக்கண்ணாலேபாரடி-உந்தன்
சித்தமிரங்கியென்னைக்காரடி சர

காலன்கையிலென்னைக்காட்டிக்கொடாதேசொன்னேன்
உமையாபுரத்துஅன்னை உகந்துபணிந்தேனுன்னை சர

இராஜகோபாலர்சகோதரி-இராசத்
துவேஷமற்றவர்க்குமநோகரி சர

சமஸ்தஹ்ருதயவாசி சந்திரமுகவுல்லாசி
மின்னல்போலேபிரகாசி மீனாட்சிபிரியாட்குநேசி சர

---

அகூ. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி

அற்பஅர்ச்சனைகளை நான்செய்தேன்
கற்பகத்தருநோக்கு தகுந்தபூஜைபண்ணமல் அற்ப

அநுபல்லவி

துற்பாக்கியேநான் பொருள்களற்று
துளிதிரவியத்தை வைத்து அற்ப

சரணங்கள்

கட்டுமயிர்முடியைத்தொட்டு
சொட்டுத்தயிலமிட்டு அற்ப

பணம்பெற்றமந்தணர்க்குலோபி
பச்சைபானியத்தைவிட்டுபாபி அற்ப

மஞ்சளையும்நீரய்க்கரைத்து
மரகதமேனியெங்குந்தெளித்து அற்ப

சோலை செலவையுங்கிறுத்தி
சித்தாடை சேர்த்துவுடுத்தி அற்ப

பதக்கம் இழைக்கசக்தி
யற்றுள் பாவனை சாற்ற அற்ப

கொழுந்துமருமலர் வேர்தள்ளி
குங்குமத்தை கொஞ்சமாயள்ளி அற்ப

பள்ளய பாகங்களற்று
படியமுதை வடித்துப்படைத்து அற்ப

ஆகமநீதிகளை விட்டு
அபராதங்களுக் கேற்பட்டு அற்ப

மேளதாளங்கள் நீக்கி
மீனாக்ஷிபிரியாள்பாடி கரங்கள்தூக்கி அற்ப

---

௯0. கீர்த்தனம்-இ-ம்-அபுரூபம்-ரூபகதாளம்.

பல்லவி

ஏதம்பா ஏதம்பா-உமக்கிந்தமோடிகள்ரொம்ப
இம்மாயூரபுரி நாதரோடிஷ்ட
சல்லாபமாயிங்கே யிருக்குமபயாம்பா ஏதம்பா

அநுபல்லவி

வாய்திறவாமலேநீ யிருக்கிறதுநியாயமல்ல
வந்துஉன்சந்நிதிதினம் வருந்தியேநான்சொல்லச்சொல்ல ஏ

சரணங்கள்

அரியயன்நாதசர்மா அநவத்கியர்ச்சிதசரணி
அணுவிலும்சிறியாளென்றே மதியாதிருக்காய்மயில்வர்ணி ஏ

எந்தவிதத்திலும் எந்தன்முன்னேவந்துநில்லு
ஏழைமீனாட்சிபிரியாளுக் கேதானுமோர்வழிசொல்லு ஏ

௯௧. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-காபி-ஏகதாளம்.

பல்லவி

இந்தகாக்ஷிகாண இந்தநேரமாய்-நானிந்தநேரமாய்
இங்கேயிருந்தேனபயாம் பாவுன்சதமாய்

அநுபல்லவி

மந்தஹாசிநோக்கு-நானோர்பொருளோ-நானோர்பொருளோ
மாயூரேசரோடிறங்கியது மறையோடருளோ இந்த

சரணங்கள்

ஏழைமீனாக்ஷிபிரியாள்பவகோரம்-பிரியாள்பவகோரம்
இன்றேயொழித்திடு என்தாயேநானுன்பாரம் இந்த

---

கூஉ. கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-சதுர்சாதி-ரூபகம்.

பல்லவி

ஞானம்பிகை நயனத்தாலேபாரடி
கானமீனாக்ஷி பிரியாளைக்காரடி ஞான

அநுபல்லவி

ஏனோதானோவென் றொதுங்கிநடக்காதே
இன்னும்அநியாயமா யென்னைக்கெடுக்காதே
மாத்தீனமானமதி யைக்கெடுக்காதே
மறலியண்டையிலே என்னை மடுக்காதே ஞான

சரணங்கள்

பொறுமையானபணிக ளைப்பண்ணிப்பூட்டு
அருமையாகஎன்னை யழைத்துசீராட்டு
வாசாமகோசரமான பக்தியையூட்டு
வதான்யடன்வந்து தெரிசனங்காட்டு ஞான

இன்னுமனதிரங்க வில்லையோநோக்கு
ஏழைநானீடேறதானும் சொல்லடிநேக்கு
குரோதாதிகளான குணங்களைநீக்கு
குருசாமியடியார்போலே என்னையாக்கு ஞான

கூங. கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான் - துக்கடா.

பல்லவி

வாவாவாகனமேறி
வாவாதாகியர்பாரி-நீ வாவா

அநுபல்லவி

தாதாதா காவேரி தீர்த்தம்
தாயிந்ததுலாமுகூர்த்தம்-நீ வாவா

சரணங்கள்

நில்நில்லோடாதேரொம்ப
நில்நதியில் ஞானம்பா-நீ

சொல்சொல்சொல்லெனக்கோர்வழி
சொல்சுமக்காதே என்பழி-நீ வாவா

பார்பார் பதம்முகத்தாலே
பார்மீனுட்சி பிரியாளே வாவா

பலவிதகீர்த்தனை முற்றிற்று.

ஆக-கீர்த்தனை-கூரு.

உ

சிவமயம்.

# தெப்ப உற்சவ ஓடம்.

மீனுக்ஷிபிரியாள்கவிக்கு முந்தி
விநாயகரே வந்தருள்செய்
நான்முகன்றன் சரஸ்வதியே-எந்தன்
நாவில்வந்து நர்த்தனம்செய்

முடுகு.

தொப்பைதிருநாளையொரு கப்பலாய்நான்பாட
தோகைமயில்வாகனரே வந்திருநீ-கூட
தையும்பிறந்துநவ தானியம்செழிக்க
தங்கம்வெள்ளிதென்மதுரை எங்கிலுங்கொழிக்க
சதுர்விதவர்ணத்தாரும் சிவாலயத்தைப்போற்றி
சாஸ்திரப்படிதுவஜ ஸ்தம்பத்தில்கொடியேற்றி
ஜொலித்தநவரத்ன ஆபரணங்களையெண்ணி
சோமாஸ்கந்தமூர்த்திக்கு அலங்காரங்களைப்பண்ணி
விதம்விதமாய்வெள்ளி தங்கவாகனத்தில்மாற்றி
வீதியிலேபோய் சமணுளைக்கழுவிலேற்றி
எட்டாந்திருநாளில் போய்வலைவீசி
ஈனகுலமாதைமாலை யிட்டுமணம்பூசி
கொட்டுமேளத்துடனே கோயிலார்கள் துள்ளி
கூட்டமாகவந்து குளத்திலேமுட்டுதள்ளி
சிந்தாமணிகிராமம்போய் செந்நெல்கதிர்கொய்து

சிறப்பாய்பனிரண்டு நாளாய்உற்சவமும்செய்து
பௌர்ணவமிதினம் எல்லவருங்கூடி
பொழுதுவிடியுமுன்னே சிவாலயத்திலோடி
பவக்கடலைபஞ்சாய் பறக்கடிக்குந்தாய்க்கு
பட்டமராளெல்லவரும் பள்ளியறைநீக்கி
வெகுநேரமாச்சுது என்றவாள்நடந்து
வேகவதியிலேபோய் செங்காசலங்கொணர்ந்து
மூலஸ்தானங்களுக்கு முன்னேபூஜைசெய்து
மீனாக்ஷிசுந்தரரைக் கண்டுமனம்மொய்து
தேனுடுததிபால் பஞ்சாமிர்தங்கள்கூட்டி
திவ்யசோமாஸ்கந்தருக்கு திருமஞ்சனமாட்டி
பார்க்கவினைதபஞ்சு பட்டிடையில்கட்டி
பாதசிரபரியந்தம் பலவாபரணம்பூட்டி
அற்புதபக்ஷயான்ன நைவேத்தியங்கள்கொடுத்து
ஆகமப்படியாறுகால பூஜையைமுடித்து
நானுவிதமலர் மாலைகளைச்சூட்டி
நவரத்னபாதரட்சை சரணத்திலேமாட்டி
ஆணிவைரமிழைத்த அபஸ்தங்கள்சாற்றி
அற்புதவிமானங்களி லேயழகாய்ஏற்றி
அரகராவென்று அடியர்கரங்கொட்ட
ஆறுமணிக்கம்மன் ஊர்கோலம்புறப்பட்டாள்
அதிவேகமாய்வந்து குளக்கரையிலேயிறங்கி
பத்துமணிக்குபாத தீர்த்தங்கள்கொடுத்தாள்
முத்துகொண்டைமின்ன தெப்பத்திலேறிஜொலித்தாள்
நேத்திரானந்தமா யிரண்டுவலம்வந்தாள்
நீராழிமண்டப நிழலிலேயிருந்தாள்
சாயரட்சைவேளையிலே சந்தடிகள்கூட
சகலவிதசாமகிரியும் கடைகொணர்ந்துபோட
திங்களும்மேலாக வந்துமேஉதிக்க
தீபமொருலக்ஷம்படித் துறையெங்கும்ஜொலிக்க
விதம்விதமாய்பாணமதிர் வெடிகளங்கேபோட
வேடிக்கைபார்க்கவெகு ஜனங்கள்வந்துகூட
தொண்டர்களெல்லாருமதை கண்டுமேபூரித்தார்
தோணிமேல்நின்று தெப்பல்களலங்கரித்தார்

சூஸ்திரங்களாலேகருத் தானைமுன்கிறுத்தி
சோமஸ்கந்தமூர்த்தியை சிம்மாசனத்திலேற்றி
தொங்கநன்றுயெங்கிலும் புஷ்பசரம்தொடுத்து
தோரணங்கள்வாழை கமுகுகனியிசைத்து
உன்னிதமாகக் குலோபதிலேற்றி
ஓரங்களிலொதுங் காமலேநடுவிலோட்டி
வந்தவர்களெல்லவரும் வடம்பிடித்திழுக்க
செல்வமீனாக்ஷிபிரி யாள்சிந்தைமகிழ
ஜலத்திலேமிதந்துவந்தது ஜெகம்புகழ
அஸ்வத்திலேறி ஹாரிடபாரி

கிரகணம் பிடிக்குமுன்னே
கிளம்பிகோயில் வந்தாளன்னை

ஏலேலோ ஈஸ்வரியாள் மதுரேஸ்வரியாள்
மகரமாசவிளையாடலிது திருவிளையாடலிது.

---

## உ. அஸ்வ விற்கிரய ஓடம்

ஆலாஸ்யக்ஷேத்திரத்தில் அரிமர்த்தன
பாண்டியராஜரவதரித்து
நீதிவழிகளையறிந்தார் நிலத்தில்
நெடுநாளாய்வாழ்ந்திருந்தார்

மங்கையர்களுடன்கூடிமதுராபுரி
ராச்சியத்தையாண்டார்முடிசூடி
அஸ்வத்தின்மேலாசைகொண்டு அந்தர
மந்திரியையழைத்துக்கண்டு

முடுகு

ஆயிரங்குதிரைகளுக் கச்சாரம்தொடுத்தார்
அரண்மனைஜானகியை அவர்கையிலொப்பித்தார்
பூரித்துவாதவூரார் பொருளைக்கண்டுஒய்தார்
புதிதாய்சுந்தரேசருக்கு பூஷணங்கள்செய்தார்
கல்லிழைத்தகவசங்கள் சொர்ணவிலவஆரம்
கீர்வைரம்நாகாபரணம் செய்தாரேயந்நேரம்

மதுரைமீனாட்சிபாத வடிக்குரத்னதண்டை
பாடகமிட்டுதலைக்கு வைத்தார்முத்துகொண்டை
விலையுயர்ந்தபீதாம் பரங்கள்செய்துகட்டி
விசித்திரமாபொட்டியாணம் சிறுயிடையில்பூட்டி
கங்கணங்கள்காரைகண்டி கம்மல்சரம்சாற்றி
காஞ்சனங்களாலேசெய்த ஜோதிலட்சமேற்றி
நத்துமூக்குத்தி புலாக்குசெய்துசேர்த்தார்
நவரத்னகிரீடமும் கிளியும்பண்ணிவைத்தார்
மனைவிமங்கிலியந்தவிர மற்றபணிகிரகித்தார்
மகிழ்ந்துமதுராம்பிகைக்கு அற்பணமாய்க்கொடுத்தார்
திருமஞ்சனமாட்டிபல பள்ளயங்கள்போட்டார்
தேகமாவிபொருளையும் தத்தம்செய்துகும்பிட்டார்
செழித்தராஜனரண்மனையை வெறுமனையடித்தார்
சிறப்பாய்துஜாவர்ண உற்சவமுடித்தார்
அளவற்றபொருளை ஒட்டகத்திலேற்றிக்கொண்டார்
ஆவுடையார்கோயிலாத்ம நாதரைப்போய்க்கண்டார்
சிலரிடதனத்தை சிவதர்மத்திலேபோட்டார்
சீக்கிரமாய்சேனையெல்லாம் ஊர்க்கனுப்பிவிட்டார்
யோகம்யாழ்பதியாலே யுபதேசம்பெற்றாள்
உள்ளமுருகிகுருந் தடியிலேதியானித்தார்
தேவாலயந்திருப் பணிக்குஆரம்தந்தார்
திருமதிலுங்கோபுரமும் திருத்தியலங்கரித்தார்
அற்புதமாய்கொடுங்கை யிசைவாயிணைத்துமுடித்தார்
அகண்டபிரகாரமெங்குந் தளவரிசைகொடுத்தார்
ஆறுகாலபூஜை அர்ச்சனைகள்செய்தார்
ஆலயத்திலேதானே வேலையற்றுஓய்தார்
சீமானங்கேசிலநாளாய் சீமைகளையாண்டு
செலவுக்கொருகாசானலு மில்லாமலேவறண்டு
வாதபுரீசரைவர வழைத்துகேட்டார்
வலுவானவிலங்குகளை கால்கரத்திற்போட்டார்
பொருளைவைத்துப்போ வென்றுபூபதிவாதித்தார்
புலம்பிபிராமணசிரேஷ்ட ஈசரைதியானித்தார்
அயல்மனதில்குடி யமர்ந்தோரதையறிந்தார்
செடிபடர்ந்ததனந்தனில் மிருகந்தேடிநடந்தார்
நண்டுதின்றுஊளையிடும் நரிகளைப்பிடித்தார்

நாலாவர்ணமான குதிரையாய்யடித்தார்
குண்டோதரன்போல்கோடி கணங்களையழைத்தார்
கோலுடனிதிலேறி நடத்துங்களென்றுரைத்தார்
பாதியங்கம்கொண்டாள் பரன்செயல்பார்த்தொய்தாள்
பாரியாளலங்காரம் பதிக்கழகாய்செய்தாள்
சரிகைமுண்டாசுவைத்து சால்வைதோளில்போட்டாள்
சர்வாபரணமும்பூட்டி சாந்துசவ்வாதிட்டாள்
மதுரமாய்போசனம் மனமகிழ்ந்தளித்தாள்
மலர்க்கரத்தால்வெற்றிலை மடித்துமுன்கொடுத்தாள்
பரிமளவாசனையை வாரிமாரிலேபூசி
பலித்திருக்கில்வேஷமு மென்றுகொடித்துப்பேசி
ஜோதிமயமானவரை உற்றுச்சற்றேபார்த்தாள்
சொர்ணக்கழியொன்று ரத்நகுமிழுடன்கொடுத்தாள்
முத்துமூக்குத்தி முகந்தனிலேமின்ன
முகூர்த்தமிதுபோய்வாரு மென்றுஅம்மன்சொன்னாள்
பட்டுக்குடைபாப்பாசு உடுப்பிகிசாரங்கி
சட்டமாய்பட்டாம்பு தேவிதாவாங்கி
சங்கரிசாவதானமாக யிருவென்றாள்
சலுதியாசசதுர்வேத குதிரையேறினின்றாள்
கடிவாளம்பிரம்புகளை கரங்களிலேகொண்டார்
கனவேகமாய்கதம்ப வனவீதியிலேசென்றார்
நந்தியுந்தொந்திவிநா யகருமகிழ்ந்தார
நல்மதுரைஎல்லையிலே முந்தியேபோயிருந்தார்
வள்ளிமகிழ்வேலனும் புள்ளிமயிலைப்போட்டார்
வனநரியரியேறிவேக மாய்வையாளிவிட்டார்
இந்தவிநோதங்களை இந்திரனறிந்தார்
எட்டுத்திக்கோருட ஞகாசவீதியிலேவந்தார்
முல்லையுடன்நாலா விதமலரெடுத்தார்
முருகர்ஜனகர்வாரி எங்கும்வருஷித்தார்
தும்புருநாரதரும் சங்கீதங்கள்பாட
ரம்பையுடன்ஊர்வசியும் நிர்த்தனங்களாட
அற்புதமிரதங்கமொடு வாத்தியங்களூத
ஆண்டவரும்போய்க்குதிரை கைக்கொணர்ந்துதூதாய்
தொண்டரிடதெண்டனையை தீர்க்கவேலைகொண்டார்
மண்டலத்துமன்னனுக்கு மின்னேவந்துநின்றார்

அரசனும்ஆசனத்தை விட்டுக்கீழிறங்கி
அஸ்வத்தின்லக்ஷணத்தை கண்டுமனமயங்கி
ஆருடையஅளம்உன்பே ரென்னவென்றுகேட்டார்
திருமூர்த்திசேவித்தவரை விசாரணைசெய்திட்டார்
வேந்தர்வசனத்தை விஸ்வேஸ்வரரறிந்த
வேதார்த்தஉரைத்ததிவ்ய திருவாயைத்திறந்தார்
வாதவூராரண்டைநான்விற்கிரயஞ் செய்தேனென்றார்
வரக்காணேன்கொணர்ந்துவிட்டேன் வாங்கிக்கொள்ளுமென்றார்
மகாதேவர்மாதுரிய வசனங்களைகிரகித்தார்
மதிபுருஷரைவிடுவித்து உபசரித்தார்
உத்தமரும்நித்தியர்விசித்ர மிதென்றறிந்தார்
சித்தத்திலேசிவனை சிந்தித்துக்கொண்டிருந்தார்
புன்சிரிப்போடீசரும் அரசனையழைத்தார்
பொருள்வேணுமோ பிறவிவேணுமோவென்றுரைத்தார்
பாண்டியமகாராஜன்வெகு பேராசைகொண்டார்
பஞ்சகல்யாணிகுதிரை வேணுமென்றார்
கோட்டகத்தின்குணக்குறியை குறித்தீசர்சொன்னார்
குதிரைகளைக்கயிர்மாறி குதூஹலமாய்நின்றார்
சந்தோஷித்துஅரிமார்த்தனர் சால்வைகளையெடுத்தார்
சங்கரர்க்குதகுமான வெகுமானங்கொடுத்தார்
பிரமதகணங்களுடன் அதையும்வாங்கிக்கொண்டார்
ஆர்க்குந்தெரியாமலேதன் ஆலயத்திற்சென்றார்
வரும்வழியைப்பார்த்திருந்த வஞ்சியெதிரோடி
திருவடிகளில்வணங்கி ஸ்துதிசெய்துகொண்டாடி
குயில்நாணக்குறலோசை யோடுவசனித்தாள்
கொடிமுடிசூழ்கைலைபதி சகலமுமொப்பித்தார்
இந்தலீலைகள்செய்து இருவருமகிழ்ந்தார்
இந்திரவிமானத்தின்மேல் வந்தேறியிருந்தார்
கொலுவிருந்தஅரசனங்கே சந்தோஷங்கொண்டார்
குதிரைவியாபாரிவெகு குணசாலியென்றார்
பட்டவர்த்தனர்களை வரவழைத்துக்கண்டார்
கெட்டியாய்கொட்டகையில் கட்டிவையுமென்றார்
காலிலுங்கழுத்திலும் பொன்சங்கிலியைமாட்டி
கனவிசையாய்காரியஸ்தர்கள் வந்துவோட்டி
கொள்ளுவைத்துபுல்போட்டு தண்ணீரைக்காட்டி

கெட்டியாய்கொட்டகையில் கட்டிப்போனர்
கச்சேரிகலைந்தவுடன் ராஜாகிரகம்வந்தார்
பஜித்தபின்பெண்களுடன் போகித்துயிருந்தார்
துறங்கபதிஞேமென்று துரைசித்திரைசெய்தார்

தரைமீதில் மீனாட்சிபிரியாள்
பாடிதினம் ஒய்தாள்

ஐம்பத்தொம்பதாம்லீலைவம்பதாம்
அரசரும் அநியாயம்செய்திட்டார்
அன்பர்மெய்வருந்திலகப்பட்டார்

ஏலேலோ ஈஸ்வரனர்

மீனாட்சிசுந்தரேஸ்வரனர்
அஸ்வவிற்கிரயம்காத்யமிது
ஆலாஸ்யம்மாத்யமிது.

---

## பரிநரியாக்கிய ஓடம்.

வாதவூரார்சிவாலயஞ்சென்றார்வேதபரி
மேல்வந்தலிங்கத்தின் முன்நின்றார்
துக்கசுகங்களை மறந்தார்தொண்டர்
தொழுந்தெய்வத்தைத் தியானித்திருந்தார்
ஈசர்கண்டுகளித்தார்இன்னம்
ஒருலீலைசெய்யநினைத்தார்
பரியையெல்லாநரியாகச்செய்தார்
பட்டணமெங்கும்பாதிக்கஒய்தார்

முடுகு

நகரிலுள்ளோர்நரி சத்தங்களைநாடி
நாலாவர்னத்தாரும் அரண்மனையிலோடி
அரசனை அபயமென்று அனைவரும்கூப்பிட்டார்
அந்தப்புறவாசியந்த அமுக்களத்தைக்கேட்டார்
திங்கள்குலதிலகரும் திடுக்கென்றெழுந்திருந்தார்
மங்கைதனை நீங்கிமணி மண்டபத்தில்வந்தார்
குதிரைலாயத்திலே கூச்சலிடகேட்டார்
கோட்டைநாலுகதவையும் திறந்துஅன்றுபோட்டார்
கட்டியக்காரர்வந்து கொட்டகையைப்பார்க்க
பழம்புறவிபோய்புதிதும் நரியுருவாயிருக்க

பூரிமாயுக்களெல்லாம் சிரிவிழுந்தேச்சு
பொந்தாலும்சந்தாலும் புகுந்துவனம்போச்சு

மதுராபுரேசரிட மகிமையறியாமல்
மாயவலையாலேஅவர்க் கொன்றும்பிரியாமல்

மந்திரியால்செய்த தந்திரமிதென்றுவைதார்
மறுபடியும்மஹாத் மாவைவந்திம்சைசெய்தார்

இளம்பிள்ளைபோல்வாதவூரார் அழுதாரையழைத்தார்
ஈசரதுஅந்தரசர்க் கசரிவாக்காயுரைத்தார்

சுகுணபூபாலன் சுந்தரர்மொழியைக்கேட்டு
சொல்லவொன்றுந்தோன்றாமல் சோகங்களைப்போட்டு

நிஜதாசரையழைத்து ரத்னாசனத்தில்வைத்தார்
நித்தியமுமவரையன்பாய் சேவித்துபிரார்த்தித்தார்

சந்த்ரவம்சராஜனும் சகரிகளுடன்கூடி
சகலபேரும்புகழ சபாமண்டபத்தில்நாடி

முன்னினும்பின்னதிக மாகமன்னன்வாழ்ந்தார்
மண்ணினுள்ளமகுடாதி பதிகள்வந்துதாழ்ந்தார்

ஈரேழுலகுமிந்த லீலைகளைக்கேட்டார்
எல்லவரும்மாயைதன்னை யிகழ்ந்தெறிந்துபோட்டார்

காமக்குரோதாதிகள் கருகவேவருத்தி
கற்பூரசுந்தரரை கருத்திலேநிறுத்தி

நேமமாய்மதுரா புரிநகரில்வந்தார்
சியாமளிபிராணேசரிட சந்நிதியிலிருந்தார்

தாமரைபாதரும் தாசர்களைப்பார்த்தார்
தாழ்வொன்றும்வாராமல் தானிருந்துகாத்தார்

மாணிக்கவாசகர் வருந்துவதைக்கண்டார்
ஆணிப்பொன்னம்பலத்திலே யழைத்துக்கொண்டார்

மதுரைமீனாக்ஷிபிரி யானையும்நினைத்தார்
மதத்தானபத்திகளைவாரியவட்கிந்தார்
பரிநரியாச்சுபணங்களும்போச்சு

பாண்டியராஜரும்பயந்தார்
பக்திபண்ணிக்கொண்டிருந்தார்

ஏலேலோஈஸ்வரனார் பார்வதிபரமேஸ்வரனார்
பரியைநரியாகச்செய்த பாடலிது-ஓடப்பாடலிது

---

## வளையல்விற்ற ஓடம்

தாருகாவனந்தனிலே தபசிகள்
யக்கியஞ்செய்யும் வேளையிலே
பரமசிவன்கிரிவிட்டெழுந்தார் பிக்ஷாண்டி
வேஷங்கொண்டு யாகசாலையில்வந்தார்
ரிஷிபத்திநிமார் கண்டாராமிக்க
அவர்மீது மகாகோபங்கொண்டார்
கலைசரிந்துபிக்ஷமிட்டார் கைலேசா
வளைகளுடன் கிரகித்துமறைந்துவிட்டார்

முடுகு

இதையறிந்தமுனிவ ரெல்லாம்ஸ்ரீகளைசபித்தார்
எல்லவரும்மதுரையில்போய் செட்டிபெண்ணய்ஜனித்தார்

மூலசுந்திரர்சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்
முப்பத்திரண்டாவது லீலைசெய்யநினைத்தார்

வாசவர்வைத்தவிமானம் விட்டுகீழேகுதித்தார்
வைசியனைப்போலே அழகாய்மூர்த்திதரித்தார்

வளைசரச்சுமைகளைத்தோள் மேலேபோட்டுக்கொண்டார்
வலபுஜத்தில்கங்கணக் கோர்ப்பைபிடித்துநின்றார்

அதற்குத்தகுந்தாடை யாபரணங்களையணிந்தார்
ஆலயம்விட்டுவர்த்தகாள் வீதியிலேவந்தார்

வேதார்த்தமுரைத்ததிவ்ய திருவாயைத்திறந்தார்
வளைவாங்கலையோவளை வளையென்றுயிறைந்தார்

கல்லுவளைமுத்துவளை யிருக்குதிங்கேயென்றார்
கன்னிமார்களேயிதை வாங்கவாருங்களென்றார்

வெட்டுவளைபொட்டுவளை யிருக்குதிங்கேயென்றார்
காப்புகொலுசுதோடா யிருக்குதிங்கேயென்றார்

கற்புடையோரேயிதை வாங்கிக்கொள்ளுங்களென்றார்
நகதாவளைஊதாவளை நாலுமிருக்கென்றார்

நாரியரேவாருங்கள் நானளிக்கிறேனென்றார்
மகதேவர்மதுரதொனிவிலை மாதர்கேட்டார்

மனையில்வரசெய்த தொழில்களைமறந்துவிட்டார்
சீக்கிரமாய்ஒடியே சிவனைவந்துகண்டார்

சற்றுநில்லும்செட்டியாரே செட்டியாரேயென்றார்

இம்மொழியைக்கேட்டு சோமசுந்திரர்சிரித்தார்
இருந்துஅங்கேஎல்லவர்கள் கரங்களையும்பிடித்தார்
கலகலெனகாந்திரத்ன வளைகளடுக்கினர்
கனசொகுசாய்நக்கணம் விடாமல்மடக்கினர்
சீமையில்செய்த ஜிகினுவங்கியிதுவென்றார்
செட்டிபெண்கட்கெல்லாம் கொடுத்தார்நாலிரண்டாய்
இன்னுமெனக்குகை கொன்றுகரம்நீட்டினர்
இமைமூடாமலிருவிழியு மலர்போலேகாட்டினர்
பணம்வளை ஒன்றுக்காயிரம் நாங்கள்தாரோமென்றார்
பணிக்கரயின்னும்புடிப்பாய் பார்த்துயிடுமென்றார்
நித்தியம்நித்தியமிங்கே கொண்டுவாருமென்றார்
நீலகண்டசங்கரர்மேல் நிறையஆசைகொண்டார்
நடுவிலேமீனாட்சியை நினைந்துகொண்டார்
நாளைவாறேன்பணத்துக்கு நேரமாகுதென்றார்
செங்தேனைமொய்க்கும் வண்டுபோலேசுற்றிகொண்டார்
செட்டியாரேயின்னும் சற்றுநேரமிருமென்றார்
மத்திலெழுந்தீசர் வானத்தில்மறைந்தார்
தண்டலமெலாமகிழ கோயிலில்வந்திருந்தார்
பட்டணத்துஜனங்களெல்லாம் பார்த்ததைப்பூரித்தார்
பக்தியுடன்ஆலயம்போய் பரமரைஸ்துதித்தார்
ஈசர்தொட்டமாதரெல்லாம் புத்திரரைப்பெற்றார்
இச்செல்வத்திலிருந்தபின்பு சிவலோகம்போய்சுகித்தார்
உன்னிதமீனாட்சிபிரியாள் ஒடமாயிசைத்தாள்

உடலுள்ள அன்பரெல்லாம்
என்றிதைசிலாகித்தார்

இதைஸ்கந்தர்நன்ற அகஸ்தியர்க்குசொன்னர்
கும்பமுனியுங்கிரகித்தார் இன்பமாயெங்கும்விரைத்தார்

ஏலேலோஈஸ்வரனார் ஆலாஸ்யேஸ்வரனார்
வளைகள்விற்றபுராணமிது ஸ்கந்தபுராணமிது

ஒடங்கள் முற்றிற்று

உ

சிவமயம்.

# பலவிதமான கொம்மிகள்.

## பிட்டுக்குமண்சுமந்தலீலை கொம்மி.

புட்டுபூரித் துண்ட லீலைகளை
கட்டிநான்பாடப் போறேனிந்நாளை

கட்டப்பெண் ணற்றகணபதியே
கிட்டேயிருந்திதை சொல்லுநீயே

கடற்குட்பட்ட பூவனத்தில்
கதம்பவன க்ஷேத்திரத்தில்

மீனாட்சிசுந்தரா ளிருந்தார்
மேலொருலீலை செய்யநினைத்தார்

வாதபுரீச ரிமிசைகண்டார்
வருத்தும்பாண்டியன்மேல் கோபம்கொண்டார்

வைகைநதியைப் பெருகவிட்டார்
ஐயனதிகசந் தோஷப்பட்டார்

ஊரிலுள்ள ஜனங்கள்கண்டு
உடைப்பெடுக்க உளறிக்கொண்டு

அரசனண்டையி லோடிமுன்னால்
ஆறுபெருகிய தென்றுசொன்னார்

வெள்ளம்வருதென்க வேந்தன்கேட்டு
உள்ளநடுங்கிக் கவலைப்பட்டு

பள்ளர்பறையர் களையழைத்து
பட்டணமெங்குந் தமுக்கடித்து

வீட்டுக்கோராளை வரிகள்வைத்து
கட்டுமண்களை வெட்டிப்பரித்து

மேட்டுவளைபோல் கரைகள்நன்றாய்
போட்டுமுடித்திங்கே வாருமென்றார்

குடியானவர்கள் கூடிக்கொண்டு
கொம்புதம்பட்டங்க ளூதிக்கொண்டு

நாளுக்கொருகோ லளந்துகொண்டு
அணையடைத்தார் களங்கேசென்று

சேவகரெல்லாரும் சேர்ந்துகொண்டு
சீக்கிரமென்று இறைந்துநின்று

அம்மையாராள் வரவில்லையென்று
செம்மையாய்விசாரணை செய்துகொண்டு

அதிகாரிநாலு பேர்கள்சென்று
அந்தக்கிழவியை வந்துகண்டு

உந்தன்வீதத்துக்கு ஓராள்நன்றாய்
எந்தன்பின்னோடே யனுப்புமென்றார்

அந்தவேளையி லவள்பயந்து
அத்தனைபேர்க ளையும்நயந்து

எந்தவிதத்திலே யானும்வாறேன்
எந்தன்பாகத்தை முடிக்கிறேன்

தொந்தரைசெய்யாதே போங்களென்றார்
சுந்தரர்சந்நிதா னத்தில்சென்றார்

பஞ்சாக்ஷரத்தை பார்த்துக்கொண்டு
பரமலிங்கத்தைப் பங்களிப்போது

தேவரேஎன்றுன் பங்களிப்போது
நாவாலேசொல்லி முடியாது

வெள்ளிப்பணத்தை கொடுப்பவர்க்கு
வேலைக்காள் கிருக்கியாயிருக்கு

அள்ளியிடச் சோற்றவட்கு
யார்வருகப்போறா ரின்றெனக்கு

உற்றார்பெற்றா ரொருதிக்குமில்லை
உதவிசெய்ய நேக்குயாருமில்லை

காசோஎனக்கு லாபமும்வல்லை
கடன்கொடுப் பவர்களுமில்லை

ஏழையடியாள்நா னென்னசெய்வேன்
ஈசாநீரிரங்கின லல்லஒய்வேன்

பத்திரன்பாரியை கார்க்கலையோ
பத்தினிக்காகசிந்தனை சொல்லலையா

தனபதிதங்கையை தாங்கலையா
தாசிக்குத்தங்கம் செய்துகொடுக்கலையா

அதுபோலென்னையும் காருமென்றாள்
அரர்க்கன்பவித்தம் ஏரிற்றிநின்றாள்

பக்தபிராந்தர் மனதைகிரகித்தாள்
பிரபுநான்போய்வாரே னென்றுரைத்தாள்

சிவதரிசனம் செய்துகொண்டாள்
சீக்கிரமாய்வீடு போய்நின்றார்

தாசரடிமை யன்றுபறந்தார்
தன்பெருமை யருமைமறந்தார்

வேலைக்காரன்வேஷம் போட்டுக்கொண்டார்
மண்வெட்டியைத்தோளில் மாட்டிக்கொண்டார்

கரித்தோல்புலித் தோலையுங்கலைத்தார்
கந்தல்வஸ்திரங் களைத்தரித்தார்

மான்மழுவையும் மாயமாய்மறைத்தார்
மண்வாற்கூடை கையிற்பிடித்தார்

கலைஜடைகளையுங் களைத்தார்
கலவடைதலைமேலே வைத்தார்

சுரவிமானம்விட் டிறங்கிநின்றார்
சூட்டுக்கஞ்சியொரு ஜோடும்பூண்டார்

பெண்வீடும்போல்தாய் போல்கடந்தார்
பிரியமீனாட்சி யிடத்தில்வந்தார்

சங்கரியிங்கே யிருநீநன்றாய்
சாயங்காலமானநான் வாறேனென்றார்

எனக்கும்பிட்டு பிடிக்கும்ஐயா
எமக்கொத்தாசை கிடைக்கும்மெய்யா

வெட்டினமண்வாரிக் கொட்டநன்றாய்
வாறேன்சற்றுநேரம் நில்லுமென்றார்

கருவளையையும் அடுக்கிக்கொண்டாள்
காலிலேகாப்பையும் போட்டுக்கொண்டாள்

நன்றாய்கொப்புமுரு கிட்டுக்கொண்டாள்
நாவடந்தாவடம் பூட்டிக்கொண்டாள்

சேலையைமாற்றி யுடுத்திக்கொண்டாள்
சின்னத்தேரமூக்குத்தி யிட்டுக்கொண்டாள்

கூந்தலைகோதி சொருகிக்கொண்டாள்
ஏந்தலால்கூடை யெடுத்துக்கொண்டாள்

பாக்குப்பையை பிடித்துகொண்டாள்
பாதசாரியாம் பட்டணம்சென்றாள்

தேடிவந்து தெருவில்நின்றாள்
ஓடியிருவரும் வந்துகண்டாள்

அம்மாவாரு மென்றுவழைத்தார்
ஆட்கள்தேவையோ வென்றுரைத்தார்

ஹாராருளென்று பூரித்தார்
அப்பாவேனும்வாடா வென்றழைத்தார்
எந்தன்கூலியைக் கெடுக்காதே
ஏழைக்குடியைக் குறைக்காதே
பதரைத்தூற்றி புடைத்துநன்றாய்
பதக்களந்திங்கே போடுயென்றாள்
உழக்குநெல்லுக் கெங்குந்திரிந்து
கிழக்குமேற்குமாய் நானலைந்து
பிட்டுசமைத்துநான் விற்றுக்கொண்டு
கெட்டவயிறு வளர்க்கிறேனென்று
பிட்டில்குறுணி குடுக்கிறேன்
பட்டினியானும் கிடக்கிறேன்
கெட்டியாய்எந்தன் பங்குக்குநன்றாய்
கட்டிக்கரையிங்கே வாநீயென்றாள்
கொட்டியென்கிட்டே கொடுக்காதே
பட்டினிநீயும் கிடக்காதே
அந்தக்குட்டிக்கி யரைப்படியும்
இந்தப்பயல் கையிலேபிடியும்
தந்துளந்தனை அனுப்புநன்றாய்
உந்தன்வேலை முடிக்கிறேனென்றார்
எல்லவர்கரைக்கும் மேலழுத்தி
உன்னிதுஒரு முழம்உயர்த்தி
ஏய்ச்சுவிட்டோடிப் போகாமல்நன்றாய்
ஆச்சிதிரும்பிநான் வாறேனென்றார்
பக்தப்பேய்கொண்டோர் கரம்விரித்தார்
அத்தனைபிட்டையும் அவள்கொடுத்தாள்
வெற்றிலைபாக்கும் ரெண்டும்கொடுத்தாள்
சற்றேதூரம் வழியும்காண்பித்தாள்
தன்னைப்பணிகுவாருக் குட்படிந்து
பண்ணைவேலையும் செய்யத்துணிந்து
மின்னலொளியாளை முன்னேவிட்டார்
பின்னால்நடந்து சந்தோஷப்பட்டார்
உடைப்பங்கரையில் வந்திறைந்தார்
கடைப்பாரையை கீழேயெறிந்தார்
வந்திலாளென்று பதியைத்தந்தார்

வலிவானகரை யையுமுடைத்தார்
அத்தனையாட் களையுமரித்தார்
அண்ணேன் தம்பி வாடாவென்றழைத்தார்
மாளாதபிட்டை வரவழைத்தார்
தாராளமாகச் செலவழித்தார்
ஏபிள்ளைவாவென் றழைத்துக்கொண்டார்
இடப்புறத்திலே வைத்துக்கொண்டார்
பிட்டையுமடிக் கடிவாரித்தின்றார்
பாட்டையும்பாடி படுத்துக்கொண்டார்
அம்மன்மேலேகரம் போட்டுக்கொண்டார்
ஆலமரத்திலே சாய்ந்துகொண்டார்
கூடைமேலேசிரம் வைத்துக்கொண்டார்
சோடாலிமேல்காலை நீட்டிக்கொண்டார்
ஜலவேகத்தைப் பார்த்துமகிழ்ந்தார்
சற்றேசித்திரையுஞ் செய்திருந்தார்
கட்டியக்காரர்கள் கண்டுதிட்டி
கெட்டபயலே யென்றுஅதட்டி
சம்பளமும்றொம்ப வாங்கிவிட்டு
வம்பளந்துபிட்டுந் தின்றுவிட்டு
அரசன்போலே யிருக்கிறாயே
ஆரியாய்சுருதி படிக்கிறாயே
எங்களரிமர்த் தனர்கண்டால்
அங்கம்பதைக்க அடிப்பரென்றார்
ஒட்டன்வடிவோர் கேட்டுசிரித்து
அட்டகாசஞ்செய் தெல்லாரையும்பார்த்து
மூக்கண்ணனோடா உங்களரசன்
வக்கணைபேசுறாய் என்னாவேசம்
அக்கரையில்லை அழைத்துவாபோவென்றார்
இக்கரையிலே எழுந்துநின்றார்
கட்டியன்பாண்டி யரைக்கூப்பிட்டார்
சட்டென்றுயிதை அறிக்கையிட்டார்
கோபத்துடன் ராஜன்கிளம்பி
கொலுக்கூடத்தை வரவிளம்பி
சங்கவாத்தியங்கள் கோஷித்துக்கொண்டார்
பொங்கிறகெங்கையில் வந்துநின்றார்

ஆதிசிவனார் கண்டுபூரித்து
அஞ்சினவர்போ லபினயித்து

சேரையெங்கும்வாரிப் பூசிக்கொண்டு
பாரையாகமண்ணை பேர்த்துக்கொண்டு

தாங்காதுபோலெங்குந் தள்ளிக்கொண்டு
பாங்காகப்பள்ள மடைத்தார்நின்று

பஞ்சகல்யாணி குதிரையேலே
பாண்டியன்ஏறி கோபத்தினாலே

ஆத்திரவார்த்தை களைமொழிந்தார்
சூத்திரனெங்கே யென்றுஇறைந்தார்

தலையில்மண் சுமந்துவருகையிலே
தண்ணீரிலேகொட்டப் போகையிலே

பொன்னின்பிரம்பை பிடித்துக்கொண்டு
போட்டார்முதுகிலோர் பூசையன்று

அந்தடியாவத் ஜீவாளும்பட்டார்
ஐயன்மாயமாய் மறைந்துவிட்டார்

இந்திரவிமானத்தி லேறிக்கொண்டார்
ஈசராகாசவீதி போய்நின்றார்

தேவரெல்லாரும் மலர்சொரிந்தார்
மூவருமங்கே வந்துநிறைந்தார்

பிட்டம்மாளை யழைத்துக்கொண்டார்
பூரித்துமேகிட்ட வைத்துக்கொண்டார்

அரிமர்த்தனா பாரென்றழைத்தார்
அழியாச்செல்வங்க ளவர்க்களித்தார்

வாதவூராரைத் தில்லைக்கழைத்தார்
வாயில்லாதகன்னியை பேசவைத்தார்

திருவாசகம் எழுதியேஒய்தார்
தேவசபை அர்ச்சகாளுக்கீந்தார்

மாணிக்கவாசகப் பேர்கொடுத்தார்
மாறுப்பதவி யவர்க்களித்தார்

மீனாட்சிபிரியாளையு மீடேற்ற
மூலலிங்கத்தில் வந்துவியாபித்தார்

---

## உ-மீனாட்சிபிரியாள் மானசபூஜை கொம்மி.

உத்தமமாயொருபூஜை ஏமதுரைமீனாட்சி
நோக்குநான்செய்யலைமகரத்துவஜே தென்மதுரைமீனாட்சி
பக்தியுடனொருபூஜையை மதுரைமீனாட்சி
பண்ணலைநான்பத்மினிபதிஜஜே தென்மதுரைமீனாட்சி
மனதிலானுமோர்பூஜைசெய்கிறேன் ஏமதுரைமீனாட்சி
மகிழ்ந்திதைநீமெய்யாகஎண்ணிச்சேரேன் தென்மதுரைமீனாட்சி
சொர்ணமண்டபம்ஜோடித்தேன் ஏமதுரைமீனாட்சி
சுந்திரர்க்கும்நோக்குங்கொடுத்தேன் தென்மதுரைமீனாட்சி
உயர்ந்தசிம்மாசனம்நான்போட்டேன் ஏமதுரைமீனாட்சி
உன்பதியோடிருக்கும்பிட்டேன் தென்மதுரைமீனாட்சி
பாதத்தில்பன்னீரைவிட்டேன் ஏமதுரைமீனாட்சி
பக்திதேஹியென்றுகேட்டேன் தென்மதுரைமீனாட்சி
அர்க்கியபாத்தியாதிகளீந்தேன் ஏமதுரைமீனாட்சி
அஸ்தமெடுத்துநீயெந்தன் தென்மதுரைமீனாட்சி
சவுந்தரசரீரத்தைத்தொட்டேன் ஏமதுரைமீனாட்சி
சம்பங்கிதைலமிட்டேன் தென்மதுரைமீனாட்சி
சேர்புயர்ந்துள்கரைத்தேன் ஏமதுரைமீனாட்சி
சிகைச்சேர்சருசி சிதறத்தேய்த்தேன் ஏமதுரைமீனாட்சி
மஞ்சள்மணம்பூசி ஒய்மதுரைமீனாட்சி
மகாஅபிஷேகம்நான்செய்தேன் தென்மதுரைமீனாட்சி
மடியுடுத்திமேனிதுடைத்தேன் ஏமதுரைமீனாட்சி
மயிர்சேரல்கோதியெடுத்தேன் தென்மதுரைமீனாட்சி
தீயில்புகைபோட்டாத்தினேன் ஏமதுரைமீனாட்சி
திறமாய்தலைமெருகேற்றினேன் தென்மதுரைமீனாட்சி
வரிகோணுமலேகிறினேன் ஏமதுரைமீனாட்சி
வகுந்துயிழையாய்வாறினேன் தென்மதுரைமீனாட்சி
பின்னிரோஜாமலர்கள்தைத்தேன் ஏமதுரைமீனாட்சி
பிரபைஜடைசிங்காரம்வைத்தேன் தென்மதுரைமீனாட்சி
வாளிசரம்ஜாலராபோட்டேன் ஏமதுரைமீனாட்சி
வயிரஒலைஜிமிக்கியிட்டேன் தென்மதுரைமீனாட்சி
நத்துமூக்குத்திருகினேன் ஏமதுரைமீனாட்சி
நடுவிலேபுலாக்குசொருகினேன் தென்மதுரைமீனாட்சி
டீகாஅட்டிகையில்மாட்டினேன் ஏமதுரைமீனாட்சி

திருமங்கில்யசாமான்பூட்டினேன் தென்மதுரைமீனாட்சி
சரமுத்துமாலைசுற்றினேன் ஏமதுரைமீனாட்சி
சந்த்ரஹாரத்துடன்சாற்றினேன் தென்மதுரைமீனாட்சி
கொலுசுமெட்டிபீலியிட்டேன் ஏமதுரைமீனாட்சி
குலுங்கபாதசரங்கள்போட்டேன் தென்மதுரைமீனாட்சி
சந்தரவிம்பபட்டுகட்டினேன் ஏமதுரைமீனாட்சி
ஜாதிரத்னஒட்டியாணம்பூட்டினேன் தென்மதுரைமீனாட்சி
சுருட்டுசரிகைரவிக்கைபோட்டேன் ஏமதுரைமீனாட்சி
ஜோராய்வங்கிகாப்புகொலுசிட்டேன் தென்மதுரைமீனாட்சி
மைவிழிக்காஏற்றினேன் ஏமதுரைமீனாட்சி
மதிமுகத்தில்குங்குமம்சாற்றினேன் ஏமதுரைமீனாட்சி
தங்கரும்புதாண்டாமலர்வைத்தேன் ஏமதுரைமீனாட்சி
திறமாய்தோளில்ஹாரமிசைத்தேன் தென்மதுரைமீனாட்சி
பொன்துறட்டால்பூபறித்தேன் ஏமதுரைமீனாட்சி
போருபோராய்க்குவித்தேன் தென்மதுரைமீனாட்சி
லக்ஷஅர்ச்சனை பண்ணினேன் ஏமதுரைமீனாட்சி
ரட்சிப்பாய்நீயென்றெண்ணினேன் தென்மதுரைமீனாட்சி
அகிலனல்தூபம்கொடுத்தேன் ஏமதுரைமீனாட்சி
ஆயிரந்தீபாராதனையெடுத்தேன் தென்மதுரைமீனாட்சி
கோநெய்யைக்குளம்போலூற்றினேன் தென்மதுரைமீனாட்சி
கோடிகுத்துவிளக்கேற்றினேன் தென்மதுரைமீனாட்சி
விசித்ரவெள்ளிமுக்காலிபோட்டேன் தென்மதுரைமீனாட்சி
விசாலதங்கத்தாலமிட்டேன் தென்மதுரைமீனாட்சி
பத்துரத்நபாத்திரமிசைத்தேன் ஏமதுரைமீனாட்சி
பாயசம்பால்தேன்ததிகள்வைத்தேன் தென்மதுரைமீனாட்சி
சுற்றிசித்திரான்னமிட்டேன் ஏமதுரைமீனாட்சி
மத்தியில்முத்தம்நெய்விட்டேன் ஏமதுரைமீனாட்சி
அமுர்தபோஜனம்நான்போட்டேன் ஏமதுரைமீனாட்சி
அன்னைநீஉண்ணசந்தோஷப்பட்டேன் தென்மதுரைமீனாட்சி
கூட்டல்வாட்டல்தெவிட்டல்கேட்டேன் ஏமதுரைமீனாட்சி
கொம்புக்கனிகள்கொய்துபோட்டேன் தென்மதுரைமீனாட்சி
பானகமிளநீர்கொடுத்தேன் ஏமதுரைமீனாட்சி
ஆனஅங்கவேர்வைதுடைத்தேன் தென்மதுரைமீனாட்சி
தேவருக்குந்திருப்திசெய்தேன் ஏமதுரைமீனாட்சி
திருவேணிதீர்த்தம்கொணர்ந்துயீந்தேன் தென்மதுரைமீனாட்சி

சர்க்கரான்பள்ளயம்போட்டேன் ஏமதுரைமீனுட்சி
உன்சயினியங்கட்டுகல்லாம்வாரிவிட்டேன் தென்மதுரைமீனுட்சி
வாய்கரம்சுத்திசெய்துவிட்டேன் ஏமதுரைமீனுட்சி
வருந்திவாவென்றுகூப்பிட்டேன் தென்மதுரைமீனுட்சி
ஒளிஉயர்ந்தஊஞ்சலிசைத்தேன் ஏமதுரைமீனுட்சி
உலகேசரோடுந்தனைவைத்தேன் தென்மதுரைமீனுட்சி
வாசனைசீவலில்பிசறினேன் ஏமதுரைமீனுட்சி
வெற்றிலைகொடுத்துவிசிறினேன் தென்மதுரைமீனுட்சி
சோடசஉபசாரம்யீதென ஏமதுரைமீனுட்சி
ஸ்துதிவலம்நமஸ்காரம்செய்தேன் தென்மதுரைமீனுட்சி
கெந்தப்பொடிகள்வருஷித்தேன் ஏமதுரைமீனுட்சி
எந்தன்கவிகளையும்போஷித்தேன் தென்மதுரைமீனுட்சி
மாணிக்கஊஞ்சலைபாட்டினேன் ஏமதுரைமீனுட்சி
மஞ்சளுதகம்சிற்றிகொட்டினேன் தென்மதுரைமீனுட்சி
மலர்மகள்களைமகலையுந்தியானித்தேன் ஏமதுரைமீனுட்சி
மத்தியிலுன்னைமனைமேல்கொலுவைத்தேன் தென்மதுரைமீனுட்சி
ஹரிஅயன்மாரனையுந்தூண்டினேன் ஏமதுரைமீனுட்சி
அவர்களுடனுந்தனைநானண்டினேன் தென்மதுரைமீனுட்சி
ரொம்பவானவாத்தியமழைத்தேன் ஏமதுரைமீனுட்சி
ரம்பையராடல்வைத்தேன் தென்மதுரைமீனுட்சி
எழுந்திரென்றுகரம்பற்றினேன் ஏமதுரைமீனுட்சி
இந்திரவிமானத்திலேற்றினேன் தென்மதுரைமீனுட்சி
பதிபாலரையும்பக்கத்தில்வைத்தேன் ஏமதுரைமீனுட்சி
பறக்கும்ரிஷபத்தைப்பிரார்த்தித்தேன் தென்மதுரைமீனுட்சி
இரத்னவீதியெங்கிலும்படுத்தேன் ஏமதுரைமீனுட்சி
முத்துப்பந்தல்மேலேஜோடித்தேன் தென்மதுரைமீனுட்சி
கணக்குக்காணுகலைஏற்றினேன் ஏமதுரைமீனுட்சி
கயிலையூர்வளம்சுற்றினேன் தென்மதுரைமீனுட்சி
கற்பகக்காடுகளைக்கண்டேன் ஏமதுரைமீனுட்சி
அற்புதமெல்லாம்நோக்கர்ப்பணமென்றேன் தென்மதுரைமீனுட்சி
கண்காட்சிசூஸ்திரம்முறுக்கினேன் ஏமதுரைமீனுட்சி
காயங்கடக்கும்தாடங்கொணர்ந்திறக்கினேன் தென்மதுரைமீனுட்சி
அடைபீடதிண்டில்சாயவைத்தேன் ஏமதுரைமீனுட்சி
அரிதரசாந்தால்நலங்கிசைத்தேன் தென்மதுரைமீனுட்சி
சுகந்தபரிமளம்பூசினேன் ஏமதுரைமீனுட்சி

சொர்ணச்சொம்பால் பால்பன்னீர்விசினேன் தென்மதுரைமீனாட்சி
பொன்தழுக்கில்சாமானெடுத்தேன் ஏமதுரைமீனாட்சி
பூசப்பூனபுஜிக்கபாருள்கொடுத்தேன் தென்மதுரைமீனாட்சி
கணங்களேயும்லயனைய்கிறுத்தினேன் ஏமதுரைமீனாட்சி
கற்கண்டுசீனிகனிகள்சுமத்தினேன் தென்மதுரைமீனாட்சி
காயிகளர்ச்சனைகிஞ்சிற்றுபண்ணினேன் ஏமதுரைமீனாட்சி
குருகட்டளேவாசிகமுமெண்ணினேன் தென்மதுரைமீனாட்சி
இப்புறங்தெய்வத்தையும்பூசித்தெண்ணினேன் ஏமதுரைமீனாட்சி
அப்புரம்நோக்கதை அர்ப்பணம்பண்ணினேன் தென்மதுரைமீனாட்சி
தோன்றும்பொருளேபற்றிசாயல்போல் ஏமதுரைமீனாட்சி
தொடர்ந்திரடிமீனாட்சிபிரியாள்மேலே தென்மதுரைமீனாட்சி

---

௩-மீனாட்சிபிரியாள் கருத்தாலுபசரித்த கொம்மி.

வங்காளமஞ்சளறைச்சு வெந்நீரைவிளாவிவைக்க
வேணியில்தயிலம்தேச்சு விதிவத்தாய்நீராட்டினேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௧

துகில்மேலேதுகில்வைத்து திறமாய்கொய்துமடித்து
தலேப்பிடையில்பிணைத்து தழையுடுத்தினேன்நான்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௨

மெலிதாய்செதுக்கிபொட்டு மின்னல்போல்நெற்றியிலிட்டு
மக்கல்றவிக்கைபோட்டு மேகலேவங்கிகளிட்டேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௩

சுருட்டுமேலாட்டைபோர்த்தி உருட்டுஆழிகளேற்றி
குருட்டுக்கோர்வைகள்சுற்றி குலுங்கவலங்கரித்தேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௪

தாழம்பூசளம்நறுக்கி தைச்சுமிச்சநூல்பெருக்க
தாண்டாத்தலேயிலிறுக்கி தண்டைசதங்கைதரித்தேடி
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௫

காந்திரத்னகுத்துச்சுட்டி கலீரெனத்தக்கமெட்ட
கால்சிரங்களுக்குப்பூட்டி கைவளேகங்கணமிட்டேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௬

கல்லிழைத்தகெட்டிகாரை கண்பருவம்போலேபிறை
காஞ்சனத்திருகுசுரை கயளாக்காவலுக்கிட்டேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௭

சாரிபோற்பல்லாக்கு சுமக்குகிறவில்லாட்கு
சாலேதெரியபுலாக்கு சந்திரன்போலேசாற்றினேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௮

கெம்புசரம்தோடுஜிமிக்கி கரணங்களில்மூக்கு
கண்களைக்கார்க்குமிமைக்கி கருநீலச்சன்னமேற்றினேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௯

வெளுப்பாய்தண்டுலந்தீட்டி வறப்பாய்வடித்துமூட்டி
வற்றவாடைகளைக்கொட்டிவாரி வாயிலில்வைத்துதாட்டினேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௧௦

சரிசீனிகளைப்போட்டு செம்மையாகசெய்துவிட்டு
சதும்பகோநெய்யைவிட்டு சாப்பிடக்கொடுத்தேநன்றாய்
தென்மதுரையூர் மீனம்பாநோக்கு ௧௧

பச்சையிழைச்சபாட்டலி பாணியில்வைச்சேன்இட்டலி
புட்டிதைத்தின்றிடக்கோலி படைத்தேன்பால்குழம்பு
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௧௨

சந்தனஞ்சவ்வாதுபூசி சாமரங்களாலேவீசி
சந்நிதிப்பெருமைபேசி சபைஜோராகஜோடித்தேன்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௧௩

முத்துத்திரியங்கள்வைத்து வெற்றிலேஆய்ந்துமடித்து
வாய்ஸ்தலங்களிடைத்து விசிறினேன்மீனாட்சிபிரியாள்
தென்மதுரையூர் மீனம்மாநோக்கு ௧௪

## ௪-மீனாட்சிபிரியாள்-உள்ளமுருகிப்-பாடியகொம்மி.

### தங்கமெட்டு.

ஆறுபேய்களையோட்டு அறுவைரகைக்ஷயாய்கட்டு
பக்திபாலலேபாலாடையில்விட்டு என்னம்பிக்கை
பசிதீர எனக்குநீயூட்டி ௧

ஜனனவியாதியைதீரு சிவத்தியான அவிழ்தம்வாறு
உன்கருணைக்கண்ணாலேபாரு என்னம்பிகை
கைலாசத்தில்கொண் டென்னைச்சேரு ௨

ரமண்யமானபொன்மேனி ரத்னுபரணபூணி
எங்குஞ்சென்ற செங்கோல்பாணி என்னம்பிகை
என்னைசேர் வடியில்சேர்ந்தனி ௩

தென்மதுரையூர்வசி தேஜோமயப்பிரகாசி
அன்பரதுன்பவிநாசி என்னம்பிகை
என்னுள்ளே யிருந்துநீவசி ௪

வீரபராக்கிரமசாலி வேந்தர்குலவேப்பமாலி
இராஜாத்திராஜ்யபரிபாலி என்னம்பிகை
இராகத்துவேஷங்கள் தொடைகாலி ௫

நித்தியானந்தரூபி உத்தமர்தொழும்பிரதாபி
சற்றுமறியாதநான்பாபி என்னம்பிகை
உன்சரணத்தை எனக்குநீஸ்தாபி ௬

சகலசாஸ்திரவேதம் சார்வதாஸ்துதிக்கும்பாதம்
யோகிகள்தியானிக்கும்நாதம் என்னம்பிகை
உன்னைநம்பாதஎன் ஜென்மம்வீண்சேதம் ௭

உன்வாசனைகளோசுகந்தம் தாசர்களுக்குநீசொந்தம்
எந்தனுக்குமதிமந்தம் என்னம்பிகை
நீவந்துதீரென பவபந்தம் ௮

முக்திமயானசுவாமி மோகங்கொள்ளும்சிவகாமி
வல்லபைவள்ளிதெய்வானைமாமி என்னம்பிகை
வாயால்ஸ்துதிக்கப் பேராயிரம்நாமி ௯

தீயில்ஜெனித்தரிகுஜம் திக்குகெலாம்ஜெயித்தபுஜம்
சாகரமகாத்துவஜம் என்னம்பிகை
சாஸ்வதபிர்மமே நீநிஜயம் ௧0

பாம்பலங்காரஜோதி பார்த்திடநடித்தவாதி
நித்தியயௌவனயுவதி என்னம்பிகை
நீவந்தெனக்கு மெய்யோதி ௧௧

நெஞ்சுநிலைநிற்கலையே வஞ்சனைவதங்கலையே
ஐந்தாளோ அழியலையோ என்னம்பிகை
வஞ்சிபாதம்கெஞ்சி கேழ்கலையே ௧௨

காமக்குரோதமானகள்ளு குடித்தகள்ளன்கொல்லு
முன்னநான்செய்த வினைதள்ளு என்னம்பிகை
மீனாட்சிபிரியாளை கைக்கொள்ளு ௧௩

---

## ௫-மீனாட்சிபிரியாள் பக்தியால்பாடிய முத்து மீனாட்சி கொம்மி

சித்திரவிநாயகரைப்பணிந்தேசிவ
சுப்பிரமணிய குருவைநினைந்தேன்
மதலை தமிழிசைக்க முனைந்தேன்மதி
தந்தருள்நீ முத்துமீனாட்சி ௧

அல்லும்பகலும் நான்தேடுகிறேன்நீ
யகப்படாமல் மனம்வாடுகிறேன்
ஆதிபராசக்தி அம்பாளென்முன்பாய்
பளீரென்றுதித்துமீனாட்சி ௨

எங்கெந்தஆலயம் போனாலும்நான்
ஏத்தியிருந்து தொழுதாலும்
எந்தன்மனது தெளியலையே
இதற்கென்னசெய்வேன் முத்துமீனாட்சி ௩

உத்தமிஉன்னிட சந்நிதியில்வந்து
நித்தியம்சிரத்தை யுடன்பணிந்து
என்சித்தம்சீராகாமல் போனதென்ன
செழித்தசயில் முத்துமீனாட்சி ௪

கங்கணந்த வளைகுலுங்க
சங்கெடுத்துஎன் வினைசுருங்க
உன்சரணாரவிந்த அமிர்தாசைப்பாலை
ஊட்டெனக்கு முத்துமீனாட்சி ௫

ஆசாபாசவலை யறுத்தும்ஆத்ம
விசாரணைக்கர்த்தம் புரியவைத்து
ஆறுகுணத்தையும் வேரறுத்து
என்னையாளடிக்கி முத்துமீனாட்சி ௬

சகியர்ச்சிதரணங் கண்டுஅதில்
சாயுச்சியமடைய ஆசைகொண்டு
சதாசமாதிசெய்கிறேன் சாதித்தியம்
ஆகலையேன் முத்துமீனாட்சி ௭

கடைக்கண்ணால் சற்றேபாராயோ
எந்தன்கன்மவினைகளைத்தீராயோ
தொடர்ந்துஎன்முன் வாராயோ
துரைத்தனமேன் முத்துமீனாட்சி ௮

எந்நேரமு முன்னை நானழைக்க
நீஏதுமறியாது போலிருக்க
நல்லதேஎன் தாயே உந்தனுக்கிது
நியாயமல்ல முத்துமீனாட்சி ௯

நிறைந்ததயாவதியாய் நீயன்று
நேக்குயிறங்காமல் போனதென்ன
நான்செய்தவஞ்சனை ரொம்பயிருக்கோ
நாடாண்டநல்ல முத்துமீனாட்சி ௧௦

பாதகம்பண்ணி யிருந்தாலும்
பணப்பேய்கொண்டு திரிந்தாலும்
தஞ்சமென்றுன்னை யடைந்தபின்பஞ்சாய்
பறக்காதோடி முத்துமீனாட்சி ௧௧

தேவியைசற்றே தியானித்தவற்கும்
நாவாலோற்போ துச்சரித்தவற்கும்
தீவினைகள்தொடரா தென்றுசொல்லிய
வேதம்பொய்யோ முத்துமீனாட்சி ௧௨

சதாபஞ்சாட்சரத்தைக் கணக்கு
செய்துஸ்மரிக்கிற எனக்கு
சஞ்சலத்தைஏவல் வைத்தாயேஉன்
செல்வமதமோ முத்துமீனாட்சி ௧௩

உருகபக்திக் கயிறெடுத்து
ஓடும்உந்தன் மனதைப்பிடித்து
உன்பாகத்தாமணியில் கட்டியடக்கி
கெட்டிசெய்துள் முத்துமீனாட்சி ௧௪

கண்டபேரைப்போல் கொண்டாடாமல்
காமவலையிலகப் பட்டுவாடாமல்
பொய்யைவிற்றுப் பொருள்வேண்டும்
புத்திபோதியடி முத்துமீனாட்சி ௧௫

சாதுக்களண்டை என்னைக்காட்டி
ஜன்மவினைக்கு ஞானனல்மூட்டி
நாட்கள்தவறாமல் சல்லபோதோட்டடி
நாகரத்ன முத்துமீனாட்சி ௧௬

மதுராபுரியி லமர்ந்தமகேஸ்வரி
மனக்கோயிலு மிருந்தபூரி

மறலிமாடேறிவாராமல் மார்க்கண்டரை
கார்த்தாப்போல்கார் முத்துமீனாட்சி ௧௭

சொப்பனத்திலாகிலும் வந்துநில்லு
எப்போதழைக்கப் போகிறாய்சொல்லு
இத்தரைபற்றுதலைக ளெல்லாம்விள்ளு
என்தெய்வமே முத்துமீனாட்சி ௧௮

இகத்தில்நானேழை போலேநின்று
எங்குவதுநோக்கழத்ததன்று
இருசுதன்போலே என்னை மருகினில்
வைத்துகோடி முத்துமீனாட்சி ௧௯

மகாகைலாசபர்வதத்தில்
மானணிந்தவருடன்பூரித்து
மாலயன்சூழ விருஷபாரூடராப்
வீற்றசேர்வைதா முத்துமீனாட்சி ௨௦

பாண்டியராஜன் குமாரியே
பதினாலுலகும் ஆதாரம்நீயே
வேண்டுரேன்வரப் பிரசாதம்பண்ணு
விலையேறும்முடி முத்துமீனாட்சி ௨௧

அச்சுதனாரிட தங்கையென்றாய்
சச்சிதானந்தரூப வடிவங்கொண்டாய்
நிச்சயமில்லா ஜகமுமாண்டாய்
மகாமாயாவிநீ முத்துமீனாட்சி ௨௨

முத்துச்சுருக்கு தோளிலேசாயை
மோடியாய்யிருக்கா யின்னம்மன்னன்சேயா
முக்கணன்கப்பரை யேந்திஅலைந்த
தறிவேன்வாடி முத்துமீனாட்சி ௨௩

காஞ்சனமாலை சீராட்டுமாளா
காந்திமதிசமைத்து அமுதூட்டுமாளா
கெர்வமென்னடிகெர்வம் விட்டுவாநான்
காத்திருக்கேன் முத்துமீனாட்சி ௨௪

ஸ்கந்தரைப்போ லென்னையும்நினைத்து
சிவஞானவைராக் கியத்தையுங்கொடுத்து

பெண்ணாகளென்னை வைத்துபோஷி உன்னைநான்
பூஜிக்கிறேன் முத்துமீனாட்சி உ௫

சோகமோகவினா சகியேசோம
சுந்தரேசர்க்கு பிரியாசகியே
சுரர்நராளுக்காக எண்ணெட்டுலீலைநீ
செய்யலையா முத்துமீனாட்சி உ௬

சோதனைகளென்னைப் பண்ணாதேநான்
சொந்தமில்லையென்று எண்ணாதே
எனக்குமோரதிசயம் உனக்குத்தோன்றியதாய்
இரங்கிச்செய்யேன் முத்துமீனாட்சி உ௭

செல்வசிவேஉனைப் போற்றிசெய்தேன்
வில்வமாலையாம் மனதைசாற்றிஒய்தேன்
நான்சொல்லுவதெல்லாம் சூதாயிருந்தாலும்
சுயமாய்கிரகி முத்துமீனாட்சி உ௮

சித்திரஅங்கவடிவு கொண்டுநவ
ரத்தினஆபரணமும் பூண்டு
நாலாண்டானபாலையாகி நின்றுசற்றே
நர்த்தனஞ்செய் முத்துமீனாட்சி உ௯

நீலவர்னத்துகில் கொய்தெடுத்துநீ
நேர்த்தியுடன் இடையிலுடுத்தி
லீலாவிநோதத்துடன் பூரித்துஎன்
நினைவிலிரு முத்துமீனாட்சி ௩0

பட்டுரவிக்கையும் போட்டுக்கொண்டு
பணிக்காயதின்மேல் வங்கியிட்டுக்கொண்டு
உன்பாங்கிமார்களையும் கூட்டிக்கொண்டு
கும்மிபாடவாடி முத்துமீனாட்சி ௩௧

கூர்விழிக்கஞ்சன மிட்டுக்கொண்டு
பொட்டுவெசைவைத்து தொட்டுக்கொண்டு
கூந்தலில்குசமம் சூட்டிக்கொண்டு
குதித்துவாடி முத்துமீனாட்சி ௩௨

சாயக்கொண்டைநன்றாய் சாற்றிக்கொண்டு
சந்த்ரபிரைஜடையில்லை சேர்த்துக்கொண்டு

சிம்மாசனத்தில்செங்கோல்செலுத்தும்சபா
தெரிசனந்தா முத்துமீனாட்சி ௩௩

சித்திரான்னங்களைப் புசித்துவெகு
விசித்ரசுருள் மணதரித்து
உன்பாணியில்சொர்ன வீணைபிடித்து
சுருதிசொல்லுகேட்க முத்துமீனாட்சி ௩௪

பரிமளம்வீச பூசிக்கொண்டுபதி
பிரமிக்கமயக்கி சிரித்துக்கொண்டு
சுரபுரியோர்க ளுடனெழுந்து
பல்லாக்குசேர்வைதா முத்துமீனாட்சி ௩௫

உக்கிரணைமத்தியில் வைத்துக்கொண்டு
உல்லாசமாய் திண்டிலேசாய்ந்துகொண்டு
ஒத்துநயனமூத ஊர்வசிபாட
ஊஞ்சலாடு முத்துமீனாட்சி ௩௬

பூர்ணசந்தர விம்பமுகத்தை
பார்க்கநானுசை கொண்டுநினைத்தேன்
பூமகள்கலைமகள் சசிதமாய்மருமக
ளுடனேகாட்டு முத்துமீனாட்சி ௩௭

பூதவாகனத்திலேறிக்கொண்டு
பிள்ளையாரைமுன்னால் விட்டுக்கொண்டு
சண்டேசர்முதல் சகலகணத்துடன்
சாரிநீவா முத்துமீனாட்சி ௩௮

குண்டோதரன்பொன் குடைபிடிக்க
கோடிமேளவாத்தியங்களடிக்க
என்னைவிமானத்தி லேற்றிக்கொண்டு
ஈசானியம்சேறு முத்துமீனாட்சி ௩௯

வெள்ளிமலையின்மேலே என்னையைவை
பள்ளியறையில் போய்நீலீலைசெய்
கள்ளத்தனமாய் மீனாட்சிபிரியாளதை
கண்டொய்கிறேன் முத்துமீனாட்சி ௪௦

## ஸ்ரீமீனாட்சிசுந்தரேஸ்வரர் விவாகக்கொம்மி.

மலையத்துவஜபாண்டியர்க்கு மைந்தர்களில்லாதே
அவர்மனைவியுட னப்போதே
புத்திரகாமேஷ்டியாக உற்சவங்கள்செய்தார்
அண்டபிண்டங்கள்புகழும் அம்பிகைமீனாட்சி
மெய்யன்பர்கள் கண்காட்சி

ஸ்ரீ ஆலாஸ்ய க்ஷேத்திரத்தில்
அந்தமகாராசர்செய்யும் யாகந்தனைக்கண்டு
பூர்ணாகுதிபோய் கொண்டு
புத்திரியாய்வந்துதிக்க வேணுமிப்போது
வித்தியாவதிவரநினைந்து வேதனைபுரிந்து
வயசுமூன் றணிந்து

வளர்ந்துஜொலிக்கும் வன்னியில்வந்துபிரவேசித்தாள்
நீலமேகசியாமளவாய் கோமளம்போல்வடிவாய்
குஜமூன்றுள் செந்திருவாய்
குலசேகரன்பேத்தியாய் வெகுநேர்த்தியாயுதித்தாள்
காஞ்சனமாலைமடிமேல் கலகலென்றுவந்து
இராசகன்னிகையா யிருந்தது

பசித்துசோர்ந்தசிசுக்களைப்போல் அபிநயங்கள்செய்தால்
வந்துவிளையாடுகிற நீலாளைவாரியணைத்து
வலஸ்தன்னியமுன்னே கொடுத்து
சூரியகுலசூரசேனன் சுதனிசுகித்திருந்தான்
சந்தரவம்சாந்தசீலா சந்ததியைப்பார்த்து
சரீரமெய் பூரித்து

விகிர்தம்ஒன்றுவளரவெகு வேதனையடைந்தார்
அன்பர்துன்பமகற்றுமமரர் அவசரமாய்வந்து
ஆகாசவாசியாயிருந்து
யாகசாலை அழியகன்றாய் அசரீரிவாக்காயுரைத்தார்
கன்னிகைக்குகணவர்க்கும் சம்வாதம்நேரும்போது
அந்தகவலைகுஜம் அப்போது

காத்தடிக்கமாறி மறைந்தாப்போலாகுமென்றார்
அந்திவாக்கையரசன் அகமகிழ்ந்துகேட்டு
ஆயாசங்களெல்லாம்விட்டு
ஆசையுடன்ஈஸ்வரியை எடுத்தணைத்துக்கொண்டார்
பூமியிலேபுத்திர சுகங்களற்றுநானே
புலம்பியே நின்றேனே

பூர்ணவடிவாயுதித்தாய் புண்ணியவதிநீதானே
கன்னிரத்னகண்மணியை கரங்களினல்வாரி
கனசந்தோஷ மீறி
மோக்ஷபிரஜதிருமுகத்தில் முத்தமிட்டணைத்தார்
பார்ஜனகிப்சதபிரியாள் பிராக்கிர்தசிசுபோலே
அந்தப்பாண்டியர் மடிமேலே

பலலீலைசெய்து பவானிமதிபோலிருந்தாள்
விரைதானம் அதிகசதகோடிகலம்வேண்டியதுகொடுத்து
வெகுவெள்ளிகள் பொன்னெடுத்து
வேந்தரப்போவித்வான்கட்கு விஸ்தாரம்வர்ரிவிட்டார்
சர்க்கரைமுக்கனிவழங்கி மொகராமுடிப்போடீது
செந்தாமரை மலர்கொய்து

ஜனகாவிதிப்படிக்கல சிட்சிகையுமுடித்தார்
செம்மையாய்செங்கோலையெங்கும் செலுத்தியரசாண்டு
சதுர்விதம்சேனைகள் கொண்டு
அகிலமுழுதும்ஜெயித்து அமராபதிபோயடுத்தாள்
இந்திரன் அக்கினியமன்நிருதியையும்ஜெயித்து
இருந்ததிசயங்களைப் பரித்து

அந்தவாயுவருணன் குபேரனையும்வம்புக்கிழுத்தாள்
தேவாஸ்திரங்களையெடுத்து திக்குபாலாள்மேல்விடுத்தாள்
தீராள்திருமுடிகளை யுடைத்து
கெர்வபங்கம்செய்தெல்லோரையும் கெதிகலங்கவடித்தாள்
பெற்றெடுத்ததாயாரையடித்து புத்திரர்கள்சாமா
இத்தனைகோப மாமா

ஏழையடியார்க்கிரங்கா பழியுன்னைவிட்டுபோமோ
சரணமம்மாசங்கரியே சர்வலோகத்தாளே
சவலைக்கிரங்குவாயே

கப்பணங்கள்கட்டிவிட்டோம் கண்டுகைக்கொள்நீயே
துரைத்தனமாய்தகப்பனுடன் தோப்பெங்கும்போயோடி
வெகுதோழிகளுடன் கூடி
மங்களாகாரச்செல்வியாய் மனோன்மணிவளர்ந்தாள்
தர்க்கமரம்மிம்சவேத புராணங்கள்படித்து
தனுசுபாணம் பிடித்து
வீரரைப்போல்வேட்டையாடி விருதுடனேவந்தாள்
விஜயமீனலோசனியை வேதர்கண்டுகொண்டு
விஸ்தாரமாய் முடிசூடி
சமர்த்தியிடசமுகத்தில் சதாசந்தோஷித்திருந்தார்
ஆனைசேனைராஜ்யமெல்லாம் அருமைமகளுக்களித்து
அரசாளநீதிகளுரைத்து
சுகுணபூபாலன்சுகமாய் சொர்க்கம்போய்சுகித்தார்
ஏகசக்கிரமாளுந்தீரி இளம்தலையைப்போலே
இமையா நங்களாலே
நீர்சொரிந்தனேகருடன் நிலந்தனிலிருந்தார்
சாமிசதாநந்தர்சொல்ல சாமளியுமெள்ள
ஸ்நானம்போய் செய்துகொள்ள
ஜெகம்புகழ்சுந்தரேசருக்கு சிவார்ச்சனைகள்செய்தார்
தானதர்மந்தண்ணீர்பந்தல் சாலைரஸ்தாஎங்கும்போட்டு
தண்டனைபட்டோர்களை விட்டு
தீர்வைகப்பணம்நிறுத்தி தினமும்விருந்தளித்தார்
வானபிரஸ்தாள்யோகநிஷ்டாள் வந்துவிசாரித்தார்
வரப்பிரசாதங்க ளளித்தார்
இஷ்டபந்துக்களிடும் பணம்பவுன்மொஹராவைக்கொடுத்தார்
மகனைரத்னபெஞ்சுமேல்வைத்து மதலைமொழியைக்கேட்டு
அவர்மனைவியையுங் கூப்பிட்டு
திவ்வியதடாதகையென்று திருநாமம்தரித்தார்
முத்தாஹாரம்ஒத்துகுண்டு மோதிரங்கள்பூட்டி
முடிக்கு முல்லைசூட்டி
மெத்தைமேலேஏறிப்பொன் தொட்டிலில்வைத்தாட்டினார்
பாடகத்தண்டைசிலம்பால் பாதமலங்கரித்து
பரமேஸ்வரிக் குபசரித்து

பால்பணியாரங்கொடுத்து பார்த்துவீற்றிருந்தார்
சூஸ்திரங்கள்செய்புமந்த தேவர்களைப்பார்த்து
தயவாயனுக்கிரகித்து
சீக்கிரமாய்சிவபுரம்போய் சமர்சங்கங்கோஷித்தாள்
நாதன்கையிலேமலையை கண்டுமேகளித்து
முன்நந்தியை விம்புக்கிழுத்து
உன்னுண்டிஎங்கேயென்றதட்டி தீண்டியேயுரைத்தால்
அட்டகாசஞ்செய்யும்சின்ன குட்டிகுஞ்சைப்பார்த்து
பட்டுப்போம்படி கண்ணைவிழித்து
ஆரடிநீயெங்கேவந்தாய் என்றதட்டிக்கேட்டார்
சீமைகள்பிடிக்கவந்த செல்வதியாள்நானே
அந்தப்பாண்டியப்பிரபுதானே
பலதவங்கள்செய்துபெற்ற பாக்கியப்பெண்சொன்னேனே
நமனூர்பொன்னுடிஎங்கும்போல் சமர்செய்துஜெயித்தேன்
நந்திமந்திவுன்னைமதித்தேன்
யுத்தம்பண்ணவுன்னையொரு செத்தையாய்வைத்தழைத்தேன்
நரசிம்மஸ்ரீஅழைத்துநிற்க நந்தியும்நகைத்து
நரதளங்களைமரித்து
ஜெயிக்கமாட்டாயோடுவென்று உல்லாசமாயுரைத்தார்
ஆனைஎன்னசேனையென்ன ஆயுதங்களென்ன
இதுஹரர் அசலம்என்ன
அமர்க்காகவேநீவந்திங்கே ஆச்சரியமென்னுர்
ஆச்சரியமென்றுரைத்தாய் அதிசமர்த்தாய்மாடே
உனக்கநர்த்த மிதோர்கேடே
மிஞ்சினுயோபிழைக்காயெந்தன் சரத்துக்குன்சிரமம்சாடே
நன்ருய்துரைசானிசொல்ல நந்திபொங்கிஓங்கி
நாலுகாலும்முன்வாங்கி
அண்டமதிரகொர்ச்சித்து அமக்களங்கள்செய்தாள்
சுத்திகொண்டகாலாள்கள் கரிபரிமேலேறி
அந்தக்காளையைப்போய்சீறி
நாலுதிக்கும்போய்வளைத்து நந்தியைஎதிர்த்தாள்
தேவிமீனலோசனியும் தேடிவந்துநாடி
தேரின்மேலேறிஓடி

சூலசக்கிரகத்திவேலை சூரிவாரிஎடுத்தாள்
ஓங்காரிஉள்ளந்தயவாய் ஒருகணையைப்போட்டாள்
கணமுடனுடைந்து கும்பிட்டார்
கண்கலங்கிகொம்பலங்கி கயிலைபோய்முறையிட்டார்
பாம்பணிபரன்பறந்துகேட்டு பஞ்சகோலமெல்லாம்விட்டு
பிரமதகணத்துடன் புறப்பட்டு
சதகோடிமாறன்போல்சமர் சாலைவந்துநின்றார்
ஜோதிமயமாய்ஜொலிக்கும் சொர்ணரதத்தையும்
சூரர்வந்தவரத்தையும்
சிவராஜசுந்திரர்கண்டு சிரக்கம்பஞ்செய்தார்
சாதுரியக்காரிசாவேசன் வரக்கண்டாள்
சபாசுராஜனென்னாள்
சட்டைசெய்யாமல் சண்டைக்குகிட்டேவந்துநின்றார்
வன்னிகண்டவெண்ணைபோல் வளர்ந்தகுஜம்போயி
வெட்கம்பயமுண்டாகி
வீரவரப்பற்றுவில்லண்டையி லொண்டிக்கொண்டார்
சீக்கிரமாய்சித்ரவிமானத்தை விட்டிறங்கி
சுந்தரேசரைவணங்கி
ஞானத்துடன்நல்ல சதியாகிநாணிநின்றார்
சர்வாலயசுந்தரிசுந்தர முகத்தைஈசர்பார்த்தார்
ஜாதகம்சரியென்றுசேர்த்தார்
சாலயுவதியைபாணிக் கிரகணம்செய்யமோகித்தார்
பவுந்தரியைசயித்ரபாசம் திங்கள்வாரம்ஓடி
தென்மதுரையில் வந்துகூடி
திவ்யதிருக்கல்யாணம் நடத்துறேன்போவென்றார்
நிச்சயதாம்பூலங்கொடுத்து நகராபேரியடித்து
நாலாதேசத்தையும்பிடித்து
மீனத்வஜநாட்டிமாதர் மாளிகையில்வந்தார்
கன்றைகண்டகோபோலென்னை சரங்கொடுத்தழைத்து
கலைகலைத்தணித்து
உச்சிமோர்ந்துடம்பெடுத்தொட்டு உற்றுநன்றாய்பார்த்தாள்
எங்கேஎன்னதிசயங்கண்டாய் என்செல்வமீனம்மா
ஏதடிபேசும்மா

ஒன்றும்சொல்லாமலிருக்காய் நேக்குரைநிஜமாய்
சத்திரசாமரத்துடன் சாமரமத்தியெங்கும்ஏகி
சங்கருடனுறவாகி
கற்பகங்காமதேனு கொணர்ந்தேனுனக்கென்றாள்
புண்ணியவதிபுஷ்பகத்தை பூரித்துமேபார்த்து
பொக்கிசங்களில் சேர்த்து
மீனமுத்திரையிட்டுமேல் காரியத்திற்கெத்தனித்தான்
காரியஸ்தாள்மந்திரி கணக்கரைக்கூப்பிட்டு
காகிதங்களெங்கும்போட்டு
கனத்தசம்பளாசாமிவைத்து காருபாருநெரித்தாள்
பொன்மாலையும்பெண்மயிலும் யாவரையும்வரவழைத்து
இந்தவதிசயங்களையுரைத்து
சகலவிதசாமகிரி பூர்த்தியாகசேர்த்தாள்
சித்திரவீதிகளெல்லாம் சிறப்பாய்பந்தல்போட
சிலர்சிப்பிகளைத்தேட
தேவலோகவிஸ்வகர்மா வந்துமங்கேகூட
சரியாய்விலாசமாய் சகஸ்திரஸ்தம்பம்நாட்டி
சொர்ணத்தகடெடுத்து மேலோட்டி
கோமேதகத்தாலேநன்றாய் கொடுங்கைகளைகூட்டி
நாலுபுரத்திலுந்தங்க சங்கிலிகள்பூட்டி
நவரத்னஊஞ்சல்மாட்டி
சுற்றியெங்கும்சிங்கார ஸ்ரீபிம்பங்களைகாட்டி
பட்டிசுருட்டுமகமல் பணம்பெற்றதாய்கட்டி
பாலிகைதானியம்கூட்டி
பச்சைநீலவர்ணகுலோபுக ளெங்கும்மாட்டி
பூரணகும்பமெடுத்து தோரணந்தொடுத்து
திட்டாணிகள்படுத்து
மாணிக்கமணிகளாலே மணிமேடைஜோடித்தார்
மல்லிகைமுல்லைமருவேர் கொழுந்துகளெடுத்து
மரமாவிலைகளையொடித்து
மங்களமாப்சரந்தொடுத்து மணக்களங்குமிசைத்தார்
மாசிவீதிவாசலெங்கும் மாதர்பன்னீர்தெளித்து
முத்துவாயாலே கோலதுசைத்து

திண்ணைதெருவீதியெங்கும் நன்றாயலங்கரித்தார்
உயர்ந்தகூடாரமடித்து ஊரெங்கும்பந்தல்தொடுத்து
அகழ்ந்துறவெல்லாம் தூரமெடுத்து
ஏரிதடாஓடைகட்கு இறங்கப்படிபிடித்தாள்
பிர்மசிஷ்டாள்வசிக்க ஏகாந்தலமுண்டாக்கி
மனையருவி நீரதில்தேக்கி
சோரபயந்தீரதீர சேவகர்களைச்சேர்த்தார்
தர்மசாலைசத்திரம் சாவடிகளெங்குங்கட்டி
அன்னதானங்களை கொட்டி
சாலைசந்நுமார்க்கமெல்லாம் சோலையாயடித்தார்
கிராமதேவதைகளுக்கு கனத்தபூசைபோட்டு
உடுக்கடித்துநல்குறிகேட்டு
தேவசுந்தரேசருக்கு தினந்திருநாள்செய்தார்
இராஜகுமாராணிவேணி சீவிசடைபின்னிக்கொண்டு
இரத்தினாபரணங்கள்பூண்டு
கன்னிகாமாடத்திலே கூடத்திற்கொலுவிருந்தார்
அன்றுகண்டபடிக்கார் தியானஞ்செய்துக்கொண்டு
அன்னியரசர்கள் வரக்கண்டி
தகுந்தமரியாதைசெய்து கிரீடகொடியோடிருந்தான்
ரமணியமாசைபதினத்திலே ராஜசுந்தரேசர்
இராஜதாசலபுரிவாசர்
பிரமதகணம்சூழவிருஷபா ரூடராய்வந்தார்
மந்திரிசுமதியும் மாதாவும்எதிரோடி
மருமகதேவரைக்கொண்டாடி
வீணைவாத்தியத்தோடழைத்து விடுதிவந்திருந்தார்
சோமசூரியர்கிரி வசுக்களசுராள்சூழ
திக்பாலர்கள்வந்துதொழ
ஈரேழுலகுமொன்றாய் திரண்டுருண்டுவந்தார்
நாழிநாள்வாரம்திதி நக்ஷத்திரம்கிரகம்சேர்ந்து
நல்லசரீரம்புகுந்து
மாசம்வருஷம்கடல் நதிகளுடன்வந்தார்
தும்புருநாரதரும்நாட கிம்புருஷாள்பாட
தேவரம்பையர்கள்கூட

இராஜசுந்தரர்சமுகத்தில் நிர்த்தனமாட
சப்தரிஷிசூழசதாநந்தர் வந்துகண்டார்
சுவாமிசமயமென்றார்
சாஸ்வதரும்சம்மதித்து புன்சிரிப்புகொண்டார்
அத்தனைபேருங்கூடி பொய்தாமரைநீராடி
அகண்டரண்மனையிலோடி
எல்லவரும்நல்லவராய் ஏகோபித்துக்கொண்டார்
மாப்பிள்ளையையும் மதுரைப்பெண்ணையும்மணையின்மேல்வைத்து
மகாலட்சுமிதயிலம்தேய்த்து
மஞ்சள்மணப்பொடிகளிட்டு மங்களநீர்விட்டாள்
பாதசிரபரியந்தம் பணியழகாய்பூட்டி
பரிமளமலர்களைச்சூட்டி
இராஜசம்ப்ரதாயப்படி சகலநோன்பையும்நோற்றாள்
பார்க்கழகாய்பரமசிவனை பலபேராய்வந்துமொய்த்து
பண்ணினகிரீடத்தைவைத்து
கவசகுண்டலங்கள்பூட்டி சுருக்காயலங்கரித்தார்
ஜலம்சுமந்தஜடைகலைத்து சண்பகமுடித்து
சன்னச்சால்வையை மடித்து
ஜோராய்சொக்கருக்குடித்தி சொர்னஜோடுபோட்டாள்
பாண்டியமுத்தாபரணமெல்லாம் வேண்டிவாங்கிப்பூண்டு
வேந்தன்போல் வேஷங்கொண்டு
பரமரும்பிரபஞ்சவியா பாரத்திற்கெத்தனித்தார்
வேதவிதிப்படிக்கியெல்லா விரதங்களைமுடித்து
விதிஹரிகரங்களைப்பிடித்து
பாலசுகுமாரர் பரதேசம்புறப்பட்டார்
மாமிகண்டுவேண்டாமென மகளைத்தாரேனென்றாள்
மணவாளக்கோலங்கொண்டார்
மாலைசூடிஊஞ்சலாடி மணையின்மேல்உட்கார்ந்தார்
கற்புடையகாஞ்சனை கங்காநீரைச்சொரிந்து
கதம்பங்காம்பரிந்து
கெந்தபுஷ்பாக்ஷதைகளாலே கிரீசரையர்ச்சித்தாள்
பூர்வதவபுத்ரியையும் புருஷர்வைத்தபூமிகளையும்
பெண்போரில்வென்றபொருளையும்

பாத்ரமானசேத்ரக்ஞர்க்கு கோத்ரங்கொடுத்தாள்
வேதகீதவாத்தியஓசை விஸ்வமெல்லாமதிர
விகாரபயங்கள்சிறை

அத்தைஅம்மான்பந்துகளும் அரண்மனைவந்துசேர
லட்சுமியைப்போலேலட்சம் ஸ்ரீஜனங்கள்கூடி
சரஸ்வதிபோலே சுரம்பாடி

காஞ்சனமாலையைக்கண்டு கொண்டாடிக்கொண்டிருந்தார்
கனபிரியமாய்வந்தோரைதாய் பருந்தியுபசரித்து
கற்கண்டுகளெடுத்து பச்சைவர்ணியுடுத்து

கனிவர்க்கந்தாம்பூலத்துடன் கணிசமாய்க்கொடுத்தார்
உச்சிதமாய்பட்டெடுத்து பச்சைவர்ணியுடுத்து
அச்சுதரை யண்ணனுபடுத்து

விஷ்ணுமடிமேலேவிசா லாக்ஷிவீற்றிருந்தாள்
தேவர்சூழும்சபையினுள்ளே திருமங்கிலியமெடுத்தார்
சாரங்கரும் பொரிகொடுத்தார்

அனைவர்களும்மனம்பூரித்தார் அஷ்டதிசைவாத்தியமடித்தார்
சதுர்முகவரும்சுவாகாபதியை ஜவாலையாகவளர்த்தார்
சாரங்கரும் பொரிகொடுத்தார்

சத்திரியஜாதிவரிசைப்படி சகலாகுதியமுடித்தார்
சாஸ்திரக்ஞாள்பாகவதாள் தீட்சதர்கள்கூடி
பிரசங்கஞ் செய்துவாதாடி

ரதியும்பதியும்போலேகா சனத்தில்வைத்துசேவித்தார்
வாணியுமிந்திராணியும் வந்தாரத்தியெடுத்தார்
வளமாய் விருந்தளித்தார்

தட்சணைதாம்பூலங்களை திருப்தியாய்க்கொடுத்தார்
பதஞ்சலிவியாக்கியபாதர்க்கு பரமநிர்த்தனமாடி
பலபிராமணாளுடன்கூடி

நன்மைதருவாரைபிர தீஷ்டைசெய்துபுசித்தார்
குடைபிடித்தகுண்டோதரர்க்கு கொடும்பசியுண்டாக்கி
அம்மனகம் பாவங்களையடக்கி

அன்னபூரணிச்செல்வியை யழைத்துதிருப்திசெய்தார்
ஆறில்லாநகர்ஊரல்லவென்று ஆலோசனைப்பண்ணிக்கொண்டு
வேகவதி கங்கைவரக்கண்டு

வட்டாத்துவிருந்தையுண்டு வாட்டமற்றிருந்தார்
மாமியிட்டபக்திமருந்தால் மயங்கிமகிழ்ந்துபேசி
மதத்தோரை எதிர்த்துவீசி
மஞ்சக்காணிமகுடம்பூண்டு மதுரையையாண்டிருந்தார்
ஒருசம்வச்சரமுஞ்சலாடி பண்டிகைகண்டுகொண்டாடி
பலதுப்பிரியாளுடன்கூடி
மீனாட்சிபிரியாள் மாமிமகிழ மனையில் வாழ்ந்திருந்தார்

---

## மீனாட்சியம்மன் சோபனக் கொம்மி.

மங்களமீனா மனம்பூரித்து
பெண்களைப்போலே யவதரித்து
திங்கள்குலத்தாளால் மெய்குளிர்ந்தாள்
அங்கேயநேக நாளாய்வளர்ந்தாள்
பாலப்பருவம் போனவுடனே
பஞ்சதவய தானவுடனே
சுக்கிரவார உதயமெழுந்தாள்
சுபசோபனங்க ளாயிருந்தாள்
கண்டுதோழிமா ரெல்லாம்நொடித்தார்
கைகொட்டிப்பாடி விலக்கிவைத்தார்
வைகைநதியில் ஜலமெடுத்தார்
வாசல்கள்வீதியெல் லாந்தெளித்தார்
சந்தணத்தால்தரை மெழுகிவிட்டார்
சதுரமாய்குங்குமக் கோலம்போட்டார்
முத்தையிடித்து மாவாய்புடைத்தார்
முத்தத்தில்முன்னே கோலமிசைத்தார்
சங்கையரைத்து சேராய்க்குழைத்தார்
சபைஎங்கும்போய் கோலமிசைத்தார்
மதுரையூரோர் அதையறிந்தார்
மங்களம்விசாரிக்க ஓடிவந்தார்
பெற்றபாக்கிய சாலியைக்கண்டார்
பேரன்பிறந்தானே நோக்குயென்றார்
உத்தமியார் உள்ளம்பூரித்தாள்
உங்களதுஎல்லா மென்றுரைத்தாள்

கற்கண்டுபோரைப் பிரித்துவிட்டாள்
காணவந்தோர்க்கெல்லாம் வாரியிட்டாள்
அந்தக்ஷணத்திலே காரியஸ்தாள்
ஆயிரம்பேரை நேராயழைத்தார்
இந்தக்ஷணமே என்சேனைநன்றாய்
இங்கேவரும்படி செய்யுமென்றாள்
தங்கமுருக்கித் தகடடித்து
தடாதகாசோப னத்தைக்குறித்து
அங்குள்ளதூதுவ ரெடுத்துக்கொண்டார்
அம்மான்ஊருக்கு ஓடிச்சென்றார்
பாதையில்பல பேர்க்குமொழிந்தார்
பாட்டன்மனையில் வந்துநுழைந்தார்
வருந்தியவாள் விருந்தளித்தார்
இருந்தபின்க்ஷேமத்தை விசாரித்தார்
ருதுபத்திரிகை பற்றிக்கொண்டார்
ரதமேறிப்போக வேணுமென்றார்
மாமன்மார்கள் மனம்பூரித்தார்
மங்களப்பொன் னோலையைப்பார்த்தார்
உத்தமசுபமுகூர்த்தத்திலே
புத்திரனுண்டாகும் வேளையிலே
சித்திரமேணி திரண்டாளென்றார்
சுத்தியிருந்தோர் சந்தோஷங்கொண்டார்
அக்காள் தங்கையர் கேட்டுமகிழ்ந்து
புக்கரங்களை யெல்லாமறந்து
எங்கள்பிறவிக்கொரு பெண்ணென்றார்
எதேஷ்டமாய் சீரெடுங்களென்றார்
அண்ணன்தம்பிமார்கள் கூட்டிக்கொண்டு
ஆனைகுதிரைமே லேறிக்கொண்டு
சேனைகள்சேர சிந்தைமகிழ்ந்தார்
சீக்கிரமாய் சிறப்பாகவந்தார்
காஞ்சனமாலை கண்டுகளித்து
காஞ்சனமாய் வாவென்றழைத்து

அன்னை தங்கைக்கு உபசரித்தாள்
யாவர்க்கும்ஓலை யனுப்பிவைத்தாள்
பாட்டிமாரெல்லோரும் கூடிக்கொண்டார்
பேத்தியைதொட்டிலில் வந்துகண்டார்
பட்டுப்புடவை களையெடுத்தார்
பலபுஷ்பங்களுடன் கொடுத்தார்
கன்னிகைகளையுங் கிட்டேயழைத்தார்
காசிரவிக்கைத் துண்டுகொடுத்தார்
அத்தையும்சித்தி களும்பூரித்து
அம்மனைதொட்டு வலங்கரித்து
அடிப்பறப்ப வாரம்பித்தாள்
ஆயிரம்பெண்டுகளை யழைத்தார்
பத்துக்கலமுத்தைக் குவித்து
பட்டுசுட்டு மெத்தைவிரித்து
மத்தியில்மாதை உட்காரவைத்தார்
சுத்திவளைந்து ஸ்ரீகள்குதித்தார்
கூச்சமில்லாமல் பாடியிரைந்தார்
கோடிகுஞ்சுகள் குடியிருந்தார்
பிரியர்கள்பார்த்து சந்தோஷப்பட்டார்
போதைக்கொருவராய்ப் பொங்கலிட்டார்
மூன்றுநாளை யுதயத்திலே
முத்துச்சிறு நெல்லரிசியிலே
ஆயிரக்கலந் தீட்டிநனைத்தார்
அற்புதபிட்டு சமைத்தெடுத்தார்
பொன்கூடைகளிலே வாரிக்கொண்டார்
பொட்டிவண்டிமேலே ஏறிக்கொண்டார்
நாகசரவிருது நெரிய
நகரிஎங்கும் போட்டார்பிறைய
பந்துக்கள்குளி தினமறிந்தார்
பொங்கள்வரிசைகள் கொண்டுவந்தார்
குட்டிகளைநயந்து வழைத்தார்
கூடந்தெருவெங்கும் பந்திவைத்தார்

நாலுவிதப்பொங்கல் வாரியிட்டார்
நிறையநெய்பாலை ஓடவிட்டார்
விஷம்செய்து அவாள்புசித்தார்
வீடுகாடெங்கும் வாரியிறைத்தார்
வேடிக்கையாய் வாசலில்நின்றார்
பாடிப்பணங்களைத் தாருமென்றார்
அம்மான்மார்கேட் டானந்தித்தார்
ஆயிரம்மொஹ ராவைக்கொடுத்தார்
அதெல்லாம்வாங்கி பிரித்துக்கொண்டார்
அத்தையிடத்திலே வந்துநின்றார்
அருமையான மருமகளடி
ஐந்தாருபெண்களு மில்லையடி
குனிந்துபாடி காலோய்ந்ததென்றார்
கொட்டடிகாசும் பணமுமென்றார்
பணக்காரஅத்தை கேட்டுபூரித்தாள்
பவுனை எண்ணிலக்ஷம் கொடுத்தார்
மங்களமருமகளை யழைத்தார்
மணைமேல்வைத்து எண்ணைதேய்த்தார்
ஆயிரம்பெண்டுகள் பாடிவர
அனேகபுருஷர் கூடிவர
வைகைநதியிலே வந்துஒய்தார்
விளையாடிநீந்தி ஸ்நானம்செய்தார்
அம்மாமிமாரெல்லாம் கூடியன்று
அம்மனைவந்து வளைந்துகொண்டு
நல்லவர்களாகையால் பூரித்தார்
நாத்தினர்பெண்ணுக் கலங்கரித்தார்
குடியிருந்தபெண் களையழைத்தார்
ஆடையோடாபரணங் கொடுத்தார்
தொகையல்வற்றல் விடாமெடுத்தார்
துறைப்பிடிதிற மாய்க்கொடுத்தார்
அத்தைசிலவென்று சொல்லிக்கொண்டாள்
அபாரமாயிருக்குதென்று உண்டார்

பின்னிஎல்லோருந் தாண்டாமுடித்தார்
புஷ்பவிமானஞ் சேராய்ஜோடித்தார்

சந்திரஉதய மாகக்கண்டாள்
சங்கரிவந்ததி லேறிக்கொண்டாள்

திமிதிமியென்ன வாத்தியமடிக்க
தீவட்டிமத்தாப் பெங்கும்பிடிக்க

வீடுதவருமல் நின்றுநன்ருய்
வேடிக்கையாய்ச் சிறப்பாகச்சென்ருர்

பட்டணத்தோர்கள் பார்த்துபூரித்தார்
பால்பழமுங் கொணர்ந்துகொடுத்தார்

மாணிக்காரத்தி எடுத்துயிந்தார்
மங்கையெல்லாரும் பின்னேடேவந்தார்

பொன்னுலகத் தோர்களும்புகழ
பூமிமீதுள்ளோ ரும்மகிழ

சப்தபிரகாரமும் சுத்திநன்ருய்
சக்தியரண்மனே யுள்ளேசென்ருள்

உண்ணப்பொன்கலத்திலே படைத்தாள்
கண்ணுளேபீடத்தில் நிற்கவைத்தாள்

அங்கமெங்குந்தங்க பில்லேவைத்தாள்
அத்தைஎற்றி யிறக்கிபூரித்தாள்

பாண்டியர்பாக்கியம் பார்த்துமகிழ்ந்தாள்
பாலாட்குபிடி யமுதுயீய்ந்தாள்

புசித்தகலம்விட் டெழுந்திருந்தாள்
பொன்மாலேமடிமேல் சாய்ந்திருந்தாள்

மாமன்மார்கள் கண்டுஎடுத்தார்
மருமகளுடன் கொஞ்சிநொடித்தார்

பரிகாசமொழிகளேக் கேட்டார்
பக்குவமானபெண் வெட்கப்பட்டாள்

எங்கள்சகோதரி செல்வம்நன்ருய்
என்னவேணுமிப்போ சொல்லுமென்ருர்

மயில்வர்ணிவாயைத் திறந்தாள்
மாதுரியமாகப் பதில்மொழிந்தாள்
முன்னேநீதந்த ஆபரணம்நன்ருய்
வன்னமில்லாம லிருக்குதென்ருள்
இந்தாளையிலொன்றும் வேண்டாமென்ருள்
பின்னலேயாகட்டு மென்றுசொன்னுள்
அந்நாள்சென்று எழுந்திருந்தாள்
அன்னுகுளி நீராடிவந்தாள்
மாதுலன்மாரெல்லோரும் கூடிக்கொண்டு
மாப்பிள்ளையைக்கிட்டே வைத்துக்கொண்டு
ஊர்க்குப்போகவேணும் நாங்களென்ருள்
உத்திரவுஎன்ன சொல்லுமென்ருர்
நங்கைகாஞ்சனையாள் கேட்டுநன்ன
நாளைக்குஆகட்டு மென்றுசொன்னுள்
பாண்டியர்தங்கை யதையறிந்தாள்
பறந்தவாள்முன்னே ஓடிவந்தாள்
ஆத்திலேபூப்பு மானைப்பிரித்து
பார்த்துயிருப்பது பாபவித்து
சீக்கிரமாகத் திரக்ஷிநன்ருய்
செய்துவிட்டுஊர் போங்களென்ருள்
காஞ்சனமாலை பிரதாநொடித்து
கலீரென அவாள்சிரித்து
இளந்தையான நம்பகிளிக்கு
இதுகாதிலே பட்டாலின்றைக்கு
உள்ளம்நடுங்கி யொடுங்கிடுவள்
கள்ளனைப்போலே பதுங்கிடுவள்
இன்னுமொருதை பிறக்கட்டுமே
உன்னண்டையவ ளிருக்கட்டுமே
இதற்கென்ன அரவமென்ருர்
எல்லவரும் வெளியிலேசென்ருர்
முறட்டுமாப்பிள்ளை யதையறிந்தார்
மூர்க்கத்தனங்கள் பண்ணகினைந்தார்

வேட்டாத்தத்தையரை மெச்சிக்கொண்டார்
வேண்டாமென்றவர்மேல் சீறிநின்றார்
பெரியாளாவை ளண்டைவந்தார்
பார்த்தவர்உள்ளே பதுங்கிக்கொண்டாள்
மாமனைக்கண்ட மதமோவென்றார்
சாமளியேசற்று நில்லுமென்றார்
கோபமீறிஅவர் கூடவந்தார்
கூந்தலைஎட்டிப் பிடித்துக்கொண்டார்
வந்தாளுக்கேனிந்த கேடுயென்றார்
வானறிவார்கள்என் பாடுயென்றார்
மானிமதுரம் அதையறிந்தாள்
பாணியால்வாயைப் பொத்திநயந்தாள்
எட்டுத்திக்குங் கட்டியாண்டநீலி
என்னோடேசுகிக்கத் தானுபாவி
ஈரெட்டுநாள்களுக் குள்ளொருநாள்
சீரெட்டுச்சாந்தி செய்யாதபோனால்
நானுன்னைத்தொடுவ தில்லையென்றார்
நல்லவர்போல் கச்சேரிசென்றார்
பின்னையுமிரண்டுநாள் சென்றன்றைக்கு
பெரியதாய்பிரயாண பேரிமுழக்கி
மூட்டைமுடிப்பெல்லாம் வாரிக்கொண்டார்
முத்துப்பல்லக்கின்மே லேறிக்கொண்டார்
சித்தம்மையும் பெரியம்மையுமாய்
சொல்லிக்கபெண்ணண்டை வந்தாள்சும்மா
உன்பதியண்டை யிருநீயென்றார்
ஊருக்குநாங்கள் போய்வாரோமென்றார்
தங்கத்தடாதகா அதையறிந்தாள்
தந்திரமொன்று செய்யநினைந்தாள்
பந்தைப்பந்தலின்மேல் விட்டெறிந்தாள்
பத்மகண்ணால்நீ ரையுஞ்சொரிந்தாள்
வாடிமெலிந்த மாடக்குயிலை
வந்துஅணைத்தா ரவாள்கையாலே

உந்தனுக்கென்ன குறைச்சலம்மா
உள்ளதொளியாமல் சொல்லுசும்மா
எப்பெரிதாயிருந் தாலும்நன்றாய்
ஈந்துவிட்டே ஊர்போறோமென்றார்

சோர்ந்தமுகத்தைத் துடைத்துக்கொண்டு
சற்றேசந்தடிக்கு பாத்துநின்று
ஏகபட்சத்துக் குள்ளாகநன்னா
எனக்குநீசாந்தி செய்யாமற்போனால்

உந்தன்மருமக ராஜன்செண்டாய்
ஓடிப்போறேனென் கிறாரேயென்பாள்
மாதாமழிந்து பூரித்தார்
மாதுலன்மாருக் கறியவைத்தார்

சித்தமகிழ்ந்த வாளும்கேட்டார்
செல்லும்பிரயாணம் நிறுத்திவிட்டார்
செல்வக்குமாரிக்கு சீறாநன்றாய்
செய்யஆலோசனை பண்ணிக்கொண்டார்

சொர்ணங்கோடிபார தூக்கிவிட்டார்
சுமதிமந்திரி திட்டம்போட்டார்
நாடுநகரை யலங்கரித்தார்
வீடெங்கும்வெள்ளி தங்கமிழைத்தார்

உச்சிதசாந்தி ஜெபமுடித்தார்
பச்சைவர்ணியை யுள்ளேயடைத்தார்
பாரியைபரவச மாய்க்கண்டார்
வாரிமாறோடே யணைந்துகொண்டார்

அன்னமேயின்று முதலாயுன்னை
அல்லும்பகலும் பிரியேன்சொன்னேன்
இங்கராளென்னா லில்லையென்றார்
உன்அம்மானை பார்த்துக் சொல்லுமென்றார்

அதற்குமடங்கி அம்மனிசைந்தாள்
அருணோதயத்தில் வெளியில்வந்தாள்
ஈசர்மொழிஎல் லோருமறிந்தார்
ஏகயோகட் சேமமாயிருந்தார்

ஏனோமுனிபி செல்லாமறைத்தார்
எங்கும்மீனாக்ஷி பிரியாள்விதைத்தாள்.

---

## சுந்தரேசர் சித்தராய்வந்து விளையாடிய கொம்மி.

இந்தரவிமானத்திலிருந்தார்-சுந்தரேசர்
இருபதாம்லீலைசெய்யநினைந்தார்-சுந்தரேசர் ௧

சித்தராய்மூர்த்திதரிசித்தார்-சுந்தரேசர்
சித்தராசனம்விட்டுகுதித்தார்-சுந்தரேசர் ௨

கோயில்தாண்டிவெளிதாவினார்-சுந்தரேசர்
குருநாதாவென்றுகூவினார்-சுந்தரேசர் ௩

தோள்சுருளிடையில்சுமந்தார்-சுந்தரேசர்
தொலைநாள்தொண்டர்போல்சமைத்தார்-சுந்தரேசர் ௪

சித்திரவீதியைச்சுற்றிச்சென்றார்-சுந்தரேசர்
ஜனங்கள்சேர்ந்தஸ்தலத்தில்நின்றார்-சுந்தரேசர் ௫

தர்ப்பையைப்பூமியில்விரித்தார்-சுந்தரேசர்
தெக்ஷிணமுகத்தைதியானித்தார்-சுந்தரேசர் ௬

மதுரைமீனாளையும்மறந்தார்-சுந்தரேசர்
மஹாதேவாவென்றதிலிருந்தார்-சுந்தரேசர் ௭

பஞ்சாக்ஷரஜெபம்பண்ணினார்-சுந்தரேசர்
பாணிஅங்குலியால் கணக்கெண்ணினார்-சுந்தரேசர் ௮

யோகப்பட்டம்பூட்டி ஒய்ந்தார்-சுந்தரேசர்
ஊசிமுனியில்தபசுசெய்தார்-சுந்தரேசர் ௯

பளீரென்றெழும்பியிருந்தார்-சுந்தரேசர்
பறவைப்போல்உயரப்பறந்தார்-சுந்தரேசர் ௧௦

திடீரென்றுவந்துகுதித்தார்-சுந்தரேசர்
தெருநிழுதிமேலேபடுத்தார்-சுந்தரேசர் ௧௧

அங்கப்பிரதக்ஷணம்புரண்டார்-சுந்தரேசர்
ஹரனேபரனேசிவனேயென்றார்-சுந்தரேசர் ௧௨

வைகையில்போய்நீராடினார்-சுந்தரேசர்
வாய்திறவாமற்பாடினார்-சுந்தரேசர் ௧௩

மவுனமாய்ஒருபொழுதிருந்தார்-சுந்தரேசர்
மளமளென்னகவிபொழிந்தார்-சுந்தரேசர் கச

குன்றுபோலசலனமற்றிருந்தார்-சுந்தரேசர்
செண்டுபோலோடித்திரிந்தார்-சுந்தரேசர் கரு

நீரின்மேலேநித்திரைசெய்தார்-சுந்தரேசர்
நெருப்பில்நிர்த்தனமாஒய்தார்-சுந்தரேசர் கசு

தலையாலேதாரையிலடித்தார்-சுந்தரேசர்
கால்மேல்மலைகொடைபோல்கொண்டார்-சுந்தரேசர் கஎ

புலிமேலேறிசவாரிவிட்டார்-சுந்தரேசர்
யாளிகரடிநாய்கூட்டம்போட்டார்-சுந்தரேசர் கஅ

மலைநாகங்களைப்பிடித்தாட்டினார்-சுந்தரேசர்
மடிமேல்வைத்துஅமுதூட்டினார்-சுந்தரேசர் ககூ

வனத்தில்போய்புல்லறிந்தார்-சுந்தரேசர்
வனத்தில்மேயுங்கன்றுகட்கீந்தார்-சுந்தரேசர் உ0

சிலைப்பசுவிற்கறந்தார்-சுந்தரேசர்
சிசுக்கள்குடிக்கக்கேழ்க்கயீந்தார்-சுந்தரேசர் உக

தத்தாவென்று அழைக்களடுத்தார்-சுந்தரேசர்
தீனிகள்வரவழைத்துக்கொடுத்தார்-சுந்தரேசர் உஉ

வெள்ளிபோனமேருமேல்குவித்தார்-சுந்தரேசர்
வேண்டுவோர்வாரிப்போங்களென்றுரைத்தார்-சுந்தரேசர் உங

மனிதர்மனமெல்லாம்கிரகித்தார்-சுந்தரேசர்
மாயவித்தைசெய்துகாண்பித்தார்-சுந்தரேசர் உச

மாத்திரைகோலமாரிலணிந்தார்-சுந்தரேசர்
மகாபஸ்பம்எல்லோர்க்குமீந்தார்-சுந்தரேசர் உரு

பெண்களுக்கெல்லாம்பேயோட்டினார்-சுந்தரேசர்
பெருமுத்திராக்ஷரக்ஷைகட்டினார்-சுந்தரேசர் உசு

வாழாதபேரைவாழவைத்தார்-சுந்தரேசர்
வசீகரமந்த்ரமுபதேசித்தார்-சுந்தரேசர் உஎ

மலடிகட்குமைந்தரளித்தார்-சுந்தரேசர்
மருந்துகொடுத்துபிணிகள்தீர்த்தார்-சுந்தரேசர் உஅ

கிழவிகள்கரங்களைத்தொட்டார்-சுந்தரேசர்
குமரியாக்கிபதிமுன்விட்டார்-சுந்தரேசர் உகூ

ஆணைப்பெண்ணாயடித்தார்-சுந்தரேசர்
பெண்ணை ஆணாய்முடித்தார்-சுந்தரேசர் ௩0

பூனையையானையாக்கினார்-சுந்தரேசர்
யானையைப்பூனைபோல்தூக்கினார்-சுந்தரேசர் ௩௧

ஆட்டைமாடுசெய்துமளித்தார்-சுந்தரேசர்
வீட்டைவிமானம்போலிழுத்தார்-சுந்தரேசர் ௩௨

இரவில்சூரியனைக்காட்டினார்-சுந்தரேசர்
பகலில்சந்திரனைக்கூட்டினார்-சுந்தரேசர் ௩௩

அசழ்மீரையும்வற்றடித்தார்-சுந்தரேசர்
அகாலத்தில்வெள்ளமழைத்தார்-சுந்தரேசர் ௩௪

பாழ்வனங்களில்போய்முழங்கினார்-சுந்தரேசர்
பனைமரத்தினில்தேங்காய்பிடுங்கினார்-சுந்தரேசர் ௩௫

இலவமரத்தில்பழம்பரித்தார்-சுந்தரேசர்
இறங்கிஎல்லோர்க்குமீந்துபுசித்தார்-சுந்தரேசர் ௩௬

வேம்பைஎட்டிவிருக்ஷமாய்ச்செய்தார்-சுந்தரேசர்
எட்டிவேம்பாக்கிஅடிக்கஆர்க்குகொய்தார்-சுந்தரேசர் ௩௭

காய்க்காகண்ணில்கனிகற்பித்தார்-சுந்தரேசர்
பூக்காச்செடியில்புஷ்பம்பரித்தார்-சுந்தரேசர் ௩௮

ஜோல்னைவமாரில்தாங்கினார்-சுந்தரரேசர்
சொஸ்தமாய்ச்சற்றேதூங்கினார்-சுந்தரேசர் ௩௯

ஞானநித்திரைநீங்கிவிழித்தார்-சுந்தரேசர்
நகரிஎங்கும்சஞ்சரித்தார்-சுந்தரேசர் ௪0

மன்னனையும்மயங்கச்செய்தார்-சுந்தரேசர்
மந்திரிகள்வந்தழைக்கவைத்தார்-சுந்தரேசர் ௪௧

பேரதுரைநேர்வருகக்கண்டார்-சுந்தரேசர்
பிராகாரத்தில்போய்ப்படுத்துக்கொண்டார்-சுந்தரேசர் ௪௨

காலிரண்டையும்நீட்டிநன்றாய்-சுந்தரேசர்
கண்களைமூடிக்கொண்டார்-சுந்தரேசர் ௪௩

கிங்கராள்வந்ததட்டவறிந்தார்-சுந்தரேசர்
கரணம்சூனியர்போலிருந்தார்-சுந்தரேசர் ௪௪

அரசன்முன்னின்றழைக்கக்கண்டார்-சுந்தரேசர்
அசட்டையாய்அப்படிப்போவென்றார்-சுந்தரேசர் ௪௫

எனதுகற்றுயென்றுகேழ்க்களழுந்தார்-சுந்தரேசர்
எல்லாங்கற்றேனென்றுமொழிந்தார்-சுந்தரேசர் சசு
வில்லன்உள்ளத்தையறிந்தார்-சுந்தரேசர்
கல்லானைக்குகரும்புயீய்ந்தார்-சுந்தரேசர் சஎ
மாயமாயுள்ளேமறைந்தார்-சுந்தரேசர்
மகாலிங்கத்தில்புகுந்திருந்தார்-சுந்தரேசர் சஅ
பிரதிஷ்டைசித்தரிலும்வியாபித்தார்-சுந்தரேசர்
பிராத்திப்போர்க்குபலனளித்தார்-சுந்தரசேர் சகூ
அபிஷேகபாண்டியர்அன்பைமகிழ்ந்தார்-சுந்தரேசர்
அசையாமலவ்வூரிலிருந்தார்-சுந்தரேசர் ருO
மூன்றேழாம்லீலையும்செய்துகந்தார்-சுந்தரேசர்
மீனாக்ஷிபிரியாள்மனதில்பதிந்தார்-சுந்தரேசர் ருக

## கௌரிலீலை கொம்மி.

வேதநாதர் மதுரையில்
விருபாக்ஷனென்றொருவேதியர்
பதிவிரதையுடனேகூடி
சுகித்திருக்கிறநாளையில்
வம்சம்வளரவாழ்வதைக்கண்டு
தபித்தவர்மனம்சலித்துமே
அஷ்டமியநேகவிரத
பட்டனிகளையெடுத்துமே
யாகாதிகிருதுக்களக்கினி
கோத்திரங்களைமுடித்துமே
சதுர்விதமறையோர்க்குசகல
தானங்களையுங்கொடுத்துமே
ஸ்வர்ணபத்மினிதடாக
தீர்த்தயாத்திரைசெய்துமே
மீனாட்சிசுந்தரேசருடைய
சந்நிதியிலேவந்துமே
பிள்ளைவரனைதாடியென்றவாள்
பூசித்துமலர்சாற்றினர்

மைந்தவர்வரனை தாடிஎன்றவாள்
மாவிளக்குகளேற்றினர்
வேண்டினோர்க்குவேணவரனை
கொடுக்கிறமீனுக்ஷியும்

கடைக்கண்ணுலேபார்த்துமலடியை
கர்ப்பவதியாயாக்கினுள்
மாதரசியும்மசக்கையுடனே
மகிழ்ந்துமனையிலிருக்கையில்

பூரித்துபிறந்தாத்தாவாள்கேட்டு
பொடிக்கலோகங்களெங்கும்போட்டு
ஆச்சியத்திலனேகபட்சணமும்
காச்சினதிரட்டிப்பாலுங்கொண்டு

தந்தைதாயார்பந்துகளெல்லாம்
வந்துமேபெண்ணைபார்த்திருந்தார்
சீமந்தம்வளைகாப்புகல்யாணம்
செய்துசிந்தைமகிழ்ந்திருந்தார்

பத்தாமாதத்தில்போலொரு
பாலகிதன்னைப்பெற்றெடுத்தாள்
சந்ததிவசந்தோஷத்தினுளவள்
ஸ்தன்னியபாணங்களைசெய்துவைத்தாள்

புத்திரிஉத்ஸவங்கள்நடத்திவிரை
தானங்கள்வேணதெல்லாம்கொடுத்தார்
பூஷணம்பூட்டுமையிட்டுதங்க
தொட்டிலில்போட்டுதாலாட்டிவிட்டாள்

கிரீஜன்பத்தினிநாமத்திலேதிவ்ய
கௌரியென்றெருநாமமிட்டாள்
அத்தையும்பாட்டியும் அம்மான்பந்துக்களும்
ஆபரணங்கள்கொணர்ந்துயிட்டார்

சர்வலக்ஷணராம்சன்னகௌரியும்
செல்வத்திலேசிறப்பாயிருந்தாள்
ஆயிரம்தாசிமாரன்புடன்போஷித்து
ஐந்துவயதுவளர்த்தெடுத்தார்

பக்தியுருக்கொண்டுபாரில்முளைத்தாப்போல்
நித்தியம்சிவத்தியானம்செய்திருந்தாள்
பெற்றபிதாஅதைபக்குவப்படுத்தி
துர்க்கமந்திரத்தையுபதேசித்தார்
ஈசருக்குநிஜதாசியவள்
ஏழுபிராயம்வளர்ந்திருந்தாள்
பாரிலுள்ளபணக்காரரெல்லாம்தங்கள்
பாணிக்கிரகணம்பண்ணப்பார்த்திருந்தார்
அந்தநாளையிலோரய்யங்காரபையன்
அதிதியாய்பிக்ஷைவாங்கவைத்தாய்
அந்தணர்நந்தபிள்ளைக்கு
தாராதத்தம்பண்ணித்தான்கொடுத்தார்
பிக்ஷைகந்தையைவாங்கியெறிந்துநல்ல
பீதாம்பரத்தையுடுத்திவிட்டார்
கட்டியரைஞாண்கண்டுக்கணையாழி
குண்டலங்களுங்கொணர்ந்துயிட்டார்
அஷ்டதரித்திரனைலித்தியார்த்தியும்
ஆசையுடனதைவாங்கிக்கொண்டு
அன்னநடைரூபலாவணியை
அணையஆசைகொண்டேயிருந்தார்
சுபவிரதையதையறிந்துவெகு
சோகத்துடனேவெளியில்வந்து
பிட்சைக்குவந்தவன்மாப்பிள்ளையானானே
வைச்சுக்கணுகமோஎன்னவியென்றாள்
உற்றாரெல்லோருமதையறிந்து
மத்தியிலேமறுத்துத்தடுத்தார்
ஏதினிமேல்கடவாதென்றுஏழை
பிர்மசாரிஏங்கேளழுந்திருந்தார்
மாதுசிரோன்மணிமணிசாதுவறிந்ததை
மாலையிட்டுமணையிலிருந்தாள்
கன்னியிடகருத்தையறிந்தவாள்
கல்யாணம்நன்றாய்செய்துகொடுத்தார்

வரிசைகளைவைத்துக்கொடுத்துப்பெண்ணை
மாப்பிள்ளைபின்னோடேகூட்டிவிட்டார்
புருஷனேபொறுவென்றுபுக்கரத்தில்போய்
மாமியார்மாமனாரைசேவித்தான்

வீரவைஷ்ணவாள்தோள்கள்போலேமனம்
வெந்துதணிந்துவேதனைகொண்டார்
மதுரைமீனாட்சிபோல்வந்தமாட்டுப்பெண்ணை
வீட்டுக்காகாதென்றுவேறேவைத்தாள்

வேக்கவிதியற்றுவிட்டகுமாரனை
கூட்டியடித்துகோபித்துக்கொண்டார்
சீக்கிரமாய்வந்தஸ்ரீதனத்தைவாரி
சுத்திபண்ணிசித்துள்ளேகவிர்த்தாள்

அற்புதமாய்வந்தஅங்குமணிகளை
அடுக்குள்ளேவாரிக்கொண்டேவைத்தாள்
கொண்டுவந்தகுஞ்சாலாடுவெல்லாம்குடி
யானவனண்டைகொட்டிக்கொடுத்தாள்

பண்ணிவந்தபணியாரமெல்லாமவள்
பள்ளித்தெரிவுக்குவாரிவிட்டாள்
சாம்பலணியும்ஜாதியீனபெண்ணேநீ
சமைக்கப்படாதென்றுசாதித்தாள்

தளிகைசெய்கிறசாலையைவிட்டு
தாழ்வாரத்தில்போவென்றுதள்ளிவிட்டாள்
எலும்பணிந்தவனுக்கின்பமானவள்
இங்குநிற்கப்படாதுயென்றாள்

பேயன்பேரைபிணற்றில்லில்லாதேயென்று
பெருக்கத்துடப்பத்தைக்கொடுத்தாள்
சமஸ்தமும்பிர்மமாகப்பாவித்தவள்
சந்தோஷமாயதைவாங்கிக்கொண்டாள்

பூட்டினஆரம்தங்கைகுலுங்கிட
கூட்டிவாரிஎங்கும்கோலமிட்டாள்
ஆண்டியைவேண்டிக்கொண்டாடலாமப்புறம்
தோண்டியில்தீர்த்தம்கொண்டாடியென்றாள்

சாக்கடையில்கிரைகொட்டிச்சாணிகளை
தட்டிச்சட்டென்றிங்கேவாடியென்றாள்
மாமனாரெல்லாரும்கூடியவளைப்
படுத்தாதபாடுபடுத்திவைத்தார்

வாழாமல்வைத்ததாழ்வானவேலைஏவி
கொல்லைகுடிசையில்கொண்டேவைத்தாள்
அஞ்சிகில்லாமல்ஆயாசம்கொள்ளாமல்
ஆத்துவேலையெல்லர்ம்பார்த்துவந்தாள்

காலுமோயாமல்கால்நாழிகில்லாமல்
காரியங்களெல்லாம்செய்துவந்தாள்
உண்டுதின்றவாள்கண்டுமிகுந்ததை
முக்தத்தில்குத்துகொணர்ந்துபோட்டாள்

காளைமாட்டானைஸ்துதிப்பவளேநோக்கு
கரியமுதுகிடையாதுவென்றாள்
ஸ்மார்த்தகுலத்தில்பிறந்தபெண்ணேநோக்கு
சாமிதீர்த்தமிந்தாவென்றுசாதித்தாள்

தங்கதாலத்தில்தாயிட்டதயிரன்னம்
நீரிடும்நேர்த்திகள்போலேயில்லை
அத்தையுன்கையமுதற்புதேமேயென்று
ஜிஹிவைவிட்டுதினமும்புசித்தாள்

எங்கள்குலத்துக்காகாதபெண்ணேஇங்கே
தானேயிரென்றுஎழுந்திருந்தாள்
காப்பேன்முருகேன்கண்டசந்த்ரஹாரமேன்
கழற்றிஎன்கையில்தாடிஎன்றாள்

மாமியாரேசாமியாரென்றெண்ணியவள்
பூஷணத்தைபிடுங்கிக்கொடுத்தாள்
பிச்சையெடுத்தவள்உச்சிதுடமையை
அச்சமில்லாமலணிந்துகொண்டு

காவலிரண்டுகதவையடைத்தவாள்
கல்யாணமென்றுஎல்லாரும்போனார்
ஏகாந்தமாகயிருந்துகௌரியும்
காலாந்தனைக்காணநினைத்தாள்

ஊரிலானுமொருஆழகுளத்தில்
சைவாளைக்காணேனேயென்றுசலித்தாள்
சிவனடியாரைசேவிக்காசிரமுன்னை
சேவிக்காமலிருக்கேனேயென்றாள்
கைலாசநாதன்கதைகேளாக்காதுன்னை
கண்டிக்காமலிருக்கேனேயென்றாள்
தெருமண்ணைவாயில்போட்டுக்கொண்டேனென்று
திருமண்ணெல்லாத்தையுந்துடைத்தாள்
பவக்கடலைவுத்தராணம்பண்ணும்
பஸ்பருத்திராட்சங்களை தரித்தாள்
குருவுரைத்தபஞ்சாட்சரத்தைஒரு
ஜாமமுருந்திருந்துச்சரித்தாள்
பக்திவலையாலேவீசிபரம
சிவனைகெண்டையாய்ப்பிடித்திழுத்தாள்
அன்புவலையிலேசிக்கிசுந்தரேசர்
அந்தட்சணமேயெழுந்திருந்தார்
பக்ஷமில்லாயாகதக்ஷனைக்கொன்றவர்
லக்ஷருத்ராக்ஷம்தரித்துக்கொண்டார்
விபூதிகளையணிந்துகொண்டுவேத
புஸ்தகம்கையில்பிடித்துக்கொண்டார்
கண்டம்வளிகளைப்பாடிக்கொண்டார்
நாமாவளிகளைப்பாடிக்கொண்டார்
கிலேசித்தழைத்தகௌரிபுக்காத்துக்கு
கிழவராககிரீஜர்வந்தார்
தொண்டரைக்கண்டோடிதெண்டனிட்டாகந்தம்
உண்டுகொண்டாடிக்கொண்டேயிருந்தாள்
எண்பத்திறுலக்ஷம்ஜீவராசிக்குப்
எத்தனைவுணவோகற்பித்தபிரபு
எதினிதாளேன்பிராணன்போகுதுபசி
மாதித்தனைசாதம்போடுஎன்றார்
யாசித்ததெல்லாம்பூசித்ததுகொடுப்பவள்
பூட்டிருக்கார்வாமிவீடுஎன்றாள்

துஷ்டர்கள்முத்திரைநீதொட்டாலேவிடும்
சட்டென்றுசமையல்செய்போவென்றார்
சிவனடியார்கள்மகமையிதுவென்று
சீமைபூட்டெல்லாத்தையுந்திறந்தாள்
சீனிநெய்களையும்பலபண்டங்களையும்
சீக்கிரமாகவாரிக்கொணர்ந்தாள்
கூட்டுக்கறிக்குஞ்சாலாடுகுழம்புகள்
மாட்டுப்பெண்மாதுரியமாய்ச்சமைத்தாள்
தங்கைதசிரிட்ட தங்கத்தலைவாழை
யிலைபோட்டுபோசனங்கள்படைத்தாள்
தேவிகைபாகருசிகண்டதேவரும்
சிலாகித்துசந்தோஷமாய்ப்புசித்தார்
பானீயத்தாலேபாதம்கரம்வாய்களை
சுத்தம்பண்ணிசற்றேயிருந்தார்
சோடசவயதுள்ளசுகுமாரனாய்
போகபுருஷன்போலாகிவிட்டார்
விபூதிரேகைபோய்பில்லையோடுசந்தனம்
வீடுகாடெங்கும்வாசனைவீச
ருத்திராக்ஷங்கள்பதக்கம்மின்ன
முத்தாஹாரங்கள்பதக்கம்மின்ன
தாம்பூலங்களுந்தரித்தந்தைதயலை
தழுவவந்தவர்போலிருந்தார்
பதிவிரதாசிரோன்மணிபார்த்து
பயந்துபக்கத்திலொதுங்கிருந்தாள்
அந்தவேளையிலந்தய்யங்காராளெல்லாம்
அதிவேகமாகஆத்தில்வந்தார்
கண்டவுடனேநடுங்கிஅவள்
காலன்கண்டவுயிர்போலொடுங்கி
என்னசெய்யப்போகிறேமென்றுபயந்து
இடிகேட்டநாகம்போலேங்கியிருந்தாள்
இந்திரவிமானத்துசுந்தரேசப்போ
இன்னொருலீலைசெய்யநினைத்தார்

ஒத்துக்கரகமலத்தில்மின்னமுத்துச்
சுட்டிமுகத்தையழகுபண்ண
பரதாங்குலியைபத்திக்கனிவாயிலே
பாலகனைவிளையாடிருந்தார்
பார்த்தவுடனேமனமகிழ்ந்தவள்
பரவசமாயெழுந்திருந்து
பட்டுஜாலராக்கள்கட்டினதொட்டிலே
தொட்டவளாட்டிக்கொண்டேயிருந்தாள்
மூத்தமதனியும்நாத்தனரும்வந்து
பார்த்துப்போய்மாமியாருக்குரைத்தாள்
இந்தக்களேபறந்தன்னையறிந்தவாள்
எல்லவரும்ஏகமாகவந்து
சந்திரன்போலவேவந்துவிளையாடும்
சுந்திரமைந்தன்நேர்க்கேதுஎன்றார்
யாரைப்போய்கூடியணைந்துபெற்றாயிந்த
அற்புதமானபாலகனென்றார்
மாமியேதங்கள்மகனுடன்கூடி
மருவியொருநாள்சுகித்ததில்லை
மற்றபுமான்எத்தனையழகாயினும்
கண்ணாலேநான்கூடகண்டதில்லை
தெய்வச்செயலாலேவந்துங்களிட
பாக்கியமென்றுபணிந்துரைத்தாள்
தெய்வம்ஆர்கண்டார்பூதமார்க்கண்டாரென்று
திட்டியதடித்திகைத்தடித்தாள்
ஹரிபிரமாதிக்ககப்படாவஸ்துவை
ஆத்திரத்தோடேஎடுத்தெறிந்தாள்
மாணிக்கமணிமயமானதொட்டிலை
ஒன்றுநூறாகஉடைத்தெறிந்தாள்
ஆணிப்பொன்னலசைந்தாடுஞ்சங்கிலியை
ஆயிரஞ்சுக்கலாயறுத்தெறிந்தாள்
மைத்துனன்மான்கொழுந்தனெல்லாருமாங்
கட்டிவைத்துக்கதறவடித்தார்

பிள்ளையைதூக்கிக்கொடுத்துப்பிடாரியை
பிடித்துத்தள்ளிக்கதவடைத்தார்
அதிர்சாலியைப்போக்கிவிட்டுஅஷ்ட
தரித்திரங்களுடன்கஷ்டப்பட்டாள்

சித்தடிவைக்கசெழிக்கும்ஸ்ரீபோனபின்
மூதேவிவந்தங்கேகூடிக்கொண்டாள்
நல்லபெண்ணைபொல்லாங்குசெய்ததோஷத்தால்
நமனூர்போய்நரகமடைந்தார்

பெண்ணானசாதுவயிறெரிந்துகடைக்
கண்ணாலேயும்கலநீர்சொரிந்து
என்னசெய்யப்போறேன்ஈஸ்வரனேயென்று
ஏகாக்ஷரங்களைஉச்சரித்தாள்

கூந்தலவிழ்ந்துபூமியில்புரள
குழந்தைமடியில்பசித்தலற
நாற்பேர்நகைக்கநடுத்தெருவிலாதி
நாரணிநாயகனைதியானித்தாள்

பசித்தலறினபாலகனேபர
மேசஸ்வரூபங்களாகிவிட்டார்
திவ்யஅக்ஷரத்தைஉச்சரித்தபெண்ணே
தேவிஸ்வரூபங்களாகிவிட்டார்

இந்திரன்பத்தினிஓடிவந்துதிவ்ய
சந்தனம்பூசிசாமரம்போட்டாள்
சூரியன்பத்தினிஓடிவந்துதிவ்ய
சுருள்களைமடித்துக்கொடுத்தாள்

முப்பத்துமுக்கோடிதேவர்களுங்கூடி
புஷ்பவருஷங்களாயிறைத்தார்
இந்தசிறப்பிலிருந்தகௌரியை
ஈசர்விருஷபத்திலேற்றிக்கொண்டார்

சொர்க்கலோகபிர்மலோகவைகுண்டங்கள்
காண்பித்துகயிலாசத்தில்வந்தார்
சாலோகசாமீபசாயுச்சிய
சதுர்விதபதமுங்கொடுத்தார்

கமலமீனாக்ஷிபிரியாதசெய்தகவியை
கரணங்களாலேகேட்டவர்கள்
காலபாசங்களெல்லாங்கடந்து
கௌரியடைந்தபதமடைந்தார்

## சுந்தரேசர் விறகுலீலை கும்மி.

மூலசுந்திரர்லீலையை பாடமுனைந்தேன்
பள்ளாய்பாடமுனைந்தேன்
முருகசிரேஷ்டபிரதாவுன்னை
பாண்டியபிரபுபதில் பத்திராவாழ்ந்தார்
பாண பத்திரர்வாழ்ந்தார்
சிவபக்திபண்ணிமுத்தியை யடையநினைந்தார்
துற்குணதோஷாதிகளை துடுப்பாலடித்தார்
தியான துடுப்பாலடித்தார்
சர்க்குணப்பாலைஞான சிசுவளரக்குடித்தார்
சுதியொன்றுதவிற யாவதையுமறந்தார்
இது யாவதையுமறந்தார்
சொஸ்தமாய்மீனாட்சி சுந்திரரைப்பாடியிருந்தாள்
சீமையெல்லாம்கியாதிபெற்ற பாடகனொருத்தன்
வெளிபாடகனொருத்தன்
ஜெயபேரிவிருதுடனே அங்கும்வந்தான்பித்தான்
நலமதுரைஸ்ரீமானாலே சன்மானம்பெற்றான்
வெகுசன்மானம்பெற்றான்
நாரதரும்நமக்கிணையில்லை யென்றுநினைத்தான்
வரகுணனும்அவனிட கர்வத்தைக்கண்டார்
அதிககர்வத்தைக்கண்டார்
வருந்திபத்திரரைநீரவனை வெல்லவேணுமென்றார்
எல்லாம்சிவன்செயலென் றவருமிசைந்தார்
அதற்கவருமிசைந்தார்
நசாணியரண்டைமெள்ள நடந்தசைந்தார்
பாதையிலேடங்காவாத்திய தொனிகளைக்கேட்டார்
அவாள்தொனிகளைக்கேட்டார்

பயந்துகாம்செயித்தோமென்று கோயில்போய்கும்பிட்டார்
ரக்ஷிரக்ஷிஇதுசமயம் ஈசனேயென்றார்
ஜெகதீசனேயென்றார்

ராஜாம்பிகைபள்ளியறைமுன்போய் பாடிபின்சென்றார்
நம்பினோர் துன்பமகற்றும் நாதனெழுந்தார்
நாதநாதவெழுந்தார்

நாற்பத்தொன்றாவதுலீலையன்று செய்யநினைத்தார்
காட்டாகியகாஷ்டக்கட்டை தலைமேலேகொண்டார்
தன்தலைமேலேகொண்டார்

கையில்வீணையுடன்வேகமாய் கடைதெருசென்றார்
சேர்ந்தவர்போலேஎங்கும் தங்கித்தங்கிவந்தார்
சுமைதாங்கில்வைத்தார்

சொத்தைப்பாக்குநறுக்கித்தின்று சிரமத்தைதணித்தார்
ஏழுகடலிலிறங்கிநீரை அள்ளிக்குடித்தார்
கையால்அள்ளிக்குடித்தார்

எதிர்பட்டோரைஅண்ணேதூக்கி விடென்றுஉரைத்தார்
விறகுவாங்கலையோ விறகென்றுவித்தார்
உலர்ந்த விறகென்றுவித்தார்

விலைகேட்போருக்குவிறகுதங்க நிறையெனுரைத்தார்
பட்டணத்தோர்கேட்டுவாயை விட்டுசிரித்தார்
கையைகொட்டிசிரித்தார்

பைத்தியக்காரன்போ லிருக்குதென்றுஉரைத்தார்
ஆள்ஜோராயிருக்கிறானென்று உற்றுப்பார்த்தார்
நன்றாய் உற்றுப்பார்த்தார்

அடேகுறவாஉனக்கெந்தமலை யென்றுவிசாரித்தார்
இந்நாமத்தைக்கேட்டுஈசர் இருதயம்பூரித்தார்
அன்று இருதயம்பூரித்தார்

இளைப்பாருவோர்போலெங்கும் சற்றுஇறக்கிவைத்தார்
காதறுந்துபோச்சுதே செருப்புகளென்றார்
தோல்செருப்புகளென்றார்

கௌபீனத்தைக்கிழித்துபிணைத்து சரிசெய்துகொண்டார்
கட்டஎன்பெண்சாதிக்கு கந்தையில்லையென்றார்
சாண்கந்தையில்லையென்றார்

வெட்டறுவானைத்தாறே குட்டையொன்றுகொடுங்களேளணை
கட்டபசங்களுக்கு பழசில்லையென்றார் [யென்றார்
வெள்ளைப்பழசில்லையென்றார்

இந்தஏரியைத்தாறேனிருந்தார் கொஞ்சம்கொடுங்களேனென்றார்
கொள்வோரையுங்காணேன் கொடுப்போரையுங்காணேனென்
எடுப்போரையுங்காணேனென்றார் [றார்

குறத்திகோபிப்பாள் போய்வாரேன்ஐயமாரேயென்றார்
இப்படிஇன்னும்வெகு வேடிக்கைகள்செய்தார்
நல்லவேடிக்கைகள்செய்தார்

ஏமநாதனிறங்கியிருக்கும் இடத்தில்வந்தொய்த்தார்
விறகுகட்டுமேல்சாய்ந்து சுதிகள்கூட்டினார்
கான் சுதிகள்கூட்டினார்

விண்மண்பிரமிக்கவிறலாலே கம்பியைமீட்டினார்
சங்கீதநூல்படிசதாரி 'ராகம்பாடினார்
தேவராகம்பாடினார்

சகஸ்திரதுவாஉரையில் வீணையைவைத்துமூடினார்
காயகனும்கானங்களை கேட்டோடிவந்தான்
காதால்கேட்டோடிவந்தான்

கற்றார்கொடுத்தாருக்கிருகி யென்றுமொழிந்தான்
பத்திரரிடத்திற்படுத்த சிஷ்யன்நானென்றார்
கடையசிஷ்யன்நானென்றார்

பல்லாக்கேறிவந்தபாடகா பிரயாணமென்றார்
வித்தானடைந்தகெதியை கனவில்போய்சொன்னார்
அன்பன் கனவில்போய்ச்சொன்னார்

வைகைநதிமணலிலே சற்றுவிடாயாறினின்றார்
அதையறியாமல்அப்பா ளாலயத்தில்நன்றாய்
சிவாலயத்திற்நன்றாய்

அற்புதமாய்அலங்காரங்கள் செய்துகொண்டாள்
சரிகைகுசும்பாபட்டு சேலையைக்கொய்தாள்
சன்னசேலைகொய்தாள்

சரணபரியந்தம்விட்டு உடுத்திக்கொண்டெய்தாள்
முத்துடனவரத்நப் பணிகளெடுத்தாள்
பலபணிகளெடுத்தாள்

முக்கணன்மோகிக்கபாத பரியந்தம்தரித்தார்
பட்டுச்சாட்டில்ஜாதி யரும்புதொடுத்தாள்
முல்லையரும்புதொடுத்தாள்

கொட்டைதிருகுபூவைத்க்கட்டில் கெட்டியாய்முடித்தாள்
சுகந்தம்சந்நிதியெங்கும் வீசிடநன்றாய்
வாடைவீசிடநின்றாய்

மீனாக்ஷிசந்தனக் கலம்பூசிக்கொண்டாள்
கணவன்மேலாசைகொண்டு காத்துயிருந்தாள்
வழிபார்த்துயிருந்தாள்

காணமையாகட்டிலின் மேலேகளைத்துவிழுந்தாள்
மூவர்பூசிக்கும்நாதன் வாராமையால்வதையாள்
சோராமையால்வதையால்

மோகமூர்ச்சியாகிமெத்தை மேலேநித்திரைசெய்தாள்
பதியதோவாராரென்று பாங்கிமார்சொல்ல
பலபாங்கிமார்சொல்ல

பஞ்சணையைவிட்டெழுந்து கண்ணைவிழித்தாள்நல்ல
கேலிசெய்யும்தாதிமாரை பார்க்கவெட்டினாள்
நிமிர்ந்துபார்க்கவெட்டினாள்

காமன்வலையில்துணைவ னில்லாமையால்சிக்கினாள்
சந்திரனைக்கண்டுயிது தீயென்றுவெந்தாள்
எரிதீயென்றுவெந்தாள்

ஸ்தன்னியத்திற்புரளும்முத்துமாலை பொரிந்திடவேநொந்தாள்
சுற்றிநின்றசகிதனை விசிறென்றிரைத்தாள்
பங்கரவிசியென்றுரைத்தாள்

சுந்தரேசரையழைத்துவாடியென்றுகொர்ச்சித்தாள்
நங்கையர்கள்ஓடி விமானத்தைப்பார்த்தார்
பெண்விமானத்தைப்பார்த்தார்

நாதன்சேதியைநந்தியாலறிந் தமக்குரைத்தான்
கனைத்திருக்கப்போறாரென்று கஞ்சியெடுத்தாள்
வஞ்சிகஞ்சியெடுத்தாள்

கதம்படிக்காட்டில்போய்குறச்சாமியென்றழைத்தான்
இத்தொனியைக்கேட்டுயீசர்-எதிரோடிவந்தார்
அவனெதிரோடிவந்தார்

இருட்டிலெங்கடிவந்தாயென்றுஎடுத்து அணைந்தார்
சோர்ந்திருப்பீரென்றுசோறு கொணர்ந்தேனென்றாள்
மோரு கொணர்ந்தேனென்றாள்

சுருக்காய்நதியில்வாகும்கையில் வார்க்கிறேனென்றாள்
அம்பிகையுமள்ளியிட அதையும்புசித்தார்
நன்றாயதையும்புசித்தார்

அங்கும்அவளோடேசற்றே கொஞ்சிரமித்தார்
இடையில்வளை எடுத்துக்கொண்டு ஆலயம்சேர்ந்தார்
சிவாலயம்சேர்ந்தார்

இராப்போனபின்புஇதை யெல்லாம்ஊராரறிந்தார்
பத்திரரேதெய்வமென்றவாள் பாவித்திருந்தார்
தினம்சேவித்திருந்தார்
பக்தியாய்மீனாக்ஷிபிரியாளிதை பாடிமகிழ்ந்தாள்

## மீனாக்ஷியம்மன்பிதா சொர்க்கஞ்சேர்ந்த ஒப்பாரிக்கண்ணி.

மதுராபுரிநகர்தனிலே-அர-அர-அர
மலையத்துவஜர் மாதுபொன்மாலை-அர-அர-அர
நீதிவழிகளையறிந்தார்-அர-அர-அர
நெடுநாளாய்வாழ்ந்திருந்தார்-அர-அர-அர

மாரிபலபேருஞ்சொல்லஅர-அர-அர
பாலைக்குப்பாமைகொடுத்தாள்நல்ல-அர-அர-அர
ஆயுளானமுடிவைக்கண்டார்-அர-அர-அர
ஆலயம்போய்அபயமென்றார்-அர-அர-அர

சுந்திரர்க்குபூசைபோட்டார்-அர-அர-அர
சிவலோகபதவிகேட்டார்-அர-அர-அர
பக்திபண்ணியடிவுயர்ந்தார்-அர-அர-அர
பாலையரண்மனையில்வந்தார்-அர-அர-அர

தலைநோவென்று துடித்தார்-அர-அர-அர
தியானதுடன்தரையில்படுத்தார்-அர-அர-அர

செல்வமகள்வந்துகிட்ட-அர-அர-அர
சீக்குத்தயிலம்செய்துபோட்டாள்-அர-அர-அர
வைத்தியவித்வான்களைப்பார்த்தார்-அர-அர-அர
வையவிழ்தமென்றுரைத்தாள்-அர-அர-அர
பண்டிதாள்பாணிகுவிழ்த்தாள்-அர-அர-அர
பிரார்த்தித்துபையையவிழ்த்தாள்-அர-அர-அர
மாத்திரைத்உரைத்தேத்தினாள்-அர-அர-அர
மாண்டையிடுக்கிமருந்தொத்தினாள்-அர-அர-அர
சுக்கரத்தைசேர்த்தரைத்தாள்-அர-அர-அர
சுரசம்சூடாய்முறித்தாள்-அர-அர-அர
நானாவிதகஷாயம்போட்டார்-அர-அர-அர
ஞானப்பாலாய்நாவில்விட்டாள்-அர-அர-அர
பத்தியபாகம்வரவழைத்தாள்-அர-அர-அர
பெற்றவர்க்குப்பிசறிவைத்தாள்-அர-அர-அர
கதம்பவனராஜகுண்டார்-அர-அர-அர
களையாயிருக்குதென்றார்-அர-அர-அர
வேர்த்தவரைசேர்த்தணைத்தாள்-அர-அர-அர
விசிறிசற்றேசிரமந்துணித்தாள்-அர-அர-அர
ரோகண்டகாளையழைத்தாள்-அர-அர-அர
ரூபாயைரொம்பகொடுத்தாள்-அர-அர-அர
நோயைநன்றாய்தீருமென்றாள்-அர-அர-அர
நூறுவேலிதாரேனென்றாள்-அர-அர-அர
வைத்தியர்கள்கரத்தைப்பார்த்தார்-அர-அர-அர
சைத்தியசுரமென்றுரைத்தார்
பிழைப்பதில்லையென்றவுடனே-அர-அர-அர
பெண்ணரசிபொறுமையுடனே-அர-அர-அர
பிராசித்தம்பண்ணயத்தித்தாள்-அர-அர-அர
பிராமணாளை வரவழைத்தாள்-அர-அர-அர
கைநிறையமொகாராவெடுத்தாள்-அர-அர-அர
காவேரிஸ்நானம்கொடுத்தாள்-அர-அர-அர
நோக்களைகன்றுடன்பிணைத்தாள்
கூட்டங்கூட்டமாகக்கொடுத்தாள்-அர-அர-அர

செவியில்வந்து மறைகள்மொழிந்தாள்-அரஅரஅர
சிரந்தன்மடிமேல் வைத்திருந்தாள்-அரஅரஅர

சொர்க்கபதியிலெல்லா மறிந்தார்-அரஅரஅர
சுருக்காயன்றுஎழுந்திருந்தாள்-அரஅரஅர

சுரபுரிஜோரோடேநன்று-அரஅரஅர
சொக்கர்தாசர்முன்னேபோய்நின்று-அரஅரஅர

சதயாகியைதரிசித்தார்-அரஅரஅர
சந்தணமாரிவருஷித்தார்-அரஅரஅர

வாரும்பிரபோவென்றழைத்தார்-அரஅரஅர
ஏறும்ரதம்என்று வுரைத்தார்-அரஅரஅர

பொய்யுடலைபூமியில்போட்டார்-அரஅரஅர
பூந்தேரேறிப்புறப்பட்டார்-அரஅரஅர

புண்ணியாத்மா வென்றுஸ்துத்தார்-அரஅரஅர
போகும்வழியியலங்கரித்தார்-அரஅரஅர

நல்லமகானென்றுகூப்பிட்டார்-அரஅரஅர
நடவானபந்தலெங்கும்போட்டார்-அரஅரஅர

தர்மசீலரென்று சிலாகித்தார்-அரஅரஅர
தண்ணீர்பந்தலெங்கும்வைத்தார்-அரஅரஅர

மாஞ்சோலைமார்க்கமாய்சென்றார்-அரஅரஅர
மகாமேரு மலையுங்கண்டார்-அரஅரஅர

பூஞ்சோலைபொய்கை வழிசென்றார்-அரஅரஅர
பொன்நகரியில்போய்நின்றார்-அரஅரஅர

க்ற்பநாடெல்லாம்காட்டினார்-அரஅரஅர
காமதேனுவெண்ணையூட்டினார்-அரஅரஅர

சந்தரவாய்ச்சாந்தன்மகிழ்ந்தார்-அரஅரஅர
இந்திரன்போலெங்கேயிருந்தார்-அரஅரஅர

சுவாசம்அடங்கினபின்னால்-அரஅரஅர
சிராமணிநானென்ன செய்வேனென்னாள்-அரஅரஅர

பெற்றவர்மேலே சற்றேபுரண்டாள்-அரஅரஅர
பிராகிருதாள் அபிநயஞ்செய்தருண்டாள்-அரஅரஅர

மண்ணுலேநீர்சொரிந்தாள்-அரஅரஅர
என்னண்ணுவே யென்றிறைந்தாள்-அரஅரஅர

வஞ்சியர்களுடனெழுந்தாள்-அரஅரஅர
வாசலிலேவந்துவிழுந்தாள்-அரஅரஅர
பெண்களுடனேகூடிக்கொண்டாள்-அரஅரஅர
பூமியிலேபுலம்பிநின்றுள்-அரஅரஅர
அஸ்தங்களை மடித்துக்கொண்டாள்-அரஅரஅர
ஐயரேயென்றடித்துக்கொண்டாள்-அரஅரஅர
இராஜமகிஷியெல்லாம்வந்தார்-அரஅரஅர
இராணியுடனே சேர்ந்துவளர்ந்தார்-அரஅரஅர
உற்பாதமாய் ஒப்பாரிவைத்தார்-அரஅரஅர
உலகம்அதிரக்குதித்தார்-அரஅரஅர
தேகஅபிமானம்மறந்தாள்-அரஅரஅர
தென்னலைப்போல் வலமாய்பறந்தாள்-அரஅரஅர
சுற்றியுமான்கூடிபார்த்தார்-அரஅரஅர
சக்திசாதுரியத்தைசிலாகித்தார்-அரஅரஅர
வேர்வைபெருகிடப்பார்த்தார்-அரஅரஅர
விசிறவெகுவேலைக்காரர்வைத்தார்-அரஅரஅர
ஆபரணம்சிதறிடக்கண்டார்-அரஅரஅர
அதபகுஜவான் ஆயிரம்பேர்நின்றுர்-அரஅரஅர
பாதசரசிலங்கைபாதியாச்சு
பாடகந்தண்டைவிட்டுப்போச்சு
தோடகங்கணம் காப்புரிந்தது
தோளிலிட்டவங்கிமுறிந்தது
சந்தரஆரசர மொன்றுயிற்று
சன்னபின்னலாக பின்னின்று
அட்டிகை பதக்கம்கெட்டது
ஒட்டியாணம் ஒடிந்துவிட்டது
கல்லோலைகாதில்கழன்றது
கெம்புசரம்ரொம்பதுவண்டது
நத்துநடுவிலே விழுந்தது
முத்துமூக்குத்தி முறிந்தது
மாணிக்கபிரபைதெரித்தது
மயிரோடோக்கடிபிடித்தது

சிங்காரபின்னலவிழ்ந்தது
ஜடைநாகம் சுற்றிவிழுந்தது
வேர்கொழுந்து மலர்கள்வாடிற்று
வேணிகள்பிரிந்து ஆடிற்று
ரவிக்கைமுடியவிழ்ந்தது
சரிகைச்சேலைதளர்ந்தது
அஞ்சனம்நீராய்க்கரைந்தது
யாவர்க்கும்திலகமழிந்தது
முத்துமுத்தாய்நெற்றிவேர்த்தது
பத்மமுகம் கறுத்தது
அத்தைமார்களதைக்கண்டார்
சற்றேயிதை நிறுத்துமென்றார்
அம்மான்மார்கள் ஓடிவந்தெடுத்தார்
அங்கவஸ்திரத்தாலேதுடைத்தார்
எங்கள்சகோதரி பெற்றசெல்வம்
எல்லாம்தெரிந்தஉனக் கென்னசொல்வோம்
சத்திநீகலங்கியேநின்றாய்
செத்தசீமான் வருவாரோவென்றார்
அன்னைமார்களை காண்கையில்நேக்கு
ஆறவில்லையோஎன் சொல்வேன்நோக்கு
மாதாமார்களெல்லாரையும்கண்டால்
மறக்கவில்லைமாமாமாரேயென்றாள்
ஊரோர்வந்து உபசாரங்கேட்டாள்
உற்றாருடன்நீராடப்புறப்பட்டாள்
தாமரைதடாகத்தில்போனாள்
சியாமளியும்ஸ்நானம் செய்தாள்தானும்
தங்கக்குடத்தில்கங்கையெடுத்திட்டாள்
தந்தைகிரியைதவராமல்முடித்தாள்
இராஜருக்குரோஜாப்புசூட்டினாள்
இரதத்திலேற்றி அஸ்வங்கள்பூட்டினாள்
பட்டணம்பணிக்காகஜோடித்தாள்
பலதினுசாகவாத்தியமடித்தாள்

தீவட்டிபாணம்மத்தாப்புப்போட்டாள்
திமிதிமென்னதெருவில்புறப்பட்டாள்
மாசிவீதிமெதுவாய்விடென்றுரைத்தாள்
காசுபணம்கறந்துயிறைத்தாள்
பாற்கடலதிர வெடிகள்கொளுத்தாள்
பாதையில்பவுன்வாரியிறைத்தாள்
ருத்திரபூமியில்போனுள்
புத்திரியும்கீர்த்தியும் செய்தாள்தானுய்
சாதிசந்தண காஷ்டனலிட்டாள்
ஸ்நாநம்செய்துகிரகம் போய்ச்சாப்பிட்டாள்
பத்துநாளும்பிரேதபிண்டம்போட்டாள்
பாணியால்சலம்தினந்தினம்விட்டாள்
அப்பம்பொரியிடயத்தனித்தாள்
ஆயிரக்கலஅரிசிநனைத்தாள்
இடித்துபுடைத்துஉலர்த்திஞள்
ஏலம்சீனிபாகுசெலுத்திஞள்
ஜாடியில்குளம்போற் கோநெய்வைத்தாள்
சலடைப்போலப்பம்வார்த்துஎடுத்தாள்
தும்பைநிறம் அவுலைப்பொறித்தாள்
அம்பாரியாய்அசலம்போய்குவித்தாள்
பெரிதாகவெகுலாடுபிடித்தாள்
பெருமையாகஎல்லோர்க்கும்கொடுத்தாள்
சோடசகர்மமும்நடத்திஞள்
சுரோத்தியற்குபங்கு ஸ்தாபிதப்படுத்திஞள்
சவுண்டிகர்னதடங்கெல்லாம்செய்தாள்
சகலதானமுஞ்சாங்கமாயீய்ந்தாள்
கிரேக்கியகிரமங்களுமுடித்தாள்
கெந்தபுஷ்பதாம்பூலம்தரித்தாள்
அந்தணராலாசீர்வாதம்பெற்ருள்
அம்மான்சேலைசீர்சிற்ருடையுடுத்தாள்
நேசதந்தையை நெஞ்சில்நினைத்தாள்
நித்தியசிரார்த்தம் செய்யத்தனித்தாள்

சொர்ணங்களாலே சொம்புவார்ப்பித்தாள்
சுஜனுட்குபோஜனம் போட்டுக்கொடுத்தாள்-அரஅரஅர
மாதம்திதிவருஷம்முடித்தாள்-அரஅரஅர
மதுரைமீனுட்சிபிரியாள் மகிழ்சுகித்தாள்-அரஅரஅர

---

மீனுட்சியம்மன் மாதா கைலாசஞ்சேர
எழுகடலழைத்த கொம்மி.

தேசம்புகழும்மதுரையிலேதேவ
பாண்டியர்செங்கோ லாளும்நாளையிலே
சப்தசாகர மழைத்ததைவினவ
சத்திக்கணபதிநீதி முன்னேவா
கௌதமர்தவத்தி லிருந்தெழுந்து
கைலேசன்கொலுமுகம்வந்து
ஆசீர்வாதமும்ஸ்துதியும் செய்தார்அந்தப்
புறம்போய்க்ககாஞ்சனையைக்கண்டுஒய்தார். க

உத்தஉகந் துபசரித்துயர்
தாசனத்திலே யிருக்கவைத்து
சேவையும்சேவிக்க செய்துநன்னுசில
முனிவரைப்பார்த்தொரு வார்த்தைசொன்னு. உ

பிரபோயின்றுஉங்கள் சேர்வைக்கண்டேன்
பாண்டியர்சென்ற துயரமும்விண்டேன்
தங்கத்தடாதகா ராஜம்மாட்டுநன்ருய்
தநயனுண்டாகுமா சொல்லுமென்ருள். ௩

இந்திரன்மேரு கடல்நடுங்கஇவ்
வுலகிலுள்ள ராஜருமொடுங்க
வீரசூரர்சரதர் குலத்தில்நன்ருய்
வேலவனேயுண்டாகப் போருரென்ருர். ௪

பொன்மாலைகேட்டு தேகம்பூரித்து
புண்ணியமுனிவர் களைப்பார்த்து
எந்தன்இருவினை தீரநன்னு
ஏதானுமொருவழி சொல்லுமென்னு. ரு

அகல்யபதிகேட்டு ஆலோசித்து
அவள்மெஞ்ஞான அன்பைபச்சிலாகித்து

சமுத்திரத்தில்ஸ்நானம் செய்தாயானுல்நன்ருய்
    ஜின்னமரணங்கள் தீருமென்ருர். சு

கற்புமிகுந்தாள்கேட்டுக்களித்து
    கடலிலேநீராடநினைந்து
அன்னம்போல்முன்னுலாவும் பெண்ணைப்பார்த்தாள்
    அரசர்க்கறியவையென்றுரைத்தாள். எ

மாதாவேஇன்றுன் மனப்படிக்குமஹா
    ராஜாவைஎந்தன் வளைக்குள்ளாக்கி
சீக்கிரம்அனுப்பும்படி செய்கிறேநன்ருய்
    சிந்திக்காதேஜெயம் செய்நீயென்ருள். அ

புத்திரிசொல்லைபுத்தி யால்கிரகித்தாள்
    சித்தசஞ்சலங்களை யொழித்தாள்
பாங்கிமார்களை தேராயழைத்தாள்
    பிரயாணசாமான் சேகரியென்றுரைத்தாள் கூ

மாப்பிள்ளைகச்சேரி சாத்திவந்தார்
    மாமியுடன்குல பவிமகிழ்ந்தார்
சந்தியனுஷ்டானங்கள் முடித்தார்
    சாப்பாடானபின் பொன்மஞ்சத்தில்படுத்தார். க0

பெற்றவள்பெண்ணுக் குபசரித்தாள்
    பசும்பாலமுது பரிந்துவளித்தாள்
பணிகளைப்பூட்டி திலகமிட்டாள்பதி
    பள்ளியறையிலே கொண்டுவிட்டாள். கக

அற்புதக்கதவை சாற்றிக்கொண்டாள்
    ஆணிப்பொன்தாப்பாளை போட்டுக்கொண்டாள்
புத்திரனைப்போற்றிட ஆசைகொண்டாள்
    புருஷன்சமீபத்தில் வந்துநின்ருள். கஉ

வாசனைகெந்தம் கமகமெனஊது
    வத்திகள்புஷ்பம் குமுகுமுமென்ன
கூந்தலழகினன் வாரியணைத்தார்
    கொஞ்சியவளுடனே ரமித்தார். கந

சரசவார்த்தை களைப்பேசி
    சந்தணங்களை வாரிப்பூசி

மெத்தைமேலே முத்தாடிமகிழ்ந்தார்
நித்திரையில் சயனித்திருந்தார். கச

விடியுமுன்னவள் அன்றெழுந்தாள்
வேந்தர்மேலேசற்று சாய்ந்திருந்தாள்
ஊஞ்சலசைந்துஅவரும் கண்விழித்தார்
உம்மைக்கொடுத்து எழுப்பிவைத்தாள். கரு

ஏகசக்கரத்தையாளும்
எந்தன்பிராணேசரே நீர்கேளும்
தங்களாலேயொரு காரியம்நன்றாய்
நடக்கவேணும்என் தாயாருக்கென்றாள். கசு

சிரித்துசெல்வி யிதையுரைத்தாள்
ஸ்ரீமான்சிந்தை மகிழ்ந்துகிரகித்தார்.
பரமகல்யாணி பத்மமுகம்நன்று
பார்த்துமகிழ்ந்தொரு வார்த்தைசொன்னார். கள

எந்தன்மனதுக் கிசைந்தகண்ணே
இங்கிதங்களுந் தெரிந்தபெண்ணே
உந்தன்மாதாவுக்காக வேண்டியதைநன்றாய்
அஞ்சாதேசொல்லு செய்கிறேனென்றார். கஅ

தீவினைகளின்று வெல்லனுமோ
அவட்குதீர்த்தயாத்திரை சொல்லவேணுமோ
தங்குடைகள்நீர் செய்யாமல்நன்றாய்
தயார்செய்து அனுப்புமென்றாள் கசு

என்னைமருமகனு யடைந்துஅவ
விருபாதம்நோக வழிநடந்து
அந்தசமுத்திரனுக்கு எதிர்சென்றால்
எந்தனுக்குக்கீதவம்பன மென்றார். உ0

மாதர்கள்மான் கவரிவீசசொந்த
மந்திரிமார்கள்வந்துபேச
சரிகைதிண்டின்மேல்சார்ந்துஒய்தார்
சப்தசாகரங்களையுந் தியானம்செய்தார். உக

ஏழுகடலுமா யோடிவந்தார்
ஈசன்சந்நிதா னத்திலிருந்தார்

ஊரார்கண்டுஉள்ள மகிழ்ந்தார்உல
காளுந்துரைசெய லென்றுகந்தார். உஉ

மெத்ததயாபரர் பத்தினியோடெய்தார்
புத்திரார்த்தமாயதில் ஸ்நானம்செய்தார்
பத்தியகரங்களைப் பிரித்தார்பெற்ற
தாயையழைத்துவா வென்றுரைத்தார். உ௩

ஜானகியிடத்தில் சென்றழைத்தாள்
ஸ்நானவிதியை யவள்விசாரித்தாள்
பதியாளில்லையென்று கிலேசித்தாள்
பவனியோடி துணைவனுக்குரைத்தாள். உ௪

மாமியாரே சாமியாரெனக்கு
மாதேசொன்னேன் தெய்வம்நானுனக்கு
பொன்னத்தைநோகப் பொறுக்கேனென்றுரைத்தார்
பூபதியையும் வரவழைத்தார். உ௫

இந்திரவிமானத்தையுமிழந்தார்இந்த
சந்திரகலாதரரை உகந்தார்
சொர்க்கலோா வாழ்வையும்வெறுத்தார்
சருக்காய்வேந்தன் பூமியில்குதித்தார். உ௬

மாமனைக்கண்டு மனமகிழ்ந்தார்அந்த
காமஜனகர் சகாஎழுந்தார்
தாமரைபாதம் நோகநடந்தார்தடா
தகையுடன்எதிர் கொண்டுவந்தார். உ௭

பாண்டியராசன் வணங்கவந்தார்
ஆண்டவராகாதென்று அணைந்தார்
செல்வமகளை வந்துஎடுத்தார்
க்ஷேமமாநீயம்மா வென்றுரைத்தார். உஅ

சாஞ்சனையதுகேட் டோடிவந்தார்
கணவரைபூசை செய்துபணிந்தார்
தந்தையானேம்நா மென்றுநினைந்தாள்
தம்பதிசகித மாயிருந்தாள். உ௯

நானாவித வாத்தியங்கள்நெறிய
நகரியோர்பார்க்க வந்துநிறைய

சங்கல்பூர்வமாய் ஸ்நாநம்செய்தாள்
சகலதானங்களும் வாரியீந்தார் ௩௨

மூவர்தேவர்முதல்வன் முன்வந்தார்
முல்லைமல்லிகை மலர்சொரிந்தார்
பொன்மாலைமலையத்வஜர்கையையழுந்த
பிடித்துபூமிவிட் டியெழுந்தாள் ௩௩

இருவரும்சிவ ரூபமானார்
இரதத்திலேறி கயிலாசம்போனார்
மீனாட்சிபிரியாள் மகிழமீனமற்ற
தாய்மார்சீராட்ட வாழ்ந்திருந்தாள்தானும் ௩௪

## திருவிளையாடற் புராணம்.

---

க-இ-ம்-பூபாளம்.

சாம்பசதாசிவ சாம்பசதாசிவ
சாம்பசதாசிவ சாம்பசதாசிவ
சாம்பசதாசிவ சாம்பசிவா
சியாமளிவர்ணி பிராணேசசிவாசம்போ
சர்ஜனந்த சந்தோஷசிவா

அறுபத்துநான்கு திருவிளையாடலும்
அற்புததிருவநந்தலாக நான்பாட
கற்பகமகா மணதியேயெனக்
கிப்பொதுவந்துநீ முன்னடவாய்

மூர்த்தியும்தீர்த்தமும் ஸ்தலவிசேஷமும்
மூன்றுமூன்றுகவே கூடிக்கொண்டு
முக்திதருகிறேன் வாவென்றழைத்திடும்
மோக்ஷதவாரா மூலலிங்கசிவா

தேவேந்திரன்விருத்த ஹத்துதீர்த்துதிவ்விய
சொர்ணபத்மம்புஷ் பிக்கவைத்து
புரந்திரன்பூசைக் கிரங்கிபுலோமிசை
போகபாக்கியத்தைக் கொடுத்தசிவா

ஐராவதத்திற் கறிவுண்டாக்கினார்
வாசமுனியிட்ட சாபம்போக்கி
வெள்ளானையுள்ளம் உருகியேபூசிக்க
பிள்ளைபோல்காத்து போசித்தசிவா

குலசேகரபாண் டியமகாராஜன்
கனவினிலேவந்து காக்ஷிதந்து
கதம்பவனக்காட்டை வெட்டியழித்து
நாடுநகர்செய்த நாதனேசிவா ௩

ஹாலாஸ்யஸ்தல க்ஷேத்திரத்தில்
தாஸசந்தாகுலன் கோத்திரத்தில்
அம்பாளைப்பெண்ணா யவதரிக்கச்செய்த
ஆனந்தமூர்த்தி ஹரரேசிவா ௪

அஷ்டதிக்கும்செய்த தடாதகையை
இஷ்டமுடன்தொட்டு மாலையிட்டு
பட்டத்துயானைமே லேறிப்பட்டணம்
பிரதக்ஷணம்செய்த பிரபுவேசிவா ௫

பதஞ்சலியையும் வியாக்கிரபாதரையும்
சிதம்பரபோகா தேயுமென்று
வெள்ளிச்சபைசெய்து ஆனந்தத்தாண்டவம்
அடியேநின்ற நடேசசிவா ௬

குண்டோதரனை ஏவிவைத்தவனால்
உண்டிடும்பண்ட மெல்லாமொழித்து
கௌரியைகர்வ பங்கம்பண்ணிவைத்த
கங்காதரரே கிரீசசிவா ௭

பூதகணத்தின் பசிதணித்துபூமி
தன்னில்வைகையை வரவழைத்து
ஓடுங்கங்கையில் நீராடியபேர்க்கெல்லாம்
நாடிநல்பாதங் கொடுத்தசிவா ௮

தேவபாண்டியரரச துரையாய்திவ்ய
சிம்மாசனத்தில் கொலுவிருந்து
மந்திரிபிரதானிகள் சூழசெங்கோலை
செலுத்தியசிமைக ளாண்டசிவா ௯

மாப்பிள்ளைகோலத் துடனிருந்துசொந்த
மாமியார்மனம் போலேநடந்து
மலையத்துவஜந் மலைதன்னில்வசித்த
மகாநுபாவனே மகேசசிவா ௧0

சாந்திகல்யாணம் செய்துகொண்டுசப்ர
கூடமஞ்சத்தி லிருந்துகொண்டு
அறுபதினயிர சம்வச்சரம்அம்பா
ளுடனேசுகித்த அற்புதசிவா

அத்தைதன்சித்தம் பூரிக்கவைத்துசப்த
சாகரத்தையும் வரவழைத்து
நல்லவனத்திலே வந்துநாயகிக்கு
நல்லமலர்கள் முடித்தசிவா சு

மாண்டமாமனை வேண்டிநினைத்துமது
ராபுரிதன்னில் வரவழைத்து
காஞ்சனையுடன் நீராட்டிகையிலாசம்
சேர்ந்தகருணை க்டாக்ஷசிவா க0

ஸ்தகந்தரைசுதனைப் பெற்றெடுத்துநாலு
சாஸ்திரவித்தை கற்பிவைத்து
புத்திரன்பத்தியுடன் கிரகஸ்தாசிரமம்
கிரமமாய்வசித்த கெம்பீரசிவா கக

உக்கிரபாண்டியர் கலங்கரித்துகாந்தி
மதியைக்கல்யாணம் செய்துவைத்து
மூன்றுயுதத்தையும் கையிற்கொடுத்து
மூலலிங்கமான முக்திசிவா கஉ

சத்துருவாகி சமுத்திரம்அர்த்த
ராத்திரிதன்னி லெதிர்த்துவர
சொற்பனத்தில்போய் வேலாயுத
சொல்லிசுதனை ரக்ஷித்தசிவா கரு

சோமவார விரதபலத்தால்
சுரேசன்முடியை வாளாலுடைத்து
மாதமும்மாரிகள் பேயமதுரா
புரிதனைக்கண்டு மகிழ்ந்தசிவா கச

மகாமேருபருவ தத்தில்போல்என்
மைந்தாஉன்கை ஜெண்டாலேயடித்து
வேணதிரவியத்தை வாரிக்கொண்டுமுத்திரை
வைத்துவாவென்று உரைத்தசிவா கரு

மறையோன்வடிவாய் வெளியில்வந்தும்மகா
முனிவர்களுக்கு எதிரிருந்து
வேதத்துக்கர்த்தங்கள் சொல்லிவிமானத்தில்
வந்துமறைந்த விஸ்வேசசிவா கசு

வீரபாண்டியன் தநயனுக்காகவேதான்
விசித்திரமாணிக் கங்களைவிற்று
இரத்நபரீக்ஷைகள் சொல்லிக்கொடுத்துகொள்
பேரனைப்பார்த்து பூசித்தசிவா கஎ

வருணன்விட்டகடலைக் கண்டெல்லோரும்
வருந்திவந்து வும்மைஸ்துதிக்க
ஜடையிலிருந்த மீனத்தைவிட்டு
ஜலத்தைத்துடைக்க வடித்தசிவா கஅ

கல்வருஷமாய் மழைபொழிய
கதம்பவனம் சேதமாயழிய
நாலுமேகத்தையும் ஏவிமலைபோல்
மறைத்துமதுரையைக் காத்தசிவா ககூ

எல்லாம்வல்ல சித்தராகிநல்ல
நகர்வீதிக ளெங்கிலும்ஏகி
பூவுலகத்திலே காணப்படாத
வஸ்துகளெல்லாம் காண்பித்தசிவா உ0

அபிஷேகபாண்டியன் வரக்கண்டு
ஆலயத்திற்குள் முன்னாகச்சென்று
கல்லானையைக்கரும் புண்ணச்செய்தபின்
காணுமலுள்ளே மறைந்தசிவா உக

சமணாள்கூடி யனுப்பியயானை
விக்கிரமன்தனை விழுங்கவா
அட்டாளமண்டபம் வந்துஅம்பாலெய்து
ஆனைமலையா யடித்தசிவா உஉ

வைணவகுலத்தில் வந்துஅலைந்து
வருந்தும்கௌரி மாமிகிரகம்போல்
வித்தாய்காளையாய் பாலராய்சேர்வை
கொடுத்துசிவலோகம் சேர்ந்தசிவா உக

இராஜராசபாத சேகரபாண்டியர்
இராஜசபைக்கு எதிரேவந்து
வாளுங்கையுமாய் வருந்திஸ்துதிக்க
வலப்பாதம்தூக்கி நடித்தசிவா உச

வேடன்பழிகளைத் தீர்த்துவிட்டுவந்த
வேதியருக்கதைக் காட்டிவிட்டு
குலோத்துங்க பாண்டியனைக்குல
தெய்வமாய்க்காத்த குருவேசிவா உரு

தந்தையைக்கொன்று தாயாருடன்கூடி
தானொருதுரோகி தனியேவர
வேடன்வேடச்சியாய் வந்துபதேசித்து
மோக்ஷபதம் கடாக்ஷித்தசிவாய் உசு

குருபத்தினியைக் கூடவினைந்த
கொடும்பாவியண்டை கோபித்துவந்து
கத்தியாலேசிர மற்றுவிழுந்திட
சித்திரைவதைகள் செய்திட்டசிவா உஎ

அநந்தகுணபாண்டிய னம்பாலடிபட்டு
நாகவிஷத்தை வெளியில்விட
வசாகமலையமிர்தத் தாலேசூரியன்
முன்பனிபோலே யடித்தசிவா உஅ

பாண்டியன்தன்னை பகைத்தொருபசு
பருவதம்போலே எதிர்த்துவர
இரத்தவெரியை யடக்கிரிஷபத்தை
பிட்டுவதைத்து மடித்தசிவா உகூ

சாமந்தனை சேனாதிபதிக்காக
சைனியங்கள்றெம்ப சேர்த்துக்கொண்டு
குலபூஷண பாண்டியராஜன்
கொலுவில்கொணர்ந்து மறைத்தசிவா ௩0

வேதியரைமதியாத தோஷத்தினால்
வெள்ளாமையற்று வேந்தன்கவித்து
புலம்பிபூபதி தூங்கையிலேபொன்
முடிப்பைக்கொணர்ந்து கொடுத்தசிவா ௩க

வளைச்செட்டிவேஷம் போட்டுக்கொண்டுவளை
வளையலென்றெங்கும் போய்விற்றுக்கொண்டு
சாதர்மகிழ்ந்திட மாணிக்கவளைகள்
பாணியைத்தொட் டடுக்கிட்டசிவா ௩௨

ஸ்காந்தருக்குஸ்தன்னிய பானம்கொடுத்த
கிர்த்திகாமாதராறு பேர்களும்
அஷ்டமாசித்திகளை யுபதேசித்து
இஷ்டசாபத்தைத் தீர்த்திட்டசிவா ௩௩

சோழராசனை வழைத்துசிவா
லயதரிசனம் செய்துவைத்து
இருக்கிரவே யனுப்பிரிஷப
முத்திரைவைத் தறிவித்தசிவா ௩௪

தவித்தசேனைகளைப் பார்த்துயுத்த
களத்தில்போய்தண்ணீர் பந்தல்வைத்து
ஆயிரதுவாரம் பொருந்தியகெண்டியால்
தங்காமிர்தத்தை பொழிந்தசிவா ௩௫

பொன்னடியால்சிவ பத்திக்குமழிந்து
புஷ்பவனகாசி தன்னில்வந்து
பூவனநாதர் திருவுசெய்திட
பொன்புடம் போட்டுக்கொடுத்தசிவா ௩௬

சுந்தரேசபாத சேகரபாண்டியன்
சிந்தைமகிழ்ந்தா சாலையிலே
மதத்தினலே எதிர்த்தசோழனை
மடுவிலேதள்ளி மடித்தசிவா ௩௭

விளைவுகுன்றி வேளாளன்மனம்நன்றி
உள்ளமுருகி உம்மைஸ்துதிக்க
குடியானவர்பக்திக் கிரங்கிபெருந்
தண்டலமூட்டை கொடுத்தசிவா ௩௮

மாதுலனுகிக் சேரிவந்துமரு
மானையணைந்து கண்ணீர்சொரிந்து
தாயாதிகொண்ட தனத்தைபதி
தங்கைக்குவாங்கிக் கொடுத்தசிவா ௩௯

மத்தியார்ஜுனத்துக் கனுப்பிலைவத்துமகா
லிங்கமாய்பிர்ம ஹத்தியைத்தீர்த்து
மாகுணபாண் டியருக்குசிவலோக
தரிசனத்தைக் காண்பித்துசிவ ௪0

விறகுகட்டைசுமந்து கொண்டுவீணை
நாதத்துடன்கீதம் பாடிக்கொண்டு
பாடகனைப்பயங் தோடவடித்த
பராபரமே பரமசிவமே ௪க

பக்தியிற்சிறந்த பாகவதற்கு
நித்தியந்தனம் திருவடிக்கொடுத்து
அபயகரத்தாலே ரோலையெழுதி
அன்பனிடத்துக் கனுப்பித்தசிவா ௪உ

சியாமளிபள்ளியறையில் தினம்வந்து
சந்நிதிக்கு எதிரிலிருந்து
நியமம்தப்பாமலே பாடும்பத்திரர்க்கு
நீளப்பலகை கொடுத்தசிவா ௪௩

பாணபத்திரர் பாரிக்காகசபை
தன்னில்பெரியோராய் வந்திருந்து
பாடகிதோளின்மேல் ஏற்றிபதிவிரதா
சிரோன்மணியைக் கார்த்தசிவா ௪௪

பன்றிக்குட்டிபோய் பால்குடித்துப்பெற்ற
மாதர்போல்அதை யரவணைத்து
வராகங்களை வளர்த்தெடுத்து
மாணிடவடிவா யடித்தசிவா ௪௫

சுகுணபாண்டியன் ஜனகனைராஜ
ராஜபாண்டியன் சொர்ப்பனத்தில்போய்
பன்னிரண்டுபன்றி வீரர்க்குமந்திரி
வேலைகொடென்று வுரைத்தசிவ ௪௬

கருக்குருவிகாதி லுபதேசித்து
வலியனென்று வரங்கொடுத்து
பக்ஷியைக்கூடநீ ரட்சித்துக்கார்த்த
பரமதயாளப் பிரபுவேசிவா ௪எ

நாரைபசித்துபொத் தாமரையில்வந்து
நல்லகெண்டையைத் தின்னபயந்து
நாதனேயென்றது நாவால்துதித்திட
நாரைக்குமுத்தி கொடுத்தசிவா ௪அ

கீர்த்திபூஷண பாண்டியராஜன்
கிரீடந்தரித்த தரசாளையிலே
எல்லைதெரியாம லும்மைஸ்துதித்திட
நல்லபாம்பா லறிந்தசிவா ௪௯

சொக்கலிங்கத்து மகிமையறியாமல்
சோழன்சூரன்போல் சீறியே
சுந்தரப்பேரை எழுதிபாணங்களில்
சேனைசிதற வடித்தசிவா ௫0

சத்தியலோகத்து சதுர்முகசாபத்தால்
பூமியில்வாணி அவதரித்து
உன்சந்நிதியில்வந்து சாகித்தியம்பாடிட
சங்கப்பலகை கொடுத்தசிவா ௫௧

கௌரிதேசங்களுக்கும் பழுதுசொன்ன
கீரனைபொர்த்தா மரையில்தள்ளி
வம்சசூடாமணி மரையில்தள்ளி
சண்பகசுந்திர ரானசிவா ௫௨

கபிலர்பாணர் ஸ்துதியைக்கேட்டுநற்
கீரனைக்கரையி லேற்றிவிட்டு
தர்மியானசைவ வேதியர்க்குநீர்
தங்கக்கடாரங் கொடுத்தசிவா ௫௩

அகஸ்தியரை வரவழைத்து
கீராகிலக் கணங்களுரைத்து
அன்னநடைஜோதி பின்னல்கொடியை
மெல்லியுடன் வசனித்தசிவா ௫௪

சங்கத்தார்கலகம் தீர்த்துவிட்டு
மைந்தரிடத்தி லனுப்பிவிட்டு
நாற்பத்தியெட்டு சுவிசுராள்பாடலை
நாடுபத்தா அடித்தசிவா ௫௫

குசேலபாண்டியராஜன் மேல்கோபித்து
கோயில்குளங்களேயும் வெறுத்து
வடமதுரா புரிநகராலயம்
தன்னிலேவந்து வசித்தசிவா ருசு

வலேயனுகி வடிவெடுத்தகடல்
தன்னில்வந்து சுருமீன்பிடித்து
மச்சவிற்கிரயன் மகளே மனது
ஒத்துபூமாலே தரித்தசிவா ருஎ

வாதபுரீசரை வரவழைத்து
வலக்காதில்வாய்வைத் துபதேசித்து
விருந்தமரத்தில்கீழ் குருவாயமைந்த
யோகாம்பிகாபதே யாத்மநாதாசிவா ருஅ

நரிகளேப்பரிக ளாக்கிக்கொண்டுஇது
நாலுலட்சம்பொன் விலேகளென்று
ஆசையுண்டாக்கி அரசனுக்குவெகு
மோசம்செய்தாயே மகேசசிவா ருகூ

பாதிநிசிவேளேயில் பரிகளே
நரிகளாக ஓடஅடித்து
அரிமர்த்தனபாண்டிய ராஜர்மேல்கோபித்து
ஆருபெருக அடித்தசிவா கூ0

பிட்டுக்குசற்றே நம்பாசைப்பட்டுபுட்டி
கூடையால்மண்ணே சுமந்துவிட்டு
திட்டியேராசனடிக்க மறைந்தீரே
தேவாதிதேவ திரிநேத்திரசிவா கூக

பாண்டியன்சுரந் தன்னேத்தீர்த்து
ருத்திராட்சதாரணம் செய்துவைத்து
மங்கையரசி குலச்சிறைநாயனர்
சம்பந்தமூர்த்தியைக் கார்த்தசிவா கூஉ

பத்திரிகையைப் பத்தாமல்வைத்துதிரு
யோகத்தில் எடுத்துக்கொடுத்து
எண்ணுயிரம்பேர் சமணரைஏக
காலத்தில்கழுவி லேற்றியசிவா கூங

செட்டிப்பெண்சோகந் தனித்தனித்து
பாகவிவாகமும் செய்துவைத்து
சக்களத்திவாதில்மன்னி கூபம்சகிதமாய்
நிஜசாட்சிசொன்ன சர்வேசசிவா கூச

மாலயன்போற்றும் மலையைவிட்டுமண்
ணுலகமதுரைமே லாசைப்பட்டு
மீனாட்சிபிரியாளுக் காகலீலைசெய்து
லிங்கரூபியாய் விளங்கும்சிவா கூரு

---

உமையாள்புரத்து காசிவிஸ்வநாதரிடம்

மீனாட்சிபிரியாள் உள்ளமுருகி முறையிட்டகொம்மி.

விசாரணைசெய்தவகையைப்பாட உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
விநாயகன்ணுவையனுப்பிநீகூட உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
நாலாயிரத்திமுந்நூற்றிருபதுநாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
நம்பிஞன்நாவோயாமழைத்ததிஞல் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
பட்டணமீஞட்சிஉபாசிக்கு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
பிரத்தியட்சமாய்வந்தாளின்றைக்கு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
விதிர்தவருஷத்திலே உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
விசித்திரஆடிமாதத்திலே உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
சதுர்த்தசிமுப்பத்தோராந்தேதியில் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
சவலைஜெபம்செய்கிறபாதியில் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
குருபுஷ்யநக்ஷத்திரத்தில் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
குங்குமசுந்தரிபூரித்து உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
உதித்தைந்துநாழிகைக்குமேல் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
உச்சியுருமத்திற்குமுன்ஞலே உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
அடியாளர்ச்சனையைக்கொண்டு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
ஆசனம்விட்டிறங்கிநின்று உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
முத்துலட்சுமியைக்கொணர்ந்து உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
சற்றேசந்தேகமடைந்து உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
நந்திதேவருக்குப்பின்ஞல் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
நவலட்சயஞ்செய்யச்சொன்ஞள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
முன்னேமுடியாதுவென்றேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
மூலஸ்தானத்தில்போய்நின்றேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா

சாரகண்டம்நான்படைத்தேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
சரணத்தில்குசுமம்கொடுத்தேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
குடஜோதிஏற்றினேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
சோகத்துடனேபோற்றினேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
நயனங்களால்நீருதிர்த்தேன் உமையாள்புரிகாசிவிஸவநாதா
நளினயிலைஜலம்போலதவித்தேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
கதறியென்கவியைச்சொன்னேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
கலங்கியேகாலமோநின்னேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
செய்ரோகனம்செவியில்கேட்டு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
க்ஷணத்தில்வந்தாள்சிலையைவிட்டு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
திரும்பியும்செய்யென்றுரைத்தான் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
தினைமேல்ரொம்பகோபித்தாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
சுழுப்திசோற்றுள்நானென்னேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
சொற்கள்தடுமாறிநின்னேன் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
கர்மந்தானேசெய்தோமென்றாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
கலங்காதேநானிருப்பேனென்றாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
ஆரம்பிசங்கல்பமென்னாள் உமையாள்புரிகாசிவிஸ்லநாதா
அஞ்சாதேநானிருப்பேனென்னாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
லட்சுமிவிசாலாட்சியிருந்தாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
லலிதைமின்னல்போல்மறைந்தாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
உன்றன்சலுகையில்லாததால் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
உழைப்பெனக்கின்னமும்வைத்தாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
ஜனகரற்றசேயைப்போலே உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
செய்கிறேன்பார்பணிகண்ணினாலே உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
வருத்தாதேயென்றவட்குநன்னா உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
வாய்திறந்துநீசொன்னாலென்ன உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
எண்ணண்டைசற்கிரியில்லையோ உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
உனக்குத்தான்கிருபையில்லையோ உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
மைந்தரானசுற்றிருந்தாலும் உமையாள்புரீகாசிவிஸ்வநாதா
மாதாபிதாமகிழ்ந்துதரனாளும் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
பெண்பிழைமன்னிப்புபண்ணு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
பிள்ளைரெண்டுபோலிதையுமெண்ணு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
தந்தைபலனிருந்தானால் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
தாய்தனைமேல்மனதுகோணாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
குங்குமசுந்தரியையழை உமையாள்புரிகாசிவிஸ்வநாதா

மொஞ்சயவள்மனதைக்குழை உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
இனியானும்எவாதிருக்கச்சொல்லு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
இவ்வூர்விட்டேகாமல்கில்லு உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
உந்தன்மகிமையறிய உமையாள்புரிகாசிவிஸ்வநாதா
ஒன்றையுமறியாள்மீனாக்ஷிபிரியாள் உமையாள்புரிகாசிவிஸ்வநாதா

மீனாக்ஷிபிரியாள் பாடிய கங்காபாகீரதிகொம்மி.

அஸ்யேவர்ணேயோர்மத்தியிலே
அகண்டமேலண்டை கரைதனிலே
அறுபத்துநாலு கட்டத்தையுங்கண்டு
அகழ்மகிழ்ந்தேன்கங்கா பாகீரதி க

ஆனந்தவனந் தன்னில்வந்து
அநுமந்தகட்டத்திலேயிருந்து
அல்லும்பகலும் சேவித்தேன் அனுக்கிரகம்
செய்யடிநீகங்கா பாகீரதி உ

நான்பண்ணுவதெல்லாம் அபசாரம்
நேக்குசொல்லத்தெரியாதுபசாரம்
உன்பெண்ணாகபாவித்து மன்னித்தென்பிழை
பொறுத்துக்கடிகங்கா பாகீரதி ௩

பத்மயிதழ்போல் நீண்டலோசனி
பாகீரதியென்றோர்கள் பாபமோசனி
பறவைபோல்வந்து குளித்தேன்பரிசுத்தை
யாக்கடிநீகங்கா பாகீரதி ச

தேவர்முடிமேல் பாவிக்கத்தெரியாமல்
திவ்யரூபமும் புரியாமல்
பிராந்தியினால்பல நீரிடம்ஓடி
பிரமிக்கிறேண்டிகங்கா பாகீரதி ரு

கேதாரீஸ்வர மூர்த்தியைத்தொட்டேன்
கிருதார்த்தியாகவே நான் ஆகிவிட்டேன்
என்கிலேசங்களெல்லாமொழித்துகிரீசரைச்
சேரவேநீகங்கா பாகீரதி சா

மஹாஸ்மசான மணிகர்நகைவந்தேன்
மத்தியன ஸ்நாநம் செய்துமகிழ்ந்தேன்
மண்ணுலகத்தில் ஜெனிப்பதொழித்திடு
மாதரசேகங்கா பாகீரதி எ

பஞ்சகங்காபிர வாகத்திலிறக்கிஉன்
பாதவடிதனி லேவணங்கி
கீர்த்திகாஸ்நானங்கள் செய்தேன்கௌரியை
காட்டிநீபங்கா பாகீரதி அ

துர்க்காகட்டடத் துனர்யினிலோடினேன்
துளைந்துநானங்கே நீராடினேன்
என்தோஷங்களெல்லாந் துளைத்திடடியென்
துரைச்சியம்பாகங்கா பாகீரதி கூ

விசாலாட்சி விஸ்வேசரையும்விந்து
மர்தவரையும் வைரவரையும்
துண்டிக்கண்பதி தண்டபாணியையும்
கொண்டாடினேன்கங்கா பாகீரதி க0

பிரேதபர்வம் எங்குமேறிவோய்தேன்
பிதுர்களுக்கஷ்ட கையைநான்செய்தேன்
பிரியமாய்பல்குணி ஜலந்திலம்விஷ்ணு
பாதத்தில்விட்டேன்கங்கா பாகீரதி கக

பஞ்சகோசப்பிர தட்சணம்பண்ணி
பார்த்துகாசிவாச நாளையெண்ணி
பிரயாணசெவுடி செலுத்திபிரயாகதிரு
வேணிவந்தேன்கங்கா பாகீரதி கஉ

நவரத்னமண்டபம் ஜோடித்துதாயே
நானதிலேவுந்தனை தியானித்து
மானசிகபூஜை செய்கிறேன்நீமகிழ்ந்
தோப்புக்கடிகங்கா பாகீரதி கந

யமுனைசரஸ்வதியை கூட்டிக்கொண்டு
இருவர்மேலுங்கையைப் போட்டுக்கொண்டு
மாணிக்கசிம்மாசன மிட்டேன்வந்ததில்
வீற்றிரடிகங்கா பாகீரதி கச

சப்தசமுத்திரமுங் கடந்துசுத்த
சாரகத்திப்போல் புனல்கொணர்ந்து
அர்க்கியபாத்தியங்கள் கொடுக்கிறேன் அஸ்தத்தில்
வாங்கிக்கடிகங்கா பாகீரதி கரு

திறமாயத்தயிலம் நானூற்றுகிறேன்
தலைமேல்ததும் சாற்றுகிறேன்
பாணியாலேநீல வேணியைநீநன்றாய்
தேய்த்துக்கடிகங்கா பாகீரதி கசு

வங்காளமஞ்ச ளரைத்தெடுத்தேன்
மங்களதிரவியத்தோடே கொணர்ந்துவைத்தேன்
உன்பொன்னானமேனியில் பூரித்துநீநன்றாய்
பூசிக்கடிகங்கா பாகீரதி கஎ

பஞ்சாமிர்தம்போல் தேன்களாலும்திவ்ய
பன்னீராலும்நல்ல வெந்நீராலும்
பாதாதிகேசங்களுக் கபிஷேகம்நான்
பண்ணினேண்டிகங்கா பாகீரதி கஅ

உச்சிதப்பட்டில்மஞ்சள் படுத்திக்கொய்து
கச்சைகள்நான்நன்றாய் வைச்சுடுத்தி
வச்சிரமிழைத்தவொட்டி யாணம்சதங்கைகள்
சாற்றினேன்நான்கங்கா பாகீரதி ககூ

சர்வாபரணங்களும் பூட்டிதிவ்ய
ஜாதிகுதிமங்க ளுஞ்சூட்டி
பட்டமுஞ்சூட்டியுங் கட்டிதிலகம்மை
யிட்டேனடிகங்கா பாகீரதி உ0

மலர்அநேகவித மெடுத்துநன்றாய்
மணக்கும்பன்னீ ரிலேநனைத்து
என்சரணத்திலேநான் சகஸ்திரார்ச்சனைகள்
செய்கிறேண்டிகங்கா பாகீரதி உக

தூபதீபாராதனைகள் செய்தேன்உந்தன்
தோழிமார்க்குப சரித்தொய்தான்
தொண்டர்ஸ்துதிநீல கண்டர்முன்என்னைநீ
கொண்டாடிச்சொல் கங்காபாகீரதி உஉ

சீனில்பக்ஷியஞ் செய்தெடுத்தேன்நானு
சித்திரான்னங்க ளுடன்படைத்தே
சாகரராஜர் சகிதமாயினைதீ
சாப்பிடடிகங்கா பாகீரதி உ௩

முத்துதிரிதியமிட்டு யிளவெற்றிலே
மடித்துளடுத்துத் தாரேன்கையில்
உன்சித்தந்தயவாய் கிரகித்துசெவ்வாயில்
தரித்துச்கடிகங்கா பாகீரதி உ௪

சோடசோபசாரமும் முடித்துசத
சூட தீபாராதனே யெடுத்து
சத்ரசாமரங்களாலே சர்வவுப
சாரம்செய்தேன் சுங்காபாகீரதி உ௫

பீனுக்ஷிபிரியாள் சுந்தரேசரைக்காண
சேதுராமநாதரைப்போய் பூசைபண்ண
உன்னேகுடத்திலெடுக்கிறேன்என்பின்
ளுேடேவாடிகங்கா பாகீரதி. உ௬

பலவிதமானகொம்மிகள் - உ௬

முற்றிற்று.

உ

சிவமயம்.

# மீனாட்சியம்மன்

# கொலுப்பாடல்கள்.

பல்லவி.

கௌரிகல்யாணமே வைபோகமே
மீனாக்ஷிகல்யாணமே வைபோகமே

அநுபல்லவி.

மதுராபுரிமாதரெல்லாம் மகிழ்ந்தொன்றாய்க்கூடினார்
மகராக்ஷியைமணைமேல் வைத்துப்பாடினார்

சரணங்கள்

அடிக்கடிஆச்சிய தீபங்களைத்தூண்டினார்
அதைக்காணமானிடர்கள் வந்துமண்டினார்(கௌ)

வந்தோர்களைவலுமேருவாய் எண்ணியுபசரித்தார்
வாசனைபுஷ்பகந்த தாம்பூலங்கொடுத்தார்(கௌ)

சரிகைஜமக்காளம் சபையெங்கிலும்விரித்தார்
சப்தங்களையடைக்கி சமமாகவைத்தார்(கௌ)

மனமோகமீனாக்ஷிபிரியாள் ஜனனவிதைவெதும்ப
மகாஅதிசயமாய்கொலு விருந்தாள்(கௌ)

அல்லோநேரேடல்லோ-என்கிறமெட்டு.

வைபவமாய்எல்லவரும் திவ்யசுரகோஷ
வாத்தியங்களைக்கேட்டு சிலாகித்திருந்தார்கள்தமாஷா
பந்தலில்குளோப்புவத்தி பகல்போலபிரகாசிக்க
பணிகள்பாடினவீணா பாணியும்பிரமிக்க
பந்நீரைமொண்டு எல்லவர்க்கும்வீசினார்
பாடநான்நீயென்று பலரங்கேபேசினார்
வத்தியிருபத்தியாகசொளுத்தி யெங்கும்வைத்தார்
வாசனைகெந்தப்பொடியை வாரிமேலிறைத்தார்
மைந்தர்மனைபதிபணி விடைகளையுமறந்தார்
மதுரைமீனாக்ஷிபிரியாள்போல் சொந்தமாயிருந்தார்

ஆகாயத்திலமராளறிந்தார் அர
விந்தமலரை ஆய்ந்துசொரிந்தார்
இந்த்ரபுரியையுமிகழ்ந்தார்
இதைவேடிக்கைபார்த்திருந்தார் சுவாலே

ஜோடித்தஅரும்புமுகம்வெடிக்க சொர்ண
பிரதமைகள்எங்கும்ஜோதிபிடிக்க
தாளமேளமடிக்க
தாயிருந்தாள்மலர்முடிக்க சுவாலே

ஐராவதமர்ச்சித்தக்ஷேத்திரத்தில்
அந்தகனூர்போய்திரும்பிவந்தவர்கூட்டத்தில்
பஞ்சவர்ணபொடிகோலத்தில்
பவானியிருந்தாள்பீடத்தில் சுவாலே

மீனாக்ஷிபிரியாள்மகிழ்ந்துமெள்ள முத்து
கோர்த்தாப்போல்கவியிசைத்துசொல்ல
சிரிலேஉயர்ந்தசெல்வ
ஸ்ரீகொலுவிருந்தாள்நல்ல சுவாலே

---

சு வா லே.

பூமிபுகழ் மீனாக்ஷியம்மன்
பெண்கள்சூழக் கொலுவிருந்தாள்
சாமிசௌந்தர துரைசதா
ஜாடையாய்வந்து பார்த்துமகிழ்ந்தார் சுவாலே

மந்த்ரிசுமதியை யழைத்து
மத்தாப்புகளெங்குங் கொளுத்தென்றார்
மகாவீரபராக் கிரமகட்டியனை
சற்றேசப்தங்களை யமர்த்தென்றார் சுவாலே

சுமங்கலிகட்கு சொர்ணாபரணம்
சரிகைசேலைகளைக் கொடுத்தார்
சுக்கிரவாரந்தோறும் நடத்துங்க
ளென்றுநாரியரைப் பிரார்த்தித்தார் சுவாலே

உலகமறந்து மீனாக்ஷிபிரியாள்
இப்படிக்கு எல்லாம்பாடினாள்
ஒருக்ஷணங்கூட பிரியாமலுமை
உள்ளவட்கு விளையாடினாள் சுவாலே

## கொட்டுங்கடிபெண்கள் வர்ணமெட்டு.

இந்திராணியம்ம னெழுந்திருந்தாள்
இந்துருளாளண்டை ஓடிவந்தாள்
புவனேஸ்வரியைத் தொடங்கினாந்தாள்
பூச்சூட்டும்வேலைகட்கு முனைந்தாள்

லோபாமுத்திரை சிரித்துக்கொண்டாள்
லோகமாதா அவரடியென்றாள்
லட்சுமிவாணிதான் தொடலாமென்றாள்
நம்பலட்சம்பேரிருந் தென்னகாரியமென்றாள்

சமரசசற்குணி அதெல்லாங்கேட்டாள்
சகலஸ்ரீசனங்களையும் கூப்பிட்டாள்
எல்லவர்கள்கரங்களையுந் தொட்டாள்
இங்கிருங்களென்று வைத்துக்கொண்டாள்

இராஜமகிஷியெல்லாம் பூரித்தார்
ராங்கிகளிருந்ததையு மொழித்தார்
மேகமேனிபதவியை சிலாகித்தார்
மீனாக்ஷிபிரியாள்பாக்கிய மென்றுரைத்தார்

---

## கொட்டுங்கடிபெண்கள் வர்ணமெட்டு வேறு.

அருந்ததியும் அநசிதையுமறிந்தார்
ஆரணியம்விட்டங்கு ஓடிவந்தார்
இருந்தோரெல்லோரும் எழுந்திருந்தார்
எதிர்சென்றழைத்து மனமகிழ்ந்தார் அவாள்
எதிர்சென்றழைத்து மனமகிழ்ந்தார்
பாதபக்ஷாளனம் பண்ணிவைத்தார்பொன்
பலகைமேலிருவென்று பிரார்த்நித்தார்
பால்பழம்சாரகண்டங் கொடுத்தார்பாணி
குவித்துநின்றய நாவால்ஸ்துதித்தார்
கானகத்தோ ராசீர்வாதம்சொன்னார் கல்
யாணிசமுகத்தில் வந்தாள்முன்னாள்
யக்யபஸ்மத்தை எடுத்துநன்று ஈஸ்வ

ரிக்குத்திருஷ்டிகள் தீர்த்துநின்றுசெக
நீஸ்வரிக்குதிரிஷ்டி தீர்த்துநின்று
அட்சதைகளைவாரி சொரிந்தார்-அகண்ட
மணியும்போதாமல் நெரிந்தார்
மங்களம்பாட பெண்கள்முனைந்தார்-தங்க
மீனாக்ஷிபிரியாள் தியானித்திருந்தாள்-தங்க
மீனாக்ஷிபிரியாள் தியானித்திருந்தாள்

---

நலங்கு.

வங்காளமஞ்சளெடுத்து
பன்னீரைவிட்டுக்குழைத்து
நவரத்னசிலம்பைத்தூக்கி
நலங்கிசைத்தாள்ராஜாத்திக்கு
தங்கப்போலாவையெடுத்து
திறமாயத்தர்பில்லேகரைத்து
சுகந்தம்ஜோராய்பூசினார்
சொர்ணச்சொம்பால்பன்னீர்வீசினார்
பொன்னரும்புதாண்டாகட்டி
புஷ்பமதின்மேலேசூட்டி
சண்பகஆரம்போட்டார்
ஸ்ரீங்காரதிலகமிட்டார்
வெள்ளிதமுக்கையெடுத்து
வால்மிளகுடனேமணச்சுருள்கொடுத்து
மீனாக்ஷிபிரியாள்கவிகட்ட
முன்னேவெண்சாமரங்கள்போட்டார்

---

சோபானே.

இரத்னதாம்பாளங்கைகயில்பிடித்தாள்
முத்தாரத்திலக்ஷ்மியெடுத்தாள்
மங்களம்சரஸ்வதிபடித்தாள்
மளமளென்னமேளங்களடித்தார் சோபானே
முநிபத்நிகளேதொடக்கூசினார்
மெள்ளநயந்துகெந்தம்பூசினார்

பசுமஞ்சள்பாணியங்களை வீசினார்
பனிக்கதென்றல்லோரும்பேசினார் சோபானே
சுமங்கிலிகளை வந்துதொட்டார்
சொர்ணமயகுஜிலிபொட்டிட்டார்
நல்லமுத்துமாலைகளைப்போட்டார்
நாரியர்பூண்டுசந்தோஷப்பட்டார் சோபானே
நிலைகண்ணாடிசுவரெங்கிலும்மின்ன
அதின்நேராகஎல்லவரும்நின்னார்
மீனாக்ஷிபிரியாள்கமனம்பண்ண
மெத்தயெளிதாய்வருமிதென்றுசொன்ன சோபானே

---

கொலுவைவிட்டம்மன் எழுந்தாள்-மணை
கொலுவைவிட்டம்மன் எழுந்தாள்-குரு
பத்நிஆசீர்வாதம்பொழிந்தாள்
அக்ஷதைகளை வாரியிறைத்தார்-சோப
னாக்ஷதைகள்வாரியிறைத்தார்
வாழிவாழியென்றுரைத்தார்
தாயார்மகளைவந்துஅணைத்தாள்-பெற்ற
தாயார்மகளைவந்துஅணைத்தாள்-திருஷ்டி
தாங்காமல்திருநீர்திலகம்வைத்தாள்
இரகசியஸ்தலத்திற்கிசரமழைத்தார்-அதி
ரகசியஸ்தலத்திற்கிசரமழைத்தார்-ராஜ
மீனாக்ஷிபிரியாள்மகிழரமித்தார்

கூ௩. கீர்த்தனம்-இ-ம்-இங்கிலீஷ்வர்ணமெட்டு.

பல்லவி.

ஏன்வரவில்லை ஏன்வரவில்லை
ஏன்வரவில்லை மீனம்மா

அநுபல்லவி.

நானென்னசெய்வேன் நானென்னசெய்வேன்
நானென்னசெய்வேன் நியாயமோ

சரணங்கள்.

தான்தாமந் தண்ணீர்பந்தல்
தயவுடனே முன்போட்டாயே

தஞ்சமென் றடைந்தஎன்னை
இன்றுதவிற விட்டாய் ஏன்

மலைக்குறத்தி மதனிநான்
ஆகாதென்று மருந்திட்டாளோ
மாதுதனை தாண்டக் கூடாதென்று
தேவர் தண்டித்து விட்டாரோ ஏன்

அருமைப்பெண் பிறந்தாத்துசெல்வி
அவரிடமுனக் கேன்பயம்
திறமைமீனாக்ஷி பிரிபாட்கு
இன்றுதாநீ அபயம் ஏன்

௬௬. கீ-ம்-இ-ம்-இந்துஸ்தான்காபி.

பல்லவி

தாதாதிருவடிகாட்சி-நீதா திருவடிகாக்ஷி
தாதாஏமீனாக்ஷி நீதாதாஏமீனாக்ஷி

அநுபல்லவி.

ஏதுஎதுஇன்னம் என்னைசோதிக்கிறாய்
இருதயகுகையி லொளிந்துயிருக்கிறாய் தாதா

சரணங்கள்.

கோவைவிட்டுகென்று பிரிந்திருக்காது
கூண்டினில்மெய்இனி மேலேதரிக்காது தாதா

கண்ணுன்னைக்காணமல் புண்ணாய் துடிக்குது
கவலைமீனாக்ஷி பிரியாட்குமிடிக்குது தாதா

௬௭. கீ-ம்-இ-ம்-காம்போதி.

பல்லவி.

சுந்தரமே சுதந்தரமே
வரந்தாரு வாருமேகாருமே சுந்தர

அநுபல்லவி.

மந்தஹாச மதுரைராஜா
எந்தன்நசாரீர் ஜெந்துத்வஜா சுந்தர

சரணங்கள்.

பாண்டியர்குல பிரபஞ்சரத்நம்
நன்றேசேய்முன்வர என்துரைரத்னம் சுந்தர

மீனாக்ஷிபிரியாள் உள்ளமும்ஒய்ய
மின்னல்போலே வாரீஎன்னையா சுந்தர

கூஅ. இ-ம்-கல்யாணி.

பல்லவி.

இந்தமோடிதய-ஈசாவுனக்கென்மேல்
இந்தமோடியேன்

அநுபல்லவி.

சந்திரவம்சத்தார்தடமோ
சாஸ்வதமாய்விடுமோ சன்னியாசிபேர்கெடுமோ இந்த

சரணங்கள்.

தென்மதுராபுரிபூமி
தானமாகத்தந்தமாமி தயவாள்கிறசாமி இந்த

மணிவிமஞ்சக்காணியிலே
மகிழ்கிருப்சொந்தம்போலேமகாமீனாக்ஷிபிரியாள் இந்த

கூகூ. கீ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னைப்பார் சுந்தரப்பா ஏஈசா
இன்னும்நான் சொல்லுவதுதப்பா

அநுபல்லவி.

பொன்னைப்பொருளாயெண்கிறேன் மகாதேவா
பொய்பாந்தம் உண்கிறேன்
இராஜசபக்தி பண்கிறேன்ஹரேசிவா
ராசாதிகளையே காண்கிறேன் என்னை

சரணங்கள்.

மாறுப்பதவியை நீதா மகாதேவா
மாலயன்தேடியபாதா
நான்சொல்வதெல்லாம் சூதா ஹரேசிவா
சுத்தசூனியக்காரா என்னை

சுத்தஸ்படிகரூபா மகாதேவா
சுருதிவாக்கியப் பிரதாபா
மருமகனைவாழ்ந்தசுபா ஹரேசிவா
மீனாக்ஷிபிரியாள் தீபா என்னை

௪00. கீ-இ-ம்-இந்துஸ்தான்காபி.

பல்லவி.

குருவேஉம்மைமறவேன்-வதான்னிய
குருவேஉம்மைமறவேன்-வருவேன்-தேறுவேன்
ஏறுங்கிரி சேறுவேன்

அநுபல்லவி.

பாரில்பற்றுதலில்லை-இந்தப்
பாரில்பற்றுதலில்லை-சீரில்லை-நேரில்லை
ஊருறவாரில்லை குருவே

சரணங்கள்.

வடமயூரவாசா-வள்ளலே
வடமயூரவாசா-ஜடேசா-நடேசா
விடையேறும்-ஈசா குருவே

குருசாமிகுலநாவா-அன்பா
குருசாமிகுலநாதா-அருள்நாதா-பொருள்நாதா
மீனாக்ஷிபிரியாள்நாதா குருவே

மங்களம்

மங்களம்-ஜெயமங்களம்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசருக்கு-மங்களம்-சுபமங்களம்.

கங்கைகொடார்மைந்தர்கட்கும்கற்பகம்பாள்கபாலீசர்க்கும்
கோயில்காசிவிஸ்வநாதர்க்கும்குங்குமசுந்தரியம்பாட்கும் மங்
மாதுலராஜகோபாலர்க்கும்மாதாபார்வதியம்பாட்கும்
கொண்டநாராயணற்கும்குருதர்மராஜருக்கும் மங்
பிராதாசுப்ரமண்யனுக்கும்பரிந்தமுதிடும்தீக்ஷதர்க்கும்
அதிசிநேககுருசாமிகட்கும் அன்னபூர்ணிசுபலக்ஷ்மிக்கும் மங்
உருகும்மீனாக்ஷிபிரியாட்கும்உமையாள்புரஊரார்க்கும்
இதைப்படிப்போர் கேட்பவர்க்குமிகழாமற்புகழ்வோர்கட்கும் மங்

லாலிவர்ணமெட்டு.

மதுராபுரேஸ்வரியே மரகதசவுந்தரியே
திவ்யமனோகரியே தேவியம்பாள்உனக்கு-லாலி
பக்தர்பவசம்ஹாரி பத்மதளநயன ஒய்யாரி
நித்யசர்வாலங்காரி நீலவாணியுனக்குலாலி

இராஜாத்திராஜன்கண்ணே ரம்பைக்குமேலழகான பெண்ணே.

எப்போநான்காணப் போகிறேனோஉன்னை
ஜெகதீஸ்வரியே உனக்கு லாலி
அக்கினியில் ஜெனித்தவளே
திக்குப்பாலரெல்லாரையும் ஜெயித்தவளே
சொக்கருக்குமாலை தரித்தவளே
ஜோதியம்பா யுனக்கு-லாலி
மாயப்பேய்களை யோட்டு
மார்க்கவழிகளை நீகாட்டு
மிதியடியி லென்னைக்கூட்டு
மீனாக்ஷிபிரியாள் பாடியலாலி.

## ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்வரர்பேரில்
## பலவிதபாடல்கள் முற்றிற்று.

---

### விருத்தம்.

சிவந்தஜடையை மறைத்து சண்பகமுல்லைமுடித்து, மாமியார் தந்தபணியாரங்களைப்புசித்து மலையத்துவஜர்மனையில் மனமகிழ்ந்திருந்தேவசித்து, அறுபதினாயிரம்வருஷ மரசாண்டஈசா உன்னரவிந்தமுக, கமலத்தழகைநான் என்று காண்பேன்.

வேதவிதிருகுஜமறைத்துதிவ்யமகுடந்தரித்து அபயகிறத்தாலேயழகாக செங்கோல்பிடித்து, அனைவர்களுமகிழ அலங்காரசிம்மாசனத்தில், செல்வியுடன் கொலுவிருக்கும் சுந்தரபாண்டிய மகாராஜதுரையே உன் செங்கமலசேவடியை சிந்தனைகள்செய்கிறேன், வஞ்சனைகள்செய்யாமல் வந்தருள்வேணும் வடிவேலனையீன்றஜனகா.

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1929.